வெளியீடு 14-9-1989

Issued 14-9-1989

தமிழ்நாடு ... 14 பி ... எழும்பூர், சென்னை-600008.
1264

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 24, 1989—தொகுதி 12—எண் 2

Monday, the 24th April, 1989–Volume 12–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

24—4—1989.

பக்கங்கள்.


1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 161—188

2. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் கைது செய்யப்பெற்றுள்ளது குறித்து .. 189

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் .. .. .. .. 202—203

(இ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் .. .. .. .. 203

(ஈ) மனுக்கள் குழு உறுப்பினர்கள் .. 204

3. தகவல் கோரல்—

(அ) இந்தியப் பிரதமர் பெங்களூரில் கூட்டியுள்ள தென்மாநிலப் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வது குறித்து .. 189—190

(ஆ) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப் பெற்றதாகக் கூறப்படுவது குறித்து. .. 190—191, 194

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. .. .. 191—192

(ஈ) தனியார் துறை ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை .. .. .. .. 192—193

(உ) கோவை சிறையில் இருந்த முன்னாள் பஞ்சாப் முதல்வர் பாதல் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து .. 193

பக்கங்கள்.

(உ) சென்னை கஸ்தூரிபா மருத்துவ மனையில் மின் தடையால் சிகிச்சை பாதிப்பு .. 201

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

மாநிலத்தின் பல பகுதிகளில் மின் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு. 194—200

5. உரிமைப் பிரச்சினை—

"நமது எம். ஜி. ஆர்." நாளிதழ் மீது - பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. 201—202

6. கவன ஈர்ப்பு—

(அ) கோவை மாவட்டம், பிள்ளையார் புரத்தில் வீடுகளும் கிருத்துவ ஆலயங் களும் இடிக்கப் பெற்றுள்ளதால் ஏற் பட்டுள்ள பாதிப்பு .. .. .. 204—206

(ஆ) குடவாசல் மருத்துவ மனை பழுதுற்ற தாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு .. 206—208

7. மானியக் கோரிக்கைகள், 1989-90—
விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் .. .. 208—313

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு 208,288-303, 305, 312

டாக்டர் எஸ். சுந்தரரா[illegible] 20[illegible]—214

*திரு. எஸ். எஸ். கருப்ப[illegible]மி. 2[illegible]—219

*திரு. எ. ஏகாம்பர ரெட்[illegible] [illegible]—224

திரு. கே. ஆர். ஜி. தனபா[illegible] 2[illegible]4—229

திரு. தி. ரா. மாசிலாமணி. 229—234

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர். 234—239

*திரு. டி. ஆர். கஜபதி. 239—243

திரு. எம். முகமது சித்திக். 243—246


144364




பக்கங்கள்

*திரு. பெ. வெங்கடாசலம். 246—250

*திரு. சோ. அழகர்சாமி. 250—261

திரு. மா. சுந்தரதாஸ். 261—268

*திரு. சி. கோவிந்தசாமி. 269—275

திரு. எஸ். ஆர். இராதா. 276—288

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 313—314


D
V211,31'N89
N89.12.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1989, ஏப்ரல் 24, திங்கட்கிழமை.**

**சித்திரை 11, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2020.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. ''

தனக்குக் கிடைத்ததைப் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து, தானும் உண்டு, பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த எல்லாவற்றையும்விட தலைசிறந்த அறமாகும்.

### 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**பெரம்பலூர் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்.**

*111—(*வினா எண். 447)*— **திரு. ரெ. பிச்சைமுத்து :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் வறட்சிப் பகுதி என அறிவிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஏழு வட்டங்களில் பெரம்பலூர் வட்டமும் ஒன்று என கண்டறியப் பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு பகுதியையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிப்பு செய்யாமலேயே அந்தப் பகுதியில் அனைத்து வறட்சி நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட 7 வட்டங்களில் பெரம்பலூர் வட்டம் போக பாக்கி வட்டங்கள் எவை எவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கமாகவே சொல்கிறேன். திருச்சி மாவட்டத்தில் துறையூர், முசிறி, லால்குடி, மணப்பாறை, அரியலூர், பெரம்பலூர், உடையார்பாளையம் ஆகியவையே அந்த 7 வட்டங்களாகும்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்ததில் திருச்சி தாலுக்காவைச் சேர்க்கவில்லை. அது என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதி. அது மிகவும் வறட்சியாக இருக்கிறது. ஆகவே திருச்சி தாலுக்காவையும் சேர்த்து வறட்சிப் பிரதேசமாக அறிவித்து பணிகளைத் துவக்குவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகளை மேற்கொள்வதில் எப்போதும் இந்த அரசு சளைத்ததல்ல, சளைக்காது என்பதை மாண்புமிகு திருமதி பாப்பா உமாநாத் அம்மையார் அவர்களுக்குப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்காமலேயே துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். திருச்சி மாவட்டம் மட்டுமல்ல; தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டம் உட்பட பல்வேறு பகுதிகள் வறட்சியாக இருக்கின்றன. வறட்சிப் பகுதி என்று அறிவிப்பதன் மூலமாக பல்வேறு சலுகைகளை மத்திய அரசிடமிருந்து பெற முடியும் என்று சொல்கிறார்களே அதற்காகவாவது வறட்சிப்பிரதேசம் என அறிவிக்க தமிழக அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து உதவி வருகிறதோ இல்லையோ வறட்சிப் பகுதி என்று தெரிவிக்காமலே அந்த வறட்சிப் பகுதிகளை வளம் உள்ள பகுதிகளாக மாற்றுகிற முயற்சிகளில் இந்த அரசு முனைப்புக் காட்டும், முயலும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. கே. வி. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த வட்டங்களில் கரூர் வட்டம் சேர்க்கப்படவில்லை. கரூர் வட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி, பரமத்தி, தாந்தோணி போன்ற பகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்தப் பகுதிகள் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதி என்று எந்தப் பகுதிகளையும் அறிவிக்க இந்த அரசுக்கு உத்தேசம் இல்லை. மாறாக வறட்சிப் பகுதிகள் எப்படி வளம் உள்ள பகுதிகளாக மாற்றப்பட வேண்டுமோ அந்த முயற்சியில் இந்த அரசு நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல முனைப்புக் காட்டும், முயற்சி மேற்கொள்ளும், துரித நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. ஆசையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வறட்சிப் பகுதி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினாவிற்குத் தொடர்பு இல்லை.

**திரு. ஆர். சிங்காரம் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் திறமையாக எல்லாவற்றிற்கும் பதில் சொல்லுவார்கள் என்பதால் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். தமிழ்நாட்டில் எந்த எந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக அல்லது வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு விடையளித்திருக்கிறேன். இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற மூலவினா திருச்சி மாவட்டத்தைப் பற்றியது. கன்னியாகுமரி, நீலகிரி போன்ற மாவட்டங்களில் பெருமளவு வறட்சி இல்லை. மற்றைய பகுதிகளில் வறட்சி மக்களை வாட்டிக்கொண்டிருக்கிறது. அதைப் போக்குகிற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க அரசு என்னென்ன விதிமுறைகளைப் பின்பற்றுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவரவர்களே, வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கின்ற நேரத்தில் சில

முக்கியமான பிரச்சினைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்
றன. அவற்றை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்
குக் கொண்டுவருகிறேன். குடிப்பதற்குரிய ‘ ப்ரொட்டக்டட்
டிரிங்கிங் வாட்டர் ’ இல்லாமல் வேதனை அளிக்கிற தொகுதிகள்
வறட்சித் தொகுதிகள். அதுமட்டுமல்லாமல் போதுமான அள
வுக்கு வேலை வாய்ப்புகள், வசதிகள் இல்லாமல் அவதிப்படுகின்ற
பகுதிகளும் வறட்சிப் பகுதிகள். அந்த வறட்சிப் பகுதிகளில்
வேலை வாய்ப்புகளை அளிக்கின்ற வாய்ப்பினை வறட்சி நிவாரண
பணிகள் மூலம் பெறமுடியும். அதற்கு என்று ஏராளமான
வர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரப்படுகின்றன. இன்னும்
சொல்லப்போனால் வறட்சி, மக்கள் மத்தியில் ஒருவகையான
விரக்தி உணர்வை உருவாக்குகின்ற நிலையை அரசு உணர்
கிறது. அவற்றிலிருந்து மக்களை மீட்கின்ற பணிகளைத்
தொடருவது வறட்சிப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அரசின்
கடமை என்று கருதுகிறது. இவைதான் வறட்சி என்பதற்குரிய
இலக்கணம். அந்த இலக்கணத்திற்கு ஏற்றவகையில் அமைகின்ற
பகுதி அனைத்தையும் வறட்சிப் பகுதிகளாக எடுத்து அந்த வறட்சி
யைப் போக்குவதற்காக வருவாய் நிர்வாக ஆணையாளர்,
மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து, அனுப்பிய அறிக்கை
யின்படி பல பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக இந்த அரசு ஏற்றுக்
கொண்டிருக்கிறது.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** தலைவரவர்களே, வறட்சியின் காரண
மாக பிழைப்புக்காக ஒரு மாவட்டத்தை விட்டு மற்ற மாவட்டங்
களுக்கு மக்கள் சென்றுள்ளது அரசுக்குத் தெரியுமா ? அப்படி
யானால் எந்த மாவட்டத்தில் அதிகமான மக்கள் மற்ற மாவட்டங்
களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர்
அவர்களே, அத்தகைய தகவல் இல்லை என்றாலும், தஞ்சை
மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சியின் கோரப்பிடியி
லிருந்து தங்களைத் தப்புவித்துக் கொள்வதற்காக வேறு மாவட்
டத்திற்குச் செல்கிறார்கள் என்ற செய்தி அரசுக்குக் கிடைத்திருக்
கிறது.

**திரு. எம். சீரங்கன் :** தலைவரவர்களே, வறட்சி நிவாரணப்
பணிகள் மூலமாக என்னென்ன பணிகளை மேற்கொள்ள அரசு
அறிவித்திருக்கிறது ? அதில் குறிப்பாக குடிநீர் இல்லாமல் பல
பகுதிகளில் மக்கள் வேதனைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட
குறைகளைப் போக்குகின்ற பணிகளில் தீவிரம் காட்டப்படுமா ?
என்னுடைய தொகுதியில் வனவாசி என்ற பகுதி . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொடர்புடைய
கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.





**திரு. எம். சீரங்கன் :** அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட
நிலைமையைப் போக்க கவனம் செலுத்தப்படுமா என்று அறிய
விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
களின் தொகுதியில் குடிதண்ணீர் இல்லாதிருக்கின்ற இடங்களும்
பல இருக்கின்றன என்ற தகவலைத் தந்திருக்கின்றார்கள்.
எந்தெந்த இடங்கள் என்று அவர்கள் தனியாகத் தெரிவிப்பார்
களேயானால் அந்தந்த இடங்களில் குடிதண்ணீர் வசதி செய்வ
தற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**நாமக்கல் வட்டத்தைப் பிரித்தல்.**

*112.—(*வினா எண். 1541)*— **மாண்புமிகு திரு. பி. துரைசாமி** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) நாமக்கல் வட்டத்தை, நாமக்கல் வட்டம், பரமத்தி-
வேலூர் வட்டம் மற்றும் கொல்லிமலை வட்டம் என மூன்று
வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர்
அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு திரு. பி. துரைசாமி** (பேரவைத் துணைத்
தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
நாமக்கல் நகரத்தில் நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகம்
ஒன்று இருக்கிறது. நாமக்கல் நகரத்திலே கூடுதல் வட்டாட்சியர்
அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. கூடுதல் வட்டாட்சியர்
அலுவலகம் பரமத்தி—வேலூர் வருவாய்த் துறை எல்லைக்
குட்பட்ட பணிகளை கூடுதல் வட்டாட்சியர் அவர்கள் செய்து
வருகின்றார்கள். சேடர்பாளையம், சோழசிராமணி, அந்தப்
பகுதியிலிருந்து, ஏறத்தாழ 30 மைல்களுக்கு அப்பால் இருந்து
மக்கள் குறைகளைக் கொடுப்பதற்கு வருகின்றார்கள். அந்த
அலுவலகத்தை பரமத்தி வேலூருக்கு மாற்றுகின்ற திட்டம்
இருக்கிறதா ? அந்த வட்டத்தை ‘ஃபுல்-பிளட்ஜ்ட்’ அலுவலகம்
என்று அறிவிக்க அரசிடம் ஏதாவது கொள்கை இருக்கிறதா
ன்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டம் மற்றும் ராசிபுரம் வட்டம் ஆகிய இரு வட்டங்களை சீரமைத்து, பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை ஆகிய வட்டங்களை உருவாக்குவது குறித்த கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. அடுத்த கேள்வி வரத் தேவையில்லை என்ற அடிப்படையில் விளக்கமாகவும் தெரிவித்து விடுகிறேன். சேலம் மாவட்டத்தில், நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைப் பிரித்து பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை வட்டங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு 1978ஆம் ஆண்டிலேயிருந்து அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டத்தை 1979 ஆம் ஆண்டிலேயே அரசு ஒப்புக்கொண்டாலும் இக்கருத்து நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. புதிய பரமத்தி வேலூர் வட்டத்தில் தலைமையிடத்தை எங்கு நிறுவுவது என்பது பற்றியும், புதிய வட்டங்களை ஏற்படுத்தவேண்டிய பணிஇடங்கள் இன்ன பிறவற்றை ஆய்வு செய்யாமலேயே வட்டங்களைப் பிரிப்பது குறித்து மட்டும் முடிவு எடுக்கப்பட்டமையாலும் பின்னர் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல்கள் காரணமாகவும், இடங்களைப் பிரிப்பது தொடர்பான ஆணைகளை வெளியிடமுடியவில்லை. ஆயினும் இப்போது வட்டங்களின் பிரிவினை குறித்து', புதிய வட்டங்கள் தலைமையிடங்கள் எவை என்பது குறித்தும் மக்கள் கருத்தறிய மாவட்ட அரசுகளின் சரியான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது அதற்கு மக்களிடம் இருந்து மறுப்பு ஏதும் இல்லை. அவ்வறிக்கையின்படி பரமத்தி வேலூர் தலைமையிடமாகக் கொண்டு பரமத்தி வேலூர் வட்டமும் மற்றும் வாழவந்திநாட்டை தலைமை இடமாகக் கொண்டு கொல்லிமலை வட்டமும் அமையும். 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கும் பணி காரணமாக மாவட்டங்கள், வட்டங்கள் பிரிவினை செய்ய பொதுத் (தேர்தல்) துறை தடை ஆணை பிறப்பித்துள்ளதால் அரசு செயற்குறிப்பினை நிலுவையில் வைத்துள்ளது. இத்தடை ஆணை விலக்கப்பட்டதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். I hope I have answered your question properly and completely,

### நாகல்குளம் — ஆலங்குளம் கால்வாய்.

*113—(*வினா எண் 193)*— **திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, நாகல்குளத்திலிருந்து ஆலங்குளம் வரை உள்ள கால்வாயில் தண்ணீர் வரும்போது சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி கரை உடைந்து சேதம் ஏற்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?





(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் ;** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உடைப்பு தற்காலிகமாக அடைக்கப்பட்டுள்ளது.

### மேற்கே செல்லும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பி விடுதல்.

*114—(*வினா எண். 548)*— **திரு. பி. மாரப்பன், திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம், திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கே செல்லும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பி விடும் நோக்குடன் சமீபத்தில் கேரளா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. பி. மாரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கே செல்லும் நதிகளை கிழக்கு நோக்கி, தமிழகத்தில் முழுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு குறிப்பாக காங்கேயம் தொகுதிக்கு, குறிப்பாக பெரியார், கோவை போன்ற மாவட்டத்தைச்சேர்ந்த பகுதிகளுக்கு திருப்பி அவற்றை நஞ்சைப் பகுதிகளாக மாற்ற வேண்டும. அதற்கு கேரளாவில் வீணாக செல்லும் நீரை இங்கே திருப்புவதற்காக திரும்பவும் கேரள அரசுடன் பேசவேண்டும். குறிப்பாக இன்னும் சொல்லப் போனால் இந்த அரசுடன் அனுசரணையான அரசு கேரளாவில் இருக்கிற காரணத்நால் இத்தகைய ஒரு நல்ல சூழ்நிலையில், அந்த அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழகத்தை தஞ்சை மாவட்டத்தைப் போல ஆக்க வேண்டும். குறிப்பாக கோவை, பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள சிலபகுதிகளையும் நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா ? அப்படி முயற்சி எடுக்கின்றபோது என்னுடைய தொகுதியில், காங்கேயம் தொகுதியில் எத்தனை ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும் என்பதை அறிய விரும்புவதோடு, இப்போது காங்கேயம் தொகுதி முழுவதும் மிக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள். அறிய விரும்புவதோடு, திருப்பி விடுமா என்று எல்லாம் வேண்டாம்.

**திரு. பி. மாரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காங்கேயம் தொகுதி பஞ்சப் பிரதேசமாக கொடுமையான நிலையில் காட்சியளிக்கிறது. குடிதண்ணீர் வசதியில்லை. ஆகவே, பரம்பிகுளம்—ஆளியாறு வாய்க்கால் பகுதியிலே வாரத்திற்கு ஒரு நாள் அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுவதோடு அங்கே இருக்கின்ற குட்டை குளங்களை நிரப்பி குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் ஆடுமாடுகள் கூட மாண்டு போகக் கூடிய சூழ்நிலை இருப்பதைத் தடுக்க வேண்டும். அங்கு குடிதண்ணீருக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவைகளுக்கு எல்லாம் நிவாரணம் அளிக்கும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி பாயும் தண்ணீரை கிழக்கு நோக்கி வறட்சி பகுதிகளுக்கு திருப்பி அவற்றை பயன்படுத்தும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். ஆனால் ஏற்கெனவே எடுத்த முயற்சிகள் பயனளிக்காமல் போயுள்ள நிலை இருந்தாலும் தொடர்ந்து இந்த அரசு முயற்சி எடுக்கும். அது பயனளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கே செல்லும் ஆறுகளின் நீரை கிழக்கு நோக்கி திருப்பி இராமநாதபுரத்திலுள்ள வறட்சி பகுதிகளில் அதை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளின் தண்ணீரை, அந்த ஆறுகளிலே இருக்கிற உபரி நீரை கிழக்கு நோக்கி திருப்பி விட்டால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதிகளுக்கு அது பயனளிக்கும் என்பதால்தான் எப்படி உபரி நீரை திருப்புவது என்பதைப் பற்றி அறிய 1976-ல் தொழில் நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது கல்லாடா, வாமனாபுரம், அச்சன்கோயில், கரமனா ஆகிய 4 ஆற்றுப் படுகைகளை ஆய்ந்து 47 டி.எம்.சி. தண்ணீர் உபரியாக இருப்பதாக தெரிவித்தது. ஆனால் எப்படி அந்தத் தண்ணீரை கிழக்கு நோக்கித் திருப்புவது என்பதைப்பற்றி மத்திய அரசோடு தமிழக அரசு பேச வேண்டுமென்று மத்திய அரசுடன் தொடர்புகொண்டது. ஆனால் அது முற்றிலும் பயனளிக்காமல் இன்னும் தொடர்கதையாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரை மேலே குறிப்பிட்டதைப் போல





இந்த ஆறுகளில் இருக்கிற தண்ணீரை கிழக்கு நோக்கி திருப்பினால் தென்பாண்டி மண்டலங்களுக்கு அது பயனளிக்கும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி பாயும் ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுவதாக இருந்தாலோ அல்லது வேறு ஏதாவது பணிகள் தொடங்குவதாக இருந்தாலோ மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டுமென்று சொல்கிறார்களே, அது உண்மையா ? அப்படியானால் மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்காமல் எத்தனை திட்டங்கள் கிடப்பிலே கிடக்கின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாநிலங்களுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டால் நதி நீர்ப் பிரச்சினை குறித்து ஒரு முடிவு காண, பரிகாரம் காண வேண்டுமானால் மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே நம்முடைய எல்லைக்குள் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் வீணாகக் கலக்கின்ற தண்ணீர் ஏறத்தாழ 1,800 டி.எம்.சி-க்கு மேல் இருக்கும் என்றும் அதில் கேரளாஅரசு சுமார் 800 டி.எம்.சி. தண்ணீர் வரை தான் பயன்படுத்துகிறார்கள் என்றும், மீதம் தண்ணீர் வீணாகக் கடலுக்குப்போகிறது என்றும் இதுபற்றி ஆராய்ந்த ஒரு குழு அறிக்கையில் தெரிவித்திருப்பதாக என்னுடைய கவனத்திலே இருக்கிறது. அதுபற்றி, தமிழக அரசு எத்தனை டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, கேரளத்திற்கும் பயன்படாமல் கடலில் போய் சேர்கிறது என்பதைப்பற்றி ஆய்வு செய்திருக்கிறதா ? அது சம்பந்தமாக கேரள அரசோடு பேசி ஆற்றுத் தண்ணீரை முறையாக பயன்படுத்த இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகம் 9-20.)

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப் போல், இவ்வாறு மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரி நீரை, கிழக்கு நோக்கித் திருப்பி, தமிழகத்திற்குப் பயன்படுத்துவதற்காக 1976 ஆம் ஆண்டு ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டது. அது நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் கல்லாடா, வாமனபுரம், அச்சன்கோயில், கரமனா ஆகிய நான்கு ஆற்றுப் படுகைகளையும் ஆராய்ந்து 47 டி.எம்.சி. உபரி தண்ணீர் இருப்பதாகத் தெரிவித்தது. அதையடுத்து 1978 ஆம் ஆண்டு இரண்டாவது தொழில் நுட்பக் குழுவும் அமைக்கப்பட்டது. இக்குழு 41 ஆற்றுப் படுகைகளை ஆய்ந்து, சுமார் 218 டி.எம்.சி. உபரிநீர்

இருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. இந்த நீரைக் கிழக்கு நோக் கித் திருப்பினால், தமிழகத்தின் வறட்சியைப் போக்க முடியும் என்று அந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இதை, தேசிய நீர்வளத் தொலைநோக்கு திட்டத்தின் காரணமாக தீபகர்ப்ப நதிகள் வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆராயலாம் என் றும் அந்தக் குழு அறிவித்திருக்கிறது. இந்தப் பணியை 7-வது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்றும் அது தன்னுடைய பரிந்துரையாகச் செய்திருக்கிறது. எனவே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அது தெரிவித்திருக்கிறது. இதுகுறித்து, மத்தியிலே இருக்கிற நீர் வளத் துறை அமைச்சர் அவர்களைப் பலமுறை அணுகியும் பல னில்லாமல் இருக்கிறது. மீண்டும் இந்த அரசு முயன்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை அணுகி 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாகவே முடிக்க, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தைப் பொறுத்தவரை அது உணவில் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. ஆனால் அங்கே தண்ணீர் அதிகமாக இருக்கிறது. எனவே வறட்சியால் பாதிக்கப்படுகிற தமிழ்நாட்டிற்கு அந்தத் தண்ணீரை பண்ட மாற்று முறையில் பார்மிடர் சிஸ்டம் முறையில்— அதாவது தண்ணீருக்குப் பதிலாக நாங்கள் அரிசி தருகிறோம் என்ற முறையில்—பேச்சு வார்த்தை நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பேச்சு வார்த்தைகளின் போது இவையெல்லாம் ஆராயப்படும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இன்றையதினம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் தமிழ கத்தில் உற்பத்தியாகிற—நம்முடைய எல்லையில் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்கிற தண்ணீரைத் திருப்பி தமிழகத்திற்கு கொண்டு வருவது மிக மிக அவசியம் ஆகும். அந்த அடிப் படையில் குழு அமைக்கப்பட்டு குழுவினுடைய பரிந்துரையில் கூட அந்தத் திட்டம் நல்ல திட்டமென்றும்— அது உடனடியாக செயல் படுத்தப்பட வேண்டிய திட்டமென்றும் குறிப்பிடப்பட்டிருக் கிறது என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே நம்முடைய உரிமைப்படி நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை உடனடியாகக் கிழக்குக் நோக்கித் திருப்பி விடுவதற்கான முயற்சிகளை இந்த அரசு உடனடி யாகச் செய்யுமா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே உடனடியாகச் செய்யும்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை—காவிரி பிரச்சினை



யானாலும் கேரளத்திலிருந்து வருகிற தண்ணீர்ப் பிரச்சினை யானாலும்— பிற மாநிலங்களிலிருந்து வருகிற நதிகளின் நீர்ப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் இந்த ரிவர்களையெல் லாம் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள் கையை இந்த அரசு மத்திய அரசிடம் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பொதுப் பணித்துறை அமைச்சராகப் பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு சமீபத்தில் தேசிய நீர்வள மாநாட்டிற்காக டெல்லிக்குச் சென்றிருந்தபோது, மத்தியிலே பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. சங்கரா னந்த் அவர்களைப் பார்த்து இதை நான் வற்புறுத்திவிட்டுத் தான் வந்திருக்கிறேன். அவரிடம் ஒரு கடிதம் கூட கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே, மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்கிறபோது மத்திய அரசை இந்த அரசு நிச்சயமாக வற்புறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர் களே, மதுரை, முகவை மாவட்டங்களுக்கு முழுமையாகப் பயன் படுகிற பெரியார் அணைக்கட்டினுடைய முழு ஆதிபத்தியத்திற்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன் படுத்துவதில் கேரள அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு ஏற் கெனவே ஒப்புக்கொண்டுள்ள அளவு, தண்ணீரைக் கொடுப்பதற்கு இன்றைக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருக் கிறது என்றும் அண்மையில் பொதுப்பணித்துறை அமைச்சர் அந்த அணைக்கட்டைச் சென்று பார்த்துவிட்டு வந்ததாகவும் பத்திரிகை களில் செய்தி பார்த்தோம். எனவே அதைப்பற்றிய விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்குத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, பெரி யார் அணை பலகீனப்பட்டு இருக்கிறது என்று கேரள மாநிலத்தில் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டார்கள். அது குறித்து பத்திரிகை கள் எல்லாம் அந்த மாநிலத்திலே தலையங்கம் எழுதி இடுக்கிக்கு பெரிய ஆபத்து வரும் என்றெல்லாம் தெரிவித்தார்கள். இது உண்மையா, இல்லையா என்று ஆராய்வதற்காக மத்தியிலே இருக் கிற நீர்வளத் துறையின் கமிஷன் அங்கே வந்து ஆராய்ந்து பார்த்து, அணை பலமாகத்தான் இருக்கிறது ; பத்திரிக்கைகளில் வந்திருக்கிற செய்திகள் தவறானவை என்று தெரிவித்தன. ஆனாலும் மீண்டும் மீண்டும் அதையே திருப்பி எழுதிய காரணத் தால் அந்த அணையை பலப்படுத்த வேண்டுமென்று அந்தக் குழு பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் மூன்று கட்டமாக அணையை பலப்படுத்துவது என்று இந்த அரசு அதற்கான நடவடிக்கை எடுத்தது.

ஒன்று இருக்கிற அணைக்கு ஒரு பக்கத்திலே 'கேப்பிங்' போட்டு அதைப் பலப்படுத்துவது; இரண்டாவது 'ஆங்கரிங் ட்ரில்' போட்டு பெரிய பெரிய வலுவான இரும்புக் கம்பிகளை உள்ளே அனுப்பி பாறைகளை இணைத்து அணைக்கு மேலும் வலு ஊட்டுவது. மூன்றாவது முட்டுக் கொடுக்கிற திட்டம். அதாவது அணையோடு சேர்த்து கிட்டத்தட்ட 140 அடிக்கு மேலே இணைத்து, பக்கத்திலே வேறு ஒரு அணையை கட்டி அந்த அணையோடு இணைத்து கட்டுவது. இந்த மூன்று கட்டங்களில் தான் அந்த அணைக்கு பலம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காக அணையின் மொத்த கொள்ளளவு 152 அடி நிற்க வேண்டும். ஆனால் இப்போது 104 அடியில் தான் நிற்கிறது. அது 'ஐடில்' ஆக எந்த விதமான உபயோகத்துக்கும் இல்லாமல் 'டெட் ஸ்டோரேஜ்' ஆகத்தான் இருக்கிறது. அந்த அணையை பலப்படுத்துகிற வரையில் 136 அடிக்கு மேலே தண்ணீரை நிரப்பக் கூடாது என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனாலும் தண்ணீரை, நாம் அணையை பலப்படுத்தும் பணிகள் முடிந்த பிறகு 152 அடி நிறுத்தலாம். ஆனாலும் 142 அடிக்கு மேல் நிறுத்தக் கூடாது என்று கேரள அரசு நமக்கு தெரிவிக்கிறது. நிச்சயமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன், அணை பலப் படுத்தப்பட்ட பிறகு அந்த மாநில அரசையும் நாம் திருப்திப் படுத்தி, நீர் வருகிற காலத்தில் 152 அடி நிறுத்துவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கடலிலே வீணாகச் சென்று பாய்கின்ற நதிகளை கேரளத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு திருப்பிவிடுவது பற்றி நமது மாநில முதலமைச் சர் அவர்களும், கேரள முதலமைச்சர் நாயனார் அவர்களும் சந்தித்துப் பேசுவதாகத் திட்டமிட்டு இருந்தார்கள். அது விரை விலே நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கேரள நதி நீரை, கடலில் சென்று வீணாகக் கலக்கின்ற நதிநீரை தமிழகத்திலே முக்கியமாக இப்போது வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளுக்கு உடனடியாகத் திருப்ப முடியாவிட்டாலும் எதிர்காலத்திலாவது பயன் விளையத்தக்க வகையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்கின்ற ஒரு முயற்சி நீண்ட காலமாக இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்சொன் னது போல, இது இரண்டு தோழமை உள்ள அரசுகள் என்ற அந்த அடிப்படையில் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினை அல்ல. ஏனென்றால் இங்கே அ.தி.மு.க. அரசு இருந்தபோது அங்கே காங்கிரஸ் கட்சியினுடைய கருணாகரன் தலைமையிலே அரசு இருந்தது. இருந்தாலும் கூட மாநில உரிமைகள், மாநிலப் பிரச் சினைகள் என்று வருகின்ற நேரத்தில் அந்த உரிமைகளை விட்டுத் தருவதிலே தயக்கங்கள் ஏற்படுகின்றன. எனவேதான் உடனடி யாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக அது இல்லை. இருந்த





போதிலும் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்க்கப்பட முடியும் என்று இந்த அரசு கருதுகிறது. திரு. நாயனார் அவர்களிடத்திலும் இது குறித்து நான் டில்லியிலே பேசி இருக்கின்றேன். சட்ட மன்றக் கூட்டத் தொடர் எல்லாம் முடிந்த பிறகு அத்தகைய பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகும்.

**திரு. எம். கே. கரீம் :** தலைவரவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா அணைகட்டும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு நீலகிரி மாவட்டத்தில் வறட்சி இல்லை என்று சொன்னார்கள். அது பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து நான் இந்த அவை யில் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்தத் தண்ணீரை நாம் திருப்பி கோவை மாவட்ட விவசாயத்திற்கு தர வேண்டு மென்று கேட்கிறோம். அதை கேரள அரசு மறுக்கிறது. அதோடும், மத்திய அரசோடும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான நிலையைக் காண இந்த அரசு விழைகிறது.

(முற்பகல் 9-30).

**புதிதாக கட்டப்படும் அணைக்கட்டுகள்.**

115—*வினா எண். 2007)—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) இந்த ஆண்டு புதிதாக கட்ட உத்தேசித்துள்ள அணைக் கட்டுகள் எத்தனை?

(ஆ) பழனி அருகே பச்சையாறு திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே,

(அ) இந்த ஆண்டு அதாவது 1989-90 ஊரக நிலமற் றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ஏழு அணைக் கட்டுகளும் பாசனத் திட்டத்தின் கீழ் மூன்று அணைக்கட்டுகளும் (அவற்றில் இரண்டு அணைகள், ஒரு ஏரி) கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளன.

(ஆ) திண்டுக்கல், காயிதேமில்லத் மாவட்டம், பழனி வட்டம், கவலப்பட்டி கிராமத்தின் அருகில் பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு பத்து அணைகள் கட்டுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே பழனி அருகே உள்ள கவலப்பட்டி பக்கத்திலேயிருக்கக்கூடிய பச்சையாறு திட்டம் கடந்த ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே சர்வே செய்யப்பட்டு, அரசு நிதி ஒதுக்காத காரணத்தால் அது கிடப்பிலே போடப்பட்டுள்ளது. அதை இந்த அரசு கட்டித் தரும் என்று நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் ஆகியோரின் பரிந்துரையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்திற்கு ஏழு ஏக்கர் வனத்துறை நிலங்களைப் பயன்படுத்த அதனுடைய இசைவையும், மத்திய அரசின் இசைவையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவைகளெல்லாம் வந்த பிறகு இந்தத் திட்டத்தை உடனடியாகத் துவங்குவதற்கு அரசு முன்வரும்.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்ததற்குப் பின்னால் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னது, எனக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு எப்படியும் அணையைக் கட்டக்கூடிய முயற்சியில் நம்முடைய அரசு கொஞ்சம் தீவிர கவனம் செலுத்தி, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்குத் துரித முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, இத்தகைய சிறு சிறு நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்குக்கூட மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நான் மறைக்காமல் தெரிவிக்கிறேன். இருந்தாலும் இந்த அரசு இந்தப் பச்சையாறு திட்டத்தைக் கட்டுவது என்று முடிவெடுத்திருக்கின்ற காரணத்தால், மத்திய அரசோடு நிச்சயமாக வாதாடி அதற்கு வேண்டிய அனுமதிகளைப் பெற்று கட்டுவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, வரவு-செலவுத் திட்டத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் கருணைகூர்ந்து அழகர் அணைத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆய்வினை இன்னும் அந்த இலாக்கா தொடங்கியதாகத் தெரியவில்லை. அதை விட்டுவிட்டு, திருவில்லிப்புத்தூருக்குக் குடிதண்ணீர் வழங்கு





வதற்கு மாத்திரம் ஒரு சிறிய திட்டமாக அதைத் திசை திருப்புகின்ற முயற்சியில் அங்கேயிருக்கின்ற ஒரு சூப்பிரண்டென்டிங் எஞ்ஜினியர்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியே திசை திருப்புவது மாதிரி இல்லையா? (சிரிப்பு)

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, அங்கே அழகர் அணைத் திட்டம் என்ற பெயரில் அந்த ஆய்வைக் கொஞ்சம் கூட மாற்றாமல், அதை மேற்கொள்ள அமைச்சரவர்கள் உரிய அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையிலேகூட அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆய்விலே இருக்கிறது. அது வந்த பிறகுதான் அதை எப்படி அமைப்பது, மாற்றியமைப்பதா, இல்லை, அதே நிலையில் அமைப்பதா என்பது தெரியும் இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசனுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் புதிதாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள அணைக்கட்டுகளைப்பற்றிச் சொல்லும்பொழுது, குமரி மாவட்டம் விடுபட்டு விட்டது. குமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் எங்களுடைய மாவட்டத்திற்குச் சொந்தக்காரரான மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அங்கே வறட்சி இல்லை என்று சொன்னாலும்கூட, உண்மையிலேயே மிகக் கடுமையான வறட்சி அங்கே பாதித்துக் கொண்டிருப்பதால், அங்கே மாம்பழத்து ஆறு அணைத் திட்டத்தை உடனடியாகக் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, குமரி மாவட்டத்தையும் இந்த அரசு கைவிடவில்லை என்பதற்குப் பொய்கையாறு நீர்த் தேக்கத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலே தான் அமையவிருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி கிராமத்து அருகே பொய்கையாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்படவிருக்கிறது. 1087 இலட்சம் செலவிலே நீர்த் தேக்கம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் 173 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். 1989-90-இல் இந்தத் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. அன்பில் பொய்யாமொழி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

அவர்கள் இந்த ஆண்டு ஏழு புதிய அணைகள் கட்டப்படும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் பயனடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏழு அணைகள் பற்றிய விவரங்களை அளிக்கிறேன்.

1. செங்கை அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பாண்டூர் கிராமம் அருகே, பாண்டூர் மடுவின் குறுக்கே அணை கட்டுதல். இதனால் 15.35 ஹெக்டேர் நிலம் பயனடையும்.

2. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பொன்னமராவதி அருகே நெரிஞ்சிக்குடி ஓடையில் குறுக்கே அணை கட்டி அத்தாரி ஏரி முதலிய ஏரிகள் பாசன வசதி அடைதல். இதன் மூலமாக 418.63 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும்.

3. திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் குழுக்குட்டைக்குடி கிராமம் அருகே காட்டாற்றின் குறுக்கே அணை கட்டி குழுக்குட்டை குளம் பயன் அடைதல். இதன் மூலமாக 33.15 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும்.

4. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆர். எஸ். மங்கலம் அருகே தியாற்றின் குறுக்கே அணை கட்டி திருப்பலாக்குடி ஏரி பயன் அடைதல். இதன் மூலமாக 411.37 ஹெக்டேர் நிலம் பாசன வசதி அடையும்.

5. காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் சுண்ணாம்பு ஓடையின் குறுக்கே அணை கட்டி பண்ணை மூன்றடைப்பு கண்மாய் பயன் அடைதல். இதன் மூலமாக 78.56 ஹெக்டேர் நிலம் பயன் அடையும்.

6. சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி அருகே பாயும், பாயும்புலி ஓடையின் குறுக்கே அணை கட்டி ஓமேனிகுளம் பயன் அடைதல். இதன்மூலமாக 26.76 ஹெக்டேர் நிலம் பாசன வசதி அடையும்.

7. வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கங்காளபுரம் அருகே கொட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல். இதன்மூலமாக 15.26 ஹெக்டேர் நிலம் பாசன வசதி அடையும்.

**திரு. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள்





அனுமதிக்கப்பட்டும் கடந்த மூன்றாண்டு காலமாக அவை துவங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய செய்திகள் இன்னும் அரசுக்கு வரவில்லை. வந்தால் அரசு அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**திருமதி யசோதா செல்லப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூருக்கு அருகேயுள்ள கடலூரில் வெண்ணாற்றின் குறுக்கே 'பெட் டேம்' கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? ஆம் எனில், அது எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி கேட்டால் அதற்கு பதில் அளிக்கப்படும்.

**திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் பத்து அணைகள் புதியதாக கட்டப்படும் என்று சொன்னார்கள். பல ஆண்டு காலமாக பெரியபாளையம் அருகில் ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் நிலுவையில் இருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு உள்ள குறையைப் போக்கும் வகையில் இந்த ஆண்டில் அந்தத் திட்டத்தை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டுவது ஆந்திர மாநிலம் தொடர்புடையதாக இருக்கிறது. ஆந்திர மாநிலத்தோடு நீரைப் பங்கிட்டுக்கொள்வதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதுகுறித்து ஆந்திர மாநில பாசன வசதி அமைச்சருக்கு இந்த அரசு கடிதம் எழுதியிருக்கிறது. அவர்களோடு விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு திட்டங்களுக்கு ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் கீழ் நிதி வழங்க இருக்கிறார்களா? அல்லது நம்முடைய அரசாங்கமே முழு நிதியை அளிப்பதற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 7 அணைகள் கட்டப்பட இருக்கின்றன. இவை பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டத்தின் கீழ் எடுக்கப் பட்டிருக்கின்றன. மீதி இருக்கிற 3 அணைகள் விவரம் வருமாறு (1) மதுரைமாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், தொப்பம்பட்டி கிராமம், நாகலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுவது.

(2) நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம்— திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

(3) பொய்கையாறு நீர்த் தேக்கத் திட்டம்,—கன்னியா குமரி மாவட்டம்.

(இவை மூன்றும் சிறுபாசனத் திட்டங்கள்.)

(முற்பகல் 9-40.)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையாறு திட்டத்திற்குப் போட்ட எஸ்டிமேட் என்ன? அது எத்தனை ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கும்? அதோடு திண்டுக்கல் மாவட்டத்திலே ஏற்கெனவே அணைகளை நாம் கட்டி முடித்த பிறகும் அந்தத் தண்ணீர் எல்லாம் பாசனத்திற்குப் பயன்படாமல், கீழே போகிறது என்று சொல்லப்படுகிறது. இது அரசின் கவனத்திற்கு வந் திருககிறதா? அதோடு இன்னொன்று, நம்முடைய சிறுமலையில் மழைக் காலங்களில் அதிக அளவில் மழை பெய்து, தண்ணீர் வெள்ளம் போல் வந்து, கரைகளுக்கு மேல் புரண்டு வந்து, மெட் டூருக்கும் பள்ளப்பட்டிக்கும் இடையில் பெரிய உடைப்பு ஏற்பட்டு, ரயில்கள் எல்லாம் கவிழ்கிறதே, இதற்கு என்று திட்டம்போட்டு, இலாக்காவினர் 19.1 கோடிக்கு எஸ்டிமேட் போட்டு சர்க்காருக்கு அனுப்பியுள்ளதாகச் சொல்கிறார்களே, அதுவும் அரசுக்கு வந்திருக்கிறதா? இதை எல்லாம் கவனித்து, இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, இந்த பச்சையாற்றுக்கு 1986—87-லே இதனுடைய திட்ட மதிப்பீடு 1,120 லட்சங்களாகும். இந்தத் திட்டத்தின் மூலம் 1,216.29 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியும, 1800 ஏக்கர் புதிய புஞ்சை நிலங்களுக்குப் பாசனவசதியும் கிடைக் கும். இந்தத் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தி 2,500.41 டன்கள் அதிகரிக்கும்.





**ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு சலுகைகள்**

*116—(* வினா எண். 810)—* **திரு. வ. முல்லை வேந்தன், திருமதி பாப்பா உமாநாத் திரு மா. மணிமாறன் :** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா.—*

*ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் ஆதி திராவிட கிருத்துவர்களுக்கும் வழங்கப்படுமா?*

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில், கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் மாநில அரசுப் பணிகள் மற்றும் பொதுத்துறை நிறுவன ங்களில் வேலைவாய்ப்பு ஆகியவைகளில் 18 சதவீத இட ஒதுக்கீடு தவிர, மற்ற சலுகைகள் அனைத்து ஆதிதிராவிட கிருத்துவர் களுக்கும் வழங்கப்படுகின்றன.

**திரு. வ. முல்லைவேந்தன் :** தலைவர் அவர்களே, உள் ளாட்சித்துறை மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிற தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடக் கிருத்துவர்களுக்குக் கட்டித்தருவதில்லை; எனவே வழங்கப்படுகிற சலுகைகளை முறையாகப் பயன்படுத்தி, அப்படிப்பட்ட வீடுகள் அவர்களுக்கும் கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு இல வசக் கல்வி, படிப்புத் தொகைகள், இலவச சீருடைகள் மற் றும் மாணவர் இல்லங்களில் உணவு மற்றும தங்கும் உதவி, கறவை மாடுகள் வாங்க நிதி உதவி, சிறு வணிகர்களுக்கு, கடன் உதவி, சுய வேலை வாய்ப்பு பெற்றவர்களுக்குத் தேவை யான சாதனங்கள் மற்றும் கருவிகளை இலவசமாக வழங்குதல் உழவு மாடுகள் வாங்க நிதி உதவி அல்லாமல் வேறு எந்த வசதி களையும் செய்து தர அரசு முன்வர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இந்தக் கிருத்துவ அரிசனங்களுக்கு, இந்து அரிசனங்களுடைய சலுகைகள் கிடைக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்வது போல லோன்களும் கிடைக்கப்படுவதில்லை என்பது மட்டுமல்லாமல், பல்வேறு சலுகைகளும் மறுக்கப்படு கின்றன. மதம் என்பதால், அவர்களுக்கு சலுகைகள் மறுக்கப் படுவதைத் தடுக்க சட்ட விதிகள் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக திருத்த அமைச்சர் அவர்கள் முயல் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு ஆதி திராவிட மக்களைப் போன்று சலுகைகள் கிடைக்கிறதா என்ற கேள்வியின் அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கின்ற எல்லா சலுகைகளும் ஆதி திராவிடக் கிருத்துவ மக்களுக்கும் கிடைப்பதற்கான வழி, கடந்த காலத்திலே தி.மு.க. ஆட்சியிலே வகுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு, அது நடைமுறையிலே இருந்து வருகிறது. ஆனால் 18 சதவீதம் என்ற இட ஒதுக்கீடு, அவர்கள் பெற இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏன் என்றால், அரசியல் சட்ட விதிப்படி இந்த ரிசர்வேஷனை இந்து ஆதிதிராவிட மக்களைத் தவிர மற்றவர்களுக்கு வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது. அம்மையார் அவர்கள் கடன் வசதிகளைப் பற்றிக் கேட்டார்கள். மாநில அரசு தருகின்ற கடன்கள் அத்தனையும் ஆதி திராவிடர்களுக்குத் தரப்படுகிற கடன்கள் அத்தனையும் ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்கும் தரப்படுகிறது. ஆனால், மத்திய அரசு தருகினற உதவி, கடன்கள், இவைகள் ஆதி திராவிடர்களுக்கு மாத்திரம் தான் தரப்படுகிறது. ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்குத் தரப்படுவதில்லை. இது மத்திய அரசின் திட்டமாக இருக்கிற காரணத்தால். இப்போது, மத்திய அரசு இந்த 18 சதவித ஒதுக்கீட்டையும் ஆதி திராவிடக் கிருத்துவப் பெருங்குடி மக்களுக்கும் இணைத்து வழங்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கை மத்திய அரசால் பரிசீலிக்கப்படவும் கடன் போன்ற இந்த உதவிகளை ஆதி திராவிடக் கிருத்துவர்களுக்கு வழங்கவும் மத்திய அரசால் பரிசீலிக்கப்படவும், மாண்புமிகு அமைச்சர் பூட்டாசிங் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அது ஆராயப்பட்டு வருகிறது. அதனுடைய முடிவுகள் நாம் எதிர்பார்க்கின்றபடி நல்ல வகையில் அமையும் என்று விரும்புகிறோம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆதி திராவிட மக்கள், ஆதி திராவிட கிருத்துவர்கள் பற்றிய பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி ஆதி திராவிட மக்களிலிருந்து முஸ்லீம்களாக மாறிய மக்களுக்கு இந்தச் சலுகையை மாநில சர்க்கார் கொடுக்கிறதா, மத்திய சர்க்காரின் நிலை என்ன என்பதை அறிய விருப்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, முதலில் ஆதி திராவிடர்களாக இருக்கின்ற கிருத்துவப் பெருங்குடி மக்களுடைய பிரச்சினை தீரட்டும், பிறகு, இதைப் பற்றி யோசிக்கலாம்,



## ஆதி திராவிடர் கூட்டுக் கிராமத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள்.

117— (*வினா எண். 1257)— திரு. எஸ். டி. உக்கம் சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மதுராந்தகம் தொகுதியில் ஆதி திராவிட கூட்டுக் கிராமத் (Cluster) திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :—** தலைவர் அவர்களே, கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் (Cluster Development Programme) மதுராந்தகம் தொகுதி 1988-89 வரை தெரிவு செய்யப்படவில்லை. 1989-90 ஆம் ஆண்டுக்கு கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றியங்கள் தெரிவு செய்யப்படும்போது மதுராந்தகம் ஒன்றியம்தெரிவு செய்யப்படுமானால் அங்கு தொழிற்சாலைகள் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிளஸ்டர் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய உதவி கிடைக்கின்றது. இப்போது 65 யூனியன்களில் இந்த கிளஸ்டர் திட்டம் செயற்படுத்தப்பட்டு, அதன் மூலமாக ஒவ்வொரு திட்டத்திலும் கிட்டத்தட்ட 100 ஹரிஜனப் பெண்கள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த ஒரு பகுதிக்கு மட்டுமல்ல, எங்கெங்கே ஹரிஜனப் பெண்கள் அதிகமாக இருக்கின்றார்களோ, அங்கே இந்த கிளஸ்டர் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டை துரிதப்படுத்துவதன் காரணமாக அரசு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஒரு பகுதியாக சிறப்பு மத்திய நிதி உதவியுடன் கூட்டமைப்புத் திட்டம் 1982-83 முதல் செயல்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஒவ்வொரு ஒன்றியம், பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய பகுதி, குறிப்பாக எந்தத் தொகுதி என்பது தெரிவு செய்யப்படுகிறது. இங்ஙனம் தெரிவு செய்யப்பட்ட பகுதி ஒவ்வொன்றும், ஆதி திராவிட குடும்பங்கள் நிறைந்த கிராம மக்கள் தொகையின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுகிறது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட, ஒன்றியங்களில் மொத்தம் ஆயிரம் ஆதி திராவிட குடும்பங்கள் பயன்பெறும் வகையில், தகுதி வாய்ந்த பல திட்டங்கள் குறித்து, செயற்குறிப்புகள்

பல்வேறு துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்
களிடமிருந்து பெறப்பட்டு, அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு,
திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

**சென்னை பூங்கா நகர் தொகுதிக்குக் குடிநீர்.**

*118— (*வினா எண். 491)—* **திரு. அ. இரகுமான்கான் :**
*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா.—*

*(அ) சென்னை பூங்கா நகர்த் தொகுதியில் பார்வதி
கக்கன் காலனி பொதுமக்களுக்குக் குடிநீர் குழாய்த் துண்டிப்பால்
நீண்ட காலமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள
நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
தலைவர் அவர்களே,(அ) சென்னை பூங்கா நகர் தொகுதியில்
பார்வதி கக்கன் காலனி பகுதிக்கு கொடுக்கப்பட்டுள்ள குடிநீர்
குழாய் இணைப்பு எந்தக காலத்திலும் துண்டிக்கப்படவில்லை.
குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
பூங்கா நகர் தொகுதி புளியந்தோப்புப் பகுதி, பார்வதி
காலனி, கக்கன் காலனி பகுதிகளில், அந்தப் பகுதியின் சட்ட
மன்ற உறுப்பினர் என்ற முறையில் நானே நேரில் சென்று பார்த்
தேன். குடிநீர்க் குழாய்கள் துண்டிக்கப்பட்டு, மக்கள் தண்ணீர்
பிரச்சினையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆனால்
அரசுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருப்பதால், எது சரி
யென்று தெரியவில்லை. ஆகவே கேள்வி எழவில்லை என்று
சொல்கின்ற நிலை மாறி மாண்புமிகு அமைச்சர் அவர்களே
நேரடியாக வந்து பார்த்து, அதைப் பரிசீலித்து ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அது சீர் செய்யப்
படுகின்ற வரைக்கும் 'ஆல்டர்னேடிவ் அரேஞ்மெண்ட்ஸ்' ஆக
லாரிகளின் மூலமாகவும், டாங்குகளின் மூலமாகவும் தண்ணீர்
வழங்குகின்ற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
தலைவர் அவர்களே, தற்போது இந்த பம்புகளில் ஏற்பட்டுள்ள
சில பழுதுகளால் குடிசை மாற்று வாரியம் இரண்டு கைப்





பம்புகளை மக்கள் உபயோகத்திற்காக பொருத்தியுள்ளது. ஆகவே
மேலும் உறுப்பினரவர்கள் இருக்கின்ற சில குறைபாடுகளை
சுட்டிக்காட்டுவார் என்று சொன்னால், அதற்கான நடவடிக்கை
எடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயலும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

*(முற்பகல் 9-50.)*

**திரு. அ. இரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்
களே, இது சம்பந்தமாக குடிசை மாற்று வாரிய அதிகாரி
களுக்கும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும் விவரங்
களை எழுதிக் கேட்டபோது இதை யார் செய்வது என்பதிலே
இருவருக்கும் சர்ச்சை இருக்கிறது. எனவே 2 துறை அமைச்சர்
களும் அல்லது அதிகாரிகளும் நேரில் சந்தித்து, நான் சொன்ன
குறைகளைச் சரி செய்வதற்கு முன் வருவார்களா என்பதை
உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குடிசை
மாற்று வாரியத்தின் பம்புகளின் மூலம் மேல்நிலைத் தொட்டி
களுக்கு ஏற்றப்பட்டு காலனி மக்களுக்கு வினியோகம் செய்யப்
படுகிறது. ஆகவே இதில் குடிசை மாற்று வாரியமும்
குடிநீர்த் துறையும் சேர்ந்து பணிகளைச் செய்வதற்குத் தயாராக
இருக்கின்றன. உடனடியாக அதற்கான நடவடிக்கைகள்
எடுக்கப்படும்.

**திரு. மு. க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்னை நகரத்தில் ஏற்பட்டிருக்கிற மிகக்
கடுமையான, கொடுமையான குடிதண்ணீர் பஞ்சத்தைப்போக்கு
வதற்கு நிரந்தரமாக அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை
என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தர பரிகாரம்
காணுவதற்காக கிருஷ்ணா தண்ணீரைப் பற்றிய முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வறட்சி காலத்தில் இந்தப்
பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு திட்டங்கள் அதிக
செலவிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக லாரிகளை
வாடகைக்கு அமர்த்துவதன் தொகை அதிகரிக்கப்பட்டு 350
லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே
போல புதியதாக கையிறைப்பான்கள் அமைப்பதற்காக 82
லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த
வறட்சி காலத்தில் உடனடியாக குடிதண்ணீர் பிரச்சினையைத்
தீர்ப்பதற்கான நடவடிக்கைக்கு அதிகமாக தொகை ஒதுக்கப்
பட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிரந்

தரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக விரைவில் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வருகிற வரையில் வீராணம் திட்டம் மிக நல்ல திட்டம் என்று அதிகாரிகளினாலேயும், தொழில் நுட்ப வல்லுநர்களாலேயும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், பாதி நிறைவேற்றப்பட்டிருந்ததால் அரசியல் நோக்கத்திற்காக அந்தத் திட்டம் இடையிலே கைவிடப்பட்டு, வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன முந்தைய அரசால். ஆகவே அந்தத் திட்டத்தையாவது இடைக்கால நிவாரணமாக நிறைவேற்றி சென்னை நகரத்தின குடிதண்ணீர் பஞ்சத்தை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி;** பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் ஒரு இடைக்காலத் திட்டமாக இருக்க முடியாது என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் எனக் கருதுகிறேன்.

**திரு. செங்கைசிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக ஒரு தீர்வு, இந்தச் சென்னைக்கு குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி மொழியை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையினுடைய ஓரப் பகுதியாக இருக்கக்கூடிய பெரம்பூர் தொகுயில்தான் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் எப்போதும் ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணையை அதிகமாக பெரம்பூர் பகுதிக்குக் காட்டி, அதிகமான டாங்குகளையும், லாரிகளையும் கூடுதலாக. செய்து தருவதற்கு ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளை ஆய்ந்து அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்யப்படும.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் நெருக்கடி காலத்தில் அநியாயமாக பழி சொல்லப்பட்டு கைவிடப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்திற்காக ஏராளமான பணம் செலவழித்து தயாரிக்கப்பட்ட குழாய்கள் மிக அருமையாக இன்றைக்கும் பாதுகாப்பாக இருக்கின்றன. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் அந்தக் குழாய்களை சேகரித்து அதை இலாகா மூலம் பத்திரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழாய்கள் மூலம் நெய்வேலியிலிருந்து வெளியிடப்படுகின்ற நீரினை தென்னாற்காடு மாவட்டம், பிற பகுதிகளுக்கும் கொண்டு செல்ல முடியுமா என்பதை எல்லாம் யோசிக்குமாறு துறைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் குழாய்களை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குடிநீர் சம்பந்தமான கேள்வியாக இருப்பதால் சென்னையை விட்டு அடுத்து செல்வதற்கு கொஞ்சம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தாமிரபரணி ஆற்றிலிருந்து எங்கள் பகுதுக்கு கோவில்பட்டி, கழுகுமலை, எட்டயாபுரம் போன்ற இடங்களுக்கெல்லாம் தணணீர் வருகிறது. கடுமையான வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு எல்லாக் கிராமங்களிலும் இருக்கிறது. லாரிகள் மூலமாவது சப்ளை செய்யுங்கள் என்று தந்தி வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு, எல்லா இடங்களிலும், தண்ணீர் சரியாக வருவதற்கு மின்சாரம் தடையாக இருக்கிறது. ஒருநாளைக்கு 2 மணிநேரம் 3 மணிநேரம மட்டும்தான் மின்சாரம் கிடைக்கிறது என்றும் திடீர்திடீர் என்று போய்விடுகிறது என்றும் சொல்லுகிறார்கள். 24 மணி நேரத்தில் 2ட மணி நேரம் மினசாரம் இல்லாமல் இருப்பதால் குடிதண்ணீர் வருகிற வழியில் பம்பிங் யூனிட் வேலை செய்யாமல் இருப்பதால் மிகுந்த தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே குடிதண்ணீர் வழங்கக்கூடிய முறையைத் திருத்தி ராணுவ நடவடிக்கை எடுத்து, மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்கியோ அல்லது லாரிகள் மூலமாகவோ வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தாமிரபரணியிலிருந்து கோவில்பட்டிக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் குடிதண்ணீர் கொண்டு வந்ததே கடந்த காலத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள். அப்பொழுதே இடையிலே உள்ள ஊர்களுக்கு எட்டையபுரம் போன்ற ஊர்களுக்கெல்லாம் இடையிடையே தண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தொடர்ந்து அது போல கிராமப் பகுதிகளுக்குத் தண்ணீரை வழங்குவதற்கு மின்சாரம் தடையாக இருப்பதாகச் சொன்னார்கள். கல்பாக்கம், நெய்வேலி முழுவதும் நம்முடைய கண்ட்ரோலில் இல்லை. அடிக்கடி அது கெட்டுப்போகிறது. அதனால்தான் மின்சாரம் தடை, என்ன காரணமோ அது புரியவில்லை.

**வடக்கன்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்.**

119—(*வினா எண். 787)—**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** தலைவர் அவர்களே, இல்லை.

**திருமதி ரமணி நல்லதம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான இராதாபுரம் தொகுதியிலே அந்த வடக்கன்குளம் பகுதியிலே வறட்சிக்கு எதிரொலியாக ஏழைஎளிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற காரணத்தினாலே நோய்வாய்ப் படுகின்றவர்கள் நாகர்கோயில் அல்லது திருநெல்வேலி செல்ல வேண்டியிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இதற்கான முயற்சிகளை அரசு மேற் கொள்ளும்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளம் பகுதியிலே இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில இருக்கிறது. மேற்கூரை இல்லை. தண்ணீர் வசதி அங்கு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. நிலத்தடி நீர் 500 அடிக்குக் கீழே சென்றிருக்கின்ற இந்த நேரத்திலே அந்த சுகாதார மையத்திற்கு தண்ணீர் வசதி வழங்க ஏதாவது ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா? பழுது பார்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் பழுதுபார்ப்பதற்கான பணிகள் இப்போது துவங்கப்பட்டு இருக்கின்றன. ஆங்காங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே இதுவும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த நிதிநிலை தடையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நிதிநிலை தடையாக இருக்கக்கூடிய இந்த நேரத்திலேதான்





அமைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிலே செய்யப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் பூராவும் அந்தப் பகுதி மக்கள பயன்படுத்த முடியாமல்—மருத்துவர்கள் இல்லாததால்—இருக்கிறது. இருக்கின்ற சுகாதார நிலையங்களுக்கு உரிய மருத்துவர்களை நியமித்து அந்த நிலையங்கள் மக்களுக்கு பயன்படக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான பதில்களை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த மானியத்தின் போதும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஏறக்குறைய இந்தப் பிரச்சினை குறித்து ஆயிரம் டாக்டர்கள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு ஆணைக் குழு 934 பேர்களுக்கு பணியாட்களை, டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்லி விளம்பரம் செய்துவிட்டு அது சுமார் 1400 மருத்துவர்களை தேர்வு செய்திருக்கிறது. அதை எதிர்த்து ஒருவர் வழக்கு தொடுத்திருக்கிறார். அதன் விளைவாக இப்போது சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட விரைவில் அனைத்துப் பகுதிகளிலும் மருத்துவர்களை நியமிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற் கொள்ள இருக்கிறது.

**வேட்டவலம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்கல்.**

120.—(*வினா எண். 1026)—**திரு. கே. பிச்சாண்டி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மான்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. கே. பிச்சாண்டி :** பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டவலத்தைச் சுற்றி சுமார் 35,000 மக்கள் வசிக்கிறார்கள். அரசு மருத்துவமனை சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. சரியான பஸ் வசதி இல்லை. அந்த மக்களின் மருத்துவ வசதியைக் கருதி இனியாகிலும் வரும் நிதியாண்டில் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைக்கருத்தில் கொண்டு அரசு இதைப் பரிசீலிக்கும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் உள்ள பிரதம சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, வேறு எந்த மருத்துவமனையாக இருந்தாலும் சரி கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மருத்துவமனையை அரசு மேற்கொள்வதில்லை என்று ஏற்கெனவே இருந்த அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அந்த முடிவை மக்களுடைய நல்வாழ்வைக் கருதி மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா? அது மாதிரி உத்திரவே வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** கேள்வியை சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அரசு கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய எந்த மருத்துவமனையையும் அரசு மேற்கொள்வதில்லை என்று ஒரு உத்திரவை போட்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர் களுடைய கேள்வி சரியாக இருக்கும் என்று சொன்னால், லோக் கல் செல்ஃப் கவர்ன்மென்ட்— அவைகளில் இருக்கின்ற மருத்துவமனைகள் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று கருது கிறேன். கிராமப்புறங்களிலே அரசாங்கமும் மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன, ப்ரைமரி ஹெல்த் சென்டர் எல்லாம் அரசாங்கத்தால் நடத்தப் படுகின்ற மருத்துவமனைகள்தான். ஆகவே இதுபோன்ற தனிப்பட்ட குறிப்புகளை அவருடைய தொகுதியிலேகூட, நெல்லிக்குப்பம் நகராட்சியைப் பற்றி, அவர்கள் நடத்துகின்ற மருத்துவமனை யைப் பற்றி அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதைப்பற்றி கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்** முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் 'அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. அறிவிப்புகள்.

**(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சநத் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) பேரவைக்கு அறிவிப்பதற்கு முன்னாலே எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் வரும்? இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது.

**திரு. துரை ராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமருங்கள் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "செங்கை அண்ணா மேற்கு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து வந்துள்ள கீழ்க்கண்ட செய்தியி னைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

"I have the honour to inform you that Thiru S.D. Ukamchand, Member of the Tamil Nadu Legislative Assembly, representing Maduranthagm Assembly Constituency, has been arrested along with 32 others on the night of 23 April, 1989 at Maduranthagam in connection with the Maduranthagam Police Station C.R. No. 201/89 under Sections 147, 148, 332 of I.P.C. and under Section 213 of the Tamil Nadu Public Properties (Prevention of Destruction and Damages' Act, 1982.)

## 3. தகவல் கோரல்.

**(அ) இந்தியப் பிரதமர் பெங்களூரில் கூட்டியுள்ள தென்மாநிலப் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வது குறித்து.**

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே. நான் அரசிட மிருந்து— குறிப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்— அரசாங்கத்திடமிருந்து ஒரு விளக் கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தென்பகுதியில் இருக்கும்படியான மாநிலங்களைச் சேர்ந்த ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரள மாநிலம், தமிழகம் ஆகிய இந்த மாநிலங்களைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர் களுடைய மாநாட்டை, பெங்களூர் நகரத்திலே இந்தியாவினு டைய பிரதம அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பிலே கூட்டி யிருக்கிறார்கள். இது நாம் எல்லோரும் அறிந்திருக்கிற உண்மை. அண்மையிலே நடந்த நிகழ்ச்சிகளின் காரணமாக, ஆந்திர மாநில அரசும், கேரள மாநில அரசும் அந்த மாநாட் டிற்குச் செல்வதில்லை. அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலை வர்கள் மாநாட்டிலே பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று

முடிவு எடுத்து, பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. நமது மாநில அரசாங்கம் என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பதை அருள்கூர்ந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த மாநாட்டில் தமிழக அரசின் சார்பிலும் கலந்து கொள்வதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**(ஆ) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பெற்றதாக கூறப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம். (குறுக்கீடு).

**திரு. துரை ராமசாமி :** ஸ்பீக்கர் சார், திரு உகம்சந்த் வீட்டிலே அடித்துக் கொண்டு போய் இருக்கிறார்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரை ராமசாமி அவர்கள் கவனிக்கவேண்டும். இது தொடர்பாக நீங்கள் காவல் துறை அமைச்சராக இருக்கின்ற முதலமைச்சரோடு நேரடியாகப் பேசவும். திரு. பி. வி. இராஜேந்திரன், (குறுக்கீடு).

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரை ராமசாமி அவர்கள் கவனிக்கவேண்டும். அறிவிப்பிலே பேரவைத் தலைவர் உள்ளடக்கத்தை எல்லாம் சொல்லமாட்டார். அறிவிப்பை மட்டும்தான் சொல்வார். இதுதொடர்பாக ஏதேனும் தெரிந்து கொள்ள விரும்பினால் முதலமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம். (குறுக்கீடு).

**திரு. துரை ராமசாமி :** லத்தி சார்ஜ் வீட்டிலே போய்ப் பண்ணியிருக்கிறார்கள். ஃபோட்டோ இருக்கிறது. (ஒரு புகைப் படத்தைக் காட்டினார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே என்னிடம் இசைவு கேட்காமல் புகைப்படத்தை அவையிலே காட்டுவதே தவறு என்ற குறிப்பை உணரவேண்டும். அதனாலே முதலமைச்சர் அவர்களிடம் கேட்கலாம். (குறுக்கீடு) பேரவைக்கு அறிவிப்புச் செய்கிறபோது இதெல்லாம் எழுப்பக் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (குறுக்கீடு). படத்தைக் காட்டுவது என்றால் நீங்கள் என்னிடம் இசைவு கேட்டு, அதற்குப்பிறகு முதலமைச்சரிடம் நேரடியாகக் காட்டி இருக்கவேண்டும். முதலமைச்சரிடம்



நேரடியாகப் பேசுங்கள். (குறுக்கீடு) என்னிடம் படத்தைக் காட்டுங்கள். அதைக் காட்டிவிட்டுப் பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) அதைக் காட்டிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் தனியாகப் பேசி என்னவென்று பாருங்கள். அவையிலே பேசமுடியாது. என்ன நிகழ்ச்சி என்று அரசுத் தரப்பிலிருந்து உடனடியாக விடை சொல்ல முடியாது.

(திரு துரை ராமசாமி புகைப்படம் ஒன்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்).

**திரு. துரை ராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேரவை உறுப்பினர் வீட்டில் போய் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த மன்றத்தில் சொல்வதற்கு அனுமதி இல்லை என்றால் எப்படி? அப்படி என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு? பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதியில்லை என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. வி. இராஜேந்திரன் நீங்கள் பேசுங்கள். தயவுசெய்து திரு. துரை ராமசாமி உட்காருங்கள்.

**(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.**

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக இதைக் கொண்டு வருகிறேன். அவர்கள் மற்ற அலுவல்களைப் பார்ப்பதால் நான் இதைச் சொல்கிறேன். (குறுக்கீடு).

**திரு. துரை ராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை ராமசாமி தயவுசெய்து உட்காருங்கள். திரு. இராஜேந்திரன் பேசுங்கள்.

(திரு. துரை ராமசாமி நின்றுகொண்டே இருந்தார்).

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20—4—1989 அன்று வேதாரண்யத்தில் நடந்த ஒரு கொலை சம்பந்தமாக, ஒரு அரசியல் கொலை சம்பந்தமாக இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். இந்த அவையின் இதர

ஆவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்கவேண்டும் என்று கேட்டு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தேன். அதன் மீது நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு).

(திரு. துரை ராமசாமி நின்றுகொண்டே இருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அது ஏற்கப்பட்டு இருக் கிறதா நிராகரிக்கப்பட்டு இருக்கிறதா என்று எல்லாம் தெரி யாமல் எப்படி நீங்கள் அதன் மீது பேசுவீர்கள். அப்படி என்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லோரும் கொடுத்துவிட்டு இப்படி எழுந்து பேசி விடுவதா ? (குறுக்கீடு) இல்லை, என்ன மரபு என்று தெரியவேண்டும் ? அதற்கு மட்டும் எனக்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் அது பற்றி என் னுடைய அறையில் வந்து கேட்கவேண்டும். இன்றைக்குக் கூட ஓர் ஒத்திவைப்புத் திர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. எல் லோரும் உட்காருங்கள். திரு. துரை ராமசாமி அவர்களும் உட்காருங்கள்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன்.

**திரு. துரைராமசாமி :** எங்களுக்குப்பேச வாய்ப்புத் தராத தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

**(ஈ) தனியார் துறை ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்க வேண்டு மென்ற கோரிக்கை.**

**திரு. கோ. வீரையன் :** குறிப்பாக அனைத்துப் பகுதி ஆசிரியர்களுக்கும் மாதம் 15 ரூபாய் மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு மட்டும் இது வழங்கப்படவில்லை. இதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். அதேபோல் நகராட்சி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்று அவர்களின் ஊதியம் நகராட்சியின் மூலமாக வழங்கப்படு வதால் அது காலத்தில் கிடைப்பது இல்லை. அதை அரசு நேரடியாக வழங்கவேண்டும் என்று கோரி தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சங்கத்தின் சார்பில் இன்று ஒரு இயக்கம் நடைபெறுகிறது. இந்த



இரண்டு கோரிக்கைகள் பற்றியும் அரசு என்ன நிலை எடுத்து இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் இந்த அரசிட மிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தொடர்பாக அமைச்சரிடத்தில் நீங்கள் நேரடியாகச் சொல்லாமல் இப்படிக் கேட்டால் எந்த அளவுக்கு விளக்கம் சொல்ல முடியும். இதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்து இருந்தால் அதறகுப் பதில் வாங்கித் தந்து இருக்கலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீர் என்று தன்னுடைய மனதில் படுகிற அல்லது தான் அறிந்து இருககிற ஒரு பிரச் சினையை இந்த அவையில் எழுப்பினால் தகுந்த, நியாயமான விளக்கத்தை அமைச்சரவையின் சார்பில் நாங்கள் யாரும் தரக்கூடிய வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் ஏதாவது எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் ஏதாவது ஒன்றைக் குறித்து கேட்க வேண்டுமானால், கேட்டால் ஏதோ முடிந்த அளவுக்கு அதுபற்றி நாங்கள் பதில் சொல்லமுடியுமே தவிர அரசின் துறைகள் ஆய்வு நடத்தி முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகள பற்றி நாங்களே அமைச்சர்களாக எதையும் சொல்ல நேரிட்டு அதன் காரண மாக அஷ்யூரன்ஸ் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அது உள்ளபடியே நாங்கள் அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருக்காது. எனவே இப்படிப் பட்ட கருத்துக்களுக்கு உண்மை நிலைமை தெரிந்து விளக்கம தரக்கூடிய நிலைமை இப்போது இல்லை என்பதை நான் பணிவனபோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன.

**(உ) கோவை சிறையில் இருந்த முன்னாள் பஞ்சாப் முதல்வர் பாதல் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்பட்டு உள்ளதாக வந்துள்ள செயதி குறித்து.**

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் நம் கோவை ஜெயிலி லிருந்து பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பிரகாஷ் சிங் பாதல் அவர்களை வேறு இடத்திற்கு....

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். அவர் இப்போது முதலமைச்சர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் என்ன பிரச்சினை இருக்கிறது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** அவரை வைத்து சமாளிக்க முடியவில்லையா என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது Routine Work. இதை நீங்கள் அலுவலகத் தொடர்பானதில் பேச முடியாது.

**(ஆ) எதிர்க்கட்சி உறுப்பினர் தாக்கப் பெற்றதாகக் கூறப்படுவது குறித்து—** தொடர்ச்சி.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தங்களிடமிருந்து நான் ஒரு அன்பான பதிலை எதிர்பார்க்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டு இருக்கிறார் என்கின்ற மன வேதனையைக் கூட அவர்கள் வெளிப்படுத்த விடாமல், வெளிப்படுத்துவதற்கு அனுமதித்து இருக்கலாமே என்பது தான் என்னுடைய கருத்தாக இருக்கிறது. அவர்கள் அடிபட்டிருக்கிறார்கள் என்பதை அவர் வேதனையோடு சொல்ல விரும்புவதால் இங்கே சொல்ல அனுமதித்திருந்தால் அந்த வெளிநடப்புக் கூட நடந்து இருக்காது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உங்களுடைய அனுமதியோடு அந்த படம் காட்டப்பட்டது. அந்தப் படத்தை அவர்கள் பார்த்தார்கள், நான் பார்க்கவில்லை, எனவேதான் என்னுடைய கருத்தை நான் இங்கே வெளியிடுகிறேன்.

(முற்பகல் 10-10).

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிபட்டு இருக்கிறார் என்று ஒரு உறுப்பினர் சொல்கிறார். அடிபட்டு இருக்கிறாரா என்பது அரசாங்கத்திற்குத் தெரியாது. எனவே, தெரியாத நிலையில், படத்தைப்பார்த்தால் அடி சரியாக விழவில்லை (குறுக்கீடு). படத்தில் பார்த்தால் அடி விழவில்லை. படத்தைப பார்த்து சொல்ல முடியாது. நிலைமைகளை ஆய்ந்துதான் சொல்ல வேண்டும். எனவே, அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு ஒரு பக்க சார்பாக ஒரு கருத்தைச் சொல்லிவிட்ட குற்றத்துக்கு ஆளாகக் கூடாது. அப்படி ஆளாகின்ற வகையில் எந்தக் கருத்தையும் இந்த அவையில் எதிர்பாராத நேரத்திலே எடுத்து வைப்பது முறையல்ல. (குறுக்கீடு). காட்டப்பட்ட படத்தைக் கொண்டு எங்களால் அப்படித் தீர்மானிக்க முடியவில்லை.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### மாநிலத்தின் பல பகுதிகளில் மின் பற்றாக் குறையினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் என். பழனிவேல், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், கோ. பூவராகன் ஆகியோர் ''தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நிலவி



வரும் மின் பற்றாக் குறையினால் பல தரப்பினருக்கும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல மாதங்களாகவே தமிழ்நாட்டில் மின்சார விநியோகத்தில் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டு விவசாயிகளும் பொது மக்களும் மிகக் கடுமையாக பாதித்து இருக்கிறார்கள். குறிப்பாக, சமீபத்திலே மின்வாரியத் துறையினர் நேரத்தை நிர்ணயித்து பகலிலே 3 மணி நேரமும், இரவிலே 4 மணி நேரமும் என்று சொல்லி அவர்கள் நேரத்தை பிரித்து அறிவித்து இருக்கிறார்கள். அப்படி அறிவித்து இருக்கிறார்களேயொழிய அதன்படி மின்சாரம் சப்ளை செய்யப்படுவதில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு அங்கேயிருக்கக் கூடிய டி.ஈ.ஓ.—விடம் பேசிக் கொண்டிருக்கின்றபோது கூட அவரும் அந்த விளக்கத்தைத்தான் சொன்னார். அவர் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே மின்சாரம் அங்கே 'கட்' ஆகி விட்டது. தொடர்ந்து 10 நிமிடங்களுக்குக்கூட கரண்ட் வருவதில்லை. இதனால் விவசாயப் பயிர்கள் காய்ந்து, தீய்ந்து கொண்டிருக்கின்றன. இது பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கின்ற நேரம். பள்ளி மாணவர்கள் மின்சாரம் இல்லாத காரணத்தால் படிக்கமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தொழில்கள் இன்றைக்கு மின்சாரம் இல்லாத காரணத்தினால் நடைபெறவில்லை. மின்சாரம் இல்லாத காரணத்தினால் தொழிற்சாலைகள் இயங்க முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் இன்றைக்கு பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு கரும்புப் பயிர்களெல்லாம் காய்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்வது, இந்த மின்சாரக் கஷ்டத்தை உடனடியாகப் போக்குவதற்கு வேறு ஏதாவது மாநிலங்களிலிருந்தாவது மின்சாரத்தைக் கடனாகப் பெற்று, விட்டுவிட்டு, நிமிடத்திற்கு நிமிடம் நம்மை சோதனையிலே ஆழ்த்திக் கொண்டிருக்கும் மின் தடையை நிரந்தரமாக நீக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை ஏதேனும் எடுத்து அறிவிக்குமா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, பெரியார் மாவட்டங்களிலே கடுமையான மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயத்திற்கு சுத்தமாக மின்சாரமே கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை கடந்த 15 நாட்களுக்கும்

அதிகமாக அங்கே நீடித்துக் கொண்டிருக்கிறது. காலையிலே 10 மணியிலேயிருந்து 2 மணி வரையிலும், 2 மணியிலேயிருந்து 6 மணி வரையிலும் அதைப் போல இரவிலே 10 மணியிலிருந்து 12 மணி வரையிலும் மீண்டும் 1 மணியிலிருந்து 3 மணி வரையிலும் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று இங்கே சொன்னார்கள். மின்சாரம் இருந்தால் அல்லவா கொடுப்பதற்கு? கிராமங்களுக்குள்ளே நுழைந்தால், சுதந்திரத்திற்கு முன்னால் கிராமங்கள் எப்படி இருந்ததோ அதைப் போல இருண்ட கிராமங்களைத் தான் எங்களாலே காண முடிகிறது. நானும் 4, 5 நாட்கள் அங்கே இருந்தேன். எந்த நேரத்திற்கு மின்சாரம் வரும், எந்த நேரத்திற்கு மின்சாரம் வராது என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு மின்சாரத் தட்டுப்பாடு அங்கே கடுமையாக ஏற்பட்டிருக்கிறது. எப்போதுமே அங்கே மின்சாரம் வருவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சில நேரங்களில் திடீரென்று இரவு 9-45 மணிக்கு மின்சாரம் வரும். விவசாயிகள் ஆசையோடு 10 மணிக்கு மின்சாரம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் 10¼ மணிக்கு மீண்டும் மின்சாரம் போனால் விடிகின்ற வரையில் மின்சாரம் வருவதேயில்லை என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மிகவும் கடுமையான நிலைமை. இப்போது நிலுவையிலேயுள்ள பயிர்கள், நீண்ட காலப் பயிர்கள், தென்னை மரங்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. பங்குனி பட்டத்திலே போடப்படும் பயிரான மக்காச்சோளம் பயிரும் காய்ந்து கொண்டிருக்கிறது. நடப்படுகின்ற நாற்றங்காலிலேயிருந்து நடவு செய்யப்படுகின்ற பணப்பயிரான பெல்லாரி வெங்காயத்திற்கான தினசரி தண்ணீர் கிடைக்காமல் அந்தப் பயிர்களும் காய்ந்து கொண்டிருக்கின்றன. குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது; விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, இரவுப் பரிட்சைக்குத் தேர்வு செய்து கொண்டிருக்கிற மாணவர்களுக்குக்கூட இன்றைய தினம் மிகவும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கஷ்டமான நிலைமையிலே இன்றைய தினம் விவசாயிகளுடைய மின் இணைப்புகள் டிஸ்-மேண்டில் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த வறட்சியான நிலையிலே கூட அவர்கள் பணம் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் பணம் கட்டி விடுகிறோம் என்று சொன்னாலும்கூட பணம் வாங்க மாட்டோம், டிஸ்-மேண்டில் செய்ய வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. எனவே நாங்கள் டிஸ்-மேண்டில் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமை அங்கேயுள்ள விவசாயிகள் மத்தியிலே பெரும் பீதியையும், அச்சத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, இந்தநிலைமையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, நெய்வேலியைப் பற்றிச் சொன்னார்கள்.





அதோடு இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். நெய்வேலி யூனிட்டிலே கோளாறு ஏற்பட்டு, அந்தக் கோளாறு சீர் செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. நெய்வேலி யூனிட் முழுமையாக நம்முடைய கன்ட்ரோலில் இருக்கிறது. நம்முடைய கன்ட்ரோலில் அதை வைத்துக் கொள்ள முடியும்; பயன்படுத்திக் கொள்ளமுடியும்; அப்படி எல்லாம் இருந்தும் இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை காரணமாக மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது; அச்சம் ஏற்பட்டிருக்கிறது; அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த பீதி, அச்சம், அவநம்பிக்கையைப் போக்குகின்ற வகையில் முழுமையாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தென்னாற்காடு, வடாற்காடு, செங்கற்பட்டு மற்றும் பல மாவட்டங்களில் மின்சாரப் பற்றாக்குறையினால் ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய இழப்பு விவசாயிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியவில்லை. இன்றைக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லாமல், எல்லாக் கிராமங்களிலும் குடி தண்ணீருக்காக பயன்படுத்தப்பட்டு வந்த கிணறுகளில் எல்லாம் தண்ணீர் இல்லாத காரணத்தினால் அவற்றைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குழாய்க் கிணறுகள் மூலம்தான் தண்ணீரைப் பெறக்கூடிய சூழ்நிலை இருப்பதால், மின்சாரம் காலாகாலத்தில் கிடைக்காத சூழ்நிலையில் எங்கு பார்த்தாலும் குடி தண்ணீருக்கு அவதிப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. மாலை நேரங்களில் வியாபாரிகள் கூட கடை வீதிகளில் 2 மணி நேரம், 3 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதைப் போன்று பல தொழில் நிறுவனங்களும் பெருத்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. எந்த நேரத்தில் மின்சாரம் வரும், எந்த நேரத்தில் மின்சாரம் வராது என்று சொல்ல முடியாத நிலைமை இருப்பதுதான் இதற்குக் காரணம். அது மட்டுமல்ல. வைத்தியசாலைகளை நடத்திக் கொண்டிருக்கிற வைத்தியர்களுக்கும் பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. காலாகாலத்தில் மின்சாரம் கிடைக்காததால் இருட்டடிப்பு நிலைமை ஏற்பட்டு, அவர்களும் தொழில் நடத்த முடியவில்லை; நோயாளிகள் சிகிச்சை பெற முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. அதனால் ஆங்காங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கல்லடி படாமல் சொல்லடி படுகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த நிலைமையை அரசாங்கத்திற்குச் சொல்லவில்லை என்று மக்கள் பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சென்னை மாநகரைப்

பார்த்தால் எங்கு பார்த்தாலும் வண்ண வண்ண விளக்குகள் எல்லாம் மாலையிலிருந்து காலை வரையில் எரிந்து கொண்டிருக்கின்றன. அதற்கு மட்டும் இந்த மின்சாரம் எங்கிருந்து கிடைக்கிறது என்று தெரியவில்லை.

இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறபோது கல்பாக்கத்திலும் நெய்வேலியிலும் முறையாகக் கிடைக்கக் கூடிய மின்சாரமும் ஏதோ ஒரு காரணத்தால் இடையிடையே தடைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அதை நான் முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால் 'நேஷனல் கிரிட்டில்' நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம். அதைப் பராமரிப்பவர்கள் எப்போது எங்கிருந்து மாற்றுகிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஒரு சமயத்தில் ஆந்திராவுக்கு மாற்றுகிறார்கள். ஒரு சமயத்தில் கர்நாடகாவுக்கு மாற்றுகிறார்கள். அதனால் நம்முடைய நிலைமை இதிலே என்ன என்பது தெரியாத நிலை நம்முடைய மின்சார இலாகாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

நெய்வேலியில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அது நம்முடைய கன்ட்ரோலில் இல்லாததால் விவரம் தெரியவில்லை. உற்பத்தி செய்தால் கொடுப்பதாக இருக்கிறதே தவிர அது நம்முடைய கன்ட்ரோலில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ ஒரு குறிப்பிட்ட விஷமத்தனம், சிலுமிஷம் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற பொதுமக்கள் கூட ஏதோ இந்த அரசுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது என்று பேசுகின்ற நிலைமை இருக்கிறது. இது போன்ற பல விவரங்களை எல்லாம் விரிவாகப் பேச வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது பற்றி முழுமையாக விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு** திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறை காரணமாக 1-3-1989 முதல் உயரழுத்த தொழிற்சாலைகளுக்கு 40 விழுக்காடு மின்வெட்டு அமுலில் உள்ளது. பிப்ரவரி 1989-ல் இருந்த நிலைமையில் மின் பற்றாக்குறை ஒரு நாளைக்கு 6.54 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு மத்திய அரசு அனல்மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவை வெகுவாகக் குறைத்துள்ளது. கல்பாக்கம் அனல் மின் நிலையத்தின் இரண்டு பிரிவுகளும் செயல்படாமல் இருந்தன. ஒரு பிரிவு 24—2—1989 முதல் செயல்படத் தொடங்கியது. இப்பிரிவு மீண்டும் 4—4—1989-லிருந்து அணு உலையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகச் செயல்படவில்லை.



(முற்பகல் 10-20)

இப்பிரிவு இந்த மாத இறுதியில் செயல்படத் துவங்கும் என்று எதுர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜூன் மாதத்திற்கு முன்பு சரி செய்ய வாய்ப்பில்லை என்று இப்போது தெரிய வருகிறது. மேலும் இந்த மின்நிலையத்தில் இரண்டாம் பிரிவு 9-1-1989 லிருந்து செயல்படவில்லை. இது வரும் ஜூலைத் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கபபடுகிறது. நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் கடந்த சில வாரங்களாக சில தொழில் நுட்ப காரணங்களாலும், பட்டதாரி பொறியாளர்கள் வேலை நிறுத்தம் காரணமாகவும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலி அனல் மின் நிலைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையைச் சரிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி ஒரே சீரான நிலையில் இல்லாமல் ஏற்ற இறக்கமாக அதாவது 180 மெகாவாட்டிலே இருந்து 540 மெகாவாட்டிற்கு வேறுபட்டுக் கொண்டிருக்கிறது.

நெய்வேலி அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 20-4-1989 காலை முதல் மீண்டும் செயல்படவுள்ளது. ராமகுண்டம் தேசிய அனல் மின் நிலையத்திலிருந்து வந்து கொண்டு இருந்த மின்சாரம் தற்போது சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக முழுவதுமாக வரவில்லை. மேற்கண்ட காரணங்களால் மின் பற்றாக்குறை தற்போது ஒரு நாளைக்கு 12.045 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. இந்த நெருக்கடியைச் சமாளிக்க 75 எச்.பி.-க்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் அனைத்துத் தொழில்களுக்கும் 60 விழுக்காடு மின்வெட்டை அமல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. மேலும் தற்போது 3 வருட காலம், 5 வருட காலம் என்ற அளவிற்கு விலக்களிக்கப்பட்ட புதிய தொழில்களுக்கும் 60 விழுக்காடு மின்வெட்டு அமல்படுத்தப்படும். இந்த மின்வெட்டு தற்காலிகமாகச் செயல்படுத்தப்படும். நிலைமைகள் குறித்து அவ்வப்போது கவனமாக ஆராய்ந்து மறுபரிசீலனை செய்யப்படும்.

ஊரகங்களில் விவசாயத்திற்கு மின்சார வினியோகம் கீழ்க்கண்டவாறு செயல்படும். பிரிவு 1-காலை 6 மணியிலிருந்து 10 மணி வரையிலும், இரவு 2 மணியிலிருந்து காலை 6 மணி வரையிலும், பிரிவு 2-காலை 10 மணியிலிருந்து மதியம் 2 மணி வரையிலும், நள்ளிரவு 12 மணியிலிருந்து விடியற்காலை 4 மணி வரையிலும், பிரிவு 3-பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும், இரவு 10 மணியிலிருந்து விடியற்காலை 2 மணி வரையிலும் செயல்பட்டு விவசாயத்திற்கு அத்தியாவசியமாக மின்சாரம் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்
அவர்கள் வேறு மாநிலங்களிலிருந்தாவது கரண்டைப் பெற்று
இங்கே விநியோகிக்கலாமே என்று கோரிக்கை வைத்தார்கள்.
ஆனால் அண்டை மாநிலமான கேரளாவில் இப்போது மின்
பற்றாக்குறை 40 விழுக்காடாகவும், கர்நாடகத்தில் 45 விழுக்
காடாகவும், ஆந்திராவில 60 விழுக்காடாகவும் இப்படி அவர்
களுக்கே மின் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால்
நமக்கு அவர்களால் மின்சாரம் தர இயலாது என்று சொல்லி
விட்டார்கள். இங்கே பேசிய மாணபுமிகு உறுப்பினர் திரு.
பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆங்காங்கு மின் இணைப்பு
துண்டிக்கப்படுகிறது என்றும், மக்கள் எல்லாம் பீதி அடைந்
திருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அதுபோன்று
குறிப்பிட்டு ஏதாவது சொன்னால் அது சட்டத்திற்குப புறம்பாக
செய்யப்பட்டிருந்தால் நிச்சயமாக அது சரி செய்யப்படும்
என்பதைத் தெரிவித்துககொள்கிறேன். எந்த நேரத்தில் மின்
சாரம் வரும், எந்த நேரத்தில் மின்சாரம் வராது என்பது
எங்களுக்குத் தெரியவில்லை என்றும் இங்கே சொல்லியிருக்கி
கிறார்கள். அவர் சொன்ன அந்த தினை, சோளப் பயிர்கள்
எல்லாம் பாதுகாக்கப்படக்கூடிய அளவுக்கு மின்சாரம் வழங்கப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசி
லிருந்து வரக்கூடிய மின்சாரம், ராமகுண்டத்தில் சுரங்கத்
தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தாலும், நெய்வேலியில்
பட்டதாரி பொறியாளர்களின் வேலை நிறுத்தத்தாலும் நமககு
வருவதில் தடங்கல் ஏற்பட்டது. மின் நிலையத்தில் ஏற்பட்ட
மின் கோளாறு சரி செய்யப்பட்டது என்று அறிகிறேன் என்று
திரு. பாலசுபபிரமணியம் அவர்கள் சொன்னார்கள். இது
வரையில் சரி செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்
கொண்டு நிச்சயமாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, குமரி அனந்தன்
அவர்களுக்குத் தெரியாதது அல்ல.... (குறுக்கீடு) முதலிலே
நான் தீர்ப்புச் சொல்ல வேண்டாமா? எனது தீர்ப்பைச் சொல்லி
விடுகிறேன்.

மாண்புமிகு மின்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்
பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம்
குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு
இசைவு மறுக்கப் பெறுகிறது.





(ஊ) சென்னை கஸ்தூரிபா மருத்துவமனையில் மின்தடையால் சிகிச்சை பாதிப்பு.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
I seek yo.r permission for making a submission.
மின்சாரத் துறையாக இருந்த காரணத்தால் உங்கள் தீர்ப்புக்கு
முன்பாக நான் துரிதமாக எழுந்து விட்டேன். ஆஸ்பத்திரியில்
ஒரு குழந்தை அறுவை சிகிச்சையின் மூலமாக எடுக்கப்பட
வேண்டும் என்ற நிலையில் 6¾ மணிக்கு சிகிச்சை தொடங்கிய
உடனே 7 மணிக்கு மின்சாரத் தடை ஏற்பட்டு ஒரு மணி நேரம்
மின்சாரம் வராத காரணத்தால், மீண்டும் மின்சாரம் வந்த
போது அந்தக் குழந்தை இறந்து விட்டது தெரிந்தது. எனவே
பிறக்க இருந்த குழந்தைகூட இறந்து போனது கஸ்தூரிபாய்
காந்தி மருத்துவமனையிலே என்பது நெஞ்சை உருக்குவதாக
இருக்கிறது. எனவே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்,
இப்படிப்பட்ட உயிர் காக்கின்ற நிலையங்களுக்கு மின்சாரம்
தடையேற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு வழியிருக்கிறதா?
அல்லது மின்சாரம் வேறுவகையிலே உற்பத்தி செய்வதற்கு வழி
வகுப்பார்களா என்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாங்கள் பொறுப்பேற்று வந்து 100
நாட்கள்கூட ஆகவில்லை. ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சி
யிலோ அதற்கு முன்பிருந்த ஆட்சியிலோ இதுபோல மின்சாரத்
தடை வந்தால் மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் மூலம்
மின்சார ஒளி வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.
எனவே குறை எங்கள் மீதல்ல. முன்பு ஆண்டவர்கள் மீதுதான்.

5. உரிமைப் பிரச்சினை.

நமது எம்.ஜி.ஆர். நாளிதழ் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20—2—1989 அன்று
பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத்
அவர்கள் 'நமது எம்.ஜி.ஆர்.' நாளேடு மீது ஒரு உரிமை மீறல்
பிரச்சினையை எழுப்பினார். அப்போது இது குறித்துப்
பேசுகையில் அந்த நாளேடு, தான் 14—2—1989 அன்று பேரவை
யில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்
மீது விவாதத்தில கலந்துகொண்டு பேசிய பேச்சைத் திரித்து
உள்நோக்கத்துடன் வெளியிட்டுள்ளது என்றும், எனவே இது
அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்றும் குறிப்பிட்டார். இது
குறித்து அந்நாளேடு ஆசிரியரிடம் விளக்கம் கேட்டுப் பின்னர்
எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

53-95—6

D
V211,31'N89
N89.12.2
144264

நாளேடு ஆசிரியரிடம் இது குறித்து விளக்கம்கேட்கப் பட்டது. அவர் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்துள்ளார்;—

''14—2—1989 அன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து திருமது பாப்பா உமாநாத், எம்.எல்.ஏ., அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதி எங்களுடைய' நமது எம்.ஜி.ஆர்.' 15—2—1989 இதழில் மாற்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறோம். கவனக் குறைவால் இப்படிப்பட்ட தவறு நிகழ்ந்திருக்கின்றதே தவிர தொடர்புடைய உறுப்பினரின் பேச்சைத் திரித்து வெளியிடுகின்ற நோக்கம் எதுவும் எங்களுக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்றோம். அவ்வாறு தவறு நிகழ்ந்தமைக்காக வருந்துகிறோம். மற்றபடி அவை உரிமையை மீறுகின்ற நோக்கம் எங்களுக்கு இல்லை என்பதோடு பொறுப்புள்ள பத்திரிகை என்கிற அளவில் அவையின் உரிமைகளை மதித்துப் போற்றுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்படுவோம் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, இந்த விளக்கத்தை ஏற்று, இது குறித்து மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

## 2. அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

### (ஆ) சட்ட விதிகள். ஆய்வுக் குழு உறுப்பினர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** :—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989—90 ஆம ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:—

1. மாண்புமிகு திரு. பி. துரைசாமி—பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. பெ. ஆசையன்
3. திரு. எம். இராமச்சந்திரன்
4. திரு. ஆர். சாமிநாதன்
5. திரு. கே. சுந்தர்
6. திரு. பா. மனோகரன்
7. திரு. ப. முத்துசாமி
8. திரு. ஆ. அறிவழகன்



9. திரு. பி. மாரப்பன்
10. திரு. எஸ். எஸ். ராமசுப்பு
11. திரு. எச். எம். இராசு
12. திரு. செ. நூர் முகமது.

பேரவையின் 240-வது விதியின் கீழ் மாண்புமிகு திரு. பி. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248(1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989—90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்: -

1. திரு. த. ஆறுமுகம்
2. திரு. ஆ. அதியமான்
3. திரு. வி. எம். தேவராஜ்
4. டாக்டர் வி. தனராஜ்
5. திரு. ஏ. சி. தயாளன்
6. திரு. அ. மாரிமுத்து
7. திரு. இரா. மதிவாணன்
8. பேராசிரியர் க. பொன்னுசாமி
9. திரு. கே. ஆர். இராமசாமி
10. திரு. கே. ரமணி
11. திரு. எம். முகமது சித்திக்
12. திரு. ஜே. அசேன்.

பேரவையின் 249(1)-வது விதியின்கீழ் திரு. கே. ரமணி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

**(ஈ) மனுக்கள் குழு உறுப்பினர்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989-90 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இளம்வழுதி
2. திரு. எஸ். பி. கண்ணன்
3. திரு. அ. மலர்மன்னன்
4. திரு. ஆச்சியூர் எம். மணி
5. டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன்
6. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
7. திருமதி பி. லட்சுமி
8. திரு. ஆ. பாலையா
9. திருமதி பாப்பா உமாநாத்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. என். வல்லரசு

பேரவையின் 261(2)-வது விதியின் கீழ், திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

**6. கவன ஈர்ப்பு**

**(அ) கோவை மாவட்டம், பிள்ளையார்புரத்தில் வீடுகளும் கிருத்துவ ஆலயங்களும் இடிக்கப்பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம் குறிச்சி அருகே பிள்ளையார்புரம் என்ற கிராமத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்த வர்களின் வீடுகளையும் இரண்டு கிருத்துவ ஆலயங்களையும் 31-3-1989 ஆம் நாளன்று இடித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,





(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடமிருந்து ஒன்றை பணிவன்புடன் தெரிந்துகொள்வதற்காக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தரப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி நிரலில் ஒத்திவைப்புத்தீர்மானம் என்று இல்லை. நீங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் இருப்பதுபோல அறிவித்து, ஏன் அவையை ஒத்தி வைக்கக்கூடாது என்று எல்லாம் சொல்லி, அதற்கு விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். நான் எனது கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தேன். நீங்கள் அதை எடுத்துப் பேச வாய்ப்புக்கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நல்ல சப்ஜெக்டில் பேசியிருக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு மகிழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்தி வைப்பதா, இல்லையா என்று ஒரு முடிவுக்கு வந்த பிறகு உங்களுடைய கவனத்தை ஈர்க்கலாம் என்று கருதினேன். ஆனால் நீங்கள் அதிலேயே கவனமாக இருப்பது குறித்து இரட்டிப்பு மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். கேள்வி கேட்கிற உறுப்பினர் கேள்வி கேட்டதற்குப்பிறகு நான் பதில் அளிக்கிறேன்.

**அறிக்கை.**

கோவை மாவட்டம், குறிச்சி கிராமம், ச. எண். 4/1 இல் உள்ள 22.60 ஏக்கர் நிலத்தை, சுண்ணாம்புக்கல் வெட்டிஎடுப்ப தற்காக, ஏ.சி.சி. நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கிட்டத் தட்ட 700 குடிசைகளைப் போட்டு ராஜீவ் காந்தி நகர் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த 700 குடிசைகளில், ஒரு சில வற்றில் மாத்திரம் மக்கள் குடியிருந்தனர். திரு. ஏ.சி.சி. நிறுவனம் மேற்படி ஆக்கிரமணதாரர்களை அகற்றிக் கொடுக்கு மாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றம், மேற்படி முறையீட்டில் வழங்கிய தீர்ப்பாணை யில் ஆக்கிரமிப்பாளர்களை 31—3—1989-க்குள் அகற்றக் கோரி கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் கோவை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ஆணையிடப் பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில்தான் 31—3—1989 அன்று ஆக்கிரமணதாரர்கள் காலிசெய்யப்பட்டனர். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில், ஆக்கிரமணதாரர்கள் தெரிவித்துள்ளதுபோல் மேற்படி இடத்தில் சர்ச்சு மற்றும் எந்தவிதமான மதத்தை சேர்ந்த கட்டுமானங்களும் இல்லை என்றும், காலி செய்யும்

பொழுது ஆக்கிரமணதாரர்களின் உடமைகளுக்கும் மற்ற சொத்துகளுக்கும் எந்தவிதமான சேதமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் காலிசெய்யப்பட்ட குடும்பத்தினருக்கு மேற்படி இடத்தின் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். தற்சமயம் எந்தவிதமான பதட்ட சூழ்நிலையும் அங்கு இல்லை.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில்தான் அங்கே ராஜீவ் காந்தி நகர் என்கிற பெயரில் நகர் அமைக்கப்பட்டது. அந்த நகரிலே வீடு கட்டுகிற ஒவ்வொருவரிடமிருந்தும் 500 ரூபாய் லஞ்சமாக பெற்று இருப்பதாக புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அது குறித்து இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் வரவில்லை.

**(ஆ) குடவாசல் மருத்துவமனை பழுதுற்றநாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை பழுதடைந்தும், போதுமான மருத்துவர்கள் இல்லாமல் இருப்பதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

**அறிக்கை.**

தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் உள்ள புறநோயாளி பிரிவு தற்போது பொதுப்பணித் துறையினரால் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பொது மக்கள் போக்குவரத்துக்கு அச்சமின்றி உள்ளது. கட்டிடத்தின் சில பகுதிகளில் ஓடு வேய்ந்த கூரைகளில், தண்ணீர், மழைக்காலத்தில் ஒழுகிக் கொண்டு வரும் நிலை உள்ளது எனத் தெரியவருகிறது. பொதுப்பணித்துறையின் மூலம் இப்பணியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு அங்கீகரிக்கப்பட்ட உதவி அறுவை மருத்துவர்கள் இருவர் உள்ளனர். இவர்களில் ஆண் மருத்துவர் ஒருவரும், பெண் மருத்துவர் ஒருவரும் பணி புரிந்து வருகிறார்கள்.





**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் பகுதியிலுள்ள மக்களிடையே பதட்டமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து மிகச் சுருக்கமாக, அதுவும் 8 வரிகளில் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. போதுமான விவரமுள்ள அறிக்கையாக அது அமையவில்லை. தனிப்பட்ட முறையில் நான் குடவாசல் மருத்துவமனையை 18-3-1989 அன்று பார்வையிட்டேன். அங்கே ஒரு பெண் மருத்துவர் மட்டும் அன்றைக்கு பணியில் இருந்தார். அந்த மருத்துவமனை கடந்த 10 ஆண்டுகளாக எந்தவிதமான பராமரிப்பும் இல்லாமல் கட்டிடங்கள் பல பகுதிகளில் பழுதடைந்திருக்கின்றன. உள்ளே செல்ல முடியாத சூழ்நிலை இக்கிறது. பல கட்டிடங்களில் அப்படிப் பட்ட நிலை இருக்கிறது. இந்த விவர அறிக்கையில்கூட சில பகுதிகளில் மழை பெய்தால் ஒழுகிக் கொண்டிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள படுக்கைகளில் உயிர் உள்ள மனிதர்கள் யாரும் படுக்க மாட்டார்கள். அவ்வளவு மோசமான படுக்கைகளாக இருக்கின்றன. எங்கும் ஒரே காடுகளாக காட்சியளிக்கிறது. கால் வைத்து அங்கே நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி அங்குள்ள டாக்டர்களை அணுகிக் கேட்ட போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் போன்ற விவரம் தெரிந்தவர்கள் விளக்க உரை ஆற்ற வேண்டாம். வினாவாகக் கேட்டால் மட்டும் அனுமதிப்பேன், அப்படி இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைப்பேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள டாக்டர்களை நான் அணுகி கேட்டபோது அந்த மருத்துவ மனைக்குள் பாம்பு வந்ததாக தெரிவித்தார்கள். அங்கே மின்சார வசதியில்லை. குடி தண்ணீர் வசதியில்லை. அங்குள்ள இன்னொரு பிரச்சினை, நீர் தேக்க தொட்டிக்கு தண்ணீர் ஏற்றுகின்ற மோட்டார் பழுதடைந்ததால் பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சென்றார்கள். ஆனால் அதை பழுதுபார்த்து இதுவரை அங்கே கொண்டு வந்து வைக்கவில்லை. அதை அங்கே மீண்டும் கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்வதுடன் மின்சார வசதியையும் ஏற்படுத்தி கொடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழகம் முழுவதிலிருந்தும் இது போன்ற பல்வேறு புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே இது குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, உடனடியாக மருத்துவ மனைகளிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவரிடம் கேட்டுக் கொண்டு அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்

பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதுமுள்ள மருத்துவ மனைகளிலே இப்போது இதுபோன்ற புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு பகுதியாகத்தான் குடவாசலிலேயும் இதுபோன்று முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்டிய குறைபாடுகளுக்குமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்றேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை கொடவாசல் வட்டத்தின் தலைநகரில் அமைந்திருப்பதால் இதை, வட்ட மருத்துவமனையாக மாற்றி, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அதாவது காம்பவுண்டு சுவர் கட்டிக் கொடுப்பது, தேவையான படுக்கைகளைக்கொண்ட புதிய வார்டுகளைக் கட்டிக் கொடுப்பது, அவசரச் சிகிச்சை பிரிவு அமைத்து கொடுப்பது, எக்ஸ்-ரே எடுக்கும் பிரிவு, ரத்தம்-மலம் போன்றவற்றைச் சோதனை செய்யும் பிரிவு ஆகியவற்றை அமைத்துக் கொடுப்பது, கழிப்பிட வசதியைச் செய்து கொடுப்பது போன்றவற்றை, கருணை உள்ளத்தோடு செய்து தந்திட இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

**7. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.**

**(அ) கோரிக்கை எண். 26.—கைத்தறியும் துணித் தொழிலும்,**

**(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி.**

**கோரிக்கை எண். 26.**

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,71,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.



**திரு. வி. இராமசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணிகள் தேங்குவதாலும், நூல்விலையேற்றத்தாலும் கைத்தறித் தொழில் மோசமாக நசிந்துகொண்டு வரும் நிலைகுறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 53,71,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**கோரிக்கை எண். 34.**

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 68,46,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

**திரு. மா. சுந்தரதாஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, To discuss the haphazard growth of the residential areas of Madras resulting in over-population in some areas, I move—

''மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,46,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்க்கு வழங்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் படித்ததாக அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.** உறுப்பினர்களுடைய அரிய கருத்துக்களை கேட்டு இறுதியில் தொகுப்பாக என்னுடைய உரையை ஆற்ற இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்றைய விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் டாக்டர் சுந்தரராஜ்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி

**314-363 ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

வைத்த பரமக்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அகில இந்திய அண்ணா தி.மு.க.வின் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் எனது வணக்கத்தை இந்த அவையின் மூலம் தெரிவித்து என்னுடைய தொகுதியின் நெசவாளர் பிரச்சினையைக் குறித்து இங்கே கூற விரும்புகிறேன்.

பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியில் 7500 கைத்தறி நெசவுகள் உள்ளன. கைத்தறி நெய்யத் தெரிந்தவர்கள் 10,000 பேர் உள்ளனர். கூட்டுறவு சங்கங்கள் மூலம் 6,000 பேர்கள் அடங்கிய 45 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1,000 பேர் சொந்த மூலதனத்தில் தறி நெய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

கூட்டுறவு சங்கங்ளைப் பொறுத்த வரையில், தறி நெய்யும் நெசவாளர்களுக்கு மாத வருமானம் சராசரியாக ரூ. 250 முதல் ரூ. 300 வரைதான் கிடைக்கிறது. காட்டன் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இந்த அளவு கூலி கிடைப்பது தவிர லாபப் பிரிவினை அடிப்படையில் 1 சதவீதம் முதல் 3 சதவீதம் வரை லாபப் பிரிவினை பங்கீடு கிடைத்து வருகிறது. கூட்டுறவு சங்கத்தில் நட்டம் ஏற்பட்டால், இந்த லாபப் பங்கீடு கிடைக்க வாய்ப்பில்லை. நெசவாளர்களுக்காக, குரூப் இன்சூரன்ஸ் திட்டம், ஓய்வூதியத் திட்டம் என இரு திட்டங்களை அரசு அறிவித்தும் முழுமையாக அமுல்படுத்தவில்லை. எனவே அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவீதம் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 50 சதவீதம் வெளி மார்க்கெட்டுகளில் ரிபேட் காலங்களில் விற்பனை செய்யப்படுகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கூட்டுறவு சங்கங்களுக்கு 3 மாதங்களுக்கு பின்னால் விற்பனைத்தொகை கொடுப்பதாலும், உற்பத்தி செய்யும் சங்கங்களுக்கு ரிபேட் காலத்தில்தான் விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலை உள்ளதாலும் கைத்தறித் துணித் தேக்கம் ஏற்படுகிறது. இதனால் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்க முடியவில்லை. கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும் துணிகளுக்கு 30 தினங்களுக்குள் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



கைத்தறித் துணியின் மீது வழங்கும் தள்ளுபடி சலுகை 90 தினங்களுக்குள் கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நவீன கருவிகளை கைத்தறியில் புகுத்துவதற்கு நெசவு கருவி சாமான்கள் அனைத்தும் மானியமாகவே அளித்து புதிய பேட்டன் செய்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூல், ஆர்ட் சில்க், ஜரிகை, சாயப்பொருள்கள் சீரான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

நீண்ட நாட்களாக கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட 22 ரக ஒதுக்கீடு விசைத்தறியாளர்களால் கோர்ட் மூலம் தடை வாங்கப்பட்டு உள்ளது. தடை நீக்கம் செய்து 22 ரகங்களையும் கைத்தறிக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

விசைத்தறி அதிகரிப்பை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி தொழிலை பாதுகாக்க வேண்டும் அல்லது கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்றுத் தொழில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி அடிப்படையில் தறி கூலிகள், குறைந்த பட்ச கூலி நிர்ணயச் சட்டம் அமல் செய்ய வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்களுக்கும் லாபம் கிடைக்கும் பட்சத்தில் பங்கு தொகைக்கு டிவிடெண்ட்டும், லாபத்தில் 1 முதல் 3 சதவீதம் குறைந்த அளவு லாபப் பிரிவினை தொகையும் கிடைத்து வருகிறது. ஆனால் மற்ற தொழில்களில் உள்ளவர்களுக்கு மாதச் சம்பளம் என்ற முறையில் இருப்பதால் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் 8.33 சதவீதமாகவும், உயர்ந்த பட்சம் 24 சதவீதமாகவும் போனஸ் கிடைக்கிறது. ஆனால் கூட்டுறவுச்சங்க நெசவாளர்களுக்கு அந்த சலுகைஇல்லை. எனவே வருடாந்திர வேலைக்குரிய கூலி அடிப்படையில் கைத்தறி நெசவாளர்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் கிடைப்பது போல் போனஸ் தொகை வழங்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். துணி விற்பனையில் விலை நிர்ணயம் செய்யும்போது போனஸ் தொகையையும் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நெசவாளர்கள் வாழும் குடியிருப்புகள் போதுமான அளவு காற்றோட்ட வசதி இல்லாமலும், சுகாதார வசதி இல்லாமலும், கழிப்பறை வசதி இல்லாமலும் வசிக்கும் இடத்திலேயே தறிகள் அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். எனவே அனைத்து நெசவாளர்களுக்கும் காற்றோட்டமான, சுகாதார

வசதிகளோடு கூடிய வீடுகளும், தனியே தறிக் கூடமும் அமைத்துக் கொடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன். வீடு கட்ட 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாக வும் அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

நெசவாளர்களுக்கு காசநோய், கண்பார்வை மங்குதல், மூலநோய் போன்ற நோய்கள் ஏற்படுவதால், அவர்களின் மருத்துவ செலவை ஈடுகட்ட போதுமான வருமானம் இல்லாத காரணத்தால் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் நிதி உதவி செய்து கைத்தறி சென்டர்களில் நெசவாளர்களுக்கு தனி ஆஸ்பத்திரி அமைக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கி றேன்.

நெசவாளர்களின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு களில் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி நிலையங்களில் நெசவாளர்களின் குழந்தைகளை மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு கிடைக்கும் தேசிய விடுப்பு, மருத்துவ விடுப்பு போன்ற விடுப்பு நாட்களுக்கு ஊதியம், கைத்தறி நெசவாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களில் நெசவாளர்களின் குழந்தைகளை வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு இல்லாமலேயே கூட்டுறவு நிறுவனங்களே நேரிடையாகச் சேர்த்துக்கொள்வதற்கு அனைத்து கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப இன்சூரன்ஸ் திட்டத்தில் 55 வயதிற்குள் இறந்தால் அரசால் 3000 ரூபாயும், கோ-ஆப்டெக்ஸ் 2000 ரூபாயும் ஆக மொத்தம் 5000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு வயது வரம்பை 60 ஆக உயர்த்தியும், இறந்தாலும், ஓய்வு பெற்ற பின் இறந்தாலும் 10,000 ரூபாய் வழங்குவதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு ஓய்வு பெற்ற பின் மாதம் ரூ. 100, அவர்கள் இருக்கின்றவரை பென்சன் தொகையாக வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நூல் விலையை கட்டுப்படுத்த, நூல் லெவி கொள்முதல் செய்து விநியோகம் செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொண்டு, நூல் தட்டுப்பாட்டை போக்க



அரசு நூல் பாங்க் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். நூல் மீது உள்ள விற்பனை வரி 2 சதவீதத்தை நீக்க வேண்டும். சிட்டா நூல் சாயம் சலவை செய்வதற்கு உள்ள ஒப்பந்தக் கூலிகள் மீது விற்பனை வரி 5 சதவீதம் நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் வாழக்கூடிய வீடு களுக்கு குறைந்த மின்சாரக் கட்டணமாக யூனிட் ஒன்றுக்கு 10 பைசா வீதம் நிர்ணயம் செய்ய அரசைக் கேட்டுக்கொள் கிறேன். எடுத்துக்காட்டாக இந்தத் திட்டம் கர்நாடக மாநிலத்தில் அமலில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலில் உள்ள உப தொழிலைச் செய்பவர்களுக்கு—பாவு துவைத்தல், சாயம் தோய்த்தல் நூல் சுற்றுதல் இவைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு—பென்ஷன் மற்றும் குரூப் இன்சூரன்ஸ் திட்டம் ஆகியவை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அனைத்து கைத்தறிப் பந்திகளையும் அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் சங்கங்களிலும், மாஸ்டர் வீவர்களிடமும் நெய்யும் நெசவாளர்களுக்கு ரூ. 25 சதவீத கூலி உயர்வு வழங்க வேண்டுமென்றும், நலிவடைந்த சங்கங்களை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்டாக் விற்றாகிவிட்டாலும், ரிபேட்டில் விற்கக்கூடிய 50 சதவீதம் சரக்குகள் விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் துணி விற்ற பின்பும், இந்த ரிபேட்டில் விற்கக் கூடிய துணி நெய்வதற்கு அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேங்கிக் கிடக்கும் கைத்தறி ஆடைகளை அரசு மூலம் அரசு ஊழியர்களுக்கு விற்பனை செய்தால் கைத்தறித் தொழிலுக்கு வாழ்வு அளிக்க முடியும் என அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

ரிபேட்டுக்குப் பதில் சப்சிடி கொடுப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

ரிபேட்டுக்குப் பதில் சப்சிடி கொடுப்பதால் கன்ஸ்யூமர் அட்ராக்ஷன் போய்விடும். ரிபேட்டில் கூட விற்றால் அதிக

இலாபம் கிடைக்கும்; அரசுக்கும் இலாபம் கிடைக்கிறது; தொழிலாளர்களுக்கும் இலாபம் கிடைக்கிறது. அதனால் சப்சிடியில் ஒரே அளவாகத்தான் இலாபம் இருக்கும். சப் சிடியில் கச்சாப் பொருள்களுக்கு மட்டும் தான் இலாபம் கிடைக்கிறது. அதனால் consumer -க்கு நஷ்டம் இல் லாத, நெசவாளர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய சப்சிடி தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அரசை வற்புறுத்தி, இதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவாப்டெக்சில் pure silk எண்பது கோடி ஸ்டாக் உள்ளது. ஆனால் பம்பர், பனாரஸ் துணி ஸ்டாக் இருபது இலட்சத்திற்கும் குறைவாகத்தான் உள்ளது. பம்பர், பனாரஸ் துணிகள் பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியில் நெய் கிறார்கள். கோவாப்டெக்ஸ் ஆரம்பித்தது ஏழை மக்களைக் காப்பாற்றத்தான், முன்னேற்றத்தான். ஆனால் pure silk 80 கோடிக்கு வாங்கி, கோவாப்டெக்ஸ் ஸ்டாக் வைத்துள்ளது வருத்தத்திற்குரியது. எனவே, pure silk வேண்டுமானால் open market-இல் விற்றுக் கொள்ளலாம். பல வருஷங்களானாலும் பாதிப்பு ஏற்படாது. ஸ்டாக் அதிகமாக இருப்பதால், கோவாப்டெக்ஸ் மூன்று மாதங்களுக்கு முன்னதாகக் கொடுக்கக் கூடிய production plant இன்னும் ஏப்ரல் ஆகியும் கொடுக்கப்பட வில்லை. ஆகவே, Advance Intimation for production கொடுக்க வேண்டும். Production Plant-இல் தயாரித்த துணிகள் ஐம்பது இலட்சத்திற்கு இப்பொழுது தேங்கியுள்ளது. அந்த ஐம்பது இலட்சம் துணிகளையும் அரசு ஏற்க வேண்டும்.

இரண்டு மாதங்களாகக் கோவாப்டெக்ஸில் pay போடப் படவில்லை. year ending -இல் சரக்குகள் வாங்கப்பட வும் இல்லை. சங்கங்கள் நஷ்டம் இல்லாமல் நடக்க கோவாப்டெக்ஸ் pay போட வேண்டும். முன் தேதியிட்டு, உடனே, நெய்த துணிகளை வாங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன் வணக்கம்.

திரு. எஸ் எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சாத்தூர் தொகுதி சட்டமன் றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் என்னை வெற்றி பெறச் செய்த எனது அன்புத் தலைவர், தமிழினத் தலைவர், மாண்பு மிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



சாத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து இந்தப் பேரவைக்கு என்னை அனுப்பி வைத் துள்ள சாத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை இந்தப் பேரவை மூலம் தெரிவித்து என்னுடைய கன்னிப்பேச்சைத் துவக்குகிறேன்.

கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய மானியக் கோரிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் சுமார் நாலரை இலட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. இதைச் சார்ந்த சுமார் 15 இலட்சம் நெச வாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நிலை, கடந்த இரண் டாண்டுக்காலமாகப் பரிதாபகரமான நிலையில் உள்ளது. கைத்தறித் துணித் தேக்கத்தின் காரணமாகத் தொழில் இல்லாமல் வேலையிழந்து இருக்கும் நிலையைப் போக்க நெசவாளர்கள் நல்வாழ்வு பெற என்னுடைய ஆலோசனை களையும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் தெரி விக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1986 மார்ச். மாதத்தில் மத்திய அரசு கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் 22 ரகங்களுக்குப் பிறப்பித்தது. ஆனால் வ்கைத்தறியாளர்கள் சம்மேளனம் சென்னை உயர்நீதி மன் றத்திலும், டெல்லி உச்ச நீதி மன்றத்திலும் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்ட அமுலை நிறுத்தி வைத்து உத்தரவுகள், ரிட் மனு எண்கள் 3556, 9090, 10967, 4110நாட்கள் முறையே 24—4—1986, 5—9—1986, 22—9—1988 மற்றும் 22—3—1989 ஆகிய உத்தரவுகள் பெற்றுள்ளது.

எனவே, கடந்த மூன்றாண்டுக் காலமாகக் கைத்தறி யாளர்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய இந்தத் தடை உத்தரவை ரத்து செய்து கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட் டத்தை அமல்படுத்த மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசு வலியுறுத்தும்படி வேண்டுகிறேன்.

அயல்நாடுகளுக்கு பருத்திப் பஞ்சுகள், பருத்தி நூல்கள், சாய மருந்துப் பொருட்கள் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதித்திருப்பதை ரத்து செய்ய தமிழக அரசு வலியுறுத் தும்படி வேண்டுகிறேன்.

(முற்பகல் 10-50)

ஆர்ட் சில்க் யார்ன், நார்ப்பட்டுக்கு மத்திய அரசு விதித் துள்ள இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்ய மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டுகிறேன்.

[திரு. எஸ். எஸ். கருப்பசாமி] [1989 ஏப்ரல் 24

கைத்தறித் துணி விற்பனையின் பேரில் வருடத்தில் 100 நாட்கள் பிரதி மாதம் 1ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை மாதத்திற்கு 5 நாட்கள் வீதம் 12 மாதங்களுக்கு 60 நாட்களும், பொங்கல், கைத்தறி வாரம், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தீபாவளி, கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை நாட்களுக்கு 40 நாட்களும் என்று ஆக மொத்தம் 100 நாட்கள் மொத்த விற்பனைக்கும், சில்லறை விற்பனைக்கும் 20 சதவீதம் ரிபேட் கொடுக்க மத்திய அரசு அனுமதிக்கும்படி தமிழக அரசு வலியுறுத்த வேண்டுகிறேன்.

விசைத்தறிகளில் பருத்தி சிட்டா நூல்கள், ஸ்டேபிள் பைபர் சிட்டா நூல்கள் உபயோகிப்பதை மத்திய அரசு தடை செய்ய வேண்டுமென்றும், இந்த சிட்டா நூல்களின் உபயோகம் முழுவதையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டு மென்றும் மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டு கிறேன்.

அயல் நாடுகளிலும், வெளி மாநிலங்களிலும், தமிழகத் திலும் மேலும் அதிகமான கோ-ஆப்டெக்ஸ் மூலம் கைத் தறித் துணி விற்பனை நிலையங்களை அமைக்க வேண்டு கிறேன்.

அதிநவீனயான மோஸ்தரில் கைத்தறித் துணி ரகங்கள் உற்பத்தி செய்வதற்கு 5,000 கைத்தறிகளுக்கு மேலுள்ள நக ரங்களில் 'ட்ரெயினிங் சென்டர்' ஏற்படுத்தி நெசவாளர்களை பயிற்றுவிக்கவும், சிறந்த கைநெசவு டிசைனர்களுக்கு பரிசு அளிக்கவும் வேண்டுகிறேன்.

தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் அறிவுப் பூர்வமாக நிர்வகிக்க தகுந்த ஊழலற்ற நிர்வாக இயக்குநர்களை நியமித்து மேற்படி 18 நூற்பாலைகளும் இலாபகரமாக இயங்கவும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு தாராளமாக நூல் சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

பருத்தி சிட்டா நூலுக்கு விதிக்கப்படும் இரண்டு சதவீத விற்பனை வரியையும், ஸ்டேபிள் பைபர் நூலுக்கு விதிக்கப் படும் 5 சதவீத விற்பனை வரியையும் ரத்து செய்ய வேண்டு கிறேன்.

தமிழகத்தில் பிரைமரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியுள்ள கோடிக்கணக்கான கைத்தறி துணிகளை கோ- ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து கைத்தறி நெசவாளர்களுக்கு உதவிட வேண்டுகிறேன்.



1989 ஏப்ரல், 24] [திரு. எஸ். எஸ். கருப்பசாமி]

கடந்த இரண்டு ஆண்டுகளில் பருத்தி நூல் விலைகள் இரட்டிப்பு மடங்காக உயர்ந்துள்ளதைத் தடுத்து நியாயமான விலைக்குக் கிடைக்க தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கைத்தறிக்குத் தேவை யான சாயமருந்து, மற்றும் கெமிக்கல் பொருள்கள் 50 சத வீதம் உயர்ந்துள்ளதை தடுத்து, நியாயமான விலைக்கு கொண்டுவர தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கைத்தறியில் 'பிட்லூம்ஸ்' ( Pit Looms ) குழித்தறிகள், டேபிள்லூம்ஸ் மேசைத்தறிகள் இயங்கி வருகின்றன. காமராசர் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 'டேபிள்லூம்' மேசைத்தறி வாங்குவதற்கு தறி ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் இரண்டாயிரம் தறிகளுக்குக் கடனுதவி வழங்க வேண்டுகிறேன்.

கைத்தறியாளர்களுக்கு அச்சு, பண், நாடா, நூல் சுற்றும் குழல்கள், ராட்டை செட், மரப்பேட்டு பெட்டிகள், ஜக்காடு பெட்டிகள் இலவசமாக வழங்குவதற்கு வருடத்திற்கு ரூபாய் 50 லட்சம் மானியம் வழங்க வேண்டுகிறேன்.

காமராசர் மாவட்டத்தில் புதிதாக அசல்பட்டு ரகங்கள் உற்பத்தி செய்வதற்கு 5,000 கைத்தறி கள் புதியதாக வாங்குவதற்கு தறி ஒன்றுக்கு ரூபாய் 1,000 வீதம் மானியம் வழங்க கைத்தறி மானியத்தில் ரூபாய் 50 லட்சம் மானியம் வழங்க வேண்டுகிறேன்.

காமராசர் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வருடத்திற்கு 1,000 குடியிருப்பு வீடுகள் கட்ட வீடு ஒன்றுக்கு ரூபாய் 15,000 கடனும், அதில் 33 சதவீத மானியமும் வழங்க கைத்தறி மானியத்தில் நிதி ஒதுக்க வேண்டுகிறேன்.

காமராசர் மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் பங்கு மூலதனத்திற்காக (ஸ்டேட் பார்ட்டிசிபேஷன்) சங்கத்தில் உறுப்பினர்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து, 100 ஆயிரம் வரை தமிழக அரசு நிதி உதவி செய்திட வேண்டுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக படிப்படியாக நெசவு வேலை குறைந்து, வேலையில்லாமல் தவிக்கும் காமராசர் மாவட் டத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஏழை நெசவாளர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 200 கடன் உதவி தமிழக அரசு வழங்க வேண்டுகிறேன்.

[திரு. எஸ். எஸ். கருப்பசாமி] [1989 ஏப்ரல், 24

தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு நிரந்தரப்பணி, பணிப்பாதுகாப்பு, குறைந்தபட்ச மாத ஊதியம், போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உறுதி செய்யப்பட தமிழக அரசை வேண்டுகிறேன்.

பிர்லா குருப்புக்கு நாக்டாவிலும், மாவூரிலும் உள்ள ஸ்டேபிள் ஃபைபர் பஞ்சு ஆலைகளில் தமிழகத்தில் உள்ள ஒரு சில பெரிய நூற்பு ஆலைகளுக்கு ஏகபோகமாக தன்னிச்சையாகக் கொடுத்து வரும் ஸ்டேபிள் ஃபைபர் பஞ்சுகளை கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் நலிந்த நூற்பு ஆலைகளுக்கும் ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு உத்தரவிட வேண்டுகிறேன்.

கடந்த 6 மாத காலத்தில் கிலோ ஒன்றுக்கு 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை நார்ப்பட்டு, ஆர்ட் சில்க் விலைகள் உயர்ந்துள்ளதை அவ்வப்போது மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியும் மேற்படி மூலப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. குறிப்பாக நம் இந்திய நாட்டில், National Rayan Corporation. Indian Rayan Corporation, Century Mills, Viscose Travancore Rayans போன்ற நார்ப்பட்டு தயார் செய்யும் 7 மில்களும் ஒரு சிண்டிகேட் அமைத்து அவ்வப்போது விலையை தாறுமாறாக உயர்த்தி வருகிறார்கள். இது குறித்து ஒரு சீரான விற்பனை முறையை நிர்ணயம் செய்ய தமிழக அரசை வேண்டுகிறேன்

1977 முதல் 1988 முடிய 12 ஆண்டுகளில் காமராசர் மாவட்டத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்த பருத்தி நூல், ஸ்டேபிள் ஃபைபர், மற்றும் நார்ப்பட்டு, ஆர்ட் சில்க் கொள்முதல் பில்களை சரிபார்த்து பினாமி பில்களைக் (ஃபோகஸ் பில்கள்)கண்டுபிடித்து, மேல் நடவடிக்கை எடுக்கவும். வேண்டும்.

அப்படிப்பட்ட நூல் கொள்முதல் பினாமி பில்களை வைத்து கணக்குகள் எழுதி நெசவாளர்களுக்கு நூல் சப்ளை செய்ததாகவும், நெசவுக் கூலிக் கொடுத்து ஜவுளிகள் உற்பத்தி செய்ததாகவும் அந்த ஜவுளிகளை 20 சதவீத ரிபேட்டில் விற்பனை செய்ததாகவும் பினாமியாக கணக்கு எழுதியதையும் அந்த ரிபேட்டுத் தொகைகளை கூட்டுறவு அதிகாரிகளின் துணையுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மோசடி செய்ததையும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

காமராசர் மாவட்டத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நூல், ஸ்டேபிள் ஃபைபர், நார்ப்பட்டு, சாயமருந்துப் பொருட்கள், இருப்புக் கணக்குகளை கையிருப்புடன் சரிபார்த்து, குறைவு படிகளுக்குரிய தொகைகளை வசூல் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.



1989 ஏப்ரல், 24] [திரு. எஸ். எஸ். கருப்பசாமி]

காமராசர் மாவட்டத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சங்க மெம்பர்கள் பெயரில் சில சங்கத் தலைவர்களால் நூல் ஸ்டேபிள் மற்றும் நார்ப்பட்டு சப்ளை செய்ததாக பொய்யான வினியோக கணக்குகளை எழுதி மோசடி செய்திருப்பதை சரிபார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

காமராசர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இருக்க வேண்டிய இருப்பு நூல்களையும், சாய மருந்துகளையும், ஸ்டேபிள் பைபர், மற்றும் நார்ப்பட்டு ஆகியவைகளை கையாடல் செய்து, அதற்குப் பதிலாக கழிவு நூல்கள் கழிவு ஸ்டேபிள் பைபர் கழிவு நார்ப்பட்டுகளையும் கெட்டுப்போன அல்லது மலிவான சாய மருந்துப் பொருட்களையும் சங்கத்தில் இருப்புக்கு வைக்கப்பட்டு இருப்பதை சரிபார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாடு மாநில நெசவாளர் சங்கத்தால், கோ-ஆப்டெக்சால் தமிழகத்தில் உள்ள பிரைமரி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய பாக்கித் தொகைகளை பட்டுவாடா செய்ய தமிழக அரசு உத்தரவிட வேண்டுகிறேன்.

முன்பு நியமனம் செய்யப்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளால் உயர்நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ள Statusquo Injunction order-ஐ விலக்குவதற்கு தமிழக அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

என்னுடைய சாத்தூர் தொகுதியிலுள்ள நெசவாளர்கள் வலை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுவதால், நெசவாளர் குடும்பம் ஒன்றுக்கு ஒரு குவின்டால் அரிசி இலவசமாக தமிழக அரசு வழங்க வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் சுமார் 12 ஆயிரம் கைத்தறிகள் உள்ளன. கடந்த 2 ஆண்டுக் காலமாக வேலையில்லாமல் தவிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குப் போதுமான வேலையும், கூலியும் கொடுத்து காப்பாற்றும்படி, இமாலயக் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன் வணக்கம்.

*திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்கு இந்த ஹாண்ட்லூம் மானியத்தின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்த மானியத்திற்கு 53 கோடியே 71 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்தக் கைத்தறித் துறை புனிதமானது. புராதனமானது. இதிலே கடந்த ஆண்

[திரு. ஏகாம்பர ரெட்டி] [1989 ஏப்ரல், 24

1,673 சொஸைட்டிகள் இருந்தன. இந்த ஆண்டு 1,665 சொசைட்டிகளாக குறைந்துவிட்டது. கைத்தறியைப் பார்க்கப் போனால், 3 லட்சத்து 97 ஆயிரத்திலிருந்து 2 லட்சத்து 58 ஆயிரத்திற்குக் குறைந்திருக்கிறது. ஆக 1 லட்சத்து 39 ஆயிரம் தறிகள் குறைந்துவிட்டது.

[முற்பகல் 11.00]

சொசைட்டிகள் 8 குறைந்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், விசைத் தறிகள் அதிகமாக காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆக வளர்ந்து வருகின்ற காரணத்தினால், இப்போது கைத்தறிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நிலை குறைந்துவிட்டது. இப்போது கைத்தறிகள் கிராமப்புறங்களில் விவசாயத்திற்குப் பிறகு மிகவும் முக்கியத்துவம் பெற்று 15 இலட்சம் கைத்தறி நெசவாளர்களிலிருந்து இப்போது 30 இலட்சம் பேர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிற ர்கள். அப்படிப்பட்ட புராதனத் தொழில் நாள்தோறும் கடினமாகிக் கொண்டு வருகிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரிந்த வரையில் அதிக அளவிற்கு விசைத் தறிகளுக்கு லைசன்ஸ் கொடுத்து, அதை வளர்க்கச் செய்வதுதான் ஒரு கைத்தறி நெசவாளி ஒரு நாளக்கு அதிக பட்சம் 8 மீட்டர் நெய்கிறார் அதுபோன்று விசைத் தறியிலே ஒருதொழிலாளி ஒரு நாளைக்கு 40 மீட்டர் நெய்யலாம். கைத்தறிக்கு ரூ. 8-லிருந்து ரூ. 15 வரை கூலியாகக் கிடைக்கிறது. விசைத் தறியிலே நெய்பவருக்கு ரூ. 40 ஆதாயமாக, கூலியாகக் கிடைக்கிறது. அந்த வருமானத்தை கணக்கிட்டுப் பார்த்தால், கைத்தறியிலே இருக்கக் கூடிய ஒரு நெசவாளி, அந்தத் தொழிலாளி, விசைத்தறிக்குப் போய் அந்தத் தொழிலை ஆதாரமாக வைத்துக் கொள்ளும் நேரம் இன்று ஏற்பட்டுவிட்டது. சாதாரணமாக ஒரு தொழிலாளிக்குத் தவறாமல் எங்கே கூலி அதிகமாக, லாபகரமாகக் கிடைக்கிறதோ அங்கே போவது சகஜமான குணம். ஆதலால் அந்தக் கைத்தறிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தத் தொழிலிலே இருக்கக் கூடியவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்வந்து ஒரு ' எக்ஸ்பர்ட் கமிட்டியைப் ' போட்டு, அவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து மீண்டும் அந்தக் குறைந்த கைத்தறிகளை, கடந்த ஆண்டு இருந்ததைப் போல்— அதிகப்படுத்தாவிட்டாலும்கூட, கூட்டுறவு ஸ்தாபனத்திலே இணைத்து கவரேஜ் ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் கூட்டுறவில் போகக் கூடிய கவரேஜ் நாள்தோறும் குறைந்து கொண்டே வந்து கொண்டிருக்கிறது. அதை மீண்டும் குறைக்காமல் கடந்த ஆண்டு இருந்த 3 இலட்சத்திற்காவது உயர்த்தினால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் இன்னும் 2, 3 ஆண்டுகளில் கைத்தறியே இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆதலால் கைத்தறித்துறை அமைச்சரவர்கள் ஆவன செய்து, அக்கறை எடுத்து, முதலமைச்சர் அவர்களின் மூலமாக



1989 ஏப்ரல், 24] [திரு. ஏகாம்பர ரெட்டி]

யோசனை செய்து ஒரு ' எக்ஸ்பர்ட் கமிட்டியை ' போட்டு மீண்டும் கைத்தறி விசைத் தறிக்குப் போகாமல், கைத்தறியாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது கைத்தறிக்கு நாம் கொடுக்கக் கூடிய சலுகைகள் மிக மிகக் குறைவு. கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டிகளிலே கவரேஜ் இல்லை இல்லை என்று சொல்கிறோமே தவிர, சொஸைட்டிகளைக் கேட்பவருக்கு சொஸைட்டி கொடுப்பதே இல்லை இந்த விதிகளைத் தளர்த்தி, 50 தறிகள் இருந்தால் அதற்கு ஒரு சொஸைட்டி கொடுத்தால் கிராமப் புறங்களிலே பிரைவேட் ஓனர்சிடம் போகாமல் அவர்கள் எல்லாம் சொஸைட்டிக்கு வர வாய்ப்பு இருக்கும். பிசினஸ் பீப்பிள் அவர்களிடம் நிறைய இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களுக்கு அதைவிட கொஞ்சம் அதிகமாகக் கூலி கொடுத்தால் அங்கே சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கூடுமான அளவிற்கு கைத்தறி குறைந்து போகாமல் இருப்பதற்கு அவர்களுக்கு ' ஷேர் கேப்பிடல் லோன், ஒர்க்கிங் கேபிடல் லோன்' அதிகமாகக் கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நூல் விலை கவர்னர் ஆட்சிக்கு முன்பு, 40-ஆம் நம்பர் நூலின் விலை ஒரு பெட்டிக்கு ரூ. 230-ஆக இருந்தது. கவர்னர் ஆட்சியிலே ரூ. 190-ஆக வந்தது. இப்போது ரூ. 230-க்குப் போயிருக்கிறது. அதற்கு மாநில அரசு பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. பொதுவாக நூல் விலை ஏறியதன் காரணத்தால் தான் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் உபயோகப் படுத்தக் கூடிய அந்த 40-ம் நம்பர் நூலின் விலை இன்றைக்கு ரூ. 230-ஆக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். பிரைவேட் சொஸைட்டிகளில் இருப்பவர்களுக்கு அதை புரொடக்ஷன் காஸ்ட் போக கொடுக்கிறார்கள். அவுட்சைட் கோஆபரேடிவ் பூலில் இருப்பவர்கள் ரூ. 230-க்கு வாங்கி நெசவு செய்து மாஸ்டர் வீவருக்குக் கொண்டு போய் கொடுத்தால் அவர்களுக்கு எந்தவிதமான கூலி கிடைக்கும்? அதனால் 'ஹேண்ட்லூம் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் முன்வந்து அந்த நூலின் விலையைக் குறைப்பதற்கு ஓரளவிற்கு சப்சிடைஸ் செய்தாவது ரூ. 200-க்குக் கொடுத்தால் தான் அவர்களுக்கு கூலி கிடைக்க வாய்ப்பு இருக்கும். அவுட்சைட் கோ-ஆபரேடிவ்-ல் இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட வசதி செய்வதற்கு முன்வர வேண்டும். அதே போன்று ஏராளமான பெண்கள் கிராமப்புறங்களில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஷேர் கேப்பிடல், வொர்க்கிங் கேப்பிடல் எல்லாம் கொடுப்பதற்கு சொஸைட்டிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஒரு சொசைட்டிக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 5 சொஸைட்டிகள் தான் ஸ்டார்ட் பண்ணியிருக்கிறார்கள். இந்த மாதிரி சொசைட்டிகளை அதிகமாக்க வேண்டும்.

பெண்களுக்கு அதிகமாக ஊக்கம் கொடுப்பதற்கும், அவர்களுக்கு வொர்க்ஷெட் கட்டிக் கொடுப்பதற்கும், தற்போது வொர்க்ஷெட் கட்டிக் கொடுக்கிற புரொவிஷன் மிகவும் குறைவு. 15 ஆயிரம் ரூபாயில் என்ன வொர்க் ஷெட் வரும்? 10,000 ரூபாய் லோன்—கொடுக்கிறார்கள். 2½ ஆயிரம் சென்டிரல் கவர்ன்மெண்ட், 2—1-2 ஆயிரம் ஸ்டேட் கவர்ன்மெண்ட் மானியம். இந்த 15 ஆயிரம் ரூபாயிலிருந்து அவர்களுக்கு ரெசிடென்ஷியல் கம் வொர்க் ஷெட் எப்படி வரும்? குறைந்தது அதை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, 15 ஆயிரம் ரூபாய் லோன் கொடுத்து, பத்தாயிரம் ரூபாய் சப்சிடியாக செய்து, ஸ்டேட் சப்சிடி 5 ஆயிரம், சென்ட்ரல் சப்சிடி 5 ஆயிரம் ரூபாய் என்று செய்தால் ஓரளவுக்காவது அவர்கள் ஷெட்டுகளையும் வீடுகளையும் கட்ட முடியும். அந்தக் காரணத்தாலே அதை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

செங்கை அண்ணா மாவட்டத்தில் பள்ளிபட்டு தொகுதி—என்னுடைய தொகுதியிலே, 70 சொசைட்டிகள் இருக்கின்றன. அந்த 70 சொசைட்டிகளிலே 1983-ஆம் ஆண்டிலே பிரிண்டட் சேலைகள் வேண்டுமென்று ஆர்டர் கொடுத்து, அதன்படி கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தக் கர்நாடக மாநிலத்திற்கு 3 லட்சம் சேலைகளை அனுப்பி வைத்தார்கள். அந்த 3 லட்சம் சேலைகளில் 2½ லட்சம் சேலைகளை 6 மாதம் பொறுத்து, திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்த 2½ லட்சம் சேலைகளின் மதிப்பு 80 லட்சம் ரூபாய். அந்த 80 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சேலைகளை 6 மாதம் கழித்து திருப்பி அனுப்பி விட்டது குறித்து அப்போதிருந்த அரசிடம் என்ன முயற்சி செய்தும் ஒன்றும் நடக்கவில்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்டில் டெக்ஸ்டைல்ஸ் மினிஸ்டர் மிர்தா அவர்களே ஸ்டேட் ஹேண்ட் லூம் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியே புரொக்கியூர் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு இட்டார்கள். ஸ்டேட் கோவாப்டெக்ஸ் அதை புரொக்கியூர் பண்ண மறுத்து விட்டார்கள். அப்போது கவர்னரை நாங்கள் போய் சந்தித்தோம். கவர்னர் அவர்கள் ஒவ்வொரு சேலையையும் ரூ. 19-40 பைசா, வுக்கு விற்றுக் கொள்ளச் செய்யும்படி உத்தரவிட்டார்கள். அந்த சேலைகளுடைய காஸ்ட் ஆப் புரொடக்ஷன் 31 ரூபாய் வருகிறது. 19 ரூபாய்சில்லரை போனால்11ரூ, சில்லரைஒவ்வொருசேலைக்கும் அந்த சொஸைட்டிக்கு நஷ்டம் ஏற்பட்டது. அந்த நஷ்டத்தை யார் சரி செய்வது? இந்த நஷ்டத்தினால் 70 சொஸைட்டி களுக்கும் சேர்த்து 59 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்த 59 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதன் காரணத்தால், சொஸைட் டிக்கு இருக்கக்கூடிய கவரேஜ் குறைந்து விட்டது. அப்படி குறைந்து விட்ட காரணத்தால் சொஸைட்டிகள் எல்லாம் டார்மெண்ட்டாக இருக்கின்றன. 10 ஆயிரம் நெசவாளிகள் வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்து நம்முடைய சர்க்கார் இப்போது கலைஞர் ஆட்சி யிலே ஒரு புரொவிஷன் வைத்திருக்கிறது.



எந்த சொசைட்டியாவது கேஷ் கிரெடிட் வாங்கி அதை திருப்பிக் கட்டாத நிலைமை ஏற்பட்டால், அந்த நிலைமையைச் சரி கட்டுவதற்கு ஒரு புரொஷவின் கொடுத்திருக்கிறார்கள். அந் தப் புரொவிஷனைப் பயன்படுத்தி என்னுடைய பள்ளிப்பட்டுத் தொகுதியிலே இருக்கக்கூடிய 70 சொஸைட்டிகளுக்கும் உதவி செய்ய வேண்டும். அவர்கள் மேல் தவறு இல்லை. கவர்ன் மெண்ட் ஆர்டர் கொடுத்தது. ஆர்டர் கொடுத்த பிரகாரம் 3 லட்சம் சேலைகளைத் தயார் செய்தார்கள். தயார் செய்து, கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அனுப்பி வைத்ததில் இரண்டரை லட்சம் சேலைகள் திருப்பி வந்தன. திரும்பி வந்த சேலைகளை அவர்களே வைத்துக் கொள்ளச் சொன் னார்கள். அதை ரூ. 19.40 பைசாதான் விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன் பிரகாரம் விற்ற காரணத்தால் ஒவ்வொரு சேலைக்கும் ரூ. 11 நஷ்டம் வந்தது. அந்த நஷ்டத்தை ஈடு கட்டக்கூடிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. அந்த சர்க்கார் அதை செய்யவில்லை. ஆனால் இந்த சர்க்காரிலே ஒரு புரொவிஷன் இருப்பதால், அதை உபயோகப்படுத்தி இந்த 70 சொஸைட்டிகளுக்கும் ஏற்பட்டிருக்கிற 59 லட்சம் ரூபாய் நஷ்டத்தை சரிக்கட்டி கொடுக்கும்படி உங்களை தாழ்மையுடன் சபாநாயகர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் வேறு ஏதாவது யோசனை செய்து, அவர்களுக்கு டைம் கொடுத்து, புரொவிஷன் கொடுத்து, குறைந்த பட்சம் 5 ஆண்டுகளாவது டைம் கொடுத்து கடனைக் கட்டி, அதற்கிடையில் கேஷ் கிரெடிட்டிலே டிரான்ஸ்சேக்ஷனைப் பண்ணுவதற்கு ஏற்பாடு செய்து உதவி செய்து, கேஷ் கிரெடிட் டிரான்சாக்ஷனுக்கு பெர்மிசன் கொடுத்து, 5 ஆண்டுகள் டைம் கொடுத்து, அவர்களுடைய தொழில் பாதிக்கப்படாமல் இருப்ப தற்கும சொஸைட்டி நடைபெறவும, சர்க்காருக்கு சேர வேண்டிய பணத்தை சேர்ப்பதற்கும் ஒரு வாய்ப்பு கொடுத்து, ஆதரவு தந்தால் நன்றாக இருக்கும் என்று என்னுடைய அபிப்பிராயத்தை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் இன்டரஸ்ட் சப்சிடியின் கீழே 150 லட்சம் கொடுக்கிறார்கள். கவர்ன்மெண்ட் டிரான்ஸ்சாக்ஷன் 180 கோடி கொடுக்கிறார்கள். 150 லட்சம் ரூபாயை இன்டிரஸ்ட சப்சிடி என்று கொடுக்கிறார்கள். அந்த இன்டிரஸ்ட் சப்சிடி கொடுத்து கோவாப்டெக்ஸ் ஸ்தாபனத்திற்கு இரண்டரை பெர்செண்ட் பேங்க் ரேட்டை விட கம்மியாகக் கொடுத்தால் கூட, சொஸைட் டியை சரிவர நடத்தினாலும் கூட, அதை திருப்பிச் செலுத்து வதற்கு என்ன காரணத்தினாலோ முடிவதில்லை. ஆதலால் அந்த இன்டிரஸ்ட் சப்சிடியை கொஞ்சம் ரைஸ் பண்ணி 150 லட்சம் ரூபாயிலிருந்து, 300 லட்சம் ரூபாயாக ஏற்றினால் நன்றாக இருக்கும். கடந்த ஆண்டு 180 கோடி ரூபாய் கேஷ் ரேட், அதை இந்த ஆண்டு 190 கோடிக்கு ஏற்றுவதாக முயற்சி. இந்த ஆண்டுக்கு இன்னும் ஒரு பத்து கோடி ரூபாய் ஏற்றினால் கூட நன்றாக இருக்கும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

[திரு. எ. ஏகாம்பர ரெட்டி] [1989 ஏப்ரல் 24

[முற்பகல் 11-10]

இந்த ஆண்டு இந்த அரசு கலைஞர் ஆட்சியிலே ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாக ஒரு சேலையும், ஒரு வேட்டியும் கொடுப்பதற்கு வாய்ப்பு கொடுத்தது என்பது நல்ல மகிழ்ச்சியான செய்தி. அதை நான் பாராட்டுகிறேன். ஒரு கோடி மக்களுக்கு—ஏழை, எளிய மக்களுக்கு—பிலோ பாவர்ட்டி லைனில் இருக்கக்கூடியவர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும். ஒரு இலட்சம் வீவர்ஸ்ஸுக்கு வாய்ப்பு கொடுத்ததற்கும் 1 கோடி ஏழை எளிய மக்களுக்கு இந்த சேலையும் வேட்டியும் இலவசமாக கொடுத்ததற்கு நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினராக பங்கு பெறுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் ஆருயிர் அண்ணனும், தமிழ் இனத் தலைவரும், தமிழக முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே, கழகத்தின் பொதுச் செயலாளரும், கல்வி அமைச்சருமான மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களே, சேலம் மாவட்ட கழகத்தின் செயலாளரும், உள்ளாட்சித் துறை அமைச்சருமான பாசமிகு அண்ணார் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களே, கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கவேலு அவர்களே, சேலம் 1-வது தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் இந்த அவையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், உறுப்பினர் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செய்யும் தொழில் அனைத்தும் சீர்தூக்கி பார்க்கும்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்று ஒருகாலத்தில் சிறப்பு பெற்றிருந்த நெசவுத் தொழில் இன்று நலிவுற்று, சிதைந்து கொண்டிருக்கிறது. நூல் விலை ஏற்றம், பட்டு விலை ஏற்றம், கூலி குறைவு, புதுமை மில் துணி மோகம் போன்றவைகளினால் கைத்தறித் துணி மீது நம் மக்களுக்கு நாட்டமில்லை.

மக்கள் விரும்பும் வண்ணம் கைத்தறிகளிலும் துணிகளை உற்பத்தி செய்து மில் துணிகளுடன் போட்டி போடவும் முடியும்.

அதற்கு முதல் கட்டமாக நலிந்திருக்கின்ற நெசவாளர்களை தூக்கி நிறுத்த அவர்களுக்கு ஊக்கமளிக்கின்ற நல்ல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

நான் கடந்த 25 ஆண்டுகளாக கைத்தறி, விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளன் என்ற முறையிலும், கைத்தறி துறையைச் சார்ந்த சங்கங்களின் நிர்வாக பொறுப்பில் இருந்து வருபவன் என்ற முறையிலும் சிலகருத்துக்களை மத்திய, மாநில அரசுகளுக்கு எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளேன்.



1989 ஏப்ரல் 24] [திரு. கே. ஆர். ஜி. தனபாலன்]

கைத்தறி, விசைத்தறி தொழிலில் இரண்டு துறைகள் செயல்படுகின்றன. மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட நெசவாளர் கூட்டுறவுத்துறை ஒன்று. தனி நெசவாளர்களாக கைத்தறி மற்றும் விசைத்தறி துணி உற்பத்தியாளர்களிடம் நூல், பட்டு வாங்கி துணி நெய்து கொடுக்கும் தனியார் துறை எனக் கூறும் கூட்டுறவில் இல்லாத நெசவாளர்கள் மற்றொன்று என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து ரக நூல்களும் 50 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. அதே போல கடந்த இரண்டு ஆண்டுகளில் செயற்கைப் பட்டு 50 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. அதே போல் ஜரிகை 20 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. இந்த நிலையினால் ஜவுளி உற்பத்தியாளர்கள், ஜவுளி உற்பத்தியை குறைத்துக் கொள்கின்ற நிலை ஏற்பட்டு, அதனால் நெசவாளர்களில் பெரும்பாலோர் பெரும் அவதிக்கு ஆளானார்கள்.

மேலும் இந்த நெசவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பது சாயம் தோய்க்கும் தொழிலாகும். இந்த சாயம் தோய்க்கும் கூலித் தொழிலுக்கு முந்தைய அரசு வரி விதித்திருந்தது. அந்த வரி விதிப்பு அமலுக்கு வருமானால் நெசவுத் தொழில் மிக மோசமான நிலைக்கு ஆட்படுத்தப்பட்டு அழிந்துவிடும் அபாயம் இருக்கின்றது. ஆகவே சாயம் தோய்க்கும் கூலித் தொழிலுக்கு முந்தைய அரசு விதித்திருந்த வரியை இன்றைய நமது அரசு ரத்து செய்து நெசவுத் தொழிலை காப்பாற்ற வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ் நாட்டில் மொத்தம் சுமார் 5½ இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அதை நம்பி சுமார் 30 லட்சம் பேர் உள்ளனர் ஆனால் இவர்கள் 4 பேர் சேர்ந்து உழைத்தால் மாதம் ஒன்றுக்கு கிடைக்கும் வருமானம் ரூ. 200-லிருந்து ரூ. 250 வரைதான். உலகத்திலேயே மிகவும் குறைந்த வருமானம் உள்ளவர் நெசவாளர் குடும்பத்தினர்தான். அப்படி குறைந்த வருமானம் வரும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அடிப்படைக் கல்வி வசதி கூட பெற முடியாத நிலையினால் சிறு வயதிலேயே கூலித் தொழிலுக்கு செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றார்கள் நெசவாளர் குடும்பத்தில் பிறந்த பெண்கள் பலர் வசதியின்மையால் ''மணவிழா'' காணாமலேயே மணிவிழா வயதை அடைந்துள்ளனர்.

மேலும், தேவைக்குரிய வருமானம் கிடைக்காததால் நெசவாளர்கள் பலர் குடும்பத்துடன் நமது மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களுக்குச் சென்று விட்டார்கள். மொத்தத்தில் சொல்வதென்றால், நெசவுத் தொழிலுக்குப் புனர் வாழ்வு கொடுத்தாக வேண்டிய நிலையே உள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பருத்தி நூல், செயற்கைப் பட்டு நூல்களின், ஜரிகைகளின் கடுமையான விலையேற்றத்தின் காரணமாக அவதிப்படும் பல இலட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க, செயற்கைப் பட்டு நூலுக்கு (ஆர்ட் சில்க்) மத்திய அரசு விலை நிர்ணயம் செய்து கைத்தறி மற்றும் சிறுபான்மை விசைத்தறி நெசவாளர்களுக்கும், துணி உற்பத்தி யாளர்களுக்கும் அரசு நிர்ணயித்த விலையில், செயற்கைப்பட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக, விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பருத்தி நூலுக்கும், மத்திய அரசு விலை நிர்ணயம் செய்து கைத்தறி மறறும் சிறுபான்மை விசைத்தறி நெசவாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் மில்லிலிருந்து நேரடியாக அரசு நிர்ண யித்த விலையில் விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். செயற்கைப்பட்டு நூல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு விதித்துள்ள இறக்குமதி வரியை முழுமையாக ரத்துச் செய்ய இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டு கிறேன்.

உள்நாட்டுத் தேவைக்குப் போக மீதியுள்ள பஞ்சையும், நூலையும்தான் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்க வேண்டும் என மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்த வேண்டும். கைத்தறி, விசைத்தறிகளுக்கு மிகவும் அத்தியாவசியமான மூலப் பொருட் களான பருத்தி நூல் மற்றும் செயற்கைப் பட்டு நூல் ஆகியவை களுக்கு வங்கிகளில் மில்களுக்கும், வியாபாரிகளுக்கும் கடன்-key லோன்— கொடுப்பதைத் தடை செய்ய வேண்டும்.

செயற்கைப் பட்டுநூல், பருத்தி நூல் ஆகியவைகளுக்கு மத்திய சர்க்கார் நியாயமான விலை நிர்ணயம் செய்து மில்லி லிருந்து நேரடியாக உபயோகிப்பாளர்களுக்கும் கைத்தறி மற்றும் சிறுபான்மை விசைத்தறி நெசவாளர்களுக்கும் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யும்போது கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத தனிப்பட்ட நெசவாளர்களுக்குப், துணி உற்பத்தியாளர்களுக்கும் நான் மேலே குறிப்பிட்டுள்ளபடி நியாயமான விலையில் விநியோகிக்க வேண்டு கிறேன்.

ஏனெனில், கூட்டுறவுச் சங்கங்களை விட தனிப்பட்ட முறை யில்தான் அதிகமான நெசவாளர்களும், துணி உற்பத்தியாளர் களும் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்பதை நமது மாநில அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நெசவாளர்களுக்கும், தனியார்த் துறையில் துணி உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களிடம் நூல், பட்டு வாங்கி துணி உற் பத்தி செய்யும் நெசவாளர்களுக்கும் எந்தவிதச் சலுகைகளும் மத்திய, மாநில அரசுகளால் அளிக்கப்படுவது இல்லை. விசைத் தறி துணி உற்பத்தியைப் பொறுத்த அளவில், கூட்டுறவுத் துறை



யில் சுமார் 10 சதவிகித நெசவாளர்களும், தனியார் துறையில் 90 சதவிகித நெசவாளர்களும் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள் ளார்கள். இந்திய நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மொத்தத் துணிகளில், கூட்டுறவுத் துறையில் இருந்து சுமார் 10 சதவிகிதமும், தனியார் துறையிலிருந்து சுமார் 90 சதவிகிதமும் துணிகள் தயார் செய்து துணி ஏற்றுமதியின் மூலம் சுமார் ரூ. 1,800 கோடி அன்னியச் செலாவணி இந்திய அரசிற்கு கிடைக்கின்றது பருத்தி நூல்களின் விலை யேற்றத்தின் காரணமாக தற்போது அதிக விலை நூலில் துணி உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடியாத ஓர் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல இலட்சக் கணக்கான நெசவாளர்களுக்கு வேலையில்லா நிலை ஏற்பட்டு நெசவாளர் குடும்பங்களில் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என் பதை மிகுந்த வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசு தவறாக நூல், பஞ்சு ஏற்றுமதி செய்ய அனுமதித்ததின் விளைவே இந்த நூல் விலை ஏற்றத்திற்கு மூல காரணமாகும் என்பதை இங்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களில் சுமார் 25 சதவிகிதம் செயற்கைப் பட்டுத் துணி, பருத்தி நூல் கலந்த செயற்கைப் பட்டுத் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலங் களில் செயற்கைப் பட்டு 50 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை விலை உயர்ந்துள்ளது. இதனால் நெசவாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். இந்தியாவிலே செயற்கைப் பட்டு நூல் உற்பத்தி செய்யும் ஆலைகள் ஏழு மட்டுமே உள்ளன. இந்த செயற்கைப் பட்டு நூல் விலை ஏற்றத்திற்கு இந்த ஆலை அதிபர்கள் கூறும் காரணம் மார்க்கட்டில் கிராக்கி உள்ளதால் விலையை அதிகப்படுத்துகிறோம் என்று. ஆனால் சென்ற 1986-ஆம் ஆண்டு வரை செயற்கைப் பட்டு நூல் ஜப்பானிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் ஓ.ஜி.எல். ஒப்பன் ஜெனரல் லைசென்ஸ் அடிப்படையில் துணி உற்பத்தியாளர்களால் இறக்குமதி செய்யப் பட்டது. ஆனால் 1987-ல் இருந்து மத்திய அரசின் இறக்குமதி வரி உயர்வின் காரணமாகவும், வெளிநாட்டு நாணயங்களின், நாணய மாற்று அதிகமானதின் காரணமாகவும் செயற்கைப் பட்டு நூல் இறக்குமதி செய்ய முடியாதநிலை ஏற்பட்டது. இந்தச் சாதகமான நிலையை உள்நாட்டில் பட்டு உற்பத்தி செய்யும் ஆலை அதிபர்கள் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் வைத்தது தான் விலை என்று விலையை உயர்த்தி விட்டார்கள் என்பதை அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

[முற்பகல் 11-20]

ஆகவே வெளிநாட்டிலிருந்து பட்டு இறக்குமதிக்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள் கிறேன்.

கேரள அரசால் நெசவாளர்களுக்கு கொடுக்கப்படுவது போல, 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 100-ஐ வழங்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் குடும்பத்தில் திருமணமாகாத பெண்களுக்கு திருமண செலவிற்கு மான்யமாக ரூ. 5,000 வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இணைந்துள்ள உறுப்பினர்கள் இறந்து விட்டால் கொடுக்கப்படும் தற்போதைய ரூ. 5 ஆயிரத்தை அதாவது அரசு வழங்கும் ரூபாய் மூவாயிரமும், சங்கம் வழங்கும் ரூபாய் இரண்டு ஆயிரமும் சேர்த்து கொடுக்கப் படுகிறது.—அதை ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தி வழங்கிட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு மான்யத் தொகை (ரிபேட்) நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்களுக்கு 4, 5 ஆண்டுகளாகியும் தரப்படாமல், நிலுவையிலுள்ள நிலை உள்ளது. இதனால் அந்தச் சங்கங்கள் சீரான முறையில் செயல்பட முடியா வண்ணம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்நிலையை மாற்றி ரிபேட் தொகையை மேற்படி சங்கங்களுக்கு உடனடியாக கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப் படும் காலங்களில் அவர்கள் பெற்ற கடன் மீதான வட்டி, கூடுதல் வட்டி ஆகியவைகள் தள்ளுபடி செய்வது போல், கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் பட்டு விலை ஏற்றத்தினால் பாதிப்பு ஏற்படும் காலங்களில் அவர்கள் பெற்ற கடன் மீதான வட்டி, கூடுதல் வட்டி தொகைகளை தள்ளுபடிசெய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யும் மாகாண சங்கம் கொளமுதலுக்குண்டான தொகையை உடனடியாக வழங்காத காரணத்தால் கொள்முதல் மேற்பார்வையாளரின் சான்றிதழின் அடிப்படையில், கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள் வங்கிகளில் வாங்கும் கடனுக்குண்டான வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவில் கைத்தறி ஆலோசனைக் குழு அமைப்பதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவு-செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார். இந்தத் திட்டத்தில் கூட்டுறவுச் சங்க தொழில் நுட்பாளர்கள் இடம் பெறுகிறார்கள். அவர்களுடன் தொழில் நுட்பம் தெரிந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.





நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதன் தொடர்பான நிறுவனங்களின் அமைப்பிற்கு தனி கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக நிலவள வங்கி, விவசாய கூட்டுறவு வங்கி போன்ற வங்கிகளைப் போல் நெசவாளர் கூட்டுறவு வங்கியை ஏற்படுத்திட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் பாதுகாப்பு துறையிலும், ரசாயன தொழில் துறையிலும் ஆலைகளில் தயாரிக்கின்ற துணிகளை பயன் படுத்தி வருகின்றனர். அதை மாற்றி கைத்தறி துணிகளை பயன்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு அறிவித்துள்ள சொந்தத்தில் தறி இல்லாத பெண் கைத்தறியாளர்கள் ஆயிரம் பேருக்கு இலவசமாக தறி வழங்கும் திட்டத்தை மனதாரப் பாராட்டுகின்றேன்.

1989-90 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு புதிதாக 2,500 வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை மனதாரப் பாராட்டுகின்றேன்.

இந்த அரசு நெசவாளர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட அரசு. கைத்தறித் துணிகளை தோளில் சுமந்து, செந்தமிழ் நாட்டு கைத்தறி நெசவு சேலைகள், வேஷ்டிகள் வாங்கிடுவீர் என்று கூவி விற்று கைத்தறியாளர்களின் துயர்களை துடைத்தவர் நமது முதல்வர் அவர்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி நெசவாளர் குடும்பங்களை காப்பாற்ற வேண்டும் என மெத்த பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன் இங்கு எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. தி. ரா. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் கைத்தறி நெசவாளர்கள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், நான் ஒரு நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனக்குப் பேசுகின்ற வாய்ப்பு நல்கிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த பேரவையின் முன்னாள் உறுப்பினர் எங்கள் மாவட்டச் செயலாளர் திரு. மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பூந்தமல்லி தொகுதி வாழ் மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் கைத்தறித் துணிகள் விற்காமல் தேங்கிய காலங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் தோள் மீது கைத்தறி துணிகளைச் சுமந்து விற்பனை செய்து கைத்தறி நெசவாளர்

களின் வாட்டத்தைப் போக்கிட அரும்பாடு பட்டவர் என்பதை இந்த நாடு மறந்து இருக்க முடியாது. நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு செங்கை அண்ணா மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த அவையில் மீண்டும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1984 செப்டம்பர் 15, 16-ஆம் நாட்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாவது மாநாடு காஞ்சியில் நடைபெற்ற போது நாம் இனி செங்கை மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்றே அழைப்போம் என்று முடிவெடுத்து அறிவித்த, கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு தான் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடனேயே அன்றைக்குச் சொன்ன வாக்குறுதியை நிதிநிலை அறிக்கையிலே நிறைவேற்றித் தந்தமைக்காக அவருக்கு மாவட்டத்தின் சார்பாகவும், மாவட்டத்து மக்கள் சார்பாகவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரைச் சூட்டியமைக்காக மீண்டும் ஒரு முறை தமிழக முதலவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பாதங்களில் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் குவிக்கின்றேன்.

இன்றைக்கு கைத்தறி நெசவாளர்கள் மிகவும் சிரமப்படுகின்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்து கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வு தந்திடும் கைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நலிந்து வருகிறது. காரணம் நூல்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுதான். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், சாதாரண 80 இரக பாவு நூல் ஒரு பெட்டி 2-11-1987-ல் ரூபாய் 151-க்கு விற்பனையானது. அது படிப்படியாக உயர்ந்து இன்று 249 ரூபாய் அளவுக்கு உயர்ந்து உள்ளது. அதைப்போல் ஊடை நூல் என்று சொல்லப்படுகின்ற நூல் ரூபாய் 174-லே இருந்து இன்றைக்கு 215 ரூபாய்க்கு உயர்ந்து உள்ளது. இந்த நூல் விலையேற்றத்தைத் தடுக்க அரசு நூல் டிப்போக்களை ஆரம்பித்து தனியார் நிறுவனங்கள் நூல்களில் கொள்ளை லாபம் அடிக்கும் போக்கை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் முறையில் சிட்டா நூலுக்கு விற்பனை வரியில் இருந்து வரி விலக்கு அளித்து உதவ வேண்டுகிறேன். இந்த கட்டுப்பாடற்ற நூல்களின் விலையேற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நெசவாளர்களின் துயரினைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.



நூல்கள் நியாயமான விலையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். பஞ்சு, பருத்தி நூலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை தடை செய்து நெசவாளர்களை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசின் கைத்தறிக் கொள்கையினால் ஏற்பட்ட நூல் விலையேற்றத்தை கண்டித்து 12—4—1989 அன்று கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் சென்னையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டது நம்முடைய அரசுக்கு நினைவு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல முற்போக்கான திட்டங்களை கைத்தறி நெசவாளர்களுக்கு அறிவித்து உள்ளார்கள். குறிப்பாக நெசவாளர்களுக்கு குடியிருக்க வீடும், தொழிற் கூடமும் பெண் நெசவாளர்களுக்கு தொழில் செய்ய தறிகள் வழங்கவும், மாநில கைத்தறி ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன். ஏழையெளிய மக்களின் வாட்டத்தைப் போக்க தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை குறிப்பாக நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்கும் ஒரு புரட்சிகரமான திட்டமாகும்.

நான் வாழுகின்ற பகுதி திருமழிசை பகுதியாகும். அந்தப் பகுதி நெசவாளர்கள் அதிகமாக வாழுகின்ற பகுதியாகும். அந்தத் திருமழிசை பகுதி மட்டுமல்ல, அதைச் சுற்றியுள்ள குன்றத்தூர், காஞ்சிபுரம் பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அப்படிப்பட்ட நெசவாளர்களுக்காக, நெசவாளர் கூடம் கட்டவும், பெண்களுக்கு தறிகள் வழங்கவும் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

80 இரக நூல், சிட்டா நூலாக மில்களில் 50 சதவீதம் தயார் செய்யவேண்டுமென்ற விதிமுறைகளுக்கு மாறாக மில்கள் அனைத்தும் கோன் உருண்டைகளாக தயார் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் மத்திய அரசை நம்முடைய மாநில அரசு கட்டுப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு என்ற பெயர் நீடிக்கிறது. ஏன்? தொழில் வளர்ச்சி என்பது கல்லுப்பிள்ளையாராக இருப்பதுதான் இதற்குக் காரணம். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் யார் என்று ஒரு கணக்கு எடுப்போமேயானால் அதில் மிகுந்து காணப்படுபவர்கள் நெசவுத் தொழிலாளர்களே. விவசாயிகள் பெறும் வருமானத்தைக் காட்டிலும் நெசவுத் தொழிலாளர்கள் பெறுகின்ற வருமானம் மிகமிகக் குறைவு. இந்தக் கருத்து மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் குறித்த ஆய்வில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[திரு. தி. ரா. மாசிலாமணி] [1989 ஏப்ரல் 24

(முற்பகல் 11-30)

என்னுடைய தொகுதியில் திருமழிசையில் கைத்தறி நெச வாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. அங்கே பல முறைகேடுகள் நடந்துவருகின்றன. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று சிமிண்ட், நெல், இரும்பு, கரி, சர்க்கரை போன்ற பொருள்களை லெவி கொள்முதல் செய்வதைப் போல நூற்பாலைகளிலிருந்து நூலை கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு வழங்க வேணடுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மேலும் நகர்ப்புற வளர்ச்சி பற்றி குறிப்பிட வேண்டு மானால் பொதுவாக புறநகர்ப் பகுதிகளிலிருந்து சென்னை, மதுரை. கோவை போன்ற நகரங்களில் வந்து, இந்த நகர் புற வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் அனுமதி பெற்று வீடுகளைக் கட்டுகிறார்கள். நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்திடம் வரைபடம் போன்றவற்றைக் காட்டி, புறநகர்ப் பகுதிகளி லிருந்து வருகிற மக்கள் வீடு கட்ட அனுமதி பெறுவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அவர்களிடம் அனுமதி பெறவேண் டிய கட்டாயம் இருக்கிறது. அப்படி அனுமதி பெறுவதற்கு அந்த நபர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மன்னிக்கவும். நீண்ட நேரம் அல்ல; நீண்ட காலம் ஆகிறது: ஆண்டுக் கணக்கில் கூட ஆகிறது. இந்தச் சிரமத்தைப் போக்க எம்.எம்.டி.ஏ. அலுவலகத்தில் இருக்கிற அதிகாரிகளில் ஒருவரை, அந்தந்த நகரத்தில் ஒருவரை நிய மித்து, அவர்கள் மூலமாக வரைபடம் முதலியவற்றைப் பெற்று. உரிய காலத்தில் அனுமதி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்,

*திரு. வே. தங்கபாண்டியன் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர் டர். ஒரு முக்கியமான கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முன்வரிசையில் உட்காராமல், பின் வரிசையில் போய் உட்கார்ந்து கொண் டிருக்கிறார்கள். அவர்கள் முன் வரிசையில் வந்து உட்கார்ந் தால் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் முன்வரிசை யிலும் உட்காரலாம், பின் வரிசையில் உட்கார்ந்து அங்கத் தினர்களைக் கேட்டு குறைகளைக் கூட எழுதிக்கொண்டும் இருக்கலாம்.



1989 ஏப்ரல் 24]

**திரு. தி. ரா. மாசிலாமணி :** தலைவரவர்களே, இப்போது இடைமறித்து எடுக்கப்பட்ட நேரத்தையும் எனக்கு சேர்த்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புறநகர்ப் பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொண் டிருக்கிற பெரும்பாலான மக்கள், குறிப்பாக ஆவடி பகுதியை எடுத்துக் கொண்டால் பெரும்பாலானவர்கள் காட்டு இலாகா நிலங்களில் வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கிறார் கள். ஏறத்தாழ 20, 25 ஆண்டுகளாக அந்தப் பகுதியில் வீடுகளைக் கட்டி, குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் பக்கா மாடிவீடுகளைக் கூட கட்டியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் இன்றையதினம் வரையில் அவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட வில்லை. அதற்கு என்ன காரணம் என்றால் அந்த நிலங்கள் எல்லாம் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன. அது நம்முடைய மாநில அரசுக்கு உட்பட்டு இல்லாத காரணத்தால் பட்டா வழங்க முடியவில்லை. அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, மாநில அரசு மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று, அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல இலட்சக்கணக்கான பட்டாக்கள் வழங்கப்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே அறிவித்ததை வாழ்த்தி, வணங்கி, பாராட்டி, அந்த அடிப்படையிலே பட்டாக்கள் வழங்க வேண் டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால் இன்னொரு வேண்டுகோளையும் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய ஆவடி நகரியத்தைப் பொறுத்தவரையில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று பிரிவுகளாக அங்கே குடிநீர் திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். 20-11-1970-ல் ஆவடி நகரியத்தை உருவாக்கினார்கள். ஆவடி நகரியத்தின் மக்கள் தொகை 1,80,000. குடிநீர் வழங்குவதற்காக உருவாக் கப்பட்ட திட்டம் இராணுவத் தளவாட குடிநீர் இணைப் புத்திட்டம். திட்டச் செலவு 12.15 இலட்சம் ரூபாய். இந்த திட்டம் ஆரம்பமானது 1967-ல், ஆனால் இன்றையதினம் வரையில் அதில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. ஆகவே, இந்தப் பணியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்னொரு திட்டம், ஆவடியிலே, அதற் கான திட்டச் செலவு 47.5 இலட்சம் ரூபாய். பின்னர் அதற்குச் செலவு 51.58 இலட்சம் ரூபாய். அதனால் பயன்

பெறும் மக்கள் தொகை ஏறத்தாழ 70,000 பேர்கள். இத்திட்டத்தில் திருமுல்லைவாயில், பட்டாபிராம், சத்திரம போன்ற பகுதிகளில மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 30-6-1988-ல் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால இன்றையதினம வரை அங்கே குடிநீர் வழங்கப்படவில்லை.

அடுத்து ஆவடி நகரில் இன்னொரு குடிநீர்த் திட்டம். சுமார் 50,000 மக்கள் பயனடையக்கூடிய திட்டம். நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (திட்டம்-வரைவு) பிரிவுக்கு பூவிருந்தவல்லி ஒன்றியத்திலிருந்து கூவம் ஆற்றுப் படுகையில் உள்ள அணைக்கட்டுத் தெரு, மேல்மணம் பேடு, கீழ் மணம்பேடு ஆகிய பகுதிகளிலிருந்து நகரத்திற்குக் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டத்தைச் செயலாக்கம் செய்ய திட்டஆய்வுக் கட்டணமாக ரூ.1.21 இலட்சம் 14-5-1988 அன்றும் 12-8-1988 அன்றும் ஆக இந்த இரண்டு தேதிகளில் தொகை செலுத்தப்பட்டது. ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முனைந்து, குடிதண்ணீர் விவகாரமாக இருப்பதன் காரணத் தால், செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப் புக்கு மிக்க நன்றி தெரிவித்து விடைபெற்று அமர்கிறேன், வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் இந்த கைத்தறியும் துணித்தொழிலும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஒரு 53 கோடியே சொச்சமும், இதற்கு ஒரு 60 கோடியே சொச்ச மும் மானியமாகக் கேட்டிருக்கிறார்கள். இப்போது விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிற நிலைமையில் இவ்வளவு ஒதுக்கி னாலும் கூட போதுமா என்றுதான் கவலையாக இருக்கிறது. இன்னும் விலைவாசிக்கேற்ப இது எவ்வளவு கோடியைத் தாண்டும் என்பது தெரியவில்லை.

இன்றைக்கு இந்தக் கைத்தறித்துறையைப் பொறுத்தவரை யிலே நாட்டிலே நிலைமை எப்படி இருக்கிறது என்றால் 1:2. அதா வது ஒருபங்கு நெசவாளர்கள் கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டி களிலே சேர்ந்தவர்களாகவும், இரண்டு பங்குபேர் வெளியிலேயும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துத்தான் இந்தக் கைத்தறித் துறையை நாம் மொத்தமாக அபிவிருத்தி செய்யவேண்டும். நூல் கிடைப்பது, நெய்யப்பட்ட துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பது, போதிய பணம் கிடைப்பது ஆகிய இத்தனையையும் ஒருங்கே இணைத்துத்தான் கைத்தறி நெசவாளர்களுடைய வளர்ச்சியை நாம் திட்டமிட முடியும். கைத்தறி நெசவாளர்களில் பல பிரிவினர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் கரூர் இருக்கிறது. அங்கே நிறைய பெட்ஷீட் தயாரிக்கிறார் கள். ஈரோட்டிலே பவானிக்கருகே ஜமுக்காளம் தயாரிக்





கிறார்கள். இப்படி தலையணை உறை, கைக்குட்டைகள் போன்ற பலவகையான துணிகளை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். உறையூர், ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களைப் பொறுத்தவரையில் வேஷ்டிகள் நிறைய நெய்கிறார்கள். இப்படி பல பிரிவினர் இருந்தும் கூட்டுறவுத் துறையிலே மட்டும் ஏன் இவ்வளவு கம்மியானபேர் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இதிலே சேராதவர்களும் துணிகளை நெய்து விற்பனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு மட்டும் சலுகை கொடுக்கக்கூடாது கொடுக்க முடியாது என்று சொல் வது இயலாது. இதைத் தவிர விசைத்தறி வேறு இருக்கிறது. அதுவும் இந்தக் கைத்தறியுடன் போட்டி போடுகிறது. அவர் களும் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறார்கள். ஆனால் எண் ணிக்கை குறைவாக இருக்கலாம். இன்றைக்கு விசைத்தறியிலே இருப்பவர்களுக்கு ஓரளவுக்குத் தகுந்த சம்பளம் கிடைக்கிறது என்று நினைக்கிறோம்: அப்படித்தான் கிடைக்கிறது. விசைத் தறியைக் கட்டுப்படுத்தி கைத்தறியை ஊக்குவிக்கவேண்டும் என்று சொல்லி கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறோம். அதாவது விசைத்தறியையும் ஊக்குவிக்கிறோம், கைத்தறியையும் ஊக்குவிக்கிறோம். ஆனால் இன்றைக்கு நம்முடைய நிலைமை எப்படி இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள் 170 கோடி, 160 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்று. வெளிநாட்டிற்கு அனுப்புகிறோம் என்றால், அங்கே ஏதோ கட்டுப்பாடு இருக்கிறதோ என்னவோ அங்கேயும் தேங்கி கிடக் கிறது. நாம் செலவழித்து வருகிறோம். பல சலுகைகள் கொடுக்கிறோம். இந்த கைத்தறி துணிகளுக்கு, கோ ஆப்டெக்ஸ்-ஸிலே வாங்குவதற்கு, பல சலுகைகள், ரிபேட் எல்லாம் கொடுக்கிறோம். எந்த விதமான பண்டிகைகளாக இருந்தாலும் அது கிறித்தவர்கள் பண்டிகையாக இருந்தாலும் சரி, இந்துக்கள் பண்டிகைகள் என்று இருந்தாலும் சரி, முஸ்லிம் சள் பண்டிகைகள் என்று இருந்தாலும் சரி, மற்ற பண்டிகைகள் என்று இருந்தாலும் சரி, நாம் ரிபேட் கொடுத்து உதவுகிறோம்.

[முற்பகல் 11-40]

அதைத் தவிர்த்து நாம் 'சம்பல்ஷன் ஆக கடன் கொடுக்கி றோம். பலவிதமான ஊழியர்களுக்குக் கொடுக்கிறோம். அது சென்ட்ரல் ஸ்டாப், ஸ்டேட் ஸ்டாப், கோ-ஆப்பரேடிவ் ஸ்டாப், அன்டர்டேக்கிங் ஸ்டாப் என்று இவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்கிறோம். அவர்கள் தனியாக பெறுவதாகக் இருந்தால், இதற்கு சலுகை கொடுக்கிறோம். இத்தனை கொடுத்தும் தொழிலாளர்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால் கஷ்டமாகத் தான் இருக்கிறது. அதை நிவர்த்திக்க வழி சொல்கின்றார்கள். இந்த வழியிலே செய் கிறோம். இது நடைமுறையிலே வருடாவருடம் சொல்லக்

கூடிய நிவர்த்திதான். இப்படி இருக்கும்போது குறைந்து கொண்டுதான் வருகிறது. ஏற்கனவே போன வருடம் இருந்ததை விட நெசவாளர் தொழிலிலே இந்த வருடம் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? ஆக மொத்தம் நெசவு தொழிலுக்குத் தேவையான நூல் கச்சா பொருள் நூல் தான், அது பட்டுக்கும் சரி, பருத்திக்கும் சரி, நூல்தான். கச்சா பொருள்கள் எங்கேயிருந்து வாங்குகிறோம் எனறால் தொழிற்சாலைகளிலேயிருந்து தான் வாங்குகிறோம். டெக்ஸ்டைல்ஸ் மில்லிலே இருந்துதான் வாங்குகிறோம். நேராக அங்கே உற்பத்தியாகும் நூலை இவர்களுக்கு கொடுக்கும்படியான சந்தர்ப்பம் இருக்கிறது. அப்படி சந்தர்ப்பம் இருக்கும்போது கூட்டுறவுத் துறைக்கு நிறைய வேண்டும். அந்த பொருள்களுக்கு சலுகைகளையும் கொடுக்கிறோம். ஆனால் அத்தோடு நெசவாளர்களுக்கு பல மடங்கு சலுகை கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அவர்கள் தொழிலிலே ஈடுபட்டுத்தான் அதன் மூலம் சம்பாத்தியம் செய்து குடும்பம் நடத்தக்கூடிய நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கிறது.

நூல் உற்பத்தி தமிழ்நாட்டிலே அதாவது ஆலைகளிலே தான் ஆகிறது. அங்கே ஸ்ட்ரைக் ஆகிறது. தமிழ்நாட்டிலே நிறைய மில்கள் இருக்கின்றன. கோயம்பத்தூரிலே இருக்கின்றன. எத்தனையோ மில்கள், சுற்று வட்டாரத்திலே நூல்கள் நூற்கக்கூடிய மில்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட பற்றாக்குறை ஏற்படுகிறது. பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கின்றது. நூல் உபரியாக இருந்தால் அதிக கிராக்கி இருப்பதில்லை. பற்றாக்குறை ஏற்படும்போதுதான் அந்த கஷ்டம். அப்போது தான் அந்த நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே சேராது இருந்தால் அந்த கஷ்டத்தை உணர்கிறார்கள். நமக்கு கொடுக்க மாட்டேன் என்கிறார்களே எங்கேபோய் வாங்குவது, எப்படி வாங்குவது, பிளாக் மார்க்கெட்டிலே வாங்குவதா என்று நினைக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் விலை கட்டுப்பாடு வந்துவிடுகிறது. அப்போது தங்களுடைய நிலை எப்படி என்று பார்க்கிறார்கள். அவர்கள் நிலையை உணரும்போது உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு வெளியிலே மார்க்கெட்டு இருப்பதில்லை இந்த இரண்டுபேர்களுக்கும் கட்டுபடியான நிலையை சர்க்கார் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுக்கூட ஒரு விஷயம். நேற்று கைத்தறி நெசவாளர்களுடைய ஒரு கான்ஃபரன்ஸ். அந்த கான்ஃபரன்சிலே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். நான் போய் இருந்தேன் என்று சொன்னார்கள். கார்ப்பரேஷனிலே அந்த கிரவுண்டுக்கே மட்டும் ஆயிரம் ரூபாய் வாடகை கேட்டு இருநதார்கள். இங்கே மட்டும் வாடகை இல்லையா ? திருச்சிக்குப்போனால் அங்கேயும் வாடகை இருக்கிறது. எங்கே பார்த்தாலும் ஆயிரம் ரூபாய்க்கு குறைந்து ,வாடகை இல்லை. ஒரு



நாளைக்குத்தான் அப்படி கேட்கிறார்கள். எங்கள் ஊரிலே எங்களுடைய நேஷனல் காலேஜ் கிரவுண்டுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கேட்டிருக்கிறோம். 15 நாட்களுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் ரூ. 15 ஆயிரம் கேட்டிருக்கிறோம். நான் ஒன்றும் மறைத்து சொல்லவில்லை. அதுமாதிரி 30 நாட்கள் நடந்தால் 30 ஆயிரம் ரூபாய் வாடகை. மாதத்திற்கு அல்ல. ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்தான். இதை மனதிலே கொண்டு நமது ஆர்.டி.எல்.ஏ. அமைச்சர் இருக்கின்றார்கள் அல்லவா அவர்கள் இதை தள்ளுபடி பண்ணலாம், நெசவாளர்களை ஊக்குவிப்பதற்கு. இது எப்படி இருக்கின்றது என்றால், அவர்கள் சொல்வது போல, கோரை பின்ன ஊசி போடுவது போல இருக்கின்றது. நெசவுத் தொழிலிலே 30 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்கின்றார்கள். கூட்டுறவுத் துறையிலே இத்தனை லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்று அத்தனை தொழிலாளர்களும் கோரை பின்ன ஊசி போடுவதுபோல போடப்பட்டு, ஒவ்வொருவராகச் செத்து மடிந்து கொண்டிருக்கின்றார்கள். உயிர் போகின்ற தருவாயில் கோரை பின்ன ஊசி போடுவது மாதிரி இருக்கின்றது. இதை எங்கு போனாலும் பார்க்கலாம். கமிட்டியிலே போய் பார்க்கும்போது தெரியும். நான் பல கமிட்டிகளுக்குப் போய் இருக்கிறேன். ஏந்த கோ-ஆப்பரேட்டிவ்க்குப் போனாலும் லட்சம் ரூபாய் துணிகள் தேக்கம், அந்த கோ-ஆப்ப ரேடிவில் இத்தனை லட்சம் ரூபாய் தேக்கம் என்று சொல்கின்றார்கள். இதை எங்கே விற்பனை செய்வது ? எங்கேயும் தேக்கம் இருக்கிறது. அதை கடனுக்குத் தள்ளிவிட்டால் பணம் வரமாட்டேன் என்கின்றது. பிரைவேட் நெசவாளர்கள் என்றால் போனால் போகட்டும் என்று நாலணா குறைவாக வைத்து விற்றுவிடுகின்றார்கள். உடனே அவர்களுக்குப் பணம் கிடைக்கிறது. இதுதான் காரணம். பிரைவேட் நெசவாளர்களுக்கும் கூட்டுறவு நெசவாளர்களுக்கும் இதுதான் பிரிவு. இந்த நிலைமைகளால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆக கோ-ஆப்பரேட்டிவ் துறையிலே அங்கங்கே இருக்கின்ற லோகல்பாடிகள் எல்லாம் இதை முக்கியமானதாக சொல்கின்றன. இதற்குத் தகுந்த நடவடிக்கை அவர்கள் எடுக்கலாம். அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக நகர்ப்புறம். நகரத்திற்கு வரும்போது,,,, மெட்ராஸ் சிடி . . . .

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்கு சொந்தமான மைதானங்களில் கைத்தறி கண்காட்சிக்கு மட்டுமல்ல மற்றவைகளுக்கும் வாடகை வசூல் செய்யப்படுகிறது. அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டம் நடத்தினாலும் சரி, மகாநாடு நடத்தினாலும் சரி, அதே போல் அரசாங்கப் பொருட்காட்சிகள் நடத்தினாலும்கூட கட்டணம் இதைவிடக் கூடுதலாகத்தான் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் கைத்தறிக்கு ஒரு குறைந்த

கட்டணமாகத்தான் வாங்கிக் கொண்டு அனுமதிக்கிறோம். இதிலேயும் கைத்தறிக்காரர்களுக்குப் பாதிப்பு இல்லை. ஹேண்ட்லூம் டெக்ஸ்டைல்ஸ் டைரக்டர் இருக்கின்றார்கள். இந்த விற்பனையிலே வரக்கூடிய லாபத்திலே ஒரு பகுதியை அவர்கள் நகராட்சிக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது. பொருட்காட்சி ஒரு வாரம் நடக்கிறது என்றால் மைதானம் சுத்தம் பண்ண வேண்டும். அதை முனிசிபாலிட்டி ஸ்டாஃப் தான் செய்கின்றார்கள். அதற்குக் குறைந்த கட்டணம்தான் வசூல் செய்யப்படுகிறது. அதைக் கூட விட்டுவிட்டால், இப்போதே நகராட்சிகளில் சுத்தம் செய்கின்ற பணியைச் செய்ய முடியவில்லை யாதலால் இன்னும் கஷ்டம் ஏற்படும். ஆகவே, இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் குறைந்தபட்சக் கட்டணத்தை வசூல் செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர நீட்சிதர்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன சின்ன வருமானத்தைப் பெற வேண்டுமானால் இவர்களுக்கு அதை போட வேண்டுமென்ற அவசியம் இல்லை. சாதாரணமாக 5 ஸ்டார், 4 ஸ்டார், 3 ஸ்டார் ஓட்டல்கள் போன்றவற்றுக்கு போட்டாலே போதும். அங்கிருந்து 100 சதுர அடி இடத்திலிருந்தே கூட வரியாக அந்தப் பணம் கிடைத்துவிடும்.

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எப்படி ஜனத்தொகை வளர்ந்து கொண்டிருக்கிறதோ அது போல இதிலும் எல்லா இடங்களிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதாவது எல்லா இடங்களிலும் இதற்காக கடன் கொடுக்கிறார்கள். அதுபோல பப்ளிக் அண்டர்டேக்கிங்குகளிலும் வீடுகள் கட்டுவதற்கு கடன் கொடுக்கிறார்கள். இப்படி எல்லா நிலைகளிலும் கடன் வாங்கி வீடுகள் கட்ட வேண்டுமென்ற நிலை வேகமாக வளர்ந்து வருகிறது. ஆனால் அப்படி வளரும் அதே நேரத்தில் அதற்குத் தேவைப்படுவது இடமாகும். ஆனால் நகரங்களில் வீடுகட்டுவதற்கு இடம் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் ஒன்றுக்கு மூன்று பங்கு கேட்கிறார்கள். நகரத்தில் வீடு கட்டி, பல மாடிகள் கட்டி, பிளாட்ஸ் ஆக விற்கின்ற நிலை இருக்கிறது. ஆனால் முன்பு எப்படி திட்டம் இருந்தது என்றால் மைலாப்பூர், திருவல்லிகேணி போன்ற இடங்களில் எல்லாம் பழைய திட்டப்படி கட்டப்பட்ட வீடுகளை நாம் பார்க்கலாம். அங்கே எல்லாம் தேர் ஓடும் தெருவாக அமைத்திருக்கிறார்கள். அங்கெல்லாம் பழைய முறையில் கட்டப்பட்ட வீடுகளாகும். ஆனால் இப்போது லே அவுட், பிளான் எல்லாம் வந்திருக்கின்றன. அதனால் ஒவ்வொரு லே அவுட்டிலும் தொழிற்சாலைக்கு இடம், குடியிருப்பு இடம், வியாபார இடம், கல்வி இடம் என்று ஒவ்வொரு விஷயத்திற்கும் தனித் தனியாக இடங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது கூட இப்படிப்பட்ட பகுதிகளை விற்க விடாமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்று சொன்னார்கள். ஆகவே, அதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி



நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் குடிசை போட்டு விடுவார்கள். பிறகு அவர்களை அகற்ற வேண்டுமென்றால் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இன்னும் ஒரு நிமிடத்தில் உறுப்பினர் முடிக்க வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : ஒரே ஒரு நிமிடமா? ஏன் சார், இப்போது தான் கடன் கொடுக்கின்ற சப்ஜெக்டுக்கு வந்திருக்கிறேன். இப்போதுதான் லே அவுட், பிளான் இவற்றை பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 12 நிமிடங்கள் கடனில் தான் பேசிக்கொணடிருககிறீர்கள். (சிரிப்பு).

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட திட்டத்திற்கு உட்பட்டு, லே அவுட் பிரகாரம், பிளான் பிரகாரம் ஒழுங்காக வீடுகளை கட்டினால் நகர்ப்புற வளர்ச்சி நன்றாக இருக்கும். படிப்புக்கான பகுது, வியாபார பகுதி, பொது இடங்கள், கல்யாண மண்டபம் போன்ற ஒவ்வொரு காரியங்களுககும் புதிய திட்டப்படி இடம் ஒதுக்குகிறார்கள். மனையடி சாஸ்திரம் பார்க்கிறார்கள். ஆனாலும் மேஸ்திரி இப்படித்தான் கட்ட வேண்டுமென்று சொன்னால் நாம் ஒத்துக்கொள்கிறோம். மனையடி சாஸ்திரம் இப்படி சொல்கிறதே என்பதற்காக கட்டாமல் விட்டுவிடுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : உங்களுக்கு மனையடி சாஸ்திரம் பற்றித் தெரியும், எங்களுக்கு அதுபற்றி அதிகம் தெரியாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சிக்கு நல்லபடியாக திட்டங்கள் போட வேண்டும். லே அவுட் பிளான் எல்லாம் நல்லபடியாக இருக்க வேண்டும். நல்லபடியாக சிந்தித்து நகர்ப்புற வளர்ச்சிக்கு இந்த அரசு ஏற்பாடு செய்து அதற்கு வழிவகை செய்தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. அது நகர்ப்புற வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

***திரு. டி. ஆர். கஜபதி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த தானைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும். இன மான காவலர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவு அமைச்சர் அண்ணன் ஆற்காடார் அவர்களுக்கும் எனது வணக்கத்தைக் கூறி ,எனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த ஆற்காடு தொகுதி வாக்காளர்

[திரு. டி. ஆர். கஜபதி] [1989 ஏப்ரல் 24

பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து கைத்தறி
மானியத்தின் மீது என்னுடைய கன்னிப்பேச்சை துவங்குகின்றேன்,
என்னுடைய தொகுதியான ஆற்காடு தொகுதியில் விவசாயத்திற்கு
அடுத்தபடியாக ஏராளமான மக்கள் ஈடுபட்டிருக்கிற தொழில்
நெசவுத் தொழிலாகும்.

(முற்பகல் 11-50.)

குறிப்பாக என்னுடைய தொகுதியில் வாழைப்பந்தல்,
கலவை, திமிரி, விளாப்பாக்கம் ஆகிய பகுதிகளில், ஏழை எளிய
நெசவுத் தொழிலாளர்கள் நிறைய வசித்து வருகிறார்கள். விவ
சாயத்திற்கு அடுத்தபடியாக, பெருவாரியான மக்கள் ஈடுபட்
டிருக்கும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் நிலை
மிகவும் அவல நிலையாக உள்ளது என்பதை மிகுந்த வருத்தத்
துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி முழுவதுமே பரவலாக, நெசவாளர்கள்
தங்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்வாழைப்பந்தலில்
மட்டுமே ஒரு நெசவாளர் சொசைட்டி நடைபெற்று வருகின்றது.
திமிரி, விளாப்பாக்கம் போன்ற இடங்களில் சொசைட்டிகள்
துவக்கப்பட்டு, கடந்த 6 மாதங்களாக நெசவாளர்களுக்குத்
தேவையான நூல் கிடைக்கப் பெறாமல், நெசவாளர்கள் மிகவும்
அல்லலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அந்த சொசைட்டிகள்
உண்மையிலேயே நடக்கின்றனவா என்ற நிலை இருக்கிறது. குறிப்
பாக, நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அந்த ஏழை, எளிய
நெசவாளர்களுக்கு வேறு எந்தத் தொழிலும் தெரியாத காரணத்
தாலும் நூல் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள வேலையின்மை
காரணமாகவும் அவர்கள் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கின்றன. ஆகவே, மேற்கண்ட சொசைட்டிகள்
அனைத்தும் ஒழுங்காக நடைபெற்று, நெசவாளர்களுக்குத் தேவை
யான நூல் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கழக அரசைக்
கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஆற்காட்டிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளி
லும் லுங்கி தயாரிக்கும் நெசவாளர்கள்அதிகமாக இருக்கிறார்கள்.
அண்ணா கூட்டுறவு சொசைட்டி இயங்காமல் இருக்கின்றது.
எனவே அவர்களுக்குத் தேவையான நூல் தட்டுப்பாடின்றி
கிடைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தற்சமயம், நூல் விலை கடுமையாக ஏறியுள்ளதாலும்,
சொசைட்டியில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் வெளிச் சந்தை
யில் நூல் வாங்குவதற்கு வழியில்லாததாலும் மிகவும் கஷ்டப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சொசைட்டி மூலமாக
அவர்களுக்குத் தேவையான நூல் குறைந்த விலையில் கிடைக்க,
ஆவன செய்ய வேண்டும். நூல் தட்டுப்பாடின்றி கிடைக்க



1989 ஏப்ரல் 24] [திரு. டி. ஆர். கஜபதி]

அந்தந்த ஊரில் உள்ள நபர்களைக் கொண்டு ஒரு கமிட்டிஅமைத்
துச் செயல்பட்டால், ஓரளவுக்கு நூல் தட்டுப்பாடின்றி வழங்க
ஏதுவாக இருக்குமென்று கருதுகிறேன். இதையும் அரசு பரிசீ
லிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் உன்னத
திட்டத்தை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்
துள்ளதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறோம். எனது தொகுதி மிகவும் பின்தங்கியிருக்கும் தொகுதி
யாக இருப்பதால், வீடு கட்டும் திட்டத்தில் கொஞ்சம் முன்னுரிமை
கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். பல நெசவாளர் குடும்பங்கள் ஏழ்மை நிலையில்
வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தொழிலைத்
திறம்படச் செய்ய வேண்டிய நிதியைக் கடனாகக் கொடுத்து
அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மேலும் சொந்தமாக நூல் வாங்கி, கைத்தறி சேலை தயாரிக்கும்
நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் தயாரிக்கும்
சேலைகளையும் கூட்டுறவு சொசைட்டிகளே வாங்கிக் கொண்
டால் அவர்கள் தொழில் சிறப்பாக நடக்கும். மேலும், நெசவுத்
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகவும் ஏழை மக்கள் என்பதைக்
கருத்திற்கொண்டு, கூட்டுறவு சொசைட்டியில் உறுப்பினராக
இருந்தாலே ,அவர்களுக்கு இலவச மருத்துவ வசதி வழங்கவும்
ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்கள் குடும்பங்கள் பொருளாதாரத்தில்
மட்டுமல்ல, சமுதாயத்திலும் நலிந்த பிரிவினராக இருக்கிறார்கள்.
காரணம், அவர்கள் தங்கள் குழந்தைகளைக் கூட சரியாகப்
படிக்க வைக்க முடியாதுதான். அவர்கள் தாங்களும் படிக்காமல்
தங்களுடைய குழந்தைகளையும் படிக்க விடாமல் செய்து கொண்
டிருப்பதால், அந்தச் சமுதாயமே மிகவும் தாழ்ந்த நிலையில்
உள்ளது. இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்றால், அவர்
களுடைய குழந்தைகள் நன்றாகக் கல்வி பெறவேண்டும்.
அதற்கு அரசு தனியாக ஒரு திட்டத்தை வகுத்தால்கூட நல்லது.
நெசவாளர் குழந்தைகளை பட்டப் படிப்புவரை இலவசமாகப்
படிக்க அரசு அவர்களுக்குத் தேவையான ஊக்கமளித்து உதவிட
வேண்டும். அவர்களுக்கு இலவசப் புத்தகங்கள், ஹாஸ்டல் வசதி
கள் ஆகியவற்றைச் செய்து கொடுத்து, அவர்களை முன்னேறச்
செய்து, சமுதாயத்தில் தாங்களும் முன்னேற முடியும் என்ற
நம்பிக்கையை நம்முடைய கழக அரசுதான் செய்ய முடியுமென்ற
நம்பிக்கையைத் தெரிவித்து, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் பள்ளிப்
படிப்பு முடித்த மாணவர்கள், பாலிடெக்னிக் படித்த வாலிபர்கள்
—இப்படி பல பேர் நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்
வேலை வாய்ப்பின்றி மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்

கிறார்கள். இந்தக் குடும்பங்களில் படிப்பவர்களே மிகவும் குறைவு. தப்பித்தவறி ஒன்றிரண்டு பேர் படித்துவிட்டாலும் அவர்களுக்கு வேலை கிடைப்பதென்பது அதைவிட அரிதாக இருக்கின்றது. அப்படி படித்த நெசவுக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தாங்களே வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொண்டால், அதற்குத் தேவையானநிதியை அரசு மானியமாகவும் கடனாகவும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பண்டிகை காலங்களில் கைத்தறித் துணி வாங்கு வோருக்கு ரிபேட் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. இதனால் ஏற்படும் இழப்பை அரசாங்கம் ஈடு கட்டுகிறது இருந்த போதிலும் ஏராளமான அளவுக்கு துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இன்றைய தினம் ஒரு யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆணை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சீருடை இல்லாத பள்ளிகளே இல்லை. அந்த அளவுக்குப் எல்லா பள்ளிகளிலும் சீருடைகள் வைக்கப் பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கைத்தறியால் தைக்கப்பட்ட சீருடைகளை மாணவர்கள் விரும்பி வாங்கும் வண்ணம், பள்ளி, கல்லூரி திறக்கும் நாட்களிலே சிறப் புத் தள்ளுபடி அளிக்க அரசாங்கம் தக்க ஆணைகளை இட வேண் டும். கைத்தறியில் மிகவும் நேர்த்தியான பாலியஸ்டர் இரகங்கள் வருகின்றன. பிரத்யேகமாக பள்ளி மாணவ, மாணவிகளுக்குத் தேவையான சீருடைகளை கைத்தறியில் தயாரித்து, அவற்றை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் குறைந்த விலைக்கு சிறப்புத் தள்ளுபடியுடன் விற்க ஏற்பாட்டினைச் செய்தால், அதனால் ஏழை எளிய நெசவாளர்கள் குடும்பங்கள் வாழ வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு பகுதியில் நெசவாளர்களின் இந்தப் பிரச்சினையை தீர்க்கும் விதத்தில் ஒரு நூற்பாலையை கூட்டுறவுத் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினையே தங்கள் தொழிலை சரிவரச் செய்ய முடியாத அளவுக்கு, அடிப் படைத் தேவையான நூல் கிடைக்கவில்லை என்பதுதான். அப்ப டியே நூல் கிடைத்தாலும் போதுமான அளவுக்கு இல்லை. விலையும் அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் கருத்திற் கொண்டு, என்னுடைய தொகுதியில் ஒரு நூற்பாலையை ஏற் படுத்த அதற்கான சாத்தியக் கூறுகளை மாண்புமிகு அமைச்ச ரவர்கள் ஆராய்ந்து டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் தொழிற் கல்வி, தொழிற் கல்வி என்று பேசப்படுகிறது. ஆனால் தொழில்கல்வி வகுப்புகளுடன் கூடிய மேல்நிலைப் பள்ளிகள் எங்கள் பகுதியில் இல்லை. அந்த

தொழிலில் ஈடுபட்டுள்ளபல்லாயிரக் கணக்கான மக்கள் வாழும் அந்த பகுதியில் நெசவுத் தொழிலை பயிலுவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்பதை கருத்தில் கொண்டு விளாப்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியை நெசவுத் தொழிலையும் பாடமாகக் கொண்ட மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்கு கொண்டுவருவது, அந்த வட்டாரத்தில் வேறு எந்த உயர்நிலைப் பள்ளியிலும் இந்த வகுப்பு இல்லை. இதனை அவசியம் அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்வாணைக்குழு 30 கைத்தறி ஆய்வாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி இருக்கிறது. எத்தனையோ படித்த, தகுதி வாய்ந்த இளைஞர்கள் நெசவாளர்கள் குடும்பங்களில் வேலையின்றி அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர் குடும்பங்களின் ஏழ்மை நிலையைக் கருத்திற்கொண்டு, தேர்வாணைக்குழு கோரியுள்ள அநத 30 பணியிடங்களிலே 50 விழுக்காட்டை தகுதியுள்ள படித்த நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் தற்போது நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் மோசமாக உள்ளபடியால், பல்வேறு கிராமங்களிலுள்ள விவசாயிகளும் வெளியூர்களில் சென்று வாழ்வதற்காக ஆடு, மாடுகளை விற்று வெளியேறிக் கொண்டிருக்கிற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக குடிநீர் பிரச்சினைக்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, கடந்த 10 ஆண்டுக் காலத்தில் எந்த ஒரு ஊரிலும் குறிப்பாக காவனூர், வாழைப்பந்தல், எசையனூர், திமிரி, விளாப்பாக்கம், கலவை போன்ற ஊர்களில் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாமல் மாணவர்கள் மிகவும் அல்லலுறும் நிலைமையும், மரத்தடியில் பயிலும் நிலைமையும் ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் அவைகளைப் பார்த்து உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி.

**திரு. எம். முகமது சித்திக் :** மாண்புமிகு தலைவரவர்களே, செய்யும் தொழிலுக்கு எல்லாம் மேலான தொழில் நெய்யும் தொழில் என்ற வள்ளுவன் சொல்வதற்கு இணங்க விவசாயத் தொழிலை அடுத்து நெசவுத் தொழில்தான் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபடுகின்ற அதிக வேலை வாய்ப்பு தரும் தொழிலாக இருந்து வருகின்றது. அவர்கள் மிகவும் ஏழ்மை

நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும், அவர்களுடைய
பிள்ளைகள் படிப்பதற்கும், தொழில்கள் செய்வதற்கும் முக்கி
யத்துவம் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஹேண்ட்லூம் எக்ஸ்போர்ட் புரொபஷன் குழு இருக்கிறது.
அது நடைமுறையில் அதன் பணியினைச் செய்வதில்லை.
உதாரணமாக வெளிநாட்டில் நம்முடைய கைத்தறித்துணிகளுக்கு
வரவேற்புகள், தேவைகள் அதிகம் இருக்கின்றது. அதை
நம்முடைய நெசவுத் தொழிலாளர்களுக்குத் தெரிவித்து,
அதிக உற்பத்தியைப் பெருக்கி, வெளிநாட்டுச் செலாவணியைப்
பெறுவதற்கும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலா
ளர்களுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதற்கும் முயற்சி செய்ய
வேண்டும். சென்ற ஆண்டு இந்த நிறுவனம் அதிகக் கவனம்
செலுத்தவில்லை. குறிப்பாக, அரேபியா போன்ற பல நாடுகளில்
நம்முடைய கைத்தறித் துணிகளுக்கு நிறைய வரவேற்பும், தேவை
யும் இருக்கிறது. இதையும் நாம் பயன்படுத்திக்கொண்டு, கைத்
தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நாம் உதவி புரிய
வேண்டும்.

(நண்பகல் 12-00)

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குத்
தனிப்பட்ட முறையில் உதவி செய்து. சொந்தத்தில் அவர்களுக்குத்
தறி அமைத்து, குறைந்த விலையில் சொசைட்டி மூலம் நூல்
களைப் பெற்று, அவர்களுடைய வருவாயைப் பெருக்கி அவர்களை
மாஸ்டர் வீவர்ஸ் பிடியிலிருந்து விடுவித்து, சுயமாக அவர்கள்
வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இந்த அரசு— கைத்தறித்
துறை— தமிழக அரசு உதவி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்
கொள்கிறேன்.

பட்டுத் தொழில் இன்றைய தினம் பம்பாயில் உள்ள பெரிய
முதலாளிகளை நம்பியே இருக்க வேண்டியிருக்கிறது. திடீ
ரென்று பட்டு நூல் கிடைக்காமல், தட்டுப்பாட்டினைச் செய்து
அதிக விலைக்கு விற்று, ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி, அவர்கள்
அதிக இலாபம் சம்பாதிக்கின்ற நிலையை நிறுத்துவதற்கு நம்
முடைய மாநிலத்திலேயே ஒரு சில்க் போர்டு அமைத்து, பட்டுத்
தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை
வாய்ப்பை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பட்டுநூல் உற்பத்திக்கு நிறையப் பணம் ஒதுக்கி, முறையாகச்
செலவிட்டு, அதிக அளவில் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்ப
வர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்



விசைத் தறிகள் இருக்கின்ற அளவிற்கு ப்ராசசிங் டிசைன்
யூனிட்ஸ் தமிழகத்தில் அதிகம் இல்லாததால், வடநாட்டுக்குச்
செல்லக்கூடிய ஒரு நிலையிருப்பதை மாற்றி, ப்ராசசிங்
யூனிட்ஸை இங்கேயே அதிக அளவில் ஏற்பாடு செய்து, நம்முடைய
மாநிலத் திலேயே எல்லாத் துணிகளையும் ப்ராசசிங் டிசைன்
செய்ய வேண்டும்.

இந்த விசைத் தறிகளுக்கு வரி விதிப்பு அதிகமாக. இருப்பதை
முறையாக மாற்றம் செய்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு
கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் அதிகமாக விசைத்தறிகள் வருவதற்கு
ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

கைத்தறித் துணிகளை மக்கள் விரும்பி அணியக்கூடிய அள
விற்கு அரசு மேலும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டும்.

நமது தரமான கைத்தறித் துணிகளை மேல்நாட்டில் விரும்பி
அணிகிறார்கள். எனவே, கைத்தறித் துணிகளை அதிக அளவிற்கு
ஏற்றுமதி செய்ய அரசு விசேஷ்மான முயற்சிகளை மேற்
கொள்ளவேண்டும்.

பேரறிஞர் அண்ணா, தற்போதைய முதல்வர் டாக்டர் கலை
ஞர் போன்ற தலைவர்களெல்லாம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு
முன்பு, கைத்தறித் துணிகளைத் தோளில் போட்டு சென்னை
நகர் மற்றும் பல ஊர்களில் தெருத்தெருவாக விற்று, நெசவாளர்
களின் இன்னல்களைப் போக்கினார்கள். அதுபோன்று இந்த
அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கைத்தறித் துணிகளை மக்கள் விரும்பி அணியக்கூடிய அள
விற்கு அரசு மேலும் பல ஆக்கப்பூர்வமான முயற்சிகளை மேற்
கொள்ள வேண்டும். நமது தரமான கைத்தறித் துணிகளை
மேல்நாட்டில் விரும்பி அணிகின்றார்கள். எனவே, கைத்தறித்
துணியை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய அரசு விசேஷமான
முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பண்டிகை காலங்களில் கொடுக்கப்படுகின்ற விசேஷ தள்ளு
படியை மக்கள் அனுபவிக்க முடியவில்லை. கோவாப்டெக்சி
லுள்ள நல்ல நல்ல ரகங்களையெல்லாம் பெரிய பெரிய ஜவுளிக்
கடைக்காரர்களே சாதாரண அப்பாவி மக்களின் பெயர்களில்
வாங்கி, மொத்தமாக அவர்களுடைய கடைகளில் அதிக இலாபத்
திற்கு விற்கின்றார்கள். மக்கள் கோவாப்டெக்சுக்குச் சென்றால்
இது போன்ற ரகங்கள் கிடைப்பதில்லை. அதனால் துணியை
வெளியில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலைகள்
இருக்கின்றன. அரசு இதைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை
எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுமதி உடைகளைத் தைத்து அனுப்புவதற்கு நகர்ப்புறங்களில் உள்ள பெரிய பெரிய முதலாளிகளே ஒப்பந்தம் செய்து துணிகளைத் தைத்துக் கொடுக்கிறார்கள். கிராமப் பகுதிகளில்

பெண்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களிடத்தில் தைத்துப் பெறுவதற்கு அரசு முன்வர வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமாக ஏராளமான பெண்கள் கிராமப் பகுதிகளிலே வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். கிராமப் பகுதிகளில் உள்ள பெண்களுடைய துயரங்கள், அவர்களுடைய குறைகள் நீக்கப்படும். இதில் விதவைகள், ஆதரவற்றவர்கள் போன்ற பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. ஆனால் பனை சம்பந்தப்பட்ட கைத்தொழில் இதுவரை ஏதும் அங்கே இல்லை. ஆகையால் பனைத் தொழில் வாரியத்தின் மூலமாக அங்கே உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு பல பொருட்களைக் தயாரிப்பதடற்குப் பயிற்சி அளித்து, உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று என் தொகுதியிலே பாய் முடைபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாய் முடைவதற்கான கோரைகள் வெளி மாநிலத்திலேயிருந்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கோரைகள் சாகுபடி செய்வதற்கு வேளாண்மைத் துறை மூலம் விளக்கங்கங்களை அளித்து, கோரை சாகுபடி செய்து, அங்கே பாய்களுக்குத் தேவையான கோரைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

அதுபோன்றே என் பகுதியில் மூங்கில் அதிகமாக விளைகிறது. மூங்கில்களின் மூலமாக என்னென்ன பொருட்களைத் தயாரிக்கலாம். எங்கெங்கே விற்பனை செய்யலாம் என்பதை அங்கே அவர்களுக்கு அறிவித்து, அந்த மூங்கில் மூலமாக நல்ல பொருட்களைத் தயாரிப்பதற்கு அங்கே மூங்கில் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தற்போது எனது பகுதியில் பருத்தி அதிகமாக விளைகிறது. எனவே அதிகமாக விளைகிற பருத்தியை பயன்படுத்தி அங்கே பஞ்சாலை ஒன்றை, நூற்பாலை ஒன்றை ஏற்படுத்தும்படி கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**திரு.. பெ. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறியாமை இருள் நீக்கி, அன்பு தமிழ் காத்து, துயர் போக்கி, பகுத்தறிவாம் படை பலத்தால் பகை வென்று பகலவனே, தமிழினத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவராய், கருத்துப் பெட்டகமாய் கல்லாமையை இல்லாமையாக்கிட கல்விக் கண்ணைத் திறந்து வரும் இனமானத் தலைவர் மாண்புமிகு பேராசிரி



யர் அவர்களுக்கும், ஜனநாயக வலிமை காக்கவும், வளர்ச்சிக்காகவும் ஆவன செய்ய விரும்பி அல்லும் பகலும் அயராது உழைத்திடும் கழகத்தின் தொண்டர் அவர், மக்கள் சேவையை மனதில் கொண்டவர் அவர், நாட்டின் நலனில் நாட்டம் நிறைந்தவர் அவர், அரசியல் வாழ்க்கையில் அறநெறி மிக்கவராய், இளகாத சேலத்து கனி இரும்பை இமயத்துப் பனியாக உருகச் செய்து, வளமான தமிழகத்தில் வலுவான மாவட்டமாக சேலத்தை சிறப்பாக்க எண்ணி, சோலை ஈன்றெடுத்த தங்கம், சேலத்துச் சிங்கம், எங்களுடைய அன்பு மாவட்டச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை இம்மாமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ள வீரபாண்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் . . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தாங்கள் ஒதுக்குகிற நேரம் மிகக் குறைவு. எனவே ஆளும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து பேச விரும்புகிறவர்கள் எடுத்தவுடனே தங்களை விளித்து விட்டு நேராக எந்தப் பொருள்குறித்துப் பேசவேண்டுமோ, அந்தப் பொருள் குறித்துப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 10 நிமிடங்களில் தொகுதி பிரச்சினைகளைச் சொல்வது என்பதே கடினம். எனவே, இந்த நன்றியைத் தெரிவிக்கும் விவகாரம் தனியாக கட்சிக் கூட்டத்தில் வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, என்னை இம்மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த வீரபாண்டி தொகுதி வாக்காள பெருமக்களுக்கும், கைத்தறி மானியத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய கன்னிப் பேச்சைத் துவங்குகிறேன்.

நெசவுத் தொழிலும் விவசாயத் தொழிலும் தான் பண்டைய காலம் முதல் தமிழகத்தின் முக்கியத் தொழில்களாக இருந்து வருகின்றன. தமிழக மன்னர்கள் ஆண்ட காலத்தில் உள்ளங்கையில் அடங்கக்கூடிய அளவில் பட்டு சேலையை தயாரிக்கும் அளவில் நெசவுத் தொழில் உன்னதமான நிலையில் இருந்தது. தமிழ்நாட்டில் நெய்த துணிகளை கிரேக்கம் போன்ற நாடுகளில் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியுள்ளனர். இன்றைய நிலை என்ன? தமிழ் நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்த கைத்தறித் துணிகள் அங்கேயுள்ள துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதன் காரணமாக இங்கே கைத்தறித் தொழில் தேக்கச் சூழ்நிலையில் இருக்கிற ஒரு இக்கட்டான சூழ்நிலையைக் காண்கிறோம்.

[திரு. பெ. வெங்கடாசலம்] [1989 ஏப்ரல் 24

நெசாவளர்களுக்கு ஆதரவாக பல காலக்கட்டங்களில் பல போரட்டங்களை நடத்தி நெசவாளர்களின் துயர் துடைத்த கழகம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் கைத்தறித் துணியை தோளில் சுமந்து தெரு தெருவாக விற்று நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்தார்கள். சமீபகாலத்தில் சேலத்தில் நூல் விலை ஏற்றத்தைக் கண்டித்து கலைஞர் அவர்களின் தலைமையில் ஒரு கண்டன ஊர்வலமே நடை பெற்றது. இதுபோன்று பலவகையில் நெசவாளர்களுக்காக பாடுபட்ட கழகம், இப்போது அரசு பொறுப் பேற்றுள்ளது. ஆகவே, டாக்டர் கலைஞர் தலைமையிலான கழக அரசு நெசவாளர்களின் துயர் துடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. நெசவாளர்கள் நிறைந்த சேலம் மாவட்டத்தில் குறிப்பாக எனது வீரப்பாண்டி தொகுதியில் இருக்கிற லட்சம் நெசவாளர்களுக்கும் நிறைய கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து, வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும், நிறைய சங்கங்கள் நெய்வதற்கு நூல் இல்லை. கூலி இல்லையென்ற அவலநிலையில்தான் இருந்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் ஜவுளிகள் ரிபேட் கொடுத்தால் தான் விற்பனையாகும் என்ற நிலையில் உள்ளது. ரிபேட் இல்லையென்று நிலை ஏற்பட்டால் தாயற்ற பிள்ளை போல ஏங்கும் நிலை தான் நெசவாளர்களுக்கும் நெசவாளர் சங்கங்களுக்கும் ஏற்படுகிறது.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் நிறைய ஏற் படுத்தி இருந்தாலும் அவர்கள் மாதா மாதம் கட்டும் தொகை அளவிற்கு அதிகமாக இருக்கிறது. இதை குறைத்து கட்ட ஏற்பாடு செய்தால் குறைந்த வருமானம் பெரும் நெசவாளர்களுக்கு உதவியாக இருக்கும். நெசவாளர் சங்கங்களில் மிகக் குறைந்த அளவிற்கு கூலி கொடுத்து ஜனதா ரகங்கள் தயாரிக்கப்பட்டு அவைகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதை ஏழை மக்கள் வாங்கி பயனடைய இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்றாலும் சுற்றி வளைத்து அதுவும் வியாபாரிகளிடத்திலேய போய் சேருகிறது.

(பிற்பகல் 12-10.)

இந்த ஜனதா ரகத்தால் நெசவாளர்களுக்கு போதிய கூலி யில்லாமல் பற்றாத நிலைமை, வறுமை நிலைதான் ஏற்படுகிறது. எனவே, இந்த நிலையை மாற்றி, 3 மாதங்களுக்கு ஒரு முறை நெசவாளர் சங்கங்களுக்கு ரிபேட் கொடுத்தால், அந்தந்தச் சங்கங்களின் ஜவுளிகளின் விற்பனைக்கான நூல், கூலி முதலிய வைகளை இல்லையெனாமல் கிடைக்க ஏதுவாக இருக்கும். மேலும் அந்தச் சங்கங்கள் லாபத்தில் நடக்க ஏதுவாக இருக்கும்.



1989 ஏப்ரல் 24] [திரு. பெ. வெங்கடாசலம்]

குறிப்பாக தமிழக மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு, தமிழர் திருநாளில் கைத்தறி வேட்டி, சேலைகள் வழங்கப்படுவதன் மூலம், நெசவாளர்களின் துயர் ஓரளவிற்குப் போக்கப்படுகிறதா என்றால், முழுமையாகத் துயர் போக்கப்படுகிறது என்று கருத முடியாது. ஆகவே பல வகையிலே நெசவாளர்களுடைய துயரைத் துடைகக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்களின் மேம்பாட் டிற்காக அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்காக என்னுடைய கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, ஆண்டுக்கு 60 நாட்களுக்குக் குறை யாமல் 20 சதவீதம் தள்ளுபடி கொடுக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் பாலி யஸ்டர் மற்றும் இதர ஜவுளிகளை மாநிலச் சங்கம் கொள் முதல் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்குமாறும் நெசவாளர் களுக்கு என்று தனியாக வங்கி அமைத்து ஏற்பாடு செய்து கொடுக்குமாறும், சங்கத்திற்குத் தேவையான கலர் நூல்களை சங்கத்திற்கு அருகில் உள்ள சாய ஆலைச் சங்கங்களில் சாயம் தோய்த்துக்கொள்ள வழிவகை செய்து கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய கூட்டுறவு வங்கிகளில் மாநிலச் சங்கங்கள் சான்று களை ஈட்டியதின் பேரில் கடன் எல்லாச் சங்கங்களுக்கும் எளிதில் கிடைக்க வழிவகை செய்து கொடுக்குமாறும், பிரதமச் சங்கங் களில் நிதி வசதி இல்லாத காலங்களில் மாநிலச் சங்கம் கடனுக்கு நூல் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்குமாறும், சொந்தக் கட்டிடம் இல்லாத பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கட்டிடம் கட்டிக் கொள்ள 50 சதவீதம் மானியத் துடன் அரசு கடன் உதவி வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சங்கப் பணியாளர்களுக்கு அரசுப் பணியாளர் களுக்கு இணையான ஊதியமும் சலுகைகளும் கிடைக்க ஏற்பாடு செய்து தருமாறும், நெசவாளர்களுடைய குழந்தைகள், பள்ளிகள், கல்லூரிகளில் படிப்பதற்கு உதவித் தொகை வழங்கவும், முன்னுரிமை வழங்கவும், வேலைவாய்ப்பில் சலுகை கள் வழங்கவும், அரசு ஆவன செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பரந்த தொகுதியாகும். அங்கே குடிநீர்ப் பிரச்சினை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதைப் போக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் வசிக்கும் ஆட்டையாம்பட்டிப் பகுதியில் ஏறத்தாழ 100 பஸ்களுக்கு மேல் வந்து போகிறது. அங்கே

[திரு. பெ. வெங்கடாசலம்] [1989 ஏப்ரல் 24

நிலையான பஸ் நிலையம் இல்லை. எனவே அதையும்
அமைத்துக் கொடுக்கவேண்டும என்று கேட்டுக்கொண்டு, இந்த
மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து
அமர்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்
களே, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்த, கைத்தறித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி
என்ற மானியத்தில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச்
சொல்ல முன்வருகிறேன். இங்கே முதலிலேயே சொல்லப்
பட்டிருக்கிறது, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித்
தொழில் மாநில பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கக்
கூடிய ஒரு தொழிலாக இருக்கிறது என்று. ஆகவே இந்தத்
தொழிலினுடைய நிலை இன்றைக்கு நாளுக்கு நாள் நலிந்து
கொண்டு வருகிறது என்பதை உங்களுடைய புள்ளிவிவரங்களி
லிருந்து நாம் பார்க்கிறோம். கைத்தறியினுடைய மொத்த
எண்ணிக்கை 5.56 லட்சமாக இருந்ததிலிருந்து 4.27 லட்சமாகக்
குறைந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஆண்டும் நாம் இந்த
கைத்தறியை கூட்டுறவுச் சங்கத்தின் கீழே கொண்டுவரவேண்டும்
என்று இலக்குகளை நிர்ணயித்தும்கூட, கூட்டுறவுச் சங்கங்களின்
கீழே இந்த கைத்தறிகளைக் கொண்டு வரக்கூடிய அந்த முயற்சி
யைப் பார்க்கும்போது, அதுகூட 3.97 லட்சத்திலிருந்து 2.58
லட்சமாகக் குறைந்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலே
இருக்கிற கைத்தறி நெசவாளர்களுடைய எண்ணிக்கையும் குறைந்
திருக்கிறது. மொத்தத்திலே கைத்தறிகளுடைய எண்ணிக்கை
யும் குறைந்திருக்கிறது. ஆகவேதான் இன்றைக்கு விவசாயத்
திற்கு அடுத்தபடியாக இருக்கிற இந்தக் கைத்தறித் தொழிலில்
எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப் போல,
''செய்யும் தொழிலை சீர் தூக்கிப் பார்க்கின் நெய்யும் தொழி
லுக்கு நிகரில்லை'' என்று சொல்லக்கூடிய மிக முக்கியமான
தொழிலாக இருக்கும் இந்தத் தொழிலில் சாதாரணமான
ஏழை எளிய மக்கள், வேறு தொழிலுக்குப் போக முடியாத
வர்கள் ஏறக்குறைய 30 அல்லது 40 லட்சம் மக்கள்
ஈடுபட்டு இந்தத் தொழிலை நம்பி வாழக்கூடியவர்களாக
இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை தொடர்ந்து
பல்லாண்டுக்காலமாக, பல்வேறு உதவிகளை அரசாங்கம் செய்
தாலும் கூட, அவர்களுக்கு வேண்டிய எத்தனையோ மானியங்
கள், மற்றவைகளை எல்லாம் செய்தாலும் கூட, அவர்
களுடைய வாழ்க்கை நாளுக்கு நாள் கீழே பாதாளத்திலே
போய்க்கொண்டு இருக்கிறது. இதை நாம் சீராக்குவதற்கு
என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றித் தெளிவாக
ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு இந்தத் துறையினை
ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல



1989 ஏப்ரல் 24] [திரு. சோ. அழகர்சாமி]

இளைஞர். ஆகவே இந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கு
நிரந்தரமான ஒரு வாழ்க்கையை அமைத்துத்தர வேண்டும்.
25 நாட்கள் ஒரு மாதத்திலே வேலை செய்தாலும், அந்த
வேலைக்குப் போதுமான ஊதியம் கொடுப்பதற்கு வேண்டிய
ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் எத்தனையோ திட்டங்களை இங்கே
போட்டுக் கொண்டுவந்தாலும், அதனால் எந்தப் பிரயோசனமும்
கிடையாது. ஆகவே இந்த கைத்தறித் தொழிலை நம்பியிருக்கக்
கூடிய 30 லட்சம் மக்கள் பயன் அடைகின்ற வகையில் ஏற்பாடு
செய்யவேண்டும். 5 லட்சம் தறிகள் என்று சொல்வது
இப்போது 4 லட்சம் தறிகளாக குறைந்திருக்கிறது. இந்த
4 லட்சம் தறிகளாவது, மாதத்தில் 25 நாட்கள் ஒழுங்காக
செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.
இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான்
சொல்லக்கூடிய யோசனை என்னவென்றால், இந்த உற்பத்தி
பண்ணக்கூடிய கைத்தறித் துணியை விற்பனை ஆனதுபோக,
மீதியை கோ-ஆப்டெக்சோ, அதுமுடியவில்லை என்றால்
அரசாங்கமோ கொள்முதல் செய்யவேண்டும். இன்றைக்கு
ஏழை எளியவர்களுக்கு 1 கோடி பேர்களுக்கு சேலை, வேட்டி
கள் இலவசமாகக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம்.

ஒரு கோடிக்குப் பதிலாக இரண்டு கோடிகூட கொடுக்கலாம்.
அதைப்பற்றி யோசிக்கவேண்டும். நெசவாளர்களுக்கு வேலை,
ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை. இந்த
இரண்டையும் ஒரே நேரத்தில் நம்முடைய நோக்கம் நிறைவேறு
கிற முறையில் செய்யவேண்டும். செய்வதற்கு வேண்டிய
திட்டங்களுக்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு ஒரு காரணம் சொல்லப்
பட்டிருக்கிறது. பருத்தி விலை காரணமாக நூல் விலை கூடி
விட்டது. அதனால் நெசவிற்கு நெருக்கடி, பஞ்சாலைக்கு
நெருக்கடி என்று சொல்லக் கூடிய வாதம் இருக்கிறதே, இது
ஆலை முதலாளிகள், தனியார் முதலாளிகள் சொல்லக்கூடிய
தவறான ஒரு வாதம். விவசாயி விளைவிக்கக்கூடிய பருத்திக்
குப் போதுமான விலை கிடைக்கவில்லை. நூல் விலை
எந்த வீதத்தில் ஏறியிருக்கிறதோ, அந்த அளவிற்கு பஞ்சு
விலையோ அல்லது பருத்தியினுடைய விலையோ உயரவில்லை
என்பதுதான் நிபுணர்களுடைய சரியான கணிப்பு. அது
இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, பருத்தி விலை உயர்ந்து
போயிருக்கிறது என்று நூல் விலை உயரவில்லையா? வேட்டி
விலை உயரவில்லையா? பருத்தி விலைக்கும் மற்ற நூல்
விலைக்கும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், நூல் விலை உயர்வு
தான் அதிகம். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்
கள் எல்லாம் சொன்னார்கள். ஆகவே இந்த வாதம் சரியானது

அல்ல. எனவே இந்தத் தொழிலில் நாம் எவ்வளவு தான் மருந்து கொடுத்தாலும், நோய் தீரவில்லை. ஆகலில் நோய் தீரக் கூடிய மருந்தாகப் பார்த்து, இந்தத் தொழிலே நிறைவேற்ற வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே சரியான முறையில் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் நூலை சப்ளை செய்ய வேண்டும். அவர்கள் உற்பத்தி பண்ணக்கூடிய துணிகளை, விற்பனை செய்தது போக மீதித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலமாகவோ, அல்லது மற்றவைகள் மூலமாகவோ கொள்முதல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 30 நாட்களுக்கு ரிபேட் கொடுக்கிறோம். 90 நாட்கள் இருந்து, 60 நாட்களாகக் குறைந்து, இப்போது 30 நாட்களுக்குத்தான் ரிபேட் வழங்கப்படுகிறது. அந்த ரிபேட்டில்கூட, ஊக்கத் தொகைக்கு ஏதோ மாற்றப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரிபேட் என்பது குறைந்த பட்சம் 60 நாட்களுக்காவது வழங்கப்படுகின்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனெனில் இது முக்கியமாகச் செய்யவேண்டிய பணியாகும். இன்றைக்குப் பல இடங்களைப் பார்த்தால் தெரியும். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். பரமக்குடியில் எமனேஸ்வரம் என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய சொசைட்டி இருக்கிறது. அவர்களுக்கு ரிபேட் பாக்கி ரூ. 50 லட்சம். அதே மாதிரியாக கொள்முதல் செய்யாமல் ஸ்டாக் இருப்பது ரூ. 75 இலட்சம், கோ-ஆப்டெக்ஸ் தர வேண்டிய பாக்கி ரூ. 52 லட்சம். ஒரு சொசைட்டியிலே ஏறக்குறைய ரூ. 2 கோடி பாக்கி வைத்திருக்கிறார்கள்.

அது மாதிரியாக மதுரையில் கிருஷ்ணாபுரம் வீவர்ஸ் கோ-ஆபரேடிவ் சொசைட்டி. அவர்களுக்கு ரிபேட் பாக்கி ரூ. 7 லட்சம். துணிகளுடைய கையிருப்பு ரூ. 35 லட்சம். அதேமாதிரி கோ-ஆப்டெக்ஸ் தர வேண்டியது ரூ. 28 லட்சம். அந்தச் சங்கத்திற்கு ரூ. 70 லட்சம் பாக்கி வரவேண்டிச் யுள்ளது. இப்படி ஒவ்வொரு சங்கத்திற்கும் பாக்கி வர வேண்டியுள்ளது. ரூ. 26 கோடி கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய ரிபேட் பாக்கியை வைத்திருந்தால் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி செயல்படமுடியும்? அந்தக் கூட்டுறவுச் சங்கம் எப்படி நூலை வாங்கி மறுபடியும் நெசவாளர் களுக்கு வேலை கொடுக்க முடியும்? ஆகவேதான் இந்த மாதிரி பாக்கி வைத்திருக்கக் கூடிய கோ-ஆப்டெக்சாக இருந் தாலும் சரி, அல்லது அரசாங்கம் கொடுக்கவேண்டிய ரிபேட் பாக்கியாக இருந்தாலும் சரி, உடனுக்குடன் அந்தக் கூட்டு றவுச் சங்கங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இன்றைக்கு ரிபேட் என்பதற்குப் பதிலாக விற்பனை முன்னேற்ற உதவித் தொகை என்ற திட்டம் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் என்னவென்று தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கடைசியில் சொல்லும்போது விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து மதுரை மாவட்டத்தில் மட்டும் இருக்கின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் பாக்கி ரூ. $2\frac{1}{2}$ கோடி. கோ-ஆப்டெக்சிலிருந்து வர வேண்டிய பாக்கி ரூ. 2.55 கோடி. இது ஒரு ரூ. $2\frac{1}{2}$ கோடி. ஆக மொத்தம் ரூ. 5 கோடி இந்த மதுரை மாவட்டத்திற்கு மட்டுமே நாம் கொடுக்கவேண்டிய பாக்கி இருக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் ரிபேட் கொடுக்கவேண்டும். ஆகவே இந்த இரண்டையும் பாக்கி வைத்திருந்தால், எப்படி நெசவாளர் சங்கங்கள் செயல்படமுடியும்? இதை உதாரணத்திற்காகச் சொல்கிறேன்.

அதே போன்று ராஜபாளையத்திற்குப் பக்கத்தில் சத்திரப் பட்டியில் வீரபாண்டிய கட்டபொம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்று இருக்கிறது. அந்தச் சங்கம் பூராவும் பேன்டேஜ் துணிகளை உற்பத்தி பண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பேன்டேஜ் துணியிலே ஏதோ ஒரு மிஸ்டேக் என்று கூறி ஒரு கேசைப் போட்டு, அந்தச் சங்கத்தை கோர்ட்டுக்கு, இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கேசை வாபஸ் வாங்குவதற்கு நம்முடைய இலாக்காவின் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜனதா துணி. நம்முடைய நாட்டில் மொத்தமாக ஜனதா துணிகளை உற்பத்தி செய்யவேண்டிய இலக்கு 1988—89-இல் 40 மில்லியன் சதுர மீட்டர். ஆனால் 1988—89-இல் உற்பத்தியானது 22 மில்லியன் சதுர மீட்டர். 18மில்லியன் சதுர மீட்டரை ஏன் உற்பத்தி செய்யமுடியவில்லை? நெசவாளர்களுக்கு ஏன் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடும், தேவையான ஊக்கமும் கொடுக்கப்படவில்லை? அதையெல்லாம் பற்றி யோசிக்க வேண்டும். ஏன் என்று கேட்டால். ஜனதா துணிக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. அதை உற்பத்தி பண்ணிக் கொடுப்பதால் அதற்கு மத்திய சர்க்கார் உதவித் தொகை கிடைக்கிறது. மைய அரசு மானியம் ரூ. 29.50 ஒரு ஜோடி வேட்டி சேலைக்கு கொடுக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடக்க விலை ரூ. 89.50. ஆக நிகர விலை ரூ. 60.00 ஆகிறது. அந்த முறையில் பார்க்கிறபோது, மத்திய அரசு உதவியாக ரூ. 29.50 கொடுக்கிறது. நீங்கள் அதிகமாக ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கக்கூடிய ஜனதா வேட்டியை உற்பத்தி பண்ணுவதற்கு ஏன் அதிகமாக முயற்சி எடுக்கக்கூடாது? ஏன் நெசவாளர்களுக்கு அதிகமாக வேலை கொடுக்கக்கூடாது? இதை எல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20.)

அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு 27.20 கோடி
ரூபாய் செலவில் ஏழை மக்களுக்கு இலவசமாக வேட்டி சேலை
வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கி
றார்கள். நல்ல ஏற்பாடு, அதைக்கூட கொஞ்சம் அதிக
மாக்க வேண்டும். ஒரு கோடி பேர்கள் என்று சொல்கிறீர்கள்.
அந்த ஒரு கோடி மக்களுக்கு என்பதையும் அதிகமாக்கி, ஒரு
கோடி என்பதற்கு பதிலாக 2 கோடி வேட்டி, சேலை
கொடுங்கள். அப்படிக் கொடுப்பதன் மூலமாக மேலும்
20 கோடி ரூபாய் செலவானால் ஒன்றும் தப்பில்லை. சாதாரண
ஏழை எளிய மக்கள் வேட்டி சேலை வாங்க முடியாமல்
திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு வேட்டி சேலையும்
இனாமாகக் கிடைக்கும், நெசவாளர்களுக்கு வேலையும்
கிடைக்கும். ஆகவே இந்த இரண்டு நோக்கங்களை
நிறைவேற்றுகிற முறையில் இந்த இரண்டு காரியங்களைச்
செய்ய வேண்டும். ஏனென்றால் நீங்கள் கொடுப்ப
தனால் அரசாங்கத்திற்கு நல்ல பெயர். புண்ணியவான்
2 வேட்டி, சேலை எடுத்துக் கொடுத்தார் என்று சொல்லு
வார்கள். தாய் தகப்பனுக்குக்கூட பிள்ளையே வேட்டி,
சேலை எடுத்துத்தர மாட்டேன் என்கிறான். அரசாங்கம்
வேட்டி, சேலை எடுத்துக் கொடுத்தது என்று சொன்னால்
அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். அதனால்தான் சொல்கி
றேன். ஒரு வேட்டி, ஒரு சேலை என்பதற்குப் பதிலாக 2 வேட்டி
2 சேலை ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதோடு 50, 60 கோடி
ரூபாய் நெசவாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு காரியமும்
இதன் மூலமாக நிறைவேறும் என்று நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து ரிபேட் பாக்கி இருப்பதை எல்லாம் உடனடியாகக்
கொடுத்து முடிக்க வேண்டும். 26 கோடி ரூபாய் பாக்கி
இருக்கிறது. கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டியது
26 கோடி. கோவாப்டெக்ஸுக்கு 9 கோடி. இந்த 35 கோடி
யையும் உடனடியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும். வரவு-செலவுத் திட்டத்திலே அதற்காக 15 கோடி
ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் 35 கோடி
ரூபாயையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு ஆங்காங்குள்ள தேக்
கத்தை நீக்க வேண்டும். ஜவுளி தேக்கத்தை உடனடியாகக்
கொள்முதல் செய்து, அந்த சொசைட்டிகள் செயல்படுவதற்கு
வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இன்னொன்றையும் சொல்லியிருக்கி
றீர்கள். கைத்தறி ஆலோசனைக் குழு என்று. அந்த ஆலோ
சனைக் குழுவிலே நல்ல திறமையானவர்கள், நீண்டகாலமாக



கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்து நல்ல அனுபவமுள்ளவர்கள், அல்லது கைத்தறிச் சங்கங்களைப் பற்றி விவரம் தெரிந்தவர்களையெல்லாம் அந்த ஆலோசனைக் குழுவிலே போட்டு அவர்களுடைய ஆலோசனையைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர்களுக்கு வீடு கட்டுவது. பல இடங்களில் பார்த்தால் நெசவாளர்கள் வாடகை வீட்டில் இருக்கிறார்கள். மாஸ்டர் வீவர்ஸ்களுடைய தயவிலே வாழ்கிறார்கள். மாஸ்டர் வீவர்ஸ் சிறு சிறு குடிசை மாதிரி கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த குடிசைக்குள்தான் நெசவாளர்கள் வாழ்கிறார்கள். வீடு இல்லை. அவர்கள் கொடுக்கிற கூலியைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கொடுக்கிற சின்ன குடிசை விட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தொழிலியல் நெசவாளர்கள் சங்கத்தை ஆரம்பித்து அவர்கள் சொந்தமாக அந்தத் தொழிலை நடத்தக்கூடிய முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஏற்பாட்டை செய்ய வேண்டும். அதற்காக அதிகமான நிதியை வீடு கட்டும் திட்டத்திற்காக ஒதுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உற்பத்தி குறியீடு 1988—89-லே 190 மில்லியன் மீட்டர். ஆனால் உற்பத்தியானது 138 மில்லியன் தான். அதிகமாக உற்பத்தி பண்ண முடியவில்லை. காரணம் என்னவென்று கேட்டால் தேக்கம். வாங்கிய ஜவுளிக்கு பணம் கொடுக்க முடியவில்லை, விற்க முடியவில்லை. இந்த வருஷமும் அதே தான் 190 லட்சம் தான். இலக்கு போட்டிருக்கிறீர்கள். அடுத்த ஆண்டும் 1989-90-வது ஆண்டிலே கைத்தறியின் மூலமாக உற்பத்தி பண்ணக் கூடிய நம்முடைய இலக்கு அதே 190 மில்லியன் மீட்டர் தான். ஆகவே உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டம் இல்லை. இன்னும் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. நார்வே நாட்டு உதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டிற்காக —நபார்டு உதவியுடன் தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரொம்ப நல்லது. அதற்கு மானியம் மற்ற உதவிகள் எல்லாம் 10 லட்சம் ரூபாய் செலவு பண்ணப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் நெசவாளர்கள் அதிகமான பேர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு வாழக்கூடியவர்கள். அந்தத் தொழிலையே அவர்கள் செய்ய முடியாமல் கூலியும் மிகக் குறைந்த கூலியாக இருப்பதனால் வேலையும் கிடைக்காமல் ஆங்காங்கே போய் விறகு பொறுக்கிக் கொண்டு பட்டினி கிடந்து மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் நெய்கிற தொழிலில் இருக்கின்றார்கள். இருந்தாலும் கூட அவர்கள் அணிகிற துணியில் ஒரே ஒரு கலர் மேலே ஒரு கலர் என்று தான் போட்டுக் கொள்ள

முடிகிறது. மிச்சம் வெட்டி எடுக்கிற துணிகளை கிழித்து, தைத்து, மேலே ஒன்றும் கீழே ஒன்றுமாக போட்டுக் கொள்கிறார்கள் அதை, போக்கக்கூடிய முறையில் எட்டயபுரம், கடலூர் போன்ற நகரங்களில், இந்த மாதிரி பெண்களுக்காக இருக்கக்கூடிய நார்வே நாட்டின் உதவியுடன் கூடிய அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2 கைத்தறித் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் பூராவும் இன்றைக்கு எல்லா இடங்களிலும் ஸ்பெஷல் ஆபிசர்களைப் போட்டு ஸ்பெஷலாகக் கொடுப்பதற்கு பதிலாக தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்பைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால் ஸ்பெஷல் ஆபிசர்கள் இருக்கிற இடங்களில் நஷ்டம் தான் ஏற்படுகிறது. எவ்வளவு தான் திறமையான அதிகாரிகளாக இருந்தாலும்கூட, திறமையாக நடத்த வேண்டுமென்று நினைத்தாலும்கூட, பல்வேறு சூழ்நிலையின் காரணமாக, எங்களைப் போன்றவர்களின் தொல்லையினாலும் அங்கே நஷ்டம் வந்து விடுகிறது. அதையும் சொல்ல வேண்டும் அல்லவா— அப்படி நஷ்டம் அடையாமல் இருப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட எலக்டட் பாடி எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும். அங்கே பெருமபாலும் நாமினேஷன்தான். இப்படி போட்டுக் கொண்டிருப்பது சரியல்ல, அதை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்து இந்த நாமினேஷன் என்ற சொல்லே இல்லாதபடிக்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும்.

அதே மாதிரிக் கூட்டுறவு. நூற்பாலை கூட்டுறவு நூற்பு ஆலை என்று பெயர். அந்த நூற்பு ஆலைக்கு தேர்ந்தெடுத்த போர்டு இருக்கிறதா? எல்லாம் ஸ்பெஷல் ஆபிசர்கள். எந்தக் கூட்டுறவு நூற்பாலையாவது லாபத்திலே ஓடுகிறதா? 6 ஆலைகள் நஷ்டத்திலே ஓடுகிறது. 18 நூற்பு ஆலைகளில் 6 ஆலைகள் நலிந்து போய் விட்டது என்று இருக்கிறது. ஏன் நலிந்து போய் விட்டது? கூட்டுறவு நூற்பு ஆலைகள் நலிந்து போவதற்கு என்ன காரணம். மிஸ்-மானேஜ்மெண்ட் தான் என்று நான் கருதுகிறேன். பஞ்சு கொள்முதல் பண்ணுவதிலே மோசடிகள். இதே மாதிரி ஏகப்பட்ட மோசமான நிர்வாகத்தின் காரணமாக நஷ்டம் அடைகிறது. ஆகவே நஷ்டம் இல்லாமல் இருப்பதற்கு என்ன ஏற்பாடு? ஒவ்வொரு மில்லையும் தனி யூனிட்டாக எடுத்துக் கொள்ளுங்கள். அதிலுள்ள எம்.டி. அல்லது மேனேஜரை போட்டு அவர்தான் லாப நட்டத்திற்கு பொறுப்பு என்று வையுங்கள்.



ஏன் நஷ்டம் வருகிறது. பஞ்சு கொள்முதல் என்.சி.டி.சி.யிலேயிருந்து பண்ணச் சொல்லுகிறீர்கள். அந்தக் கொள்முதல் விற்பனையில் 18 கோடி ரூபாய் நஷ்டம் என்கிறீர்கள். எங்களுக்குத் தெரியும். நானும் ஒரு காலத்திலே மார்க்கெட்டிங் சொசைட்டி பிரசிடெண்ட்டாக இருந்தேன். பஞ்சு வியாபாரம் பண்ணிக்கிட்டிருந்த போது நாங்கள் போய் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாகக் கொடுத்த அந்த பஞ்சை வாங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதே பஞ்சை தனியார் கொண்டு போனால் வாங்கிவிட்டார்கள். முதலில் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் கொண்டு போய் கொடுத்த போது சாம்பிள் சரியில்லை என்று சொல்லி வாங்க மாட்டேன் என்றார்கள். அதே பஞ்சை அந்த வியாபாரி தனியாகக் கொண்டு போனார். வாங்கிவிட்டார்கள் அது எப்படி நடக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதனால் இந்த மாதிரி சோஷலிஸ சமுதாயத்திற்கு முன்னோடியான கூட்டுறவு அமைப்புகள் சீராக நடப்பதற்கு, அதை லாபகரமாக நடத்துவதற்கு, முன் உதாரணமாக நடத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகள் போடுங்கள் அல்லது சரியான எம்.டி. போடுங்கள். அந்த எம். டி. தவறாக நடந்தால் அவர் மீது நடவடிக்கை எடுங்கள். லாபகரமாக நடத்துவதற்கு அவருக்கு முழு பொறுப்பு கொடுங்கள். அவருக்கு ரெஸ்பான்சிபிலிட்டி பிக்ஸ் பண்ணுங்கள் அந்த முறையிலே அந்த நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு 18 மில்களில்— தென்னாற்காடு, ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, வடஆற்காடு, தஞ்சாவூர், காஞ்சிபுரம் இந்த ஆறு ஆலைகள் நலிவுற்றது. நலிவுற்ற ஆலைகளின் நலிவை நீக்கி ஆரோக்கியமான மில்களாக ஆக்க வேண்டியது உங்களுடைய கடமை. நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார் என்று நம்புகிறேன். இந்த ஆலைகளை என்ன டானிக் கொடுத்தாலும் சரி என்ன வைத்தியம் பண்ணினாலும் சரி அதை நலிவு இல்லாத ஆலைகளாக ஆக்கி ஆரோக்கியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது மூடப்பட்ட பஞ்சாலைகள், 26 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. காவேரி மில் புதுக்கோட்டையில் அதிலே 2500 பேர்கள் வேலை செய்தார்கள். நவனசமுத்திரம் மில் 600 பேர் வேலை செய்தார்கள். மதுரையிலே மகாலட்சுமி மில் 1090 பேர் வேலை செய்தார்கள். மேட்டூர் மில்லில் 3,000 பேர்கள். இப்படி 26 மில்களில் 10,000 பேர்கள் பணியாற்றக்கூடிய அந்த மில்கள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. ஏன் மூடிக்கிடக்கின்றன என்றால் மில் மேனேஜ்மெண்ட். மேனேஜர்கள். அந்த நிர்வாகத்தில் உள்ளவர்கள் பூராவும் பணத்தை பல்வேறு வகையிலே செலவு பண்ணி நஷ்டப்பட்டு போச்சு. அதை பூராவும் நன்றாக நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்.

அதை முதலாளிகளுக்காகச் சொல்லவில்லை. அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளிகள் 10,000 பேர்கள், ஏறத்தாழ 50,000 மக்கள்— ஒரு குடும்பத்தில் 5 பேர்கள் இருப்பார்கள். அந்த 10,000 தொழிலாளிகளுடைய வாழ்க்கை என்னவாகிறது. 3, 4 ஆண்டுகளாக மூடிக் கிடக்கின்றன. உடனடியாக அந்த மில்களைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். மூன்று மில்களைத் திறந்திருக்கிறீர்கள். அதிலே 200 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் மூடிக்கிடக்கின்ற மில்களிலே 10,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். 10,000 பேர்கள் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இல்லையென்றால் அரசாங்கமே தீர்மானம் கொண்டு வாருங்கள். மத்திய சர்க்கார் குறுக்கே இருந்தால் சண்டை போடுவோம். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிடம் சொல்லி அதற்கு வேண்டிய உதவிகளை பெற்றுத்தர சொல்வோம். தொழிலாளிக்கு வேலை கொடுக்க சொல்வதற்கு இந்த ஆலைகளை சர்க்கார் எடுத்தால் தான் முடியும் என்று சொன்னால் எடுங்கள். என்.டி.சி. மூலமாக நடத்துங்கள். அதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இதில் மொத்தம் 10,291 பேர்களில் இப்போது 200 பேர்களுக்கு மட்டும் 3 மில் திறந்து வேலை கிடைத்துள்ளது. 10,000-க்கு அதிகமானவர்கள் 2, 3 வருடங்களாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு ஒரு முத்தரப்புக்குழு ஒன்றைப் போட்டிருக்கிறீர்கள். அந்தக் குழு என்ன சொல்லிற்று? அதைப்பற்றி இதிலே ஒன்றும் இல்லை. குழு போடப்பட்டிருக்கிறது. அதிலே தொழிற் சங்கத்தின் சார்பாக. 4 பேர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக ஆட்கள் இருக்கிறார்கள். அதைத் திறப்பதற்கு என்ன செய்வது வருஷம் முழுவதும் பேசிக்கொண்டே இருந்தால் திறப்பது எப்போது? உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஆலைகளை லாபகரமாக நடத்துவதற்கு என்ன என்பது பற்றி ஆலோசியுங்கள். சம்பந்தப்பட்ட ஆட்களை கூப்பிட்டுப் பேசுங்கள். தொழிற்சங்கத் தலைவரை கூப்பிட்டு பேசுங்கள். பஞ்சு கொள்முதலிலே ரொம்ப மோசடி நடக்கிறது என்று சொல்கிறார்கள். அதே மாதிரி நூல் விற்பனை இதற்கு மேனேஜ்மெண்டை ரெஸ்பான்ஸ்பிள் ஆக்குங்கள். 2, 3 மில் என்று தனித்தனியாக்குங்கள், அந்த 18 மில்களையும். எந்த மில் திறமையாக நடக்கின்றதோ அதற்குப் பரிசு கொடுக்க வேண்டும். நம்முடைய எட்டையபுரத்தில் கோ-ஆப்பரேட்டிவ் மில் பாரதி பெயரில்— நிறையப் பரிசுகள் வாங்கி



யிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அதை ஆரம்பிப்பதற்கு கடுமையாகப் பிரயாசைப்பட்டேன். அந்த ஊரில் பாரதி பெயரில் வந்தது குறித்து ரொம்ப மகிழ்ச்சி. அந்த மில் ரொம்ப நல்ல மில் என்று பரிசு வாங்கியிருக்கிறது. இருந்தாலும் கூட பங்குத் தொகையாக என்.சி.டி.சி.யிலிருந்து 112 இலட்சம் ரூபாய் வரவில்லை. 5 கோடி ரூபாய் மூலதனம் உள்ள அந்த மில்லுக்கு அந்தப் பங்குத்தொகை வராததன் காரணமாக இன்றைக்கு சிப்காட்டிலிருந்து 99 லட்சமும், தமிழ்நாடு அரசு 13 லட்சமும் கடனாகக் கொடுத்து இருக்கிறது. இப்போது சிப்காட் கொடுத்த கடனில் $49\frac{1}{2}$ லட்சத்தைக் கட்டிவிட்டு, தமிழ்நாடு அரசு கடனாக $49\frac{1}{2}$ லட்சமும், சிப்காட் கடனாக $49\frac{1}{2}$ லட்சமும், பிறகு 13 லட்சமும் தமிழ்நாடு அரசு கடனாக இருக்கிறது. இந்தக் கடனுக்கு வட்டியாக வருஷா வருஷம் ஏகப்பட்ட பணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வட்டி மட்டும் 1 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. சிப்காட் 75 இலட்சம், அரசாங்கத்திற்கு 13 இலட்சம் பிறகு சிப்காட் கடனுக்கு 24 லட்சமாக 112 இலட்சம் வட்டி பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

ஆகவே, இந்தக் கடனைப் பூராவும் அரசாங்கத்தின் ஷேர்கேப்பிட்டலாக— ஏற்கெனவே அது தான் முறை— ஷேர் கேப்பிட்டலாக, மூலதனத்திற்குண்டான பங்குத் தொகையாக மாற்றி விட்டால் வட்டி கொடுக்கவேண்டியது இல்லை. வட்டி கொடுக்காது போனால், அதிகமாக நஷ்டம் வராது. தொழிலாளிகளுக்கும் போனஸ் எல்லாம் நியாயமாகக் கிடைக்கும். ஆகவே அதுவும் சிறப்பாக நடக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொகை 112 இலட்சத்திலே வட்டியாக மட்டும் 14 சதவிகிதம் கொடுக்கிறார்கள். சிப்காட்டிற்கு 49 இலட்சம் வட்டி கொடுக்க வேண்டிய பாக்கி இருக்கிறது. ஆகவே, அதை எல்லாம் தள்ளுபடி பண்ணிவிட்டு, ஷேர் கேப்பிட்டலாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி என்.சி.டி.சி., போடவேண்டிய ஷேர் கேப்பிட்டலை,— சிப்காட்டும், அரசாங்கமும் கொடுத்த கடனையும் ஷேர் கேப்பிட்டலாக மாற்றிக் கொள்ளவேண்டும். இரண்டாவது கடைசியாக, நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமாக ஒரே ஒரு வார்த்தை. (மணியடிக்கப்பெற்றது).

எட்டயபுரம் மில் சம்பந்தமாக அங்கே உள்ள நிர்வாகம் தொழிற்சங்கம் என்றாலே அவர்களுக்குக் கசக்கிறது போல் இருக்கிறது. தொழிற்சங்கமே வைக்கக்கூடாது, தொழிலாளர்கள் சங்கம் சேரக்கூடாது என்று எல்லாம் சொல்கிறார்

கள். ஆகவே, அது எல்லாம் சரியல்ல. நம்முடைய அரசாங்கம் நடத்தக்கூடிய அல்லது கூட்டுறவுகள் சார்பாக நிர்வகிக்கக்கூடிய மில்களில் இருக்கிற எம்.டி.க்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசாங்கம் நடத்தக்கூடிய மில்களாக இருந்தாலும் சரி, ஒரு முன்னுதாரணமாக, தொழிலாளர்களுக்கும் உரிமை கொடுத்து, தொழிற்சங்கத்தை அவர்கள் சீராக நடத்துவதற்கு வேண்டிய உரிமையும் ஊக்கமும் கொடுத்து, அதை நடத்தவேண்டுமே தவிர, ஒரு முதலாளி மாதிரி 'என்ன இது, தொழிற்சங்கம் எல்லாம் கேட்கலாமா, செய்யலாமா என்று சொல்லக்கூடாது' அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

இரண்டாவது, நகர்ப்புற வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு எந்த நகரத்தை எடுத்துக் கொண்டாலும் சென்னையை எடுத்துக்கொண்டாலும், மதுரையை எடுத்துக் கொண்டாலும் நகரமாகவே இல்லை. எங்கு பார்த்தாலும் சாக்கடைகள், கொசுக்கடி, சாதாரண ஏழை எளிய மக்கள் எப்படித் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? அதை அபிவிருத்தி பண்ணுவதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? நகரத்திலே சுற்றுப்புறச் சூழல் எப்படி இருக்கிறது? எந்த நகரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, ஏதாவது ஒரு நகரத்தை சுகாதாரமாக வைத்திருக்க முடிகிறதா? பிறகு கிராமத்தைப் பற்றி எப்போது சொல்லப் போகிறோம். ஆகவே, நகரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அதிகமான ஜனத்தொகை நகரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு என்ன அடிப்படையான காரணம்? கிராமத்தில் பிழைக்க வழி கிடையாது.

கடுமையான வறட்சி, விவசாயம் அதற்கு வேண்டிய காரியம் ஒன்றும் செய்யவில்லை. இதுபற்றி இங்கே பேச முடியாது. விவசாயத்தைச் சரியாக செய்யாததன் காரணமாக கிராமத்தில் உள்ள மக்கள் நகரத்தை நோக்கி ஓடி வருகிறார்கள். நகரத்திலே குடியிருக்க வேண்டிய ஏற்பாடுகள் இல்லை. ஆங்காங்கே குடிசைகள், அந்தக் குடிசைகள் போட்டிருப்பதன் காரணமாக, சாக்கடைகள், எங்கு பார்த்தாலும் சாக்கடைகள். ஆகவே எங்கு பார்த்தாலும் நோய்களும், அந்த மாதிரி ஒரு சீர்கேடான சுற்றுச் சூழலும், மோசமாக இருப்பதால் நோய்கள் பரவுகின்றன. ஆகவேதான், அதைப் போக்கக்கூடிய முறையில் நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமாக விசேஷமான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டு, கொசுக்களை எல்லாம் ஒழித்து, சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக, நன்றாக இருக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

வாகனங்களை நிறுத்துவது இருக்கிறதே, பஸ்களில் போகும் போது பார்த்தால் எங்கு பார்த்தாலும் வரிசையாக லாரிகள்





நிற்கும். நகரத்திலே லாரிகள் இங்கு தான் நிற்கவேண்டும் போக்குவரத்து இப்படித்தான் ஒழுங்குபடுத்தவேண்டும் என்று சொல்லக்கூடிய முறையிலே அதற்கான ஏற்பாடு கிடையாது. அந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, நகரங்களைக் கூடுமானவரையில், சுற்றுப்புறச் சூழ்நிலை சரியான முறையில் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அமைச்சர் அவர்கள் அதைச் செய்யவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அர்பன் டெவலப்மென்ட்-ஐப் பொறுத்தவரையிலும், ஹௌஸிங் அண்டு டெக்ஸ்டைல்ஸைப் பொறுத்தவரையிலும் ஒரு சில கருத்துக்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாக சொல்ல முனவந்துள்ளேன். நகர்ப்புறத் துறையைப் பொறுத்தவரையில் எம் எம்.டி.ஏ. நிறுவனம் இருக்கிறது. அது ஊழல் மயமாக இருப்பதாக மக்கள் சொல்கிறார்கள். நான் சொல்லவில்லை. எம்.எம்.டி.ஏ. என்று சொல்வது, அது இன்று கார்ப்பரேஷன் அதிகாரத்தை மிஞ்சி நடந்து கொண்டிருக்கிறது. எம்.எம்.டி.ஏ.-விலே ஒரு மனுக் கொடுத்தால் ஒன்றரை ஆண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் தேங்கிக் கிடக்கின்றது. அங்கே இரண்டு ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று நினைக்கிறேன்.

23-2-1989 அன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'—பத்திரிகையில் வந்த ஒரு ரிப்போர்ட்டைப் படித்துக் காட்டுகிறேன்.

"Operation Demolition: Madras Corporation have demolished portion of the parapet, rivetment, etc..... நிறைய இருப்பதால் அதிகமாகப் படித்துக் காட்ட விருப்பவில்லை.

"The MMDA has disqualified many of them, leaving 2,000 un-, authorised constructions in the City. Many of them are pending in Court. The MMDA has appealed to the prospective buyers to avail of their contingency services before fiting the applications. The MMDA is understood to have taken steps to protect the buyers and others similar to the steps taken in Karnataka and Maharashtra. Now, the authorities serve notice for the real estate construction But the promoters want to rush the completion of the buildings durings the pendeney of the petitions. There is collection at the lower level to frustrate the action."

அந்த அளவிற்கு இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸிலே 23—2—1989-லே ஒரு செய்தியும் அதனுடைய போட்டோவும் வந்ததைக் காட்டுகிறேன். (அதைக் காட்டினார்). அந்த அளவிற்கு

எம.எம் டி.ஏ.-வில் இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருந்து
கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்
கிறேன். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 69-
இலே என்று நினைக்கிறேன். இந்த கார்ப்பரேஷன்களை
கலைத்தார்கள் ஊழல்மயம் என்று சொல்லி. நான் டாக்டர்
கலைஞர் அவர்களிடமிருந்து கேட்டுக்கொள்கிறேன். இந்த
எம்.எம்.டி.ஏ.வைப் பொறுத்தவரையில் விஜிலன்ஸ் என்
கொயரி செய்யவேண்டும் என்று நானே மனு கொடுத்திருக்
கிறேன்.

On 1st March 1989, Thiru S. Ramakrishnan, Director of
vigilance and Anti-Corruption. அவர்களிடம் கொடுத்திருக்கிறேன்.
அந்த அளவுக்கு உள்ள ஊழல்களை ஒழிக்கவில்லை என்று
சொன்னால், சென்னை நகரத்தில் வாழ்க்கை நடத்துவதற்கே
முடியாது. எந்தப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி எங்கேயும்
வீடுகளை கட்டிக்கொள்கிறார்கள். அதை யாரும் கட்டுப்படுத்த
நடவடிக்கை எடுக்கவில்லை. வீட்டைக் கட்டிக் கொள்கிறார்கள்,
ஸ்டே வாங்கிக் கொள்கிறார்கள். அதை எம்.எம்.டி.ஏ.வும்
அட்சஸ்ட்டு செய்து கொள்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு
ஊழல் இந்த இந்தியாவில் நம் எம்.எம்.டி.ஏ.வில் ஏற்பட்டது
மாதிரி இருக்க முடியாது என்று ஆணித்தரமாக நான்
சொல்ல முடியும், எதையும் நான் ரெக்கார்டு இல்லாமல்,
ஆதாரம் இல்லாமல் பேசத் தயாராக இல்லை, அந்த அளவுக்கு
அங்கே 2 அதிகாரிகள் இருக்கிறார்கள், 2 பேரும், Member-Secra-
tary, an IAS officer, Vice-Chairman who is also an IAS Officer,
மெம்பர் செகரட்டரியை நீங்கள்
டெக்கினிக்கல் மேன் ஆக போட்டிருந்தால் ஒரு
ரொம்ப நல்லா இருந்து இருக்கும். நிச்சயமாக
ஐ.ஏ.எஸ். ஆக இருப்பதால் இவர்கள் அந்த 2 பேரும்
உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவுசிங் போர்டிலும்
சென்று விட்டால் விவசாய நிலம் என்பது இந்த அளவுக்குச்
நகரத்திலும், செங்கற்பட்டிலும் இருக்காது. இந்த சென்னை
லாம் கட்டிடங்களாகக் கட்டுகிறார்கள். அவைகளை எல்
சமூக காடுகள் வைக்க முடியாது. இப்படியே போனால்
எல்லாம் வீடுகளை கட்டிவிடுகிறார்கள். அதேபோல் டாங்குகளில்
எம்.டி.ஏ. என்ன செய்கிறது என்று புரியவில்லை. இதில் எல்லாம் எம்.
டி.ஏ.-விடம் ஒரு மனு கொடுத்தால் யார் கொடுத்தாலும் எம்.எம்.
2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகாமல் அந்த பேப்பர் மூவ்
ஆகாது, இதை நான் ஆணித்தரமாக சொல்ல முடியும்.
அதனுடைய விளைவு தான் இத்தகைய மாடிக் கட்டிடங்கள்
கட்டப்படுகிறது; ஸ்டே வாங்கப்படுகிறது. இவர்கள் எல்லாம்
யாரிடம் கேட்டு செய்கிறார்கள். அரசுக்குத் தெரியுமா ?
அமைச்சரிடம் சொன்னால், அமைச்சர் ஆர்டர் போட முடி
யாது. அதிகாரிகள் தான் ஒழுங்காகச் செய்யவேண்டும். இத்
தகைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்து அமைச்சர் கூட



என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை. இளைஞரான அமைச்சராக இவர் இருக்கிறார். இவர்கள் எந்த அளவுக்கு அவர்களை வைத்து மேய்ப்பார்கள் என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். கேட்டால கோர்ட்டில் ஸ்டே என்று சொலகிறார்கள். நானும் வழக்கறிஞராக இருந்தேன், எனக்கும் தெரியும். ஆயிரக் கணக்கான கேஸ்கள் அரசுக்கு எதிராக போட்டு அப்படியே தேங்கி இருக்கிறது. Nobody is filing a counter. நான் எத்தனையோ கேஸ்களை எடுத்து இருக்கிறேன். நில ஆர்ஜிதம் செய்வதில் நீங்கள் கேஸ் போட்டால் கவுண்டர் கொடுக்காமல் ஜி. பி. உட்கார்ந்து விடுவார். கவுண்டர் கொடுக்காமல் எக்ஸ் பார்ட்டி ஆகி ஸ்டே பர்மனென்டாக ஆவதை நான் பார்த்து இருககிறேன். இந்த ஒரு சூழ்நிலை மாற்றப்பட வேண்டும என்று சொன்னால் நிச்சயமாக எம்.எம்.டி.எ. என்ற நிறுவனத்தை மாற்றி அமைதது ஆக வேண்டும். இல்லை என்று சொன்னால் மெட்ராஸ் சிட்டியைப் பொறுத்தவரையில், நம்முடைய இந்தியாவில் இருக்கின்ற 3 பெரிய நகரங்களில் ஒரு நகரமாக இருக்கின்ற மெட்ராஸ் சிட்டி நிச்சயமாக வளர்ச்சி அடையாது என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

இந்த குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் அண்ணா நகர் பகுதியில தில்லையாடி வள்ளியம்மை நகரில் 49 குடிசைகள கட்டப்பட்டன. குடிசை கட்டியதுடன் முந்தைய அரசு அதை டிமாலிஷ் செய்தது. டிமாலிஷ் செய்தவுடன் இவர்கள் ஸ்டே வாங்கினார்கள். அந்தக் குடிசையில் இருந்தவாகள் ஏழைகள், நிலம் இல்லாத ஏழைகள் அந்த குடிசைகளில் இருந்தார்கள். அந்த நேரத்தில் இப்போது வேறு ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் ஸ்டே வாங்கி, அங்கே 33 வீடுகளை கட்டியிருக்கிறார்கள். இவர்கள் அங்கே தங்கிய 49 குடிசை வீடுகளை ஸ்டே வாங்குமபோது சொல்லிக்கொண்டு இருந்தார்கள் நிலம் உங்களுக்கே தருவதாக. இந்த குடிசை மாற்று வாரியத்தால் சொல்லியிருக்கிறார்கள். அந்த குடிசை மாற்று வாரியத்தின் உத்திரவாதத்தின் அடிப்படையில் அவர்கள் அந்த வீடுகளை அகற்றினார்கள். இப்போது அன்-ஆதரைஸ்டாக 27 பேர் ஏறத்தாழ அங்கே வீடுகளை கட்டித் தங்கியிருக்கிறார்கள். ஆகவே முன்னாடி இருந்தவர்களுக்கே அந்த நிலத்தை, வீடுகளை கட்டிக் கொள்ள ஒழுங்காக கொடுக்க வேண்டும். இப்போது பலாத்காரமாக கையகப்படுத்திக் கொண்டு இருப்பவர்களை அகற்றி அந்தப் பகுதி மக்களுக்கு நல்லதை செயது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் 10 ரூபாய் ஒரு வீட்டுக்கு என்று வாங்கு கிறார்கள். அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுப்பது இல்லை. அவர்களுக்கு சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பகுதியில் இதுவரையில் எந்த சுகாதார வசதியும் செய்து கொடுத்து இருப்பதாக தெரியவில்லை. செய்யவில்லை.

அதேபோல் 30-6-1984-க்கு முன்னால் இருப்பவர்களுக்குத் தான் அங்கே பட்டயம் செய்து கொடுக்கவேண்டும் என்று ஆர்டர் இருக்கிறது; குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், ஆனால் இப்போது யார், யாரோ வந்து பட்டயம் வாங்கிக்கொள்கிறார்கள். வீடுகளில் குடியிருக்கிறார்கள். அதேபோல் பணம் கொடுத்தால் கூட குடிசை மாற்று வாரியத்தில் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு நிலம் கொடுப்பது இல்லை. 5, 6 ஆண்டுகள் ஆகியும் நிலம் கொடுக்கவில்லை. எங்கே பார்த்தாலும் டிலே வந்து விடுகிறது என்று சொன்னால் அங்கே ஊழல் இருக்கிறது என்று அர்த்தம். ஆகவே நிச்சயமாக பணம் கொடுத்தால் உடனடியாக நிலம் கொடுக்கவேண்டும். 30-6-1984-க்கு முன்னால் அங்கே தங்கியவர்களுக்கே நிலங்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் 2 மாதத்திற்கு முன்னால் ஸ்லம் வாழ் மக்களுக்காக ஒரு காம்பிளக்ஸ் கட்டவேண்டும் என்று கொடுத்தது. அதை கட்டவில்லை. அதேபோல் அண்ணா நகர் பகுதியில் $1\frac{1}{4}$ கோடி ரூபாயை ஒரு ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு மக்களுக்காக காம்பிளக்ஸ் கட்ட வேண்டும் என்று கொடுத்தார்கள். அது கூட செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அந்த ஸ்லம் க்ளியரன்ஸ் வீடுகளில் வாழுகின்ற ஏழை மக்களுக்காக வேலை கொடுக்கின்ற வகையிலே பல தொழில்களை தொடங்கவேண்டும். அப்படி தொழில்களைத் துவங்கினால்தான் அவர்கள் நிச்சயமாக நல்லமுறையில் வாழ்வதற்கு வழி ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக நான் சொல்ல விரும்புவது ஹேண்ட்லூமைப் பற்றி. ஏறத்தாழ 80 இலட்சம் மக்கள் இந்த ஹேண்டுலூம் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். ஏறத்தாழ 170 கோடி ரூபாய் அளவிற்கு பொருள்கள் தேங்கியிருப்பதாக பத்திரிகைகள் மூலமாக நாம் படிக்கிறோம். ஹேண்டுலூமைப் பொறுத்த



வரையில், முந்தைய அரசு பவர் லூமை உருவாக்கியது. அதை குறைசொல்ல முடியாது. 80 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதற்காக பழைய முறைகளைத்தான் பின்பற்றவேண்டுமென்பது சரியாக இல்லை. இந்த 80 இலட்சம் மக்களுக்காக அரசு வேறு ஏதாவது தொழிலை ஏற்படுத்தவேண்டும். என்றுமே இவர்கள் இருட்டிலே உட்கார்ந்து கைத்தறியில் வேலை செய்வது என்பது சரியில்லை. இப்போது நாம் ராக்கெட் ஏஜிலும், கம்ப்யூட்டர் ஏஜிலும் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே நாம் பழைய முறைகளிலேயே இருந்து கொண்டிருப்பது சரியல்ல. ஆகையால் முந்தைய அரசு செய்திருக்கின்ற பவர் லூமுக்கும் நீங்கள் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பவர் லூம் கொடுக்கும்போது, பிரைவேட் செக்டார்களைப் பார்த்து கொடுக்கும்போது, ஏற்கெனவே ஹேண்டுலூம் வைத்திருப்பவர்களாகப் பார்த்து அவர்களுக்கு பவர் லூமை கொடுத்து அவர்களை ஊக்குவிக்க இந்த அரசு முன் வர வேண்டும். 80 இலட்சம் மக்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அந்த மக்களுக்கு முதலில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். அப்படி வேலை வாய்ப்புகள் அளிக்கும் போது புதிய புதிய மெஷின்களைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் அது சரியாக இருக்காது. இந்த நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னால், அட்டாமிக் ஏஜில் நாம் இருந்து கொண்டிருக்கிற கால கட்டத்திலே பழைய முறைகளை நாம் இப்போதும் கையாளுவது என்பது சிறந்ததாக இருக்காது. 300 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து வந்து கொண்டிருக்கின்ற முறையிலே நாம் பொருள்களைத் தயார் செய்தால் அந்தப் பொருட்களை யாரும் வாங்கவும் மாட்டார்கள். அந்தப் பொருட்கள் விற்பனையும் ஆகாது. ஆனால் இப்படி சொல்லிவிட்டு நம்முடைய மில்களை மூடுவது என்பது சரியான கொள்கையல்ல. பவர் லூம் வந்தது என்று சொன்னால் நிச்சயமாக ஹேண்டுலூம் பாதிக்கத்தான் செய்யும். ஹேண்டுலூமிலே வேலை செய்யும் மக்களுக்கு, அவர்களால் உற்பத்திச் செய்யப்படும் பொருட்கள் விலையாவதில்லை. காலையிலேகூட பாயிண்ட் ஆப் ஆர்டரிலே எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் கூறினார்கள். இன்று இருக்கிற பிரச்சினை என்னவென்று சொன்னால், அமெரிக்க நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்திலே சில கோளாறுகள் இருக்கின்றன. அமெரிக்க நாட்டை நம்பியே வாழ்ந்தால் நிச்சயமாக நம்முடைய நாடு முன்னேற முடியாது. இந்தியாவைப் பொறுத்தவரையிலே, ஹேண்டுலூமைப் பொறுத்தவரையில் தமிழ்நாடுதான் முதல் இடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இங்கேதான் அதிகமான பொருட்கள், ஏறத்தாழ 190 கோடி ரூபாய்க்கும் அதிகமான பொருட்கள்

தேங்கியிருக்கின்றன. ஆகையால் அந்தப் பொருட்களை உடனடியாக விற்பனை செய்வதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு, மத்திய அரசை வலியுறுத்துவதைவிட, நாமே அந்தப் பொருட்களை விற்பதற்கு, ஹேண்டுலூமிலே இருக்கிற ஐ.ஏ.எஸ். மற்றும் உள்ள அதிகாரிகள் மூலமாக முயலவேண்டுமே தவிர அப்படியே தேங்கியிருக்கின்றன என்று குறை சொல்லிக் கொண்டே இருப்பது சரியாக இருக்காது.

ரிபேட் என்று கொடுக்கிறார்கள். 26 கோடி ரூபாய் ரிபேட் கொடுப்பதாகவும், 4 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி கொடுத்திருப்பதாகக்கூட சொல்லப்படுகிறது. ஆனால் அந்த ரிபேட் உண்மையிலேயே ஏழைமக்களுக்கு சென்று சேருவதில்லை. எல்லா இடங்களிலும் இப்படித்தான் நிலைமை என்று நான் சொல்லத் தயாராக இல்லை. பல சொசட்டிகளிலே வெறும் புக் அட்ஜஸ்ட்மெண்ட் தான். இதையெல்லாம் யார் சென்று பார்த்திருக்கிறார்கள். இந்த சொசைட்டியிலே இத்தனை இலட்சம் ரூபாய்க்கு ஸ்டாக் இருக்கிறது என்றும் இதிலே எத்தனை பேர் உறுப்பினர்கள் என்றும் எந்த அதிகாரி போய் பார்த்திருக்கிறார். ஒன்றுமேயில்லை. அதிகாரிகள் வருகிறார்கள், போகிறார்கள். அவர்கள் என்ன கணக்கு கொடுக்கிறார்கள் என்பதைத்தான் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். ரிபேட் என்று சொன்னால், அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை என்றும், மத்திய அரசும் கொடுக்கவில்லை, மாநில அரசும் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்களே தவிர, அந்த ரிபேட் தொகையைப் பெறுவதற்கு நிச்சயமாக எந்த அதிகாரியையும் சென்று பார்த்ததாகத் தெரியவில்லை. பல சொசைட்டிகளினுடைய நிலைமைகள் இப்படித்தான் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சொசைட்டிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல நான் தயாராக இல்லை. அப்படிச் சொல்லி நான் விரோதத்தைச் சம்பாதிக்கவும் தயாராக இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் பல சொசைட்டிகளில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. வெறும் புக் அட்ஜஸ்ட்மெண்ட்தான். புக்கிலே பார்த்தால் இத்தனை இலட்சம், இத்தனை கோடி ரூபாய்க்கு ஸ்டாக் இருக்கிறது; இவ்வளவு ரூபாய்க்கு விற்று இருக்கிறது என்று பில் போட்டுக்கொண்டு விடுகிறார்கள். அந்த பில்லை வைத்துக்கொண்டு ரிபேட் வாங்குகிறார்கள். பல சொசைட்டிகளிலே எங்களுக்கு இத்தனை இலட்சம் ரூபாய் ரிபேட் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். உங்கள் சொசைட்டியிலே எத்தனை இலட்சம் ரூபாய்க்கு ஸ்டாக் விற்பனையாகி இருக்கிறது என்று கேட்டால் அதைக் கேட்காதீர்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் ரிபேட் மட்டும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த ரிபேட்டைப் பொறுத்தவரையில்,



நீங்கள் ஸ்டாக்கை வெரிபை செய்து, உண்மையிலேயே அந்த ஸ்டாக் இருக்கிறதா அங்கே அவ்வளவு விற்று இருக்கிறதா, அதற்குத்தான் ரிபேட் கேட்கிறார்களா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். பல இடங்களிலே பேருக்காக சொசைட்டிகள் வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து மானியம் வாங்குவதற்காகவும், சென்டிரல் கோ-ஆப்பரேடிவ் பாங்குகளிலிருந்து லோன் வாங்குவதற்காகவும்தான் பல சொசைட்டிகள் இன்றையதினம் இயங்கிக் கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட சொசைட்டிகளையெல்லாம் நீங்கள்தான் விசாரித்து ஆராயவேண்டுமே தவிர, தனிப்பட்ட முறையிலே நாங்கள் அவைகளைப் பற்றிச் சொன்னால் நாங்கள் ஊரிலே போக முடியாத சூழ்நிலை உருவாகும். ஆகவே, அப்படிப்பட்ட சொசைட்டிகளின் பெயரைச் சொல்ல நான் தயாராக இல்லை. ஆகையால் தயவு செய்து ரிபேட் கொடுக்கும்போது ஏழை நெசவாளிகளுக்கு அந்த ரிபேட் தொகை போய் சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பவர்லூம்கள் வருவதால் ஹேண்ட்லூம்களை மூடவேண்டுமென்று சொல்வது நல்லதல்ல.. 80 இலட்சம் மக்கள் இந்த ஹேண்டுலூமை நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசு வேறு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். 110 கோடி ரூபாய் மதிப்புள்ள, தேங்கிக் கிடக்கின்ற பொருள்களை விற்பதற்காக இந்த ஹேண்டுலூமுக்கென்று ஒரு போர்டை உருவாக்க வேண்டும். காதி போர்டைப் பொறுத்தவரையில் காதி கமிஷன் அதைப் பார்த்துக்கொள்கிறது. அதேபோன்று மத்திய அரசு அளவிலே ஒரு கமிஷனை உருவாக்கி அந்தப் பொருட்களை விற்பதற்காக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட ஹேண்டுலூம் துணிகளை தோளிலே போட்டு விற்ற கதை நமக்குத் தெரியும். அதே போன்று எல்லோரும் ஹேண்டுலூம் துணிகளை உபயோகிப்போம் என்று சொன்னால் நிச்சயமாக ஹேண்டுலூமிலே இவ்வளவு துணிகள் தேங்கி இருக்காது. நாம் இப்போதெல்லாம் டெரிகாட்டனையும், மில் துணிகளையும் உபயோகித்துக் கொண்டு மக்களிடத்திலே ஹேண்டுலூம் துணிகளை உபயோகியுங்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பயன்படுத்துவது கைத்தறி. நீங்கள் பயன்படுத்துவது கதரா அல்லது கைத்தறியா ?

**திரு. மா. சுந்தரதாஸ் :** நான் பயன்படுத்துவது கதர்தான். நான் உபயோகப்படுத்துவது கதர்தான். அது எங்களுடைய கட்சியின் கொள்கை. ஹேண்ட்லூமை நாங்கள் உபயோகிக்கவில்லை என்று சொல்லவில்லை. ஹேண்டுலூமை உபயோகப்படுத்துவதும் உண்டு. ஹேண்ட்லூம் துணிகளை நம்முடைய

மாண்புமிகு அமைச்சர்களும், எம்.எல்.ஏக்களும் பயன்படுத்தினால் ஹேண்ட்லூம் துணிகள் நிச்சயமாக, அதிகமாக சேல்ஸ் ஆகும். ஏனென்றால் இன்றைக்கு அமெரிக்க நாட்டில் நம்முடைய 'கார்மெண்ட்ஸ்' துணிக்குத்தான் அதிக கிராக்கி இருக்கிறது. கார்மெண்ட்ஸ் என்று சொல்லும்போது அவை எல்லாம் 'ரெடி மேடு' ஆடைகள். இப்போது ரெடிமேடு ஆடைகளுக்கு ரிபேட் கிடையாது. இந்த ரெடிமேடு ஆடைகளுக்கும் ரிபேட் கொடுத்து, அந்தப் தொழிலையும் ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறியும் துணித்தொழிலும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நம்முடைய நாட்டிலே மிக அதிகப்படியான மக்கள் பணியாற்றக்கூடிய கைத்தறித் தொழில் என்பது இன்றைக்கு கடுமையான நெருக்கடியை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. அரசாங்கம் நன்கு உணரும் என்று கருதுகிறேன். அதனால் குறிப்பாக ஒருசில விவரங்களை மட்டும் தெரிவிக்கிறேன். கடந்த 35 ஆண்டுகளாக இந்தக் கைத்தறித் துணிக்கு ரிபேட் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. 1970ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 90 நாள் ரிபேட் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னால் அது 60 நாளாகக் குறைந்து, பின் 45 நாளாகக் குறைந்தது. தற்போது 30 நாட்கள் மட்டுமே ரிபேட் வழங்கப்படுகிறது. அதிலும்கூட 90 நாளை படிப்படியாகக் குறைத்து, முழுமையாக இந்த ரிபேட்டை நிறுத்தக்கூடிய அபாயம் இருக்கிறது. இதை மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு அபாயம் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆண்டுக்கு 90 நாள் ரிபேட் வழங்க வேண்டுமென்று நெசவாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். 90 நாள் இல்லாவிட்டாலும் 60 நாளாவது கட்டாயம் ரிபேட் வழங்க வேண்டும். இல்லை என்றால் இந்தத் தொழில் மிகப்பெரும் ஆபத்தை நோக்கிச் செல்லும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே கட்டாயம் 60 நாள் ரிபேட் வழங்க மாநில அரசு மைய அரசோடு தொடர்புகொண்டு மத்திய மாநில அரசுகள் அதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மானியத்தைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு கொடுக்க வேண்டிய பாக்கி, மத்திய அரசு ரிபேட் மூலமாக செலுத்த வேண்டிய 26 கோடி ரூபாய் வழங்கப்படாமல் பாக்கி இருக்கிறது. அதை உடனடியாக கொடுப்பதன் மூலம் இந்தக் கைத்தறித் தொழில் பாதுகாக்கப்படும் என்பதால் அந்தத் தொகையை விரைவில் பெற நம்முடைய மாநில அரசு பெருமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி 'கோவாப்டெக்ஸ், மூலமும் இதர சொசைட்டிகள் மூலமும் தேங்கிக்கிடக்கிறது. தேங்கிக்கிடக்கிற துணியை விரைவில் விற்று, தொடர்ந்து தேக்கம் ஏற்படாமல் விற்பனை செய்ய தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்கெனவே அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணியை துறைமுகத்தில் நிறுத்தி, மாநில அரசு தலையிட்டு, மைய அரசுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தது ஓரளவுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. அதைப் போன்று தேங்கிக் கிடக்கும் துணிகளை தொடர்ந்து விற்பனை செய்ய தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று, கைத்தறித் தொழிலுக்கு 22 ரகங்கள் ஒதுக்கப்பட்டன. அரசு அதற்கு உத்தரவிட்டுள்ளது. ஆனால், அதை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விசைத்தறிக்காரர்கள் உயர்நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் அதற்கு தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டிலே கைத்தறித் தொழிலுக்கு 11 ரகங்கள் ஒதுக்கப்பட்டு, அதுவும் உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்று நிறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த அரசு அந்தத் தடையை நீக்க உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. புதிய அரசாங்கம் உரியமுறையில் நடவடிக்கை மேற்கொண்டு, அந்தத் தடை உத்தரவை நீக்கி, இந்தக் கைத்தறித் தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை முறையாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கைத்தறித் தொழிலுக்கு நிதி உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்ட தேசிய விவசாயக் கிராமப்புற வங்கி, அதாவது 'நபார்டு' என்ற அமைப்பு மூலம் சொசைட்டிக்கு வழங்கக்கூடிய அந்த உதவி என்பது முறையாக நடைபெறவில்லை; தவறு இருக்கிறது. உரிய நேரத்தில் உதவி கிடைக்காத நிலை இருக்கிறது. அரசு தலையிட்டு சொசைட்டிகளுக்கு உரிய காலத்திலே கடன் உதவி கிடைக்கின்ற முறையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று கைத்தறித் துறையில் உற்பத்தி செய்யக் கூடிய துணியை கொள்முதல் செய்கின்ற 'கோவாப்டெக்ஸ்' நிறு வனம் அதற்கான பணத்தை துணி முழுவதும் விற்பனை செய்து முடித்த பின்னாலும் அந்த ஆரம்ப சொசைட்டிகளுக்கு பணம் வழங்காத நிலைமை இன்றைக்கும் தொடர்ந்துகொண்டிருக் கிறது. அவர்கள் கொள்முதல் செய்த துணியை விற்பனை செய்தபின்னால் தான் பணம் கொடுப்பது என்ற நிலைமையி னால் அந்த சொசைட்டிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இந்தத் தொழிலை நம்பி இருக்கக்கூடிய நெசவாளர் களையும் அது கடுமையாகப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் துணியை கொள்முதல் செய்யும் போதே பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்குக்கூட 35 கோடி ரூபாய் கோவாப்டெக்ஸ் நிறுவனம் சொசைட்டிகளுக்கு வழங்காமல் பாக்கி வைத்திருக்கிறது என்று சொல்லப்பட்டு கிறது.

(பிற்பகல் 12-50)

ஆகவே, இவ்வளவு காலதாமதமின்றி, உரிய நேரத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் துணிகளை வாங்குகிறபோது மொத்தத் தொகையில் 75 சத வீதத்தை முன்னாலேயே கொடுத்து வாங்கக் கூடிய முறையில், அதற்கான ஏற்பாட்டைச் செய்தால் கைத்தறியை நம்பி வாழக் கூடிய நெசவாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என் பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளவிரும்பு கிறேன்.

அதே போல இன்றைக்கு நூலை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு சம்பந்தப்பட்ட பஞ்சாலைகளுக்கு, இதர தொழிற் சாலைகளுக்கெல்லாம மானியமாக, அதாவது 35 கோடி ரூபாய் மானியம் வழங்குகிறார்கள். ஆனால் கைத்தறிக்கு 60 நாட்களுக்குத் தொடர்ந்து ரிபேட் வழங்கினால் $22\frac{1}{2}$ கோடி ரூபாய்தான் இந்திய நாடு முழுவதற்குமே ஆகிறது. ஆனால், நூலுக்கு 35 கோடி ரூபாய் மானியம் வழங்குகிற இந்திய அரசு இந்த கைத்தறி துறைக்கு மட்டும் வழங்கக்கூடிய ரிப் பேட்டில் படிப்படியாகக் குறைத்து வருவது என்பது கைத்தறித் தொழிலை ஒரு பெரிய அழிவை நோக்கிக் கொண்டு செல்கிற நிலையாக இருக்கிற காரணத்தால் அந்த ரிபேட் என்பது தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். இந்த $22\frac{1}{2}$ கோடி ரூபாயிலேகூட தமிழ்நாட்டிற்கு 9 கோடி ரூபாய்தான் கிடைக் கிறது. ஆகவே, அந்த முறையிலே அது தொடர்ந்து ரிபேட்டை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, இன்றைக்குத் தொடர்ந்து கட்டுப்பா டின்றி நூல் ஒரு பக்கத்திலே விலை உயர்ந்துகொண்டே இருக் கிறது. ஒரு புறத்திலே ஏற்றுமதி செய்கிறார்கள். அதனால் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால் நெருக்கடிகள் அதிகரிக் கின்றன. விலை என்பது கட்டுப்பாடில்லாமல உயர்ந்து கொண்டேயிருக்கிறது. இதனால் இன்றைக்குக் கைத்தறித் தொழில் ஒரு மிகப் பெரிய பாதிப்பை நோக்கி செல்கின்ற காரணத்தால், இன்றைக்கு அந்த நூலை அரசாங்கமே— ஏற்கெனவே கூட்டுறவு மில்களின் மூலமாக வாங்கப் படுகின்ற நூல் போதுமானதாக, கைத்தறியின் தேவைக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால், பிற பஞ்சாலைகளிலே இதர மில்களிலே 50 சதவீதம் கைத்தறிக்கு உபயோகப்படுத்தக் கூடிய சிட்டா நூலை உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஒரு நிலை இருக்கிறது— அந்த முறையை பஞ்சாலைகள் நடை முறைப்படுத்துவதில்லை. அரசாங்கம் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு குறிப் பிட்ட அளவுக்கு பஞ்சாலைகளில் நூல் கொள்முதல செய்து அரசாங்கம் ஒரு நூல கிடங்கை, ஒரு மாவட்டத்திற்கு ஒரு நூல் கிடங்கு என்ற வகையில் அமைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு முறையாகக் குறைந்த விலையில், கட்டுப்பாடின்றி நூல் வழங்க அரசு முன்வர வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆக, அதைப்போல கைத்தறிக்கு உற்பத்தி செய்யக்கூடிய நூலுக்கு இதர மாநிலங்களில எல்லாம்—அதாவது, மேற்கு வங்கம், ஆந்திரா, கர்நாடகம் போன்ற பல அரசாங்கங்களால் அந்தக் கைத்தறிக்கு உற்பத்தி செய்யக்கூடிய நூலுக்கு வரியி லிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் அதற்கான வரி அதன்மீது போடப்பட்டிருக்கிறது. ஆகவே, கைத்தறிக்கு உற்பத்தி செய்யக்கூடிய நூலுக்கு நம் முடைய அரசாங்கம், மற்ற மாநிலங்களைப் போல அதற்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். இந்தக் கைத்தறிக்கு ஒதுக்கப்பட இருக்கின்ற நூலுக்கு வரியிலிருந்து விலக்களித்து, கைத்தறிக்கு நூல் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல சாயத்தினுடைய விலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. உத்திரப் பிரதேச மாநிலத்தில் லட்சுமணபுரியில ஒரு சாயக் கிடங்கு இருப்பதாகச் சொல் கிறார்கள். அதன் காரணமாக உரிய நேரத்தில் தமிழ்நாட் டிலுள்ள கைத்தறியாளர்களுக்கும், இதர துறையில் இருப் பவர்களுக்கும் சாயம் சரிவரக் கிடைப்பதில்லை. தமிழ்நாட் டிலே ஒரு சாயக் கிடங்கு அமைப்பதற்கான எற்பாட்டைச் செய்து, அவர்களுக்கு முறையாக விநியோகம் செய்வதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள

விரும்புகிறேன். அதேபோல், நம்முடைய கைத்தறி மானியக் கோரிக்கையிலேகூட தொழில் கூடங்களை ஏற்படுத்துவது என்று அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே கரூர், சேலம், ஈரோடு, மதுரை, காஞ்சிபுரம ஆகிய ஐந்து இடங்களில் தீவிர வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக இதுபோன்ற கூடங்கள் உருவாக்கப்பட்டு— அந்தக் கூடங்களில் இருக்கின்ற நிலை என்னவென்று சொன்னால்—அந்தத் தறிகளிலே இன்றைக்குச் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய ஊழியர்கள், நெசவாளாகள், ஆண், பெண்—யாராக இருந்தாலும்—அந்தத் தறிகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று, உற்பத்தி செய்துகொண்டு வாருங்கள் என்று சொல்லி, அவர்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதில் கவனம் செலுத்த, இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற— அதிகாரிகளுடைய என்பது அதிகாரவர்க்கப் போக்கோடு—கைத்தறி நெசவாளர்களுடைய நலனைப்பற்றி அக்கறையற்ற செயலபாடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. ஆகவே, தொழில் கூடங்கள், —வீடும் கூடமும் இணைந்த திட்டத்தை கூட—நாம் உருவாக்குவதற்கான சில ஆலோசனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏற்கெனவே இருக்கின்ற தறிகள் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. அதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல, வீடும் தொழில் கூடமும் கட்டுவதற்கு நகர்ப்புறத்திலே 15 ஆயிரம் ரூபாயும், கிராமப்புறத்திலே 9 ஆயிரம் ரூபாயும்— கூடம் மட்டும் கட்டினால் 9 ஆயிரம் ரூபாய்— என்ற அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதையும் மத்திய அரசு—மாநில அரசு— இதுபோன்ற அமைப்புகள் மூலமாகக் கட்டபபடுகிறது. இது 1985-ஆம் ஆண்டிலே தீர்மானிக்கப்பட்ட தொகை. இன்றைக்கு இருக்கின்ற விலையேற்றத்தினால் வீடும் தொழில் கூடமும் கட்ட முடியாது. ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற விலையேற்ற முறையிலே அதை மாற்றித் தொகையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஜனதா ரகம் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்படுவது மூலமாக அதில் உற்பத்தியாகின்ற துணி விற்பனை செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நெசவாளர்களுக்குக் கூலி கிடைக்காத நிலை இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற துணிகளை முறையாக விநியோகிப்பதற் கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கைத்தறித் துறையிலே இருக்கக்கூடியவர்களை எல்லாம் கூட்டுறவுத் துறைக்கு மாற்று கின்ற ஒரு முறையை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அது வர வேற்கக் கூடிய ஒரு அம்சமாக இருந்தாலும்கூட, நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், அப்படி மாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு நெசவாளர்களுடைய நலன், அவர்களுடைய சட்டங்கள், உரிமைகள் ஆகிய எல்லாம் பாதிக்கப்படாது என்ற முறையிலே மாறுதல செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர் நலச் சட்டம் சொசைட்டிகளுக்குப் பொருந்தாது என்ற விதி இருக்கிறது. அந்த விதியை ரத்து செய்து நெசவாளர்கள் கூட்டுறவு சொசைட்டியிலே பணி புரிந்தாலும் அவர்களுக்கும் பயன்படக் கூடிய முறையிலே, நெசவாளர் நல விதிகள் கூட்டுறவு சொசைட்டியிலே இருப்பவர்களுக்குப் பொருந்தாது என்பதை ரத்து செயது, அவர்களுக்குப் பயன்படும் வகையிலே எற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையிலே இருப்பவர்களுக்கு போனஸ் எல்லாம் இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால, தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கிற ஒரு கூட்டுறவு சொசைட்டியில் உள்ளவர்கள் உயர் நீதி மன்றத்திற்குச சென்று, அவர்களுக்கு போனஸ் வழங்கப்பட வேண்டுமென்று தீர்ப்பை பெற்றிருக்கிறார்கள். அதைக கணக்கிலே கொண்டு, மற்ற கூட்டுறவுத் துறையிலே இருக்கிற நெசவாளர்களுக்கும் போனஸ் வழங்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல், குறைந்தபட்சக் கூலி சட்டம் 1983ஆம் வருஷம் மே மாதம் அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் அதற்குரிய மாற்றம் செய்யப்படவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப் பட வேண்டுமென்ற சட்டம் நடைமுறையில் பின்பற்றப்படவில்லை. அதே போல, 1980ஆம் ஆணடு பெங்களூரிலே தொழிலாளர் துறைச் செயலாளர்கள் கூடி, 50 புள்ளி விலைவாசி உயர்ந்தால் குறைந்தபட்சக் கூலியை மாற்றி அமைக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதை முத்தரப்பு மாநாடும் ஏற்றுக் கொண்டது. ஆனால், இன்று வரையில் 300 புள்ளிகள் உயர்ந்திருந்தும் 6 முறை குறைந்தபட்சக் கூலி மாற்றியமைக் கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், கடந்த காலத்திலே இருந்த அரசு மாற்றியமைக்கும் பணியைச் செய்யவில்லையென்பதை இந்த அரசு கவனத்தில் கொண்டு, அதிலே இந்த அரசு உடனடியாக தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1987-88-லே பல்வேறு நெசவாளர்கள் ஒன்று சேர்ந்து மாநில அளவிலே பல போராட்டங்களை நடத்தியதற்குப் பின்னால், 30—6—1988 அன்றிருந்த ஆளுநர் அரசு ஒரு ஆணையைப் பிறப்பித்தது. 1444-ஆம் எண்ணுள்ள அரசாணையிலே 1983 ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிப் பட்டியலில் உள்ள கூலிகளுக்கு மட்டும் 50 சதவீதம் கூலி உயர்வும் அதே போல் பஞ்சப்படி 615 புள்ளிகளுக்கு மேல் உயர்கிற ஒவ்வொரு புள்ளிக்கும் 2 பைசா பஞ்சப்படி வழங்கவேண்டுமென்று அந்த அரசாணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பற்றி மக்களுடைய கருத்துக்களை அறிவதற்காக, 30—8—1988 வரை அவகாசம் கொடுத்தது. ஆனால் அந்த அவகாசத்தைப் பயன்படுத்தி, உற்பத்தியாளர்கள் தங்களுடைய ஆட்சேபணையைத்

தெரிவித்தார்கள் என்று காரணம் காட்டி, பின்னாலே, அந்த உத்தரவை நடைமுறையிலே அமுலாக்கவில்லை. இன்றுவரையிலே அது நடைமுறைபடுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதிலே உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குச் சாயம், பீடி, டானரி போன்ற பல்வேறு தொழில்களுக்கெல்லாம் பஞ்சப்படி அறிவித்திருக்கிறபொழுது, இந்தக் கைத்தறி தொழிலுக்கு ஆட்சேபிப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு மாதம் ஒன்றுக்குப் பஞ்சப்படி ரூ. 72-ம், சம்பளத்தையும் சேர்த்து ரூ. 100 நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது. கடந்த 6 மாத காலமாக கிடைக்கவில்லை; அதனால் 5½ இலட்சம் நெசவாளர்களுக்குச் சுமார் 33 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு இவ்வளவு பெரிய தொகை என்பது மிகப் பெரிய இழப்பாகும். ஆகவே, அதிலே நம்முடைய அரசாங்கம் சீரிய கவனம் செலுத்தி, ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கேற்ப கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்களுக்கென ஒரு சட்டம 1981-லே ஒரு சட்டம் இதே சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. ஆனால் உற்பத்தியாளர்கள் 65 பேர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்றார்கள். 1984-ஏப்ரல் மாதம் 27ஆம் தேதி சட்டம் செல்லும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்தது. 5 வருடம் ஆகியும்கூட, இன்னும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, அரசு உரிய முறையிலே நடைமுறைப்படுத்த டவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1,650 கைநெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 1983ஆம் ஆண்டே சட்டம் இயற்றப்பட்டும் இதுவரையில் தேர்தல்கள் நடத்தாமல் தொடர்ந்து தள்ளி வருகிறது. நியமனங்களில் பல தவறுகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, இதிலே அரசு உரிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேர்தலை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சொசைட்டிகளிலே வாக்காளர்களாக இருக்கக்கூடிய நெசவாளர்கள் தீபாவளி, பொங்கல் போன்ற காலங்களில், அட்வான்ஸ் வாங்குகிறார்கள். அதை மாதாமாதம் சம்பளத்திலே பிடித்தம் செய்கிறார்கள். அதிலே இருக்கிற





பாக்கியைக் காரணம் காட்டி அவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று மறுக்கப்படுகிறது. ஆகவே, அது முறை அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கோ ஆப்டெக்ஸிலே இன்றைக்குப் புதிய சொசைட்டிகளைப் பதிவு செய்ய அனுமதிகள் மறுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் சொசைட்டிகளை உருவாக்க வேண்டுமென்றும் சொல்கிறது. சொசைட்டி பதிவு செய்யப்படுவதற்கு இன்றைக்கு அனுமதி இல்லையென்று சொல்லப்படுகிறது. கோ-ஆப்டெக்ஸ் அதிகாரிகள் நாடாளுமன்ற மனுக்கள் குழுவிடத்திலே சாட்சி அளித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

இத்துறையில் உள்ளவர்கள் இயக்குநர் அவர்களைச் சந்தித்துக் கேட்டபோதும் மறுத்து இருக்கிறார்கள். ஆகவே புதிய சொசைட்டியைப் பதிவு செய்ய தொடர்ந்து அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே பட்டுக்கு இன்றைக்குக் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி விரிவாகச் சொல்வதற்கு அவகாசம் இல்லை. எனவே தமிழ்நாட்டிலே தேவையான அளவுக்குப் பட்டு உற்பத்தி செய்து அவர்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஜரிகை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை காஞ்சிபுரத்தில் இருக்கிறது. அதுபோதுமானதாக இல்லை. அதுவும் முறையாகச் செயல்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் வரதராஜபெருமாள் கூட்டுறவு சொசைட்டி என்று ஒன்று இருக்கிறது. அதற்கு ஒரு நியமனத் தலைவர் திரு. அன்பழகன் என்பவர் நியமிக்கப்பட்டு, 30 இலட்சம் ரூபாயை அவர் அதிலே மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது. அவர் அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு அதன்பின் கோர்ட் மூலம் மீண்டும் அந்தப் பதவியைப் பெற்று அந்த மோசடியிலிருந்து தப்பிக்கின்ற வகையில் அது தொடர்பான ரெக்கார்டுகளை எல்லாம் மாற்றுகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே அரசு இதைக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) அடுத்து கைத்தறித் துணி வளர்ச்சிக்காக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எழுதிக்கொண்டு வந்திருக்கின்ற அத்தனையையும் படித்துவிட வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு வரக்கூடாது. 17 மணித்துளிகள் பேசி விட்டீர்கள். 5 தடவை மணியடித்து ஆகிவிட்டது. அடுத்து திரு. எஸ். ஆர். இராதா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித்துறை மானியம் குறித்து இங்கே பல உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனையும் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்து இந்த அரசு அதைப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற நம்பிக்கையோடு நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு தனி மானியக் கோரிக்கை என்ற அளவுக்கு இன்றைக்கு விவாதம் வந்து பேசக்கூடிய நிலைமை வந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கைத்தறி மானியம் என்பது வேறு ஒரு மானியத்தோடு சேர்த்துப் பேசப்படுகிற நிலைமை இருந்தது. அதற்குப் பின்னாலே இந்தக் கைத்தறித் துறையை தனித் துறையாக ஆக்கவேண்டும் என்று போராடி அந்த வகையில் தனியான துறை ஏற்பட்டு தனி மானியக் கோரிக்கையும் இன்றைக்கு வந்திருக்கிறது. அப்படி ஒரு இலாக்கா இயங்குகிற அளவுக்கு கைத்தறியாளர்களுக்கு ஒரு மரியாதை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கைத்தறி நெசவாளர்களின் 4,000 அல்லது 5,000 வாக்குகளையும் பெற்றுத்தான் உள்ளே வந்திருக்கிறார்கள். ஏனென்றால் எல்லாத் தொகுதிகளிலும் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். நெசவாளர்களுடைய வாக்குகளை வாங்குகிற நேரத்தில் திரும்பத் திரும்ப நெசவாளர்களுக்காகப் பேசுகிறோம், நெசவாளர்களுக்காக வாதாடுகிறோம் என்று சொல்கிற நிலை இருக்கிறதே தவிர உள்ளபடியே நான் வேதனையோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நெசவாளர்களுடைய நிலைமையை எடுத்துப் பார்க்கிற நேரத்தில் இங்கே ஆண்டு கொண்டிருக்கிற அரசோ அல்லது மத்திய அரசோ அவர்களைக் கவனிக்கத் தவறினால் இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அந்த நெசவாளர்கள் ரோடுகளில் நின்று பிச்சை எடுக்கிற நிலைமை வேகமாக உருவாகிவிடும். அந்த அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. அதை மறந்துவிடாதீர்கள். நெசவாளர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அவர்கள் போராடுகிற அளவுக்கு ஒரு சக்தி வாய்ந்த சமுதாயமா என்று கேட்டால் நிச்சயமாக அந்தச் சமுதாயம் போராடுகிற சமுதாயம் அல்ல. மேலும் அவர்களை எழுப்பி போராட்டத்திற்கு அழைத்து வருவது என்பது மிகப்



பெரிய கஷ்டமான காரியம். நெசவாளர்களைப் பற்றிப் பேசுவதற்குக்கூட, வேகமாகப் பேசுகிற அளவுக்குக்கூட அரசியல் கட்சிகளில் ஆட்கள் இருக்கிறார்களா என்று கேட்டால் அதற்கும் ஆட்கள் கிடையாது. எல்லா கட்சிகளிலேயும் பார்த்தால் யாராவது ஒருவர் அல்லது இரண்டு பேர் தான் நெசவாளர்களைப்பற்றிப் பேசுகின்ற தலைவர்கள் இருப்பார்கள். ஆனால் அந்தத் தலைவர்கள் எந்த அளவுக்கு ஒதுக்கப்படுகிறார்கள் அந்தக் கட்சிகளினாலே என்றெல்லாம் நான் கண்கூடாகப் பார்த்தவன்.

இன்றைக்கு ஆளும் கட்சியிலே பார்தத்தால் பரமசிவம் சண்முகம் என்றைக்காவது ஒருநாள் திடீர் திடீர் என்று நெசவாளர்களைப்பற்றி ஏதாவது எழுதிக்கொண்டிருப்பார் அல்லது பேசிக்கொண்டிருப்பார். இங்க பார்த்தால் எதிர்க் கட்சியில் அனகாபுத்தூர் ராமலிங்கம் விடாமல் ஏதாவது பேசிக்கொண்டிருப்பார். கம்யூனிஸ்ட் கட்சியிலே பார்த்தால் திரு. பார்த்தசாரதி விடாமல் பேசிக்கொண்டிருப்பார்.

**திரு. கே. ரமணி :** ஒரு ஒழுங்குப் பிரச்சினை. பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுடைய இயக்கத்தில் முக்கியமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிற ஒரு தலைவர் மற்ற கட்சிகளிலே இருக்கக்கூடிய தலைவர்களில் இதுபற்றிப் பேசுவதற்கு ஆட்கள் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையல்ல. எனவே அவர்கள் அதை மாற்றிக்கொள்வது நல்லது. சிலர் அதிலே அசட்டையாக இருக்கலாம். அதை எல்லோர் மீதும் கொண்டு போய்ப் பூசிவிடக்கூடாது. எங்களுடைய கட்சியிலே இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் சப்ஜெக்டை நாங்கள் டிஸ்கஸ் பண்ணி அதன்பிறகு அதை வைத்துத் தான் இங்கே நாங்கள் பேசுகிறோம். இப்போது என்னைப் பேசச் சொன்னால்கூட நான் பேசுவேன். ஆனால் அவர் அவருடைய கட்சியை எப்படி வைத்திருக்கிறார் என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கருத்துக்கு பேரவைத் தலைவர் மற்றும் திரு. எஸ். ஆர். இராதா ஆகிய இரண்டு பேர்களும் சேர்ந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விழைந்ததற்கு காரணம் கம்யூனிஸ்ட் கட்சி போராடிக் கொண்டிருக்கிறது என்பதிலே திரு. ரமணி அவர்கள் அக்கறை காட்டிக் கொண்டிருக்கின்றார். நான் இங்கே எடுத்துச் சொல்ல வந்ததற்குக் காரணம் எங்களுடைய நெசவாளிகள் போராடுகின்ற நிலையிலே வரவில்லை.

நீங்கள் எவ்வளவுதான் சந்தா வாங்கினாலும் அவர்களுக்கு அந்த வேகம் வரவில்லையே என்பதற்காகத்தான் நான் கவலைப்படுகிறேனே தவிர, வேறல்ல. அதனாலேதான் திரு. பார்த்தசாரதி அவர்களைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதைத் தவிர இன்னும் கட்சிகளிலே பார்த்தால் நெசவாளர்கள் ஒன்று சேர்வது என்ற பழக்கமே கிடையாது. அதிலேயும் கட்சி என்றால் கொடி பிடித்துக் கொண்டு போய் சண்டைக்கு நிற்பார்களே தவிர தங்களுடைய போராட்டத்திற்காக ஒன்று சேர்வதற்கு அவர்களிடத்திலே ஒற்றுமை வருகின்ற நிலை இல்லை. வேலை செய்வதற்கு கூலி கிடைக்கவில்லை என்றாலும்கூட பரவாயில்லை. அவர்கள் ஒன்று சேராத காரணத்தினாலேயே இன்றைக்கு நெசவாளர்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக ஆகியிருக்கின்றார்கள். அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்வதற்குக்கூட ஆளில்லாத அளவுக்கு இன்றைக்கு எவ்வளவு பெரிய அவல நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

**திரு. கோ. வீரையன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டரா, ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனா ? ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் நான் பேசுவதிலே ஏதாவது தப்பு இருக்க வேண்டும்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெசவுத் தொழிலாளர்களைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு ஆளே இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்கின்றார்கள். நான் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்வது, அவரது கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, அவர்களுடைய ஊரிலேயே, கும்பகோணத்திலே, அந்த நகரத்திலேயே நெசவாளர்கள் தொழிலாளர்களைத் திரட்டி ரோட்டிலே கொண்டுவந்து நிறுத்தி அவர்களுக்காக போராடிய வாதாடிய கட்சி கம்யூனிஸ்ட் கட்சி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும் என்பதை அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்கின்ற பெயராலே எனக்கு தகவல் கொடுத்து இருந்தாலும்கூட, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் சொல்வது எங்களுடைய நெசவாளர்கள் போராட்டத்திற்கு வர வேண்டுமென்பதே தவிர, நெசவாளர்களுக்கு அந்த உணர்ச்சி வரவேண்டும் என்ற கருத்திலே நான் சொல்லிக்கொண்டு இருக்கின்றேனே தவிர, கம்யூனிஸ்ட்டுகள் போராடவில்லை, கம்யூனிஸ்ட்டுகள் தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று வாதாடுவதற்கு நான் தயாராக இல்லை. என்னுடைய நேரத்தை அதிலே வீணாக்க விரும்பவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் இந்தத் துறையில் மிகவும் வல்லவர். எனவே கைத்தறி நெசவாளர்கள் குறித்த உங்களுடைய கருத்து நேரடியாகச் சென்று பாயவேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலே நெசவாளர்கள் போராடுகின்ற மனப்பான்மையோடு வரவேண்டுமென்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, இன்றைக்கு நெசவாளர்களுக்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு காலங்களிலே பரிசீலிக்கப்பட்டு இருக்கின்றன. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். சிவராமன் பேரிலே ஒரு காலத்தில் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே சந்தானம் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் ராஜா சுப்பிரமணியம் குழு அமைக்கப்பட்டது. இப்படி எத்தனையோ குழுக்களுடைய அறிக்கைகள் இருந்தும்கூட, குழுக்கள் அமைக்கின்ற நேரத்திலேதான் அந்த குழுக்களை அறிவிக்கின்றார்களே தவிர, அறிவித்ததற்குப் பின்னால் அந்தக் குழுக்கள் சொன்ன யோசனைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிலைமைகள் இருக்கின்றதா என்றால் கிடையாது. அப்படி குழுக்கள் சொல்கின்ற யோசனைகளையும் தொடர்ந்து அமலுக்குக் கொண்டு வருகின்ற அளவுக்கு, அதாவது ஒன்றிரண்டாவது செய்கின்ற நிலைமை இருக்குமானால் நிச்சயமாக பல்வேறு பிரச்சினைகள் இன்றைக்கு மாறி இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே கூட்டுறவுத் துறையிலே நெசவாளர்களை நிறைய தேடிக் கொண்டுவரவேண்டும் என்ற ஆசை இருந்து 60 சதவிகிதம் நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். பல நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் திடீர் திடீரென்று ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்குக் காணாமல் போய் இருக்கின்றன. இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்களே காணாமல் போய்விட்டார்கள். இதற்கு யார் காரணம், நெசவாளர்களா அல்லது நெசவாளர்களை இயக்கிக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளா என்பதை அரசு கவனிக்க வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்வேன், இங்கே பேசிய உறுப்பினர் நம்முடைய அருப்புக்கோட்டையைச் சேர்ந்த உறுப்பினர் என்றவர். நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையிலே தீவிரமாகச் சொன்னார்கள். எங்கள் பகுதியிலே ஊழல் நடைபெற்றது என்று சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்வேன், ஊழல் நடைபெற்றது, ஊழல் நடைபெற்றது என்று சொல்கின்றார்கள். ஊழல் செய்கின்றவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கின்ற நிலைமைக்கு வரவேண்டுமே தவிர, ஊழல் நடைபெற்றது ஊழல் நடைபெற்றது என்று எடுத்துக் காட்டிக்கொண்டு பயமுறுத்திக் கொண்டு காலத்தைக் கடத்துவது

நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அந்த நெச வாளத் தொழிலாளர்களை காப்பாற்றுகின்ற பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஊழல் நடைபெறுகின்ற நேரத்திலேயும் பாதிக்கப்படுகின்ற தொழிலாளர் யார் என்று சொன்னால், கருப்பையா எப்படி நெசவாளர்களுடைய நிலைகளை உணர்வு பூர்வமாக நான் நாடா பிடித்தவன் என்று சொல்லி, உணர்வோடு அவர்கள் பேசுவார் களோ அந்த உணர்வு நெசவாளர் குடும்பத்தில் பிறந்திருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். இந்த நெசவாளர்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று சொல்கின்ற நேரத்திலே எங்க ளுக்கும் அரிசி தர வேண்டும் என்று சொன்னார்கள்.

**திரு. வே. தங்கபாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கருப்பையா அல்ல. திரு. கருப்பசாமி என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சாமியை நினைவுபடுத்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்த அளவுக்கு தொழிலாளர் களுடைய நிலையை வளப்படுத்துவதற்கு நாம் உடனடி நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு நெசவாளர்களுடைய நிலை குறைந்தது எப்படி ? யார் இதற்குக் காரணம் எனபதைக் கண்டுபிடித்து உடனடியாக இந்த தனியார் துறையிலே இருக்கின்ற நெசவாளிகளை கூட்டுறவுத் துறையிலே கொண்டு வருவதற்கு குறைந்திருக்கின்ற நெசவாளர்களையாவது மீண்டும் கொண்டு வந்து சேர்ப்பதற்கு உடனடியான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தயவோடு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அதை நிச்சயமாக நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அதைச் செய்வதன் மூலமாக நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கின்ற நிலை ஏற்படும். இன்றைக்கு குறைந்தபட்ச கூலி சட்டம் இருக்கிறது. அது சம்பந்தமாக பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. எவ்வளவுதான் சட்டங்கள் போட் டிருந்தாலும் இன்றைக்கு நெசவாளர்கள் தவித்துக்கொண் டிருக்கிற நிலையில் புதிய கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் ஆரம்பிக்கிற நிலையில் இல்லை. அதற்கு இங்கே அனுமதி கிடைக்கவும் கிடைக்காது. ஆக, கூட்டுறவுச் சங்கங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டு வருகிறது. அவர்களை காப்பாற்றும் நிலை இன்றையதினம் இல்லையாதலால் போர்க் கால நடவடிக்கை



எடுத்து பாதிக்கப்பட்டிருக்கிற அந்த நெசவாளர்களுக்கு அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இங்கே நான் பல் வேறு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று எனக்கு ஆசை இருந்தாலும் நேரமின்மையின் காரணமாக நேரத்தை நிர்ண யித்து தடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இங்கே ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

ஜரிகைத் தொழிற்சாலை பற்றி இங்கே ஒன்றைக் குறிப்பிட் டிருக்கிறார்கள். ஜரிகையைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டுக்கு தேவைப்படுவது 80 ஆயிரம் மார்க் ஜரிகையாகும். ஆனால் அவ்வளவு இங்கே உற்பத்தியாகவில்லை. காஞ்சி புரத்தில் நீண்ட நாட்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட போது அந்தத் தொழிற்சாலையில் 18 ஆயிரம் மார்க் என்று ஆரம்பித்து இன்றைக்கு அங்கே நடைபெற்ற பல்வேறு தவறு களின் காரணமாக அது நல்ல முறையில் இயங்காத நிலையில் அதன் நிலை மாறுபட்டிருக்கிறது. முன்பெல்லாம் தரமான ஜரிகை நமக்கு கிடைக்குமா என்கிற நிலை இருந்தது. அதற் காகத்தான் சூரத்திலிருந்து வரும் ஜரிகையை நம்பியிருந்த நிலையை மாற்றி இங்கேயே அதனை உற்பத்தி செய்ய வேண்டுமென்று போராடி, பல கஷ்ட நஷ்டங்களை எல்லாம் ஏற்றிருக்கிறோம். இன்றைக்கு காஞ்சிபுரத்தில் இருக்கிற ஜரிகைத் தொழிற்சாலையில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர் கள் கவனித்து மீண்டும் அங்கே 18 ஆயிரம் மார்க் ஜரிகை உற்பத்தியாகும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டுக்கு 80 ஆயிரம் மார்க் ஜரிகை தேவை. அவற்றை உற்பத்தி செய்கிற திட்டம் 1986-ல் தயாரிக்கப்பட்டது. அதற்காக மிகப் பெரிய போராட்டம் எல்லாம் நடத்தப்பட்டது. அதன்பிறகு அதனை ஆரணி, கும்ப கோணம் போன்ற இடங்களில் ஆரம்பிக்கலாம் என்று அனுமதி வாங்கினோம். ஆனால் இன்றைக்கு ஜரிகைத் தொழிற் சாலையை ஆரம்பிக்கிற நிலையில் கூட கும்பகோணத்திலோ, ஆரணியிலோ ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்காமல் காஞ்சிபுரத் திலேயே மேலும் விஸ்தரிக்கலாமா என்கின்ற நிலைமைக்கு வந்திருப்பது சரிதானா? சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அவையில் இல்லாவிட்டாலும் கூட இங்கே அவர் சார்பில கேட்டுக்கொள்கிறேன் கும்பகோணம் என்ற கார ணத்தினால், என் மீது இருக்கிற கோபத்தில் தயவுசெய்து விட்டுவிடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் மதுரை கிழக்கு தொகுதி உறுப்பினர்.

**திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்கள் இங்கே இருப்பதால் சொல்கிறேன். அவர்களுடைய

காலத்தில் கும்பகோணத்தில் ஜரிகைத் தொழிற்சாலையை
ஆரம்பித்தால் அதனை வாங்கிக் கொடுத்தவர்
என்கிற பெயரும் பெருமையும் என்றென்றும் அவருக்கு இருக்
கும். அதுபோல ஆரணியில ஒரு ஜாிகை தொழிறசாலை
வர வேண்டும். அதைத் தடுக்கிற நிலையை தயவுசெய்து ஏற்
படுத்த வேணடாம்.

அடுத்து, நெசவாளர்களுக்கு மேல் படிப்புக்கு ஒரு பெரிய
திட்டம் அறிவிக்கப்பட்டிருககிறது. ஆனால நெசவாளர் குடும்
பத்தில் எததனை பேர்கள் படித்தவர்கள் இருக்கிறார்கள்
என்பதைப் பறறி எணணிப்பார்க்க வேணடும். அப்படி இருக்
கிறது அவர்களுடைய நிலை. நெசவாளர்கள் குடும்பததில்
இருபபவர்கள் இன்னும் படிக்க முன்வந்தால் அவர்களுககுத்
தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்ய வேணடும
இநத அரசு அவர்கள் மீது அக்கறை காட்டி உதவி செய்ய
வேணடும. நெசவாளர்கள் படிபபது என்பது மிக மிகப் பெரிய
கஷ்டமான காரியம். நெசவாளர்களுடைய குடும்பத்திலேயே
தொழில் நடப்பதால், பள்ளிக்கூடத்துறகு போகும் குழந்தை
வீட்டுக்கு உள்ளே உள்ள தறிககுழிககுள் உட்கார்ருகிற நிலை
இருககிறது. ஆகவே, நெசவாளர் குடும்பத்தில் படிப்பு என்ப
பது சம்பந்தம் இலலாத ஒன்று. ஆகவே, நெசவாளர் குடும்
பத்திறகு உதவி செய்கின்ற வகையில் அவர்களுக்கு இன்னும
பலவேறு திட்டங்களை இந்த அரசு அறிவிக்க வேணடும்.
அந்த அடிப்படையிலதான் 1987-ஆம் ஆணடு, இன்றைக்கு
இநத அரசு அறிவித்திருக்கிற திட்டத்தில் இருககிற ஒன்றான
'டாகடர் எம். ஜி. ஆா. கைத்தறி நெசவாளா நலவாழவு அறக்
கட்டளை' என்கிற அமைப்பு ஆரம்பிக்கபபட்டது.
அப்படி அந்த அமைப்பு ஆரம்பிக்கபபட்ட போது,
அதறகாக நிதி சேர்க்கப்பட்ட போது,
இருந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில இருந்த ஒவ்
வொர் உறுப்பினரிடமும் சென்று இந்தத் திட்டத்துறகாக காசு
வசூல் பணணப்பட்டது. அந்த அறக்கட்டளை, அன்றைககு
பட்ட நிலையில் உருவாக்கப்பட்டு, நடைபெற்றுக்கொணடிருக்
கிற நேரத்தில் இநத கொள்கை விளக்கக் குறிப்பிலே—
'டாக்டர் எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்
கட்டளை' என்று 1987-88-ல இருந்த பெயரை, நிலையை—
இன்றைக்கு வெறும் 'அறக்கட்டளை' என்ற பெயரில்
பொதுவாக அறக்கட்டளை என்று பெயரை மாற்றுகிற
முயற்சியை மாண்புமிகு அமைச்சர் செய்தார் என்று நான்
நினைக்கவில்லை—அதிகாரிகள் 'எம். ஜி. ஆர்.,' என்கிற
பெயரை எடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு இதைச் செய்
திருக்கிறார்கள்.

நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நீங்கள் எம். ஜி. ஆர். பெயரை மறைக்க முயற்சிப்பீர்களானால்
நீங்கள் தோலவிதான் அடையப் போகிறீர்கள். நிச்சயமாக





நீங்கள் அதிலே வெற்றி பெற முடியாது. அரசியல் காழ்ப்
புணர்ச்சியினை இதிலே காட்டக்கூடாது. ஏனென்றால்
அறிவிக்கப்பட்ட ஒரு அறக்கட்டளைக்கான பெயரைக்கூட
எடுத்துவிட வேண்டும் என்று ஆசைப்படுவீர்களானால் அது நல்ல
தல்ல. அதிகாரிகள் உங்களைத் திருப்திப்படுத்த
இதைச் செய்கிறார்களா அல்லது நீங்களே இதை
விரும்பிச் செய்கிறீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன். 1987 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறி
விப்பில் இது இருக்கிறது. அதற்கு நிதி சேர்க்கிறபோது
நெசவாளர்களிடம் காசு வாங்குகிறபோது அவரின் பெயரைச்
சொல்லி எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு
அறக்கட்டளை என்று ஆரம்பித்த அந்த அறக்கட்டளை
யின் பெயரை இன்றைக்கு மாற்றுகிற அளவுக்கு திட்டமிட்டு
இந்தக் காரியம் செய்யப்படுகிறதா என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

இதைப்போல இன்றைக்கு பல்வேறு காரியங்கள் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். இன்றையதினம் நிறைவேற்றப்பட்ட சட்டங்
கள்கூட சரியாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவே நெச
வாளர்கள் என்ற அடிப்படை உணர்வோடு நெச
வாளர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வர வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற பல்வேறு
நிலைமைகளை நினைத்துப் பாருங்கள். யாரோ ஏமாற்றுகிறார்கள்
என்பதற்காக—யாரோ தவறு செய்கிறார்கள் என்பதற்காக—
இன்றைக்கு ரிபேட்டை நிறுத்த முயற்சி நடக்கிறது. ரிபேட்டில்
தவறு நடக்கிறது என்று அடிக்கடி சொல்கிற உணர்வு வந்து
விட்டது. நான் நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேறு எந்த மாநிலத்
தைவிடவும்—வேறு எந்த மாநிலத்திலும் ரிபேட் கொடுப்
பதில் நடைபெறுகின்ற தவறுகளை விட தமிழகத்தில் நடை
பெறுகிற தவறுகள் மிகவும் குறைவு; மற்ற மாநிலங்களில்
எல்லாம், மத்திய அரசிடம் பணம் வாங்குவதற்காக என்றே
பல்வேறு தவறுகள் செய்கிறார்கள். கைத்தறி என்று பெயரை
வைத்துக் கொண்டு பல்வேறு தவறுகளைச் செய்கிறார்கள்.
இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய அதிகாரிகள் ரிபேட் பெறு
கிறபோது எப்படிக் கண்டிப்பாக இருக்கிறார்கள் என்பது என்
போன்று நெசவாளர் சங்கத்திலே இருப்பவர்களுக்குத்தான்
தெரியும். இன்றையதினம் ரிபேட்டை ஒழிக்க வேண்டும் என்று
பல முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
ரிபேட்டை ஒழித்துவிட—ரிபேட் பெறுவதைத் தடுக்க எடுத்துக்
கொள்ளப்படும் முயற்சிகளை நாம் எதிர்த்தாக வேண்டும்.
ரிபேட் வாங்குவது என்பது நம் உரிமை என்ற முறையில்

நெசவாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட செஸ் நிதியிலிருந்து நாம் அந்த ரிபேட்டைப் பெற்றுக் கொண்டிருக்கிறோமே தவிர அது யாரோ தருகிற தானம் அல்ல.

மேலும் ஒன்றைச் சொல்லுகிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போகிறார்கள் ? விசைத் தறி வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறதே என்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைப் பணிவன்போடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசைப் பொறுத்தவரையில் நீண்ட நெடுங்காலமாக கதரைக் காப்பாற்ற பல கோடி ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்கிறது. கதரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் வந்திருப்பதற்குக் காரணம் அவர்களுடைய கட்சியோடு அது சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால்தான். அப்படி கதர் உயிரோடு இருக்கும் காலத்திலே கைத்தறியை அழிக்க வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் படுமானால் அதை நாம் எதிர்த்தாக வேண்டும். கதர் எவ்வளவு பின் தங்கிய நிலையில் இருக்கிற தொழில். அந்தத் தொழிலைக் காப்பாற்ற பல கோடி ரூபாயை இங்கே அவர்கள் செலவழிக்கிறார்கள். ஆனால் கைத்தறிக்கு இன்றைக்கு இங்கே பாதுகாப்பு இருக்கிறதா என்றால் இல்லை. விசைத்தறி வேகமாக ஒரு பக்கத்திலே வளர்கிறது என்று சொல்லி அதன் வளர்ச்சியை யாரும் தடுத்துவிட முடியாது .... .........

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, கைத்தறியை ஒழிக்கிற திட்டம் இல்லை. மாறாக, பகல் உணவு சாப்பிடுகிற அந்தக் குழந்தைகளுக்கும் கூட யூனிபார்மாக கைத்தறித் துணியை வழங்க வேண்டும் என்ற கொள்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்க்கு கைத்தறி மீதும், கைத்தறித் தொழிலாளர்கள் மீதும் எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைவிடப் பன்மடங்கு நம் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இந்த அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைப்பற்றியும் அவர் கைத்தறி பற்றி எப்படிப்பட்ட உணர்வு கொண்டிருக்கிறார் என்பதைப்பற்றியும் நமது மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லி நான் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அவரிடம் நானே நேரடியாகப் பழகித் தெரிந்து வைத்திருப்பவன். அவர் எந்த அளவுக்கு இந்தப்



பிரச்சினையைத் தெரிந்து வைத்து கவனம் செலுத்துகிறார் என்பது எனக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறுக்கிட்டுப் பேசியதால் ஒன்றை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு நேரத்தில் கலைஞர் அவர்கள் நெசவாளர்கள் குடும்பங்கள் படுகிற கஷ்டத்தை எடுத்துச் சொல்லுகிற வகையில் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டார் என்பதற்காக அன்றைக்கிருந்த மாற்றுக் கட்சிக்காரர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? நெசவாளர்களை கலைஞர் கேவலப்படுத்திவிட்டார் என்று போராட்டமே நடத்துகிற அளவுக்கு மக்களைத் தூண்டிவிட்டார்கள். அப்படி தூண்டிவிட்ட அந்தக் காலத்திலே கலைஞருக்குத் துணையாக இருந்து கலைஞர் நெசவாளர்களுடைய கோரிக்கைக்காகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்— வாதாடுகிறார்கள்— என்ற விளக்கத்தைச் சொல்லி வந்தேன் என்பதை கலைஞர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இதை மனதில் வைத்து இதற்காகப் போராடி வாங்கவேண்டிய அளவுக்கு அமைச்சர் இன்றைக்கு இருக்கிறார் என்ற கருத்தைத்தான் சொல்ல வந்தேன். போராட வேண்டிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் இருக்கிறார் என்பதற்காகச் சொன்னேன்.

(பிற்பகல் 1-20.)

** ஆனால் அந்த நிலையிலே போராடி வாங்க வேண்டிய நேரத்திலே அமைச்சராக இருந்தாலும்கூட, வாங்க வேண்டிய நேரத்திலே வாங்க வேண்டுமென்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்தத் தொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அருள்கூர்ந்து எஸ். ஆர். இராதா அவர்களுக்கு '' அவர் மாண்புமிகு அமைச்சர் '' என்பது நினைவு இருக்கும். ஏனென்றால் முன்னாள் '' மாண்புமிகு '' என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொண்டு பேசவேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா** : நிச்சயமாக அவர்களைத் தவறாகவோ அல்லது கேவலப்படுத்த வேண்டுமென்றோ அல்ல. தீவிரமாக இருப்பாரென்றால் நான் நிச்சயமாக மகிழ்ச்சியோடு வரவேற்றுக்கொள்கிறேன். ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் இந்தத் துறையை ஏற்றுக்கொண்ட காரணத்தாலே, அவர்கள் தீவிரமாகப் போராடி எங்களுடைய குடும்பங்களுக்கு வாழ்வு தருவார்களானால் நிச்சயமாக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டுவேன். அதிலே என்னுடைய நிலையிலே....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. எஸ். சிவலோகம் :** ** என்பதை வாபஸ் வாங்க வேண்டும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே அவைக் குறிப்பிலே இருந்து நீக்கியாகிவிட்டது. பிறகு எழுந்து எல்லோரும் கேட்டுக்கொண்டு இருந்தால் என்ன பொருள் ?

**திரு. எஸ். ஆர். இராதா :** கைத்தறித துறையைப் பொறுத்த வரையில் அவர் கவனிக்க வேண்டும். அவர் அதிலே போராடி வெற்றி பெற வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். அவருக்கு நான் எதிர்க்கட்சியிலே இருந்தாலும் துணையாக இருப்பேன். அவருக்கு உதவியாக இருப்பேன். எங்களுடைய குடும்பம், எங்களுடைய தொழில் என்ற அளவுக்குக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு இங்கே நகரமைப்பு துறை பற்றிய மானியக் கோரிக்கையில் விவாதம் இருக்கிறது. அதிலே ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நகரமைப்புத் துறை என்று சொல்கிற இயக்குநரகம் பல்வேறு திட்டங்களைப போட்டு— ஒரு நகரத்திலே பார்த்தால் தொடர்ந்து நகரமைப்புத் திட்டங்கள், நகரமைப்புத் திட்டங்கள் என்று போட்டுக்கொண்டே இருப்பார்கள். ஆண்டாண்டு காலம் அதாவது 10 அல்லது 15 ஆண்டு காலம் இந்தத் திட்டங்களில் எந்த முன்னேற்றமும் இல்லாமல், பல லட்சங்கள் செலவழித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. ஆனால் இன்றைக்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை நடைபெறும் நேரத்தில் 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருக்கிற எல்லா டவுன் பிளானிங்கையும் அப்ரூவ் செய்கிறோம் என்று அறிவித்து விட்டார்கள். ஆனால் இந்த நகர அமைப்பு இயக்குநரகத்தில் இருக்கிறவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில், மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்து ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மதுரையிலிருந்த மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் இந்த டவுன் பிளானிங்கில் பெரும் அளவுக்கு கெடுபிடி செய்து பல்வேறு பிளானிங்கிற்கு தரப்படுகிற எந்தத் திட்டத்தையும் அப்ரூவ் செய்யாமல் தடுத்துவிட்டார். ஆனால் ஒரு பிளான் சரியாக இருக்க வேண்டுமென்பதற்காக தடுத்து இருந்தாலும் கூட என்ன ஆயிற்று என்று சொன்னால், சாதாரண பூச்சு வேலை கூட வீட்டில் செய்ய முடியாத அளவுக்கு அதிகாரிகள் தடுக்க ஆரம்பித்து, ஒவ்வொரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது,



வீட்டிலும் எங்கேயாவது கல், மண் கொஞ்சம் ரோட்டிலே இருந்தால் தடுத்து நிறுத்து விடுகிறார்கள். அந்த அளவுக்கு வேகமாகப் போய் விட்டார்கள். பெரிய அதிகாரிகள் சொன்னது, அனுமதி வாங்கிக் கொண்டு கட்டிடங்கள் கட்டுங்கள் என்று. ஆனால் குட்டி அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்று சொன்னால், தெருவிலே மண்ணே கொட்டக் கூடாது, என்னிடத்தில் கொடுக்காமல் எந்தக் காரியமும் நடக்கக்கூடாது. உன்னுடைய வீட்டு வாசலில் சிமெண்ட் இருக்கக் கூடாது என்ற அளவுக்கு தடுக்கிற நிலைமை வந்துவிட்டது. எனவே அதை மாற்றி இன்றைக்கு வரைபடம் அனுமது தருகிற நிலை இருக்கிறதே அதை மாற்றுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இதுபற்றி முறையீடுகள் செய்யும் அளவுக்கு குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்த முறையீட்டுக் குழு பரிசீலித்து, பிளான் அப்ரூவல் என்று வந்தால உடனடியாகத் தருவதற்கு அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மதுரையில் நீண்ட நாட்களாக, நிறைய பிளான்கள் தேங்கி இருக்கின்றன. (மணி அடிக்கப் பெற்றது.)

அதைப்போல் இன்றைக்கு எம். எம். டி. ஏ. அப்ரூவல் என்று சொல்லும் நிலையில், அதன் அப்ரூவல் இல்லாமல பல்வேறு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்வேன். இங்கே அவசரம் அவசரமாக எம்.எம்.டி..ஏ.-ல் எவ்வளவு ஊழல் நடைபெற்றது; குற்றச்சாட்டு நடைபெற்றது. இதிலே அமைச்சருக்கு எவ்வளவு சம்பந்தம் இருக்கிற என்றெலலாம் கூட அவசர அறிக்கைகள் மூலம் ஊழல்கள் என்ற காரணங்கள் காட்டப்பட்டன. நான் மீண்டும் சொல்கிறேன். எம்.எம்.டி.ஏ.-ல் எவ்வளவோ தவறுகள் நடைபெற்று இருக்கின்றன. ஒரு பிளான் பற்றி தீர்ப்பு ஆனபிறகு அதே பிளான் அடுத்த மாதம் பார்த்தால் பரிசீலனைக்கு வந்து, அது அனுமதிக்கப்படும். இப்படி எத்தனையோ காலம் நடைபெற்றிருக்கிறது. ஆனால நான் ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்வேன். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலேதான் ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று சொன்னால், நடவடிக்கை எடுங்கள். அதைவிட்டு அப்படியே சொல்லிக் கொண்டு, பயமுறுத்திக்கொண்டு ஏதோ வருகிறது, வருகிறது என்று சொல்லிக்கொண்டு இருப்பதைவிட, நீங்கள் விசாரணை வைத்தாலும் சரி, எந்த ஊழலை விசாரிக்க வேண்டுமென்று நினைத்தாலும் சரி, அது அமைச்சரைப் பற்றியதாக இருந்தாலும் சரி, அந்த அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அதிலே ஊழல் செய்துவிட்டார்கள், இதிலே ஊழல் செய்துவிட்டார்கள் என்று அடையாளம் காட்டிவிட்டுப் போவதிலே இருந்து எனக்கு ஏற்படுகிற சந்தேகம் என்னவென்றால், இப்படியே மிரட்டிக்கொண்டு போய்விடலாம் என்ற நிலை மட்டும் இருக்கக்கூடாது.

எனவே, யார் தவறு செய்திருந்தாலும், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுத்தால்தான் எதிர்கால சந்ததியினருக்காவது, சமுதாயத்திற்காவது ஒரு நல்ல நிலை வரும் என்பதை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அந்த நிலையின் காரணமாக நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் உரையாற்றும் பொழுது ஊழல் செய்வதாக மிரட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே Point of Order ஒன்றுமில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி மற்றும் பெருநகர வளர்ச்சித் திட்டங்களில் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கொடுத்தமைக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் கைத்தறித் துறையைப் பொறுத்த அளவில், தமிழ்நாட்டில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1987-88 கணக்குப்படி தமிழ்நாட்டில் 5.5 இலட்சம் தறிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு, அதில் 3.98 இலட்சம் கூட்டுறவு அமைப்பில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. நாங்கள் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் ஆட்சியினுடைய கைத்தறி கணக்கிடப்படுகின்றபொழுது, தமிழ்நாட்டில் கிடைத்த தகவலின்படி, தமிழ்நாட்டில் தற்பொழுது 4.27 இலட்சம் கைத்தறிகள் இருப்பதாகவும், அவற்றில் 2.58 இலட்சம் கூட்டுறவு அமைப்பில் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த கைத்தறியினுடைய குறைவு 1.4 இலட்சம் ஆகும். இந்த 1.4 இலட்சத்தில் கணக்கிடுகிறபொழுது, தறிகள் இல்லாத உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும், அந்தக் கைத்தறித் தொழிலை விட்டு வேறு தொழிலுக்குச் சிலர் சென்றிருக்கலாம் என்பதும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சொன்னோம். கூட்டுறவு அமைப்பில் வராத கைத்தறியாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் நாங்கள் கொண்டு வருவோம் என்று சொன்னோம். அதன் அடிப்படையில்



ஆண்டுக்கு இருபதாயிரம் கைத்தறியாளர்களைக் கூட்டுறவுத் துறையில் கொண்டு வருகின்ற ஒரு திட்டம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதன் மூலமாக, இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, கைத்தறித் தொழில் மற்றும் ஆலைத் தொழில், விசைத்தறித் தொழில் போன்ற மூன்று தொழில்களிலும் உள்ள சீரான ஒழுங்கு அமைப்பை, ஒவ்வொன்றும் பாதிக்காத அளவில் அவைகள் வளர்கின்ற அளவிற்கு இந்த அரசு முழு கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு அமைப்பு நெசவாளருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டும்போது, இனி வருங்காலங்களில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குப் பல்வேறு இடர்ப்பாடுகளை நீக்குகின்ற அளவிலும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

இதற்கு முன்னால் கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரதாஸ் மற்றும் திரு. அழகர்சாமி, பெருமதிப்பிற்குரிய திரு எஸ். ஆர். இராதா போன்றவர்களெல்லாம் கூட்டுறவுச்சங்கங்களில் நடக்கின்ற குறைபாடுகளையெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். தவறு செய்தவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேணடுமென்பதையும்—குறிப்பாக மதிப்பிற்குரிய திரு இராதா அவர்கள்—இந்தச் சபையில் தெரிவித்தார்கள்.

அந்தக் கருத்தின் அடிப்படையில் எங்களுடைய துறையின் மூலமாக இந்த நெசவாளப் பெருமக்களுக்கு, நெசவாளர் சங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களை, நாங்கள் தீவிரமாக ஆலோசனை செய்தோம்.

விருதுநகர் சரகத்தில் அருப்புக்கோட்டை, பரமக்குடி, மதுரை போன்ற இடங்களில் பல்வேறு முறைகேடுகளும், கையாடல்களும் கவனத்திற்குக் கொண்டு வரபட்டுள்ளன. தறிகள் கணக்கு சரியில்லை. கணக்குகள் பொய், பில்கள் பொய், ரிபேட் தர கணக்குகளைப் பார்த்தால், ஆடிட் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு போகஸ். ரிபேட்டுகளை பொய்யாகக் காட்டி அங்கே பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக, புள்ளி விவரத்துடன் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விருதுநகர் சரகத்தில், அருப்புக்கோட்டையில் அந்த பழைய கணக்குப்படி 11,083 தறிகள் இருந்ததாக அரசுக் குறிப்பில் இருக்கிறது. ஆனால் தற்பொழுது அந்த அதிகாரிகள் நேரில் சென்றபொழுது 5,179 தறிகள் இருக்கின்றன.

[திரு. ச. தங்கவேலு] [1989 ஏப்ரல் 24

(பிற்பகல் 1-30)

5,904 தறிகள் போகசாக இருக்கின்றன என்பதை இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல மானாமதுரை, பரமக்குடி பகுதியில் 13,600 தறிகள் இருப்பதாக ஏட்டில் உள்ளது. ஆனால் நேரில் சென்று பார்க்கிறபொழுது 6,800 தறிகளதான் இருக்கின்றன. 6,800 தறிகள் போகஸ். அதைப்போல மதுரையைப் பொறுத்தவரையில் 33,300 தறிகள் கணக்கில் இருக்கிறது. நேரில் சென்று பார்க்கிறபோது 13,600 தறிகள் இருக்கின்றன. சுமார் 19,700 தறிகள் போகசாக உள்ளன என்பதை இந்த அரசு கண்டுபிடித்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அருப்புக்கோட்டையைப் பொறுத்தவரையில் இப்போது தீவிர விசாரணை செய்யப்பட்டுள்ளது. போகஸ் அதிகமாக காட்டி ரிபேட் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் நூல் வாங்கியதாகச் சொல்லப்பட்ட பில்களை ஆய்வு செய்த அதிகாரிகள் நேரில் சென்று பார்க்கிறபோது அந்த விலாசத்தில் நூல் வாங்கிய கடையின் விலாசத்தைத் தேடிச் சென்றால் அங்கே அதிகாரிகளுக்கு முடிதிருத்தும் கடைதான் கிடைக்கிறது. அடுத்து சாயப்பொருள்கள் வாங்கியதாக கணக்கு காட்டப்பட்ட பில்கள் பற்றி அதிகாரிகள் நேரில் சென்று பார்த்தால் அது டீக்கடையாக இருக்கிறது. இப்படி எத்தனையோ விசாரணைகள் இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி 4 கோடி ரூபாய்க்கு இத்தகைய பொய் பில்கள் மூலமாக சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மானியத்தொகை, ரிபேட் பணம் கையாடல் செய்திருக்கக்கூடும் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தீவிரமாக புலன் விசாரணை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சரக்கு கணக்குகளைப் பொய்யாகக் கூட்டிக் காட்டி அருப்புக்கோட்டைப் பகுதியில் 64 சங்கங்களில் 18.55 லட்சம் ரூபாய் 1986 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு வங்கியிலிருந்து, புளியம்பட்டி கிளையிலிருந்து பணம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது எதற்காக எடுக்கப்பட்டிருக்கிறது? என்ன காரணத்திற்காக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்ன காரணம் என்பது இந்த விசாரணையின் மூலமாகத் தெரிய வரும் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மே 1987, ஆகஸ்ட் 1987 மாதங்களுக்கு சுமார் 87 சங்கங்களுக்கு அதே அருப்புக்கோட்டைக்கு 62 லட்சம் ரூபாய் ரிபேட் தொகை வாங்கியிருக்கிறது. பல முறைகேடுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டதால் தீவிரமான ஆலோசனை செய்து



1989 ஏப்ரல் 24] [திரு. ச. தங்கவேலு]

அதிகாரிகள் மூலமாக, தொழில் நடக்கிற நெசவாளர் சங்கங்களுக்கு இந்தப் பணத்தை பட்டுவாடா செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு அந்தப் பணம் ஆய்வு நடந்த பின்னால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நெசவாளர் பெருமக்களுக்கு இன்றையதினம் பெரிய பிரச்சினையாக இருப்பது துணி தேக்கம். கோ-ஆப்டெக்ஸில் மட்டும் 110 கோடி அளவிற்கும், பிரதம சங்கங்களில் 75 கோடி அளவிற்கும், இன்றைக்கு துணி தேக்கம் இருக்கிறது. ஆலைகளிலிருந்து உற்பத்தியாகி, நூல் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு, துணி உற்பத்தி செய்து, கோ-ஆப்டெக்ஸ் அதை கொள்முதல் செய்வது தான் பழக்கம். ஆனால் கடந்த அரசு பள்ளிச் சீருடை மற்றும் அரசுப் பணியாளர்களுக்குள்ள சீருடைகள் எல்லாம் அரசின் மூலமாக, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு துணி உற்பத்தி செய்ய ஆணை பிறப்பித்தது. கூட்டுறவுச் சங்கங்கள் அந்த ஆணையை ஏற்று, துணிகள் எல்லாம் உற்பத்தியாகி முடிந்தது. அந்தத் துணிகள் பள்ளிச் சீருடைகள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்குள்ள 'யூனிபார்ம் கிளாத்'—கடந்த அரசு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அந்தத் துணியை கொள்முதல் செய்யாமல் தனிப்பட்ட ஒரு நபர் மூலமாக அந்த கொள்முதல் நடைபெற்று இருக்கிறது. உதாரணமாக நான் சொல்கிறேன். சென்ற வருடம் Casement Cloth என்ற வகையில் 24 லட்சம் மீட்டர் தனியார் மில்லிலிருந்து வாங்கியிருக்கிறது. அதுவும் 10 கவுண்ட் உள்ளது. குவாலிட்டி குறைவாக உள்ளது. ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியான துணி 14 கவுண்ட். அதுவும் 13 ரூபாய் 34 காசு ஒரு மீட்டருக்கு அதிகம். இந்தக் கணக்கின்படி 8 லட்சம் ரூபாய் கடந்த ஆண்டு அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படி தனிப்பட்ட நிறுவனங்களில் வாங்கியதும், துணித் தேக்கத்திற்கு ஒரு காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த 4 ஆண்டுகாலமாக தனிப்பட்ட நபர்களிடம் வாங்கிய மொத்தத் துணிகளுடைய மதிப்பு 16 கோடி ரூபாய் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த கைத்தறி மற்றும் கதர்த் துணிகளை பள்ளிச் சீருடைகளுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் கொள்முதல் செய்ய இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தல் அறிக்கையிலே சொன்னோம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆண், பெண் இருவருக்கும் ஒரு சேலையும் ஒரு வேஷ்டியும் வழங்குவோம் என்று சொன்னோம். அந்தத் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் அனைவருக்கும் ஒரு வீட்டிற்கு ஒரு சேலையும், வேஷ்டியும் இலவசமாக ஆண்டுக்கு ஒரு முறை வழங்கும் திட்டம் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தீபாவளி அல்லது பொங்கல் தினத்தில் இதைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு பல்வேறு மனுக்கள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டில் ஏதேனும் ஒரு நாளில் இந்த இலவச ஆடை வழங்கும் திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த அவைக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இலவச சேலை, வேஷ்டி வழங்கும் திட்டம் பல லட்சக்கணக்கான தொழிலாளர் பெருமக்களுக்கு நெசவாளப் பெருமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற ஒரு சிறந்த ஏற்பாடாக இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்றும் நூல் விலை நிர்ணயக் குழு, மாநில கைத்தறி ஆலோசனைக் குழு இவைகள் அமைக்கப்பட்டு, இம்மாத இறுதியில் அவைகள் தங்களுடைய பணியைத் துவங்கி, இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ, அல்லது தேவைக்கேற்ற வகையிலோ அடிக்கடி கூடி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்த அரசு முயற்சிக்கும்.

அடுத்து, தள்ளுபடி. ரிபேட்டைப் பொறுத்தவரையில் கைத்தறிக் கண்காட்சி விழா, நேற்றைய தினம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்தலைமையில் குதூகலமாகத் துவக்கப்பட்டது. 13—5—1989 மாலை 4.30 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவு விழாவில் கலந்துகொள்ள இசைந்துள்ளார்கள். சென்ற வருடம் இதேசமயம் 15 நாட்கள் இந்த விழா நடைபெற்றது. ஆனால் கடந்த அரசால் தள்ளுபடி அளிக்கப்பட்ட நாட்கள் 7 நாட்கள், இந்த அரசு நெசவாளப் பெருமக்களின் துயரைத் தீர்க்கின்ற வகையில் தற்போது 7 நாட்களுக்குப் பதிலாக 15 நாட்களுக்கு தள்ளுபடி வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விற்பனையை ஊக்கப்படுத்த 29-4-1989 முதல் 13-5-1989 வரை கோ-ஆப்டெக்ஸ் மூலமாக மக்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழா சென்னையில் 21 நாட்கள் நடைபெறும். மற்றும் மாவட்டங்களில் 15 நாட்கள் நடைபெறும். 23—4—1989 அன்று துவங்கும் விழாவில் 15 நாட்களுக்கு, அதாவது 26—4—1989 முதல் 15 நாட்களுக்கு—20 சதவீதம் ரிபேட் பிரதம நெசவாளர் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1974 ஆம் ஆண்டு தள்ளுபடி ரிபேட் சம்பந்தமாக 90 நாட்கள் கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்னால் 60 நாட்களாகவும், அதற்குப்



பினனால் 45 நாட்களாகவும் இன்றையதினம் 30 நாட்களாகவும் குறைந்திருக்கிறது. மத்திய அரசு இப்போது புதிதாக விற்பனை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார்கள். அதையொட்டி, எந்த அளவிற்கு மேக்சிமம், அதிக நாட்களுக்கு ரிபேட் தரமுடியும் என்பதைப் பற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, இந்த மாத இறுதியில் மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதைப்பற்றி விவரமாக எடுத்துச் சொல்லி முடிவு எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பல ஆண்டு காலமாக வழங்காமல் இருந்த தள்ளுபடி மானியம் —மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் அறிவித்தபடி— ரிபேட் பாக்கி, சுமார் 26.15 கோடி ரூபாய் படிப்படியாக வழங்கப்படும்.

விசைத்தறிக்கும் கைத்தறிக்கும இடையே, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய பிரச்சினையை மத்திய அரசுடன் கலந்து பேசி, விரைவில் அதைத் தீர்க்க முயற்சிகளை நான் மேற்கொள்வேன் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40.)

மேலும் நூல் விலை சம்பந்தமாகவும், கைத்தறி ஏற்றுமதி சம்பந்தமாகவும, தள்ளுபடி சம்பந்தமாகவும் மத்திய ஜவுளி அமைச்சருக்கு தமிழக அரசின் மூலமாகக் கடிதம் எழுதியிருக்கிறோம். கடந்த 17, 18 ஆம் நாட்களில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடன் தென் மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் சென்றேன். அவர்களிடத்திலே இந்தக் கோரிக்கையை நான் எடுத்துச் சொன்னேன். நிச்சயமாக இந்தக் கோரிக்கையைப் பற்றி உங்களுக்காக நான் பேசி, இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு உறுதியாக நான் பாடுபடுவேன் என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தின் மூலமாக மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் வங்கி உதவி பெறவும், ஏற்றுமதியாளர்களுக்கு அடிக்கடி நிலவுகின்ற சங்கடங்களைத் தீர்க்கவும், நூல் மற்றும் மூலப் பொருட்கள் நியாயமான விலையில் சீராக்கப்படுவதும் மாறி வரும் இசைவிற்கேற்ப புது ரகங்கள் தயாரித்து ஊக்கப்படுத்தவும், நவீனப் படுத்தவும், வீட்டுவசதி மற்றைய நல்வாழ்வுத் திட்டங்களை விரிவாக்கவும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை வளரவும், புதிய ரகங்கள் விற்பனைக் கூடங்கள் திறக்கவும், கூட்டுறவு அமைப்பிற்கு வெளியே உள்ளவர்களை, தமிழ்நாடு கைத்தறி அபிவிருத்திக் கழகத்தின் மூலம்

சேவை செய்வும், கூட்டுறவு நூற்பாலைகளும், துணி நூல் பதனிடும் ஆலையும், தமிழ்நாடு சரிகை ஆலையும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமும், பட்டு நூல் தொழில் கூட்டுறவுச் சங்கமும், எந்த நோக்கத்திற்காக துவக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் சிறந்து சிறப்புடன் செயல்படவும் இந்த அரசு முழுமையாகக் கவனம் செலுத்தும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

அதேபோன்று தறி இல்லாத நெசவாளர் ஏழைப் பெண்களுக்கு 1,000 தறிகள் வழங்கி, ஆயிரம் நெசவாளர்ப் பெண்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்கும் திட்டமும் அரசின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

மத்திய அதிகாரிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், நெசவாளர் பிரதிநிதிகள், ஆலையின் பிரதிநிதிகள் இவர்களுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்திப் பொதுவாக நலிந்துவிட்ட இத்துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக முடிந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 1,665 பிரதம சங்கங்களில் இப்போது 297 சங்கங்களில் எலக்டட் போர்டுகளும், 406 சங்கங்களில் நாமினேட்டட் போர்டுகளும், 937 சங்கங்களில் ஸ்பெஷல் ஆபிசர்களும், இதர 25 சங்கங்களில் அரசு அலுவலர்களும் என்றபடி அமைப்பில் இருக்கிறது. இப்படி மிகவும் பெரும்பாலான சங்கங்களில் ஸ்பெஷல் ஆபிசர்களே தொடர்ந்து இருக்கும் நிலை மாறி, அனைத்து சங்கங்களுக்குமே எலெக்டட் போர்டு வரவேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் இங்கே கருத்து தெரிவித்தார்கள். தேர்தல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. பல்வேறு மனுக்களும், கோரிக்கைகளும் வந்த வண்ணம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் கூட சட்டமன்றத்தில் வெட்டுப் பிரேரணை வடிவில் இதைத் தந்திருக்கிறார்கள். இதில் நடவடிக்கை எடுக்க 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் செக்ஷன் 33/5-ன்படி உத்தரவு பிறப்பிக்கப்படும். இதன்படி இப்போதுள்ள நாமினேட்டட் அண்டு எலக்டட் போர்டுகள் கலைக்கப்படுவதுடன், அனைத்து பிரதம சங்கங்களுக்கும் தேர்தல் நடத்த வழி ஏற்படும, தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றியவுடன் தேதி அறிவிக்கப்படும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கைத்தறித் துறையினுடைய சிறப்பைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சமயம் எடுத்துச் சொன்னார்கள். நான் எதற்காக கைத்தறி ஆடையை அணிகிறேன் என்றால், நான்



ஒருவன் வேறு ஆடையை அணிவது 10 நெசவாளர்களைக் கொல்வதற்குச் சமம் என்று சொன்னார்கள். அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றி நல்ல பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் மானம் காக்கும் நெசவாளர்கள் நெய்திடும் ஆடைகளை பிற நாட்டவர் தங்கத்தை அள்ளிக் கொடுத்து வாங்கிக் கொண்டதாக வரலாறு எல்லாம் உண்டு. தரமான துணிகளை உற்பத்தி செய்வதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்தும். ' தாயைப் போல் பிள்ளை, நூலைப்போல் சேலை ' என்று சொல்வார்கள். அதைப்போல தரமான நூலை வழங்கி, தரமான துணிகளை நாட்டு மக்களுக்கு இந்தத் துறையின் மூலமாக நாங்கள் வழங்குவோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1953 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், இந்தத் துணி தேக்கத்தைப் போக்குவதற்காக தங்களுடைய தோளில் சுமந்து இந்த கைத்தறி ஆடைகளை விற்ற வரலாறு எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட பெருமைமிக்க இந்தத் துறைக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்க என்னைப்பணித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன் என்பதையும் நான் நினைத்துப் பார்த்துக்கொண்டு, நெசவாளர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட ஆக்கப்பூர்வமான பணிகள் தொடரும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நூலின் சிறப்பு பற்றி திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'' மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.''

என்ற குறளில் ' மணியில் திகழ்தரு நூல் போல் என்று குறிப்பிட்டிருப்பதைப் போல மேலான மணியான திட்டங்கள் அணி அணியாக இந்தத் துறைக்கு வரும் என்பதையும் சொல்லி இந்தத் துறை சம்பந்தமாக மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் துணி தேக்கத்தைப் பற்றியும் மருத்துவ வசதியைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எஸ். எஸ். கருப்பசாமி அவர்கள் மத்திய அரசு நூல் பஞ்சு விலையைக்குறைக்க ஏற்றுமதியை ரத்து செய்து நூலின் விலையைக் குறைக்க வேண்டும் என்ற ஆக்கப் பூர்வமான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. ஏகாம்பரரெட்டி அவர்கள் கூட்டுறவு அமைப்புக்கு தேர்தல் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்பு, வசதியான வீடுகள் கட்டித் தரவேண்டுமென்ற ஆக்கப் பூர்வமான கருத்துக்களையும் எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய திரு. தனபாலன் அவர்கள் மக்கள் விரும்பும் வண்ணம் புதுரக துணிகளை உற்பத்திச் செய்து கைத்தறித் துறைக்கு புத்துணர்ச்சி வழங்க வேண்டும் என்பதையும் சொன்னார்கள். சரிகை விலை

[திரு. ச. தங்கவேலு] [1989 ஏப்ரல் 24

உயர்வு, செயற்கைப் பட்டு போன்றவற்றின் விலையைக் கட்டுப் படுத்த வேண்டுமென்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரியஉறுப்பினர் திரு. மாசிலாமணிஅவர் கள் நூலின் விலை ஏற்றத்தைக் குறிப்பிட்டு அதைக் குறைக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையையும் எடுத்துச் சொன் னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர்திரு. தீட்சிதர் அவர்கள் கரூர் ஈரோடு போன்ற நகரங்களில் உள்ள கைத்தறித் துணி நிலையை, மேலும் வலுப்படுத்த வேண்டும். கைத்தறி விசைத்தறிக்குள்ள இடர்ப்பாடுகளை நீக்கி கைத்தறித் துறை மேலும் சிறந்து விளங்க வேண்டுமென்றஆக்கப்பூர்வமான கருத்துக்களை எடுத்துச் சொன் னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கஜபதி அவர்கள் சொஸைட்டியில் உள்ள குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நூல் தட்டுப்பாட்டை எடுத்துச் சொன்னார் கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரிடையாக நூல் வழங்க வேண்டுமென்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் எடுத்துச் சொன்னார்கள்.

மதிப்பிற்குரிய உறுப்பினர். திரு. முகமது சித்திக் அவர்களும் திரு. வெங்கடாஜலம் அவர்களும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு அழகர்சாமிஅவர்களும் தள்ளுபடி தொகையை உடனே வழங்க வேண்டுமென்று சொல்லி, ஆலை பராமரிப்பில் 6 ஆலைகள் நசிந்து போய்விட்டன அதை சீர்படுத்தவேண்டுமென்ற ஆக்கப் பூர்வமான யோசனையை எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவு சங்க தேர்தல் நடத்த வேண்டுமென்ற கருத்தையும் ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்கள். அதைப்போல மதிப் பிற்குரிய திரு. சுந்தரதாஸ் அவர்கள் கூட்டுறவு சங்கங்களுடைய இடர்ப்பாடுகளை முறைகேடுகளை எல்லாம் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற் குரிய உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தள்ளுபடியைத் தொடர்ந்து வழங்க வேண்டும், நெசவாளப் பெருமக்களுக்கு உடனே நல்ல பல திட்டங்களைகொடுக்க வேண்டுமென்ற ஆக்கப் பூர்வமானகருத்துக்களைச்சொன்னார்கள். மதிப்பிற்குரியதிரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கைத்தறி மானியம் தனியாகக்கொடுக்கப் பட்டதற்கு நன்றியும் தெரிவித்து நெசவாளர்களுடைய பிரச்சினை யைத தீர்க்க வேண்டுமென்றும் சரிகைத் தொழில் நடைபெற வேண்டும் என்றும் சொன்னார்கள். அதே போலே எம். ஜி. ஆர். அவர்களுடைய அறக்கட்டளை பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக் கிறது என்றும் சொன்னார்கள். அப்படி மாற்றம் செய்து எந்த ஆணையும் பிறப்பிக்கவில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் துணி தேக்கம், நெசவாளர் நல்வாழ்வு, நூல்விலை ஏற்றம், நிதி உதவி, நிர்வாக சீர்திருத்தம், முறைகேடுகள் என்று பல வெட்டுத் தீர் மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம்



1989 ஏப்ரல் 24] [திரு. ச. தங்கவேலு]

கவனிக்கப்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மனித வாழ்வில் உணவு, உடைக்கு அடுத்தாற்போல் உறைவிடம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர் கள் நிறைவேற்றித் தந்த மானியக் கோரிக்கை எண். 33-ல் குடிசை மாற்று வாரியப் பணிகளும் அடங்கும். அந்தக் குடிசை மாற்று வாரியத்தின் முக்கியப் பணிகள் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற முறையில் சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். குடிசை மாற்று வாரி யம் இந்தியாவிலேயே முதன் முதலாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது (மேசையைத் தட்டும் ஒலி) 1971 ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் 1,202 குடியிருப்புகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு, அவற்றில் 1,63,804 குடும்பங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டது.

(பிற்பகல் 1-50)

இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு சுகாதார வசதிகளைச் செய்து, குடிசைப் பகுதிகளை அகற்றி, குடிசையில் வாழ்ந்த மக்கள் கோபுரம் போல் கட்டப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்டனர் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். இந்த வாரியத்தின் மூலமாக குடிசை மாற்று வாரியத் திட்டம் விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம், உலக வங்கி உதவியுடன் சென்னை புறநகர் அபிவிருத்தித் திட்டம் தமிழ்நாடு புறநகர் அபிவிருத்தித் திட்டம், நடைபாதைவாசி களுக்கு வீடமைக்கின்ற திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம், வீடற்றவர்களுக்கு வீட்டுமனை வழங்குதல் போன்ற திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்பதையும் இந்த அவைக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு பணிகள் எல்லாம் இன்றைய தினம் அரசு அதிகாரிகள் மூலமாக, மேலும் முடுக்கி விடப்பட்டு முன்பிருந்த வேகத்தில் இந்தப் பணிகள் நடைபெற வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு 1970-71 ஆம் ஆண்டு முதல் 1975-76 ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுக் காலத்தில் 8.58 கோடி ரூபாய் செலவில் 18,384 குடியிருப்புகள் கட்டி குடிசையில் வாழ்ந்த மக்கள் கோபுரம் போல் கட்டப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப் பட்டனர். ஆனால் அதற்குப் பின்னால் 1976-77 முதல் 1987-88 வரை சுமார் 12 ஆண்டுகளில் ரூ. 24.76 கோடி ரூபாய் செலவில் 22,604 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் இந்த அவைக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரிகளைத் துரிதப்படுத்தி இந்த குடிசை மாற்றுப் பணியை மேன்மேலும் சீராக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பல்வேறு காரியங்கள் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குடிசைமாற்று வாரியத்தில் இன்றைக்கு 2.5 கோடி ரூபாய் செலவில் இந்த மாடி வீடு கட்டுகின்ற திட்டம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசால் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு தலா 50 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால் சென்னை நகரத்திற்கு அந்தத் தொகை முழுவதும் வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய ஆலோசனையை ஏற்று ஒன்பதாவது நிதிக் குழு—மதிப்பிற்குரிய திரு. சால்வே அவர்களுடைய தலைமையில் வந்த அந்த நிதிக்குழுவை—பல்வேறு குடிசை பகுதிகளுக்கு நாங்கள் நேரிலே அழைத்துச் சென்று அந்த நிலைமைகளை எல்லாம் விளக்கிச் சொன்னோம். அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 50 கோடி ரூபாய் நம்முடைய மாநில அரசுக்கு வழங்கப்பட்டால் இந்த அரசு நிச்சயமாக நல்ல பல திட்டங்களைச் செய்து முடிக்கும் என்பதையும் இந்த அவைக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நகர ஊரமைப்புத்துறை நில உபயோகத்தை பொறுத்த முதன்மையான திட்டத்தைத் தயாரிப்பது மாஸ்டர் பிளான் தயாரித்தல் என்பதாகும். பொதுவாகக் கிராமப்புறங்களில் 80 சதவிகிதம் மக்கள் வாழ்ந்ததாகவும், 20 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வாழ்ந்ததாகவும் கணக்கிடப்பட்டது. தற்போது கணக்குப்படி 35 சதவிகிதம் நகர்ப்புறங்களிலும், 65 சதவிகிதம் கிராமப் புறங்களிலும் இன்றையதினம் வசித்து வருகின்றார்கள். பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப திடீரென்று உருவாகின்ற குடிசைகளை அகற்றுகின்ற பணியும், பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப நகரின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், போக்குவரத்து, அங்காடிகள் அமைத்தல், சாலை வசதி செய்தல் போன்ற பல்வேறு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களும் இந்தத் துறையின் மூலமாக இந்த அரசு சீரிய முயற்சி எடுத்து செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நகர உள்ளாட்சி மன்றங்களுக்கு மனைப்பிரிவு வரை படங்களைத் தயாரித்து அறிவுரை வழங்குதல், உள்ளாட்சி குழுமங்களுக்குத் திட்டம், கட்டிட விதிகளின் மேல் முறையீட்டாளராக செயல்படுதல், புயலில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களை காப்பது மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பது போன்ற திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

வான்வெளி நகரப் படங்களை நகர அமைப்புப் பணிகளில் பயன்படுத்தி, இந்த நாட்டின் அனைத்து நகர அமைப்பு நிறுவனங்களிலும் முதன்மையாக இந்தத் துறை செயல்பட்டுக்கொண்டு



இருக்கிறது. பாதுகாப்பு இடங்கள்—புயலில் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக இந்த ஆண்டில் புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டுவதற்கு மேலும் 19 இடங்களைத் தேர்வு செய்து பணிகள் துவங்க இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இத்துறை மேற்கொண்டு செயல்பட்டு வரும் சிறப்பான திட்டங்களில் மூன்று—முதலாவது, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம். (தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட்) ரூபாய் 632 கோடியில் உலக வங்கி உதவியுடன் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. சிறப்பாக மனைப் பிரிவுகளை வடிவமைக்கும் பணியை இந்தத் துறை ஏற்றுள்ளது. மைய அரசும், மாநில அரசும் தலா ரூபாய் 60 இலட்சம், மொத்தம் ரூ.120 இலட்சம் செலவில் ஒவ்வொரு சிறிய மற்றும் நடுத்தர நகரத்திற்கு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (இன்டக்ரேடட் டெவலப்மென்ட் ஃபார் ஸ்மால் அண்டு மீடியம் டவுன்ஸ்). இத் திட்டத்தின் கீழ், நலிந்த பிரிவினருக்கு வீட்டுமனைகள் அளித்தல், பேருந்து நிலையங்கள் கட்டுதல், மற்றும் மேம்படுத்துதல், வார மற்றும் நாளங்காடிகளை அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் வணிக வளாகங்களை அமைத்துத் தருதல் போன்ற சிறப்பான திட்டங்களும் இத்திட்டத்தில் அடங்கும்.

இந்தத் திட்டத்தில் இந்த நடப்பு ஆண்டில் மைய அரசும், மாநில அரசும் ரூபாய் 400 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவதாக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் மாநில அரசே ரூபாய் 25 இலட்சம் கடனுதவி அளித்து, பொதுமக்களுக்குப் பயன் உள்ள திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுகின்ற ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்— இன்டக்ரேடட் அர்பன் டெவலப்மென்ட் ப்ரோக்ராம்—இந்தத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் ரூபாய் 125 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நகர மேம்பாட்டுத் திட்டம், முதன் முதலில், 1973 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் நிறுவப்பட்டது. அந்தக் குழுமம் மேற்கொண்டு நிறைவேற்றத் தொடங்கவிருக்கின்ற பணிகளை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம், 29.5 ஏக்கரில் அந்த வளாகம் அமைக்கப்படும். துணி மற்றும் உணவு தானியங்கள், பூ வகைகள், காய்கறிகள் போன்ற அங்காடிகளும் அங்கே அமைக்கப்படும். பேருந்து நிலையமும், சுமை வண்டி நிலையமும் உருவாக்கப்படும். இந்தத் திட்டம் 40 கோடி

ரூபாயில் 2,500 கடைகளைக் கொண்டதாக தற்போது நிறை வேற்றப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதியில் இந்தத் திட்டம் பூர்த்தி ஆகும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவிக்கின்றேன்.

அடுத்து, சாத்தாங்காடு பகுதியில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி—206 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தத் திட்டம் இன் றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 840 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன; 17 கோடி ரூபாயில், 1990-ம் வருட ஆரம்பத்தில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும். மாதவாத்தில் சுமார் 8 கோடி ரூபாய் செலவில் சுமை வண்டி நிலையத்திற்கான அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தச் சுமை வண்டி நிலையம் 1990ஆம் வருட ஆரம்பத்தில் செயல்படத் துவங்கும். சோயம்பேட்டில் பேருந்து நிலையத்திற்கான அபிவிருத்திப்பணிகள் விரைவில் தொடங்கும். புறநகர் வளர்ச்சித் திட்டங்கள்— கும்மிடிப்பூண்டி மற்றும் திருவள்ளூர் நகரங்களில் மேம்படுத்தப் பட்ட பணிகள்— கும்மிடிப்பூண்டி மற்றும் திருவள்ளூர் நகரப் பகுதிகளில் முன்னேற்றப் பணிகளை மேற்கொள்கின்ற அளவில் இன்றையதினம் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதி களுக்கு, திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கை கள் மற்றும் குழும எல்லைக்கான நடவடிக்கைகள் இந்த அரசி னுடைய பரிசீலனையில் இன்றையதினம் இருக்கின்றது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன் இயங்கிவரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மொத்தம் 632.6 கோடி ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டிருக் கிறது. இந்தத் திட்டத்தில் சென்னை மற்றும் மாநிலத்திலுள்ள இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 9 நகரப் பகுதிகள் அடங்கும். அவைகள் மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் நகரங்கள் ஆகும்.

போக்குவரத்து மேற்பாதை மற்றும் போக்குவரத்துத் திட்டங் களின் மொத்த மதிப்பீடு 100.3 கோடி ரூபாய் ஆகும். அதில் சென்னைக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டதொகை 58.8 கோடி ரூபாய் ஆகும். சாலைகள், பாலங்கள் அமைத்தல், தானாக இயங்கு கின்ற சிக்னல்கள், பாதசாரிகளுக்கான கீழ், மேல் பாதைகள் புதிதாக அமைத்தல் போன்ற பணிகளும் நடைபெற இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் சென்னையில் நேரு சிலை உள்ள கத்திப்பாரா முதல் சென்னை திருவள்ளூர் சாலையில் லூகாஸ் டி.வி.எஸ். வரையுள்ள உள்வட்டச் சாலை சுமார் 130 அடி அகலத்திற்கு நான்கு வழிச் சாலையாக, திட்ட மதிப்பீடு ரூபாய் 1,015 இலட்சத்தில் செயல்பட்டு, இந்த ஆண்டில் துவங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



144364

(பிற்பகல் 2-00)

புதிய உள்வட்டச் சாலை எருக்கஞ்சேரி முதல் மீஞ்சூர் வரை மதிப்பீடு ரூபாய் 640 லட்சம், இந்த ஆண்டிலே துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீஞ்சூர் சாலைக்கும் எண்ணூர் துரித வழிச் சாலைக்கும் இடை யில் உள்ள வட்ட சாலை 5.6 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 வழித் தடங்களாக இருப்பதை 4 வழித் தடமாக சுமார் 130 அடியாக இந்தப் பாதை விரிவு செய்யப்படும். இதனுடைய திட்ட மதிப்பீடு ரூ. 250 லட்சம் ஆகும்.

நேரு சிலை கத்திப்பாரா சந்திப்பு முதல் மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையம் வரை உள்ள சாலையை அகலப் படுத்த ரூ. 350 லட்சம் செலவில் வேலை இந்த ஆண்டு துவங்கும். இந்த ஆண்டில் கீழ்ப்பாக்கம் பகுதியில் உள்ள உள் வளைவு சாலை சீரமைக்கப்படும். இதனுடைய திட்ட மதிப்பு ரூ. 224 லட்சம். கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள 3 பாலங்கள் சீரமைப்பு மதிப்பீடு தொகை ரூ. 255 லட்சத்தில் இந்த ஆண்டு துவக்கப்படும். இந்த ஆண்டு 300 பஸ் அடித்தளங்கள் வாங்கவும், மற்றும் போக்கு வரத்து பணிமனைகளைக் கட்டவும் வேலை நடைபெறும்.

கோவையில் வட கோவை க்ராஸ் கட் சாலையிலுள்ள ரயில்வே மேம்பாலத்தை திருப்பிக் கட்டவும் மற்றும் அந்தச் சாலையை அபிவிருத்தி செய்யவும் மதிப்பீடு ரூபாய் ஆயிரம் லட்சத்தில் இந்த ஆண்டு வேலை மேற்கொள்ளப்படும். பெரிய பஜார் சாலையிலுள்ள கீழ்ப் பாலத்தை அகலப்படுத்தும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். இதனுடைய திட்ட மதிப்பு ரூ. 120 லட்சம் ஆகும்.

மதுரை கோச்சடை முதல் குமரகம் வரை தேசீய நெடுஞ் சாலை எண். 7-ல் புறவழிச் சாலையில் சைக்கிள் பாதை மற்றும் நடைபாதை அமைத்தல் மற்றும் சாலையின் இருபக்கமும் போக்குவரத்துக்கு உதவுவதற்காக அணுகு சாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு திட்ட மதிப்பு ரூ. 192 லட்சம்.

திண்டுக்கல் சாலையில் உள்ள பெரியார் பேருந்து நிலையம் அருகில் திண்டுக்கல் சாலையில் ரயில்வே மேம்பாலம் திருத்தி அமைக்கப்பட்டு எல்லிஸ் நகர் வழியாக அணுகுசாலை அமைக்கும் திட்டம் ரூ. 360 லட்ச மதிப்பில் இந்த ஆண்டில் தொடங்கும்.

மதுரை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை இன்றையதினம் நிறைவேற்றுகின்ற வகையில் மதுரை மக்களின் முக்கிய பிரச்சினையான தத்தனேரி மயானத்திற்குச்

D
V211, 31'N89
N89.12.2

[திரு. ச. தங்கவேலு] [1989 ஏப்ரல் 24

செல்கின்ற பாதை ராஜா மில் அருகில் வைகை ஆற்றின் குறுக்கே தத்தனேரி மயானத்திற்கு செல்வதற்கான நீர் மூழ்கிப் பாலம் மதிப்பீடு ரூபாய் 120 லட்சம் செலவில் கட்டப்படும். வைகை ஆற்றின் குறுக்கே அண்ணாநகர் காமராசர் சாலையை இணைக்கின்ற ஒரு உயர் மட்ட பாலம் அமைக்கும் திட்டம் திட்ட மதிப்பு ரூ. 370 லட்சத்தில் இந்த ஆண்டே தொடங்கப்படும்.

திருச்சியில் புதுக்கோட்டை சாலையில் உள்ள 3 ரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்தி திரும்பக் கட்டுதல், சாலைகளைச் செப்பனிடுதல் போன்ற பணிகளுக்காக திட்ட மதிப்பு ரூ. 355 லட்சம். திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை வழியாக தேசிய நெடுஞ்சாலை எண். 7 புறவழிச் சாலை அமைத்தல், மற்றும் 2 ரயில்வே மேம்பாலங்களைப் புதிதாகக் கட்டுதல். தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் அமைத்தல் திட்ட மதிப்பு ரூ.500 லட்சம் செலவில் இந்த ஆண்டே தொடங்கப்படும்.

அதேபோல் குடிசை மாற்று வாரியப் பணிகளும் இந்தத் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் 10 நகரங்களுக்கு அதற்கு வேண்டிய எல்லா அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துவதற்கும், பொது வசதிக்காகவும் 94 ஆயிரம் குடும்பங்களுக்கு நில உரிமை ஆக்கவும், ரூ. 64.4 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே சென்னையில் மட்டும் 45 ஆயிரம் குடும்பங்கள் குடிசைப் பகுதியில் ரூ. 28.7 கோடி செலவில் மேம்படுத்தப்படும். சென்னை மற்றும் உள்ள நகரங்களில் ரூ. 8.2 கோடி செலவில் 20,300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் குடிசைப் பகுதிகள் மேம்பாடு திட்டம் 1989-90 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமத்தில் உறுப்பினர் செயலாளர் மற்றும் உள்ள பதவிக்கு தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சொன்னார்கள். இந்தக் குழுமத்தில் அனைத்து மட்டத்திலும் தொழில் நுட்பக் கல்வித் தகுதி வாய்ந்த அலுவலர்களே பணியாற்றி வருகிறார்கள். பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுகின்ற அவர்களுடைய பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கின்ற வகையில் இந்தத் திட்டம் நடைபெறுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பிளானிங் பர்மிஷன் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நகராட்சி மன்றங்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இது போன்ற பணிகளில் தடங்கல் ஏற்படாத வண்ணம்



1989 ஏப்ரல் 24] [திரு. ச. தங்கவேலு[

இந்தக் குழுமத்தின் மூலமாக அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. தேக்கமான நிலையிலுள்ள மனுக்களை விரைவில் முடித்துத் தர, இதற்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு இந்தத் துறை சீருடனும் சிறப்புடனும் நடைபெற பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முழுமையாகப் பாடுபடும் என்பதைச் சொல்லி கைத்தறி மற்றும் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினுடைய மானியக் கோரிக்கைளை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு மனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் நன்றி. வணக்கம்.

*திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி சம்பந்தமாக ஓர் ஆலோசனைக் குழு பணிகளைத் தொடங்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் நெசவாளர்கள் மற்றும் கை நெசவுத் தொழிலாளர்கள் அமைப்புகளுக்குப் பிரதிநிதித்துவம் தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அரிய ஆலோசனையையும் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையிலே பதில் அளித்தார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே ஸ்லம் கிளியான்ஸ் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்ததற்குப் பிறகு இந்த போர்டை அமைத்தார்கள். ஆனால் அதற்கு முன்பே பெருந்தலைவர் காமராசர் காலத்திலேயே நம்முடைய ஆர்.வி. அவர்கள் இருக்கும் போது அவுசிங் யூனிட் மூலமாக அடுக்கு மாடிகள் கட்டி 10 ரூபாய்க்கு 5 ரூபாய்க்கு என்று வாடகைக்கு விட்டு காலப் போக்கில் அந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கலாம் என்ற நிலைமை இருந்தது அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு இந்த ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட் சிட்டிக்கு மட்டும் இல்லாமல் அதை தாலுக்காக்களுடைய தலைநகரங்களுக்கெல்லாம் விஸ்தரிப்பு செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் தொடங்கப்படுவதற்கு முன்பு, ஏழையெளியவர்களுக்கு இதுபோன்ற

அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பரந்த அளவிலே, இதற்காகவே குடிசையில் வாழ்கின்ற மக்களை மாடி வீடுகளில் அமர்த்த வேண்டுமென்பதற்காகவே தொடங்கப்பட்ட திட்டம் குடிசை மாற்று வாரியத் திட்டம். ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்பது வேறு. ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் என்பது வேறு, ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் என்பது குடிசைப் பகுதிகளை மேம்படுத்துகின்ற திட்டம். சுகாதார வசதிகள், விளக்கு வசதிகள், இதுபோன்ற காரியங்களைச் செய்வது மேம்பாட்டுத் திட்டம், குடிசைகளை— ஸ்லம் கிளியரன்ஸ்— அறவே அகற்றிவிட்டு அந்த இடத்தில் அடுக்குமாடிகளைக் கட்டித் தருகின்ற திட்டம் இந்தத் திட்டம். எனவே அதற்கும் இதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக கட்டப்பட்டவை ஆங்காங்கு, அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கட்டப்பட்டன. ஆனால் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக பல்லாயிரக் கணக்கிலே ஏழை எளியவர்களுக்கு அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அதுதான் வேறுபாடு.

*திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் உரை கூறுகின்ற போது நிறைய கூட்டுறவுச் சங்கங்களிலே முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்றும், ரிபேட் வழங்குவதிலே முறைகேடுகள் இருந்திருக்கின்றன என்றும், லட்சக்கணக்கான ரூபாய் எங்கோ போய் விட்டது, அதைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி வெறும் அறிவிப்போடு இருந்துவிடாமல், கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு முறையாக மற்ற மாநிலங்களிலே, அமைச்சராக இருந்தாலும் அதிகாரிகளாக இருந்தாலும் தண்டனை வழங்கக் கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றபோது நம்முடைய மாநிலத்திலேயும் அதுமாதிரி ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து விட்ட தவறுகளுக்காக யாரையும் தண்டிக்க வேண்டும் என்கிற எண்ணம் உடையதல்ல இந்த அரசு. நமது மாண்புமிகு (குறுக்கீடு) முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பொழுது எதிர்க் கட்சி வரிசையிலே இருந்த நண்பர் ஹண்டே அவர்கள் அப்பொழுது அவர்கள் சுதந்திரா கட்சி என்று எனக்கு நினைவு, அந்தக் கட்சியிலே இருந்தார்— அதற்கு முன்பு ஏற்பட்ட தவறுகளுக்கெல்லாம் தவறு செய்தவர்களைத் தண்டிக்கவேண்டுமென்று மிக ஆத்திரத்தோடு பேசினார்கள். அப்போது அண்ணா சொன்ன பதிலை தான் இங்கே நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



அண்ணா அவர்கள் சொன்னார்கள். இப்போது விவாதித்தோமே இதுவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை தான், சிறப்பாக, பெரிய தண்டனை எதுவும் தர வேண்டாம் என்று. எனவே குற்றச்சாட்டுகள் எடுத்துக் காட்டப்படும் பொழுது அதற்கு ஆதாரங்கள் இல்லையென்று இருந்தால் அதை மறுக்க யாருக்கும் உரிமையுண்டு.

(பிற்பகல் 2-10)

திரு. பூவராகன் அவர்களுக்கே கூட உரிமை உண்டு. ஆனால் அவர்கள் மறுக்கவில்லை; தண்டனை வேண்டுமென்று கூறுகிறார்கள். நண்பர் இராதா அவர்கள் சொல்வதைப்போல யாரையும் மிரட்டுவதற்காக குற்றச்சாட்டுகளைச் சொல்லவில்லை. 'ஃபைல்'களை எடுத்து வைத்து, இந்த இந்த நேரத்தில் இந்த இந்த காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை, தேதி வாரியாக அந்தச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். இந்தத் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு கடந்தகால தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். சுட்டிக் காட்டப்பட்டது மாத்திரமல்ல. அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்து நல்ல முறையில் நிர்வாகத்தை, ஆட்சியை நடத்த வேண்டுமென்ற குறிக்கோளும் அதிலே அடங்கி இருக்கிறது. இதுவே போதும் என்று கருதுகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர் ஒரு பிரதான விஷயத்தை விட்டிருக்கிறார் என்பதால் நான் நினைவுபடுத்துகிறேன். மத்திய அரசின் கொள்கை சம்பந்தமாக பரவலாக விலைவாசி ஏறிக் கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். ஆனால் நெசவாளர்களுக்கு ஊதிய உயர்வு இல்லாமல் இன்றைக்கு சிரமப்படுகிறார்கள். ஆகவே, நெசவாளர்கள் அனைத்துப் பகுதியினருக்கும் ஊதியம் அளிப்பது சம்பந்தமாக அரசின் கொள்கை என்ன என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின்படி இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் பல்வேறு வடிவங்களில் பல்வேறு கோரிக்கை மனுக்கள் வந்து கொண்டிருந்ததை நானும் அறிவேன். அது சம்பந்தமாக அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவு செய்யும்போது இந்தக் கோரிக்கையையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து இரண்டு பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு 1—4—1989 முதல் புதிய திட்டத்தை அறிவித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. தள்ளுபடி மானியத்துக்குப் பதிலாக விற்பனை முன்னேற்ற உதவித் தொகை என்று இருக்கக் கூடிய அந்தத் தொகை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படவிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தொடர்ந்து ரிபேட் என்பது கிடைக்குமா? கிடைக்காதா? ஏற்கெனவே மத்திய அரசு இதை நிறுத்தப் போவதாக போன தடவையே பேசியிருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து 30 நாட்களுக்குப் பதிலாக 60 நாட்கள் ரிபேட் வழங்கப்படுமா? இந்த மாற்றுத் திட்டம் என்பது எப்படி எந்த முறையில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஒரு கோடி மக்களுக்கு வேஷ்டி, சேலை இலவசமாக வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு சரியான கணக்கு எடுத்து 'லிஸ்ட்' ஏதாவது வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றால் யார் யாருக்கு பெறக்கூடிய தகுதி இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் இலவச வேட்டி, சேலை பெற முடியாமல் போய் விடுமே. அது எந்த முறையில் வழங்கப்படவிருக்கிறது? என்ன அடிப்படையில் லிஸ்ட் தயார் பண்ணியிருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரிபேட் விவகாரத்தில் மத்திய அரசோடு தொடர்ந்து இந்த அரசு பேசும். அவர்கள் இறுதியாக ரிபேட் தர இயலாது நெசவாளர்களுக்கு என்று சொல்லி விடுவார்களேயானால் மாநில அரசு இந்த ரிபேட்டை வழங்க முன்வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு, திரு. அழகர்சாமி அவர்கள் இன்னொன்றையும் கேட்டார்கள். இலவசமாக வேட்டி, சேலை, ஒரு குடும்பத்திற்கு ஓராண்டுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை தரப்படும் என்றுசொல்லப்பட்டிருக்கிறது, பத்திரிகைகளிலே கூட ஒரு வேட்டி, ஒரு சேலை என்பதை ஒரு ஜோடி என்று போட்டு, இரண்டு வேட்டி, இரண்டு சேலை என்று பிரசுரித்து விட்டார்கள். ஒரு வேட்டி, ஒரு சேலை தான். அது எந்த அடிப்படையில் தரப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆண்களுக்கு வேட்டியும் பெண்களுக்கு சேலையும் தரப்படும். (பலத்த சிரிப்பு) ரொம்ப கோடையாக, வெயிலாக இருக்கிறதே, கொஞ்சம் சந்தோஷமாக இருக்கலாம் என்பதற்காக வேடிக்கையாகச் சொன்னேன். அவ்வளவுதான்.



வறுமைக் கோட்டிற்குக் கீழே என்பதில் அந்த அடிப்படை ஆராயப்பட்டதா என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 5 கிலோ இலவச அரிசி வழங்கியபோது அதிலே ஊடுருவிய சில தவறுகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று யார் யாருக்கு அரிசி வழங்கப்படுகிறதோ அந்தக் குடும்பங்களுக்குத்தான் ஒரு வேட்டி, ஒரு சேலை தரப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வருடப் பிறப்பிற்கு என்று கொடுக்கப்பட்ட அரிசி சம்பந்தப்பட்ட விஷயத்தில் என்னுடைய கார்டில் 200 ரூபாய் என்று தவறுதலாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு இடத்தில் சாதாரணமான ஒரு ஏழையின் கார்டில் 800 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே, எனக்கு இலவச அரிசி கிடைக்கிற வாய்ப்பும்— நான் வாங்கவில்லை— யாருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமோ அவருக்கு கிடைக்காமலும் போய்விட்டது. ஆகவே, இந்த அடிப்படையில் கொடுக்காமல் தனியாகக் கணக்கு எடுத்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 40 இலட்சம் பேருக்கு இலவச அரிசி வழங்கப்படும் என்று தான் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு தொடர்புகொண்டு கலந்து பேசிய போது அது 52 இலட்சமாக ஆயிற்று. கடைசியாகப் பார்க்கும் போது 72 இலட்சத்தைத் தாண்டி 76 இலட்சம் என்ற அளவுக்கு வந்துவிட்டது. எனவே தான் எப்படி இந்த வளர்ச்சி ஏற்பட்டது என்பதை நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கலந்து பேசி அதற்குப் பிறகு ஒரு குழு நியமிக்கப்பட்டு குடும்பக் கார்டு வைத்திருப்பவர்கள் யார், யார் உண்மையான வருமானத்தைக் காட்டியிருப்பார்கள் என்பதை எல்லாம் கண்டறிந்து அவர்களுக்குத் தனியாக ஒரு வண்ண அட்டை தருவது என்று இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. அதைப் பற்றி எல்லாம் விரிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால், திரு. அழகர்சாமி அவர்கள் விரும்பினால் நாளைய தினம் நடைபெறுகிற மானியத்திலே உணவுத் துறை அமைச்சரிடத்திலே இருந்து தெரிந்து கொள்ளலாம்.

**திரு சி. கோவிந்தராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு அது அமல்படுத்தப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. அதற்குச் சொல்லப்படுகிற ஒரு காரணம் போதுமான ஸ்டாஃப் சாங்ஷன் செய்யப்பட

வில்லை என்பது. நிதிநிலை எப்படி இருந்தாலும் கைத்தறி நெசவாளர்களுக்காக இயற்றப்பட்ட அந்தச் சட்டத்தை அமல் படுத்துகின்ற வகையில் உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா? அடுத்து அமைச்சர் அவர்கள் பேசும்போது இந்தக் கைத்தறித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற மானியத்தை அவர்கள் அங்கே சென்று பார்க்கும்போது அடுக்கடுக்காகச் சொன்னார்கள். பல இடங்களில் பார்பர் ஷாப்ஸ் இருக்கின்றன; பல இடங்களில் டீ ஷாப்ஸ் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். கைத்தறிக்காக ஒதுக்கப்படக்கூடிய இந்த மானியத்தை இப்படி தவறாக உபயோகப்படுத்தக் கூடிய அளவுக்கு இருப்பதை அப்போதிருந்த அதிகாரிகள் பார்த்துக் கொண்டு என்ன செய்து கொண்டிருந்தார்கள். அதற்கும் அவர்களுக்கும் தொடர்பு உண்டா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுடைய நல்வாழ்வுக்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, என்ன தான் நிதியாதாரத்திலே நெருக்கடி இருந்தாலும் கூட அதற்கென பணிபுரிவதற்கான அலுவல் நடைபெறுவதற்கு எந்தத் தடையும் இல்லாமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் மற்றொரு ஐயப் பாட்டினையும் எழுப்பினார்கள். கடந்த காலத்தில் நடைபெற்ற அந்தத் தவறுகளுக்கு அதிகாரிகள் காரணமா வேறு யாராவது காரணமா என்று கேட்டார்கள். இதை அந்தந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் நன்றாகப்புரிந்துகொண்டிருப்பார்கள்; எனவே அவர்கள் அந்தக் காரணத்தை இன்னும் ஆழமாக அறிந்து கொள்ளத் தேவையில்லை. அவருக்கே அந்தக் காரணத்தினுடைய ஆழம் நிச்சயமாகப் புரியும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். பெயரில் இருக்கின்ற அறக்கட்டளையினுடைய பெயர் இங்கே இல்லை என்பதற்கான ஆதாரத்தோடு தான் தெரிவித்திருக்கிறேனே தவிர வேறல்ல. சென்ற ஆண்டு 1987-88ஆம் ஆண்டு அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டபோது அவருடைய பெயர் இருந்தது. அது இன்றைக்கு வந்து இருக்கிற கொள்கைக் குறிப்பிலே எந்தவிதமான பெயரும் இல்லாமல் வந்திருக்கிறது என்பதை நான் ஆதாரத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தவறு சொல்ல வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

அடுத்து அறிவிக்கப்பட்ட ஜரிகை ஆலை கும்பகோணத்தில் ஆரணியில் ஆரம்பிக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு காஞ்சிபுரத்தில் உள்ள ஆலையை விஸ்தரிக்கலாமா என்று ஒரு யோசனை இருப்பதாகச் சொல்லும்போது அந்த



இரண்டு ஆலைகளுமே போய்விடப் போகிறதோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. எனவே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்று சூரத்திலே இருந்து ஜரிகை வருகிறது. நாம் காஞ்சிபுரத்தில் ஜரிகை உற்பத்தி செய்கிறோமே தவிர அது முழுமையான உற்பத்தி அல்ல. வயர் பூராவையும் குஜராத்திலே இருந்துதான் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இங்கே கில்டிங்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆலை முழுமையான அளவுக்குச் செயல்படுகிறதா என்றால் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் கைத்தறி நெசவாளர்கள் மீது இருந்த அன்பின் காரணமாகத் தான் அந்த ஆலையைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டு, அந்த ஆலை அமைக்கப்பட்டது. எனவே கும்பகோணத்திலும் ஆரணியிலும் அந்த ஆலை வர வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தேர்ந்தெடுத்த குழுக்களை எல்லாம் கலைத்தார்கள் நாம் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். குழுக்களைக் கலைப்பது அரசாங்கத்தினுடைய கையிலே இருக்கிறது. குழுக்களைக் கலைத்து அதிகாரிகளின் கையிலே ஒப்படைக்கும் போது எவ்வளவு பெரிய ஊழல்கள் நடக்கப் போகின்றன என்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் நாமினேட்டட்குழுக்கள் என்று குழுக்களை வைத்துக் கொண்டு 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று அதிகாரத்தில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதையும் என்ன செய்யப் போகிறீர்கள்? இன்றைக்குச் சிலர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அவர்களை எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அதேபோல் கைத்தறித் துறையிலே எந்தக் குழுக்கள் அமைத்தாலும் அதிலே நெசவாளர்களைப் போடாமல் வெளியார்களை வேறு, வேறு காரணங்களால் நீங்கள் போடுவீர்களேயானால் நிச்சயமாக ஊழல் நடக்கும். எனவே அதைத் தவிர்க்கின்ற வகையில் நெசவாளர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பினைத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பெயர் மாறிவிட்டது என்பதை நண்பர் திரு. இராதா அவர்கள் பெரிதுபடுத்தி இங்கே பேசியிருக்கிறார்கள். அந்த துறை அதிகாரிகளோடு, அது குறித்து நான் கலந்து பேசுவேன். ஒன்றை நண்பர் இராதா அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் வைக்கப்பட்ட ஒரு பெயர் மாற்றப்படவேண்டும் அல்லது அழிக்கப்படவேண்டும் என்ற குறுகிய நோக்கம் இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது. அப்படியிருந்தால், டாக்டர் எம்.ஜி.ஆர்

மருத்துவப் பல்கலைக் கழகம் என்ற பெயரை எடுத்திருக்கலாம். எடுக்கவில்லை. அது மாத்திரமல்ல, ஒரு பெரிய விழா, அகில இந்திய அளவில் நடைபெற்ற விழா நம்முடைய இந்திய குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட் ராமன் அவர்கள் கலந்துகொண்ட விழாவிலேதான் திரைப்படத் துறைக்கு வழங்குகின்ற விருதுகளிலே எம்.ஜி.ஆர். விருது ஒன்று வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன். இத்தகைய மனப் பான்மை உள்ள ஒரு அரசைப் பார்த்து நீங்கள் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை என்பதை மாற்றிவிட்டீர்களா என்று கேட்பது முறையல்ல. அந்த நோக்கம் நிச்சயமாகக் கிடையாது. எப்படி அந்த மாறுதல் ஏற்பட்டது என்பதைப் பற்றி நிச்சய மாக விசாரிப்போம்.

அவர்கள் ஏதோ ஜரிகை பற்றிச் சொன்னார்கள், காஞ்சி புரத்திலிருந்து மாற்றிவிட்ட காரணத்தினால், இது போய் விடுமா என்று கேட்டார்கள். இன்னொன்று வருவதால் இது போய்விடாது. எல்லாம் இருக்கும் என்ற நம்பிக்கையை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே போடப்படுகிற குழுக்கள் இப்போது கலைக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். குழுக்கள் கலைக்கப்பட்டிருப்பதே விரைவிலே தேர்தல் நடத்துவதற்காகத்தான். விரைவிலே தேர்தல் நடைபெறும். அந்தத் தேர்தலில் நெசவாளர்கள் நிரம்பப் பங்கு பெறுகின்ற அளவுக்கு வாய்ப்பு வசதிகள் வழங்கப்படும் என்பதையும் நான் உறுதி யாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே அருப்புக்கோட்டை நகரத்திற்கு மட்டும் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் ஒரு குறிப்பிட்ட நாளில் இராமநாதபுரம் மத்திய வங்கியிலிருந்து ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் பிரதம சொசைட்டிகளுக்கு, கைத்தறி சொசைட்டிகளுக்கு பண்டிகை முன்பணமாக கொடுக்கப்பட்டது. என்று சொன்னார்கள். அந்தப் பண்டிகை முன்பணம் நம் அரசு விதிமுறைகளின் பிரகாரம், மத்திய வங்கியிலிருந்து பிரதம வங்கிகளுக்குச் செல்கின்றபோது இன்வாய்ஸ் ஆக தரலாம் அல்லது அதற்கான பட்டியல் செல்லும், அங்குள்ள வங்கிகளுக்கு மாற்றிக் கொள்வதற்காக. ஆனால் இராமநாதபுரம் மத்திய வங்கியிலிருந்து பிரதம நெசவாளர்கள் கூட்டுறவு வங்கிகளுக்கு 20 லட்சம் ரூபாய் 'Cash-ஆக கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள், அதற்கான ஆவணங்கள் மத்திய வங்கியிலே இருக்கின்றன. அங்கே பெறப்பட்டு இருப்பதற்கான ரெக்கார்டுகள் இருக்கின்றன



இதைப்பற்றி ஆய்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த அரசே செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி துறையில் 1980 ஆம் ஆண்டிலே இருந்து கைத்தறி ஆய்வாளர்களாக 45 பேர்கள் தற்காலிக பணியாளர்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தகுதியின் அடிப்படையிலே எங்களை நிரந்தரம் ஆக்க வேண்டும்என்று அரசுக்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தயவு செய்து அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் அனைவரும் படித்த பட்டதாரி இளைஞர்கள் ஆகவே, அவர்களை நிரந்தரம் ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கைத்தறி அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மூலமாகப் பதிலை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி அதற்கான முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இடையிலே வெளியிலே போய் இருந்தீர்களா?

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்களுக்கு சிரமம் வேண்டாம் என்று பேசாமல் இருந்தேன். இருந்தாலும் கடமையை உத்தேசித்து என்னுடைய தொகுதியைப் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்டு இந்த நகரத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்கள் சார்பாகவும் ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன். இந்த குடிசை மாற்று வாரியத்தில் மேம்பாடு திட்டங்களுக்காக மத்திய நிதிக் குழு பரிசீலனையின் பேரில் 50 கோடி ரூபாய் கல்கத்தாவுக்கும், பம்பாய் மாநகரத் திற்கும் அளிக்கப்பட்டது. சென்னைக்கு அளிக்கப்படவில்லை அது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் நிதிக்குழு தலைவர் திரு. என். பி. கே. சால்வே அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பணம் எதிர்

பார்க்கப் படுகிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்களிடத்திலே எதிர்பார்க்கப்படுகிற பணத்தை வரும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்து குறிப்பாக நம்முடைய சென்னையில் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்ற இந்த குடிசை மாற்றுத் திட்டத்தை சில பகுதிகளை தேர்தெடுத்து நல்ல கட்டடங்களை கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? 50 கோடி ரூபாய் வரும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. நம்முடைய அரசும் இதுகுறித்து அக்கறை எடுத்து தனியாக நிதி ஒதுக்கீடு செய்து சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் குடிசை மாற்று வாரிய திட்டத்தை மேம்படுத்தும் வகையில் இதனை ஏற்று நல்ல கட்டிடங்களாக கட்டித் தர இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து அரிய கருத்து. அதை நான் வரவேற்கிறேன். மத்திய அரசு மாநில அரசுக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தால் நிச்சயமாக சென்னை நகரத்திற்கும் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் குடிசைகளை மாற்றுகின்ற நல்ல திட்டத்தை இந்த அரசு சிறப்பாக செய்து முடிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித் தொழிலும்.**

திரு. வி. இராமசாமியினுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"**மானியக் கோரிக்கை எண்.** 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 53,71,75,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி.**

திரு. மா. சுந்தரதாஸினுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"**மானியக் கோரிக்கை எண்.** 34—நகர்ப்புற வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 68,46,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25-4-1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

88. திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முறைப்படுத்தப்பட்ட அங்காடிக்கு சில கிராமங்களை சேர்ப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11—3—1988-ஆம் நாளிட்ட 384-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

89. டி. கல்லுப்பட்டி முறைப்படுத்தப்பட்ட அங்காடிக்காக பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 1—3—1988 ஆம் நாளிட்ட 423-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

90. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது), தமிழ், ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

116. கோரிக்கை எண். 26— கைத்தறி மற்றும் துணி நூல்—கொள்கையும் திட்டங்களும், 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

117. கோரிக்கை எண். 34— நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ் ஆங்கிலம்).

118. கைத்தறி துணி நூல் பற்றிய செயல்முறைத் திட்டம், 1988-89 (ஆங்கிலம்).

119. கோரிக்கை எண். 32— பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் முதலியோர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).
—120. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைப்பற்றிய செயல்முறைத் திட்டம் 1989—90 (தமிழ்— ஆங்கிலம்)

210-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

இணைப்புகள்.

## இணைப்பு I

### கைத்தறி மற்றும் துணி நூல்—கொள்கையும் திட்டங்களும் 1989-90.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் மாநில பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏறக்குறைய 15 இலட்சம் கைத்தறியாளர்களுக்கு நேரிடை யாகவும் 30 இலட்சம் கைத்தறியாளர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளிக்கின்றது. இது மாநிலத்தில் உள் நாட்டு பொருள் உற்பத்தியில் குறிப்பிடத் தக்க பங்கு வகிக்கிறது. 1987—88-ஆம் ஆண்டு கைத்தறி கணக் கெடுப்பு தமிழ்நாட்டில் கவலை கொள்ளும் வகையில் கைத் தறி தொழில் இருப்பதை காட்டுகிறது. சமீபகாலம் வரை தமிழ்நாட்டில் 5.56 இலட்சமாக இருந்த கைத்தறிகள் 1987—88-ன் கைத்தறி கணக்கெடுப்பின்படி 4.27 இலட்ச மென கணக்கிடப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பு கூட்டுறவு அமைப்பின்கீழ் இருந்த 3.97 இலட்சத்திலிருந்து மொத்த கைத்தறிகள் 2.58 இலட்சமாக குறைந்திருப்பதை வெளிக் காட்டியது. தமிழ்நாட்டில் மொத்தக் கைத்தறிகள் எண் ணிக்கை பொதுவாக குறைந்தமைக்கும் குறிப்பாக கூட்டுறவு அமைப்பின் கீழ் குறைந்தமைக்கும் முக்கிய காரணம் மாநிலத்தில் விசைத்தறியின் வரம்பு கடந்த ஆளு கையும் சட்டம் மீறிய செயல்பாடுகளுமாகும். விசைத்தறி யின்பால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலின் காரணமாக, கைத் தறியின் சரிவை தடுக்கவும், கைத்தறியை காக்கவும் மேம் படுத்தவும் இத்தருணத்தில் அரசு உடனடியாக திட்டத்தை





வகுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. துணிநூல் தொழி லில் பொதுவான தொழில் நலிவு நிலையின் காரணமாக வணி நூல் தொழில் சரிவு, பருத்தியின் அதிக விலை உயர்வு போன்றவை ஆலை உரிமையாளர்கட்கு கவலையைக் கொடுத்து ஆலையை மூடும் நிலை ஏற்பட்டது. மூடிய ஆலைகளை மீண்டும் திறப்பதே தற்போதைய முக்கிய நோக்க மாகும். விசைத்தறி பகுதியை நோக்கும்போது விசைத் தறியின் ஒழுங்கு முறையில்லாத வளர்ச்சி ஒரு பகுதியில் கைத்தறியின் வரம்பு மீறி ஆட்கொண்ட நிலையும், இன் னொரு பகுதியில் துணி நூல் ஆலைகளின் தொழிலை மேற் கொண்ட நிலையும் காணப்படுகிறது. இவ்வாறு விசைத்தறி தொழில் அத்து மீறி தற்செயலாக முன்னேற்றமடைந்துள்ளது. விசைத்தறியின் வரைமுறையற்ற வளர்ச்சியை ஒருமுறைப் படுத்துவதன் மூலம் கைத்தறியுடன் போட்டியிடா வண்ணமும் நூற்பாலையுடன் இணைந்து செயலாற்றும் வகையிலும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

02. கைத்தறி தொழிலின் வளர்ச்சிக்கெனவும் மாநிலத் திலுள்ள நெசவாளர்களின் நல்வாழ்வுக்காகவும் வகுக்கப்பட்ட சில திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன. துணி நூல் தொழி லுக்கு புத்துயிரூட்டவும் விசைத்தறியை மாநிலத்தில் முக்கிய மான சிறு தொழிலாகச் செய்யவும் எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் பின்வருமாறு.

#### கைத்தறிகள்:

1. தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொணருதல் :

03. தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் திட்டம் கைத்தறிகளை சிறுநெசவாளர்களின் மூலம் முன்னேற்றுவிக்கவும், நெசவாளர்களின் பொருளாதார சமூக நிலையினை மேம்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட மாகும்.

கூட்டுறவு அமைப்பின் கீழ் மேலும் தறிகளைக் கொண்டு வர கீழ்க்கண்ட நிதியுதவி நெசவாளர்கட்கு அளிக்கப்படு கிறது. ஒரு நெசவாளி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்படும் பொழுது அவர் பருத்தி தறிக்கு ரூ. 200-க்கு பட்டு மற்றும் கம்பளம் தறிக்கு ரூ. 350-ம் பாலியஸ்டர் தறிக்கு ரூ. 1,000-ம் அதிக பட்ச பங்கு தொகை கடனாக ஆரம்ப பங்கு மூலதனமாக கடன் பெற தகுதியுள்ளவராகிறார், இக்கடன் தொகையில் 90 விழுக்காடு மைய மற்றும் மாநில அரசுகளினால் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதற்கு முன் தெரிவித்துள்ளபடி கைத்தறிகளை கூட்டுறவு வின் கீழ் கொண்டு வருவது சற்று பின்னடைந்துள்ளது.

மாநிலத்தில் 1987-88 ஆம் ஆண்டில் மொத்தம் இருந்த 5.56 இலட்சம் கைத்தறிகளில், 3.97 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் இருந்ததாகக் கூறப்பட்டது. 1988-ம் ஆண்டின் கைத்தறி கணக்கெடுப்பு 4.27 இலட்சம் கைத்தறிகளே மாநிலத்தில் இருப்பதாகவும் அவற்றில் 2.58 இலட்சம் கூட்டுறவின் கீழ் உள்ளனவென்றும் வெளிக்காட்டியது. இது தேசிய குறியீடான 60 விழுக்காடுகளுக்கு சமமாகும் கைத்தறிகளை கூட்டுறவின் கீழ் கொண்டு வருவதில் இந்திய நாட்டில் தமிழ்நாடு முதலிடம் வகித்தாலும் சொந்தத்தில் தறியில்லாத பல ஏழை கைத்தறி நெசவாளர்கள் தனியாரிடத்தில் பணியாற்றி வருகின்றனர். எனவே அரசு சொந்தத்தில் செறிவுத் திட்டமாக—1 கைத்தறி இல்லாத நெசவாளர்களுக்கு பங்குத் தொகை உதவியும், 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி என்ற வகையிலும் திட்டமிட்டு உதவி வருகின்றது.

04. 31-3-1989-ல் மாநிலத்தில் 1,665 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1988-1989-ஆம் ஆண்டில் 15,000 நெசவாளர்கள் கூட்டுறவின் கீழ் கொணர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அது எய்தப்பட்டு விட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்துவதற்காக அரசு பங்கு மூலதனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சமும், கைத்தறி நெசவாளர்களுக்கு பங்குத் தொகை கடன் உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 15 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் அரசு பங்கு மூலதனம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சமும் பங்குத் தொகை கடன் திட்டத்திற்கு ரூ. 15 இலட்சமும் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1988-89-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 190 மில்லியன் மீட்டர் உற்பத்தி இலக்கில் 31-3-1989 முடிய ரூ. 203.68 கோடி மதிப்புள்ள 138.84 மில்லியன் மீட்டர் கைத்தறி துணிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1989—90-ஆம் ஆண்டிற்கு 190 மில்லியன் மீட்டர் உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டிற்கு மேலும் 15,000 கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.:

05. வயிற்றுப் பிழைப்புக்காக பல தறியற்ற கைத்தறி நெசவாளர்கள் தறி முதலாளிகளின் பிடியில் சிக்கிக்கொண்டு அவதியுறுகின்றனர். சொந்தத்தில் தறியில்லாத ஏழை நெசவாளர்களின் நல்வாழ்வுக்காக கைத்தறி வளர்ச்சி திட்டங்களின் ஒரு பகுதியாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்





அமைப்பது மாநில அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் முக்கியமான திட்டங்களுள் ஒன்றாகும். 27.36 விழுக்காடு கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் சொந்த தறி இல்லாது இருப்பதாக 1988-ஆம் ஆண்டு கைத்தறி கணக்கெடுப்பின்படி தெரியவந்துள்ளது. இதன்படி ஒரு இலட்சத்திற்கு மேலாக கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி வழங்கப்பட வேண்டியுள்ளது. தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டவர்களை விடுவிக்கும் உயரிய நோக்குடனும் அவர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்க ஆண்டுதோறும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 6.37 இலட்சம் திட்ட செலவில் (ரூ. 3.57 கடன் ரூ. 2.80 இலட்சம் மானியம்) அமைக்கப்படுகின்றன. மாநிலத்தில் 179 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. கடன் பகுதியை, மைய மற்றும் மாநில அரசும், ஏற்றுக் கொள்கின்றன. மானிய பகுதி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

1984-85ஆம் ஆண்டில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்க மானிய வழிமுறைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தினர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அளித்து வந்த மானியத்தை நிறுத்தி வைத்துள்ளனர். இந்த அரசு ஊரக வளர்ச்சித்துறையினால் நிறைவேற்றப்பட்டு வரும் வறுமை ஒழிப்புதிட்டத்தின் கீழ் இத்திட்டத்தை ஒருங்கிணைத்து அதிக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அமைக்கும்.

இத்திட்டத்தில் ஒவ்வொரு சங்கத்திற்கும் அளிக்கப்பட்டு வந்த நிதியுதவி போதுமானதாக இல்லாமையினால் மொத்த பிரிவு செலவு ரூ. 6.37 இலட்சத்திலிருந்து ரூ. 10 இலட்சமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. 1989-90-க்கு மூன்று தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 30.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நார்வே நாட்டு உதவி :—

06. தவிர கிராமப் பகுதிகளில் வறுமையின் பிடியில் அவதியுறும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தினால் நொராடு உதவியுடன் தொடங்கி நடத்தப் பெறும் திட்டத்திலிருந்து மானியம் பெற்று பிரத்தியேக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஒரு சங்கத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 50 இலட்சம் செலவில் 5 சங்கங்கள் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

[1989 ஏப்ரல் 24

3. சொந்தத்தில் தறியில்லாத பெண் கைத்தறியாளர்களுக்கு தறி வழங்கும் திட்டம்.

07. தறியற்ற பெண்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும், உறுதியான கூலியும் அளிக்கும் இரட்டை நோக்கில் 1,000 பெண்களை பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் அங்கத்தினர்களாகச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு எளிமையாக சிரமமின்றி நெசவு செய்ய ஏதுவாக தறிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 1,000 பெண்கள் 100 பேர்கொண்ட குழுக்களாக பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கூட்டுறவு திட்டங்களிலும் சேர்க்கப்படுவர். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கைத்தறியின் விலை ரூ. 2,500 ஆகும். இதில் ரூ. 1,000 மானியமாகவும் மீதி ரூ. 1,500, 60 எளிய மாத தவணையில் மாதம் ரு. 25 வீதம் செலுத்தும் வகையில் கடனாகவும் வழங்கப்படும். இத்திட்டத்திலுள்ள 10 பிரத்தியேக பெண்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கும் விதமாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்க திட்டத்துடன் இத்திட்டம் இணைக்கப்படும்.

தற்போது அந்த வறுமை நிலையிலுள்ள பெண் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதில் பன் மடங்கு பயன் விளைவிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக இத்திட்டம் அவர்களை தற்சார்புடையவர்களாக ஆக்கும். இத்திட்டத்தின் மொத்த செலவின் மதிப்பு ரூ. 25 இலட்சமாகும். அதில் ரூ. 10 இலட்சம் மானியமும் ரூ. 15 இலட்சம் கடனுமாகும்.

4. பட்டு நெசவு:

08. மாநிலத்தில் குறிப்பாக காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் 27,231 தறிகளைக் கொண்டு 111 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1988-89-ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் கடனாகவும் ரூ. 0.17 இலட்சம் மான்யமாகவும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவியாக அளிக்கப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் பட்டு மற்றும் செயற்கை பட்டு வளர்ச்சிக்கென நிதியுதவி வழங்க ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1989 ஏப்ரல் 24]

5. கைத்தறி நெசவாளர்கள் விடுவிப்புத் திட்டம்.:

09. தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் கைத்தறி நெசவாளர்கள், முதலாளிகளிடம் பட்ட முன் கடனை திருப்பி செலுத்தி, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேருவதற்கு வசதியாக 4 விழுக்காடு சலுகை வட்டி விகிதத்தின் கீழ் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோரை கைத்தறி மற்றும் துணி நூல் துறை தெரிவு செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

6. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நிதியுதவி வழங்குதல்

10. இப்பிரிவுக்கு நடைமுறை மூலதனம் தடையின்றி கிடைக்கச் செய்யும் விதத்தில் தேசீய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, மறு நிதியுதவி திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்து வருகிறது. தற்போது கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி தொழில் வங்கி விகிதத்தை விட 2 ½ சதவிகிதம் குறைந்த வட்டியில் இத்திட்டத்தில் நிதியுதவி பெறுகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம் அவற்றின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பது ஆகும். இது பிரதம நெசவாளர் கூட் டுறவு சங்கங்கள் அவற்றின் வியாபாரம் எதிர் மறையாக இருந்தாலும் செய்ய வேண்டிய சமூக கடமையாகும். இவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும்போது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லா செயல்பாடும் திருப்திகரமாக உள்ளது. கூட்டுறவு வங்கிகள் சலுகை வட்டி விகிதத்தில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கடன் உதவி அளிக்க அரசு ரூ. 150 இலட்சம் வட்டி மான்யம் அளித்துள்ளது. 1988-89 ஆம் ஆண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் ரூ. 180.76 கோடி அளவுக்கு நடைமுறை மூலதனம் பெற்றுள்ளன.

இது தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வங்கி நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் அளித்து வரும் நிதி யுதவியில் 58 சதவிகிதத்திற்கும் மேலாகும். தமிழ்நாட்டி லுள்ள கைத்தறி பிரிவு நாட்டிலுள்ள நிதி வசதிகளிலிருந்து 58— சதவிகிதத்திற்கு மேல் நிதியுதவி பெற்று ஒரு தனி யிடத்தைப் பெற்றுள்ளதை இது காட்டுகிறது. 1989-90-ம் ஆண்டிற்கு கைத்தறி பிரிவிற்கு ரூ. 190 கோடி அளவுக்கு கடன் வசதி கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. எனவே வட்டி மானியதிட்டம் தொடர்ந்து செயல்படும் விதமாக 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிலுவை உள்ள வட்டி மானிய
தொகையாவும் கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுக்கப்பட்டு
கூட்டுறவு வங்கிகளுக்கு ஓராண்டில் வட்டி மானிய நிலுவை
ஏதும் இல்லை என்ற நிலை ஏற்படும்.

11. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்
டுறவு வங்கிகளால் வழங்கப்படும் நடைமுறை மூலதனக்
கடன் வசூல் ஆகாததினால் ஏற்படும் இழப்பில்—90 விழுக்
காடு அரசு ஈடு செய்கிறது. மிகுதியுள்ள 10 விழுக்காட்
டினை சம்மந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே
ஏற்றுக் கொள்கின்றனர். இந்தத திட்டம் 1989—90
ஆண்டிலும் தொடரப்படும் இதற்கு ரூ. 1 இலட்சம் ஒதுக்க
யுள்ளது.

## 7. தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் :

12. நெசவாளர் கூட்டுறவுச சங்கங்கள் அவற்றின் உற
பத்தித் திறனிலும் நெசவு நுட்பத்திலும் முன்னேற்றம்
கண்டு அதன் மூலம் புதிய வடிவமைப்புகளில் கவர்ச்சிகர
மான துணிகளை உற்பத்தி செய்து ஆலைப் பிரிவோடும்
விசைத்தறி பிரிவோடும் போட்டியிடும் அளவிற்கு உயர
வேண்டும். இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள் நெச
வாளர்களின் சோர்வு மற்றும் அடிமைத்தனத்தைப்போக்கி
உற்பத்தியில் முன்னேற்றம் கண்டு நெசவாளிக்கு அதிக கூலி
கொடுப்பதேயாகும். இந்த திட்டத்தின்கீழ் பண்ணை,
விழுது, ஜாக்கார்டு, டேக், ஆப்-மோஷன் பெடல் தறி
மற்றும் நவீன தறிகள் வாங்கவும். பழைய தறிகளை மாற்றி
புதிய தறிகள் அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.
கைத்தறியை புதுப்பித்தல், நவீனப்படுத்தல், புதிய தறிகளை
வாங்குதல் போன்றவற்றின் மூலம் தற்போதைய தொழில்
நுட்ப திறன் உயர்வினை அடைய நெசவாளர் கூட்டுறவு
சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கென மைய அரசும்
மாநில அரசும் 50 : 50 என்ற அடிப்படையில் நிதியுதவி
அளிக்கின்றன. இந்நிதி உதவியில் 1/3 பகுதி மானிய
மாகவும் 2/3 பகுதி கடனாகவும் வழங்கப்படுகிறது. குறைந்த
வருவாய் உள்ள 7,000 ஏழை நெசவாளர்களுக்கு உதவ 1989-
90ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 21 இலட்சம் நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. கைத்தறி துணி உற்பத்தி :

13. 1987-1988 ஆம் ஆண்டு இந்தியாவில் உற்பத்தி செய்
யப்பட்ட 3948 மில்லியன் மீட்டர் கைத்தறி துணிகளில்
தமிழ்நாடு 500.04 மில்லியன் மீட்டர் கைத்தறி துணி உற்
பத்தி செய்து மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. ஒரு
தறியின் ஒரு நாளைய உற்பத்தி திறன் அடிப்படையில்





கணக்கிடும்போது தமிழ்நாடு ஒரு தறிக்கு ஒரு நாளைக்கு
4.75 மீட்டர் என்ற அளவில் உற்பத்தி செய்து மிக பின்
தங்கிய நிலையில் உள்ளது. தறிகள் சராசரியாக 1 வரு
டத்திற்கு 261 நாட்கள் வேலை செய்கின்றன. இந்தியா
அளவில் ஒப்பிடுகையில் தமிழ்நாடு உற்பத்தி அளவிலும் சரா
சரி வேலை நாட்களின் துணி உற்பத்தியில் குறைந்துள்ளது.
ஏனெனில் பெரும்பாலான நெசவாளர்கள் நவீன வடிவமைப்
பும் அதிக மதிப்புள்ளதுமான பட்டு சேலைகள், ஜாக்கார்டு
போர்வைகள், டர்க்கி துண்டுகள் போன்றவற்றினை உற்பத்தி
செய்துள்ளதில் ஈடுபட்டுள்ளமையே ஆகும். கைத்தறி
கணக்கெடுப்பு ஒரு நெசவாளரின் ஒரு மாத மொத்த வரு
மானம் ரூ. 393.30 என்றும் அதில் நெசவாளர் சங்கங்களின்
மூலமாக அவருக்கு கிடைப்பது ரூ. 314.64 என்றும் வெளிக்
காட்டியது. கிராம மக்களுக்கு கிராம வளர்ச்சித் திட்டப்
பணிகளில் அளிக்கப்பட்ட வேலையைவிட நெசவுத் தொழில்
சிறந்த வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில் என்று மேலும் இக்
கணக்கெடுப்பு வெளிக்காட்டியது. மேற்குறிப்பிட்ட பின்னணி
யில் தற்போதைய ஒரு தறியின் ஒரு நாளைய 4.75 மீட்டர்
உற்பத்தியை 6.06 மீட்டர் அளவிற்கு அடுத்த 5 வருட
காலத்தில் உயர்ந்த அரசின் நோக்கமாகும். உடனடியாக
5 மீட்டர் அளவிற்கு உற்பத்தியை உயர்த்துவது அரசின்
நோக்கமாகும். 1989-90 ஆம் ஆண்டிற்கு கைத்தறி துணி உற்
பத்தி 525 மில்லியன் மீட்டர் குறியீடு நிர்ணயிக்கப்பட்
டுள்ளது.

## 9. கச்சாப் பொருட்கள் வழங்குதல் :

14. தமிழ்நாட்டிலுள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளுக்கு
1.87 இலட்சம் பேல்கள் சிட்ட நூல் தேவைப்படுகிறது.
கூட்டுறவு நூற்பாலைகள் 1,665 கைத்தறி நெசவாளர் சங்
கங்களுக்கு 80,000 பேல்கள் சிட்ட நூலை அளித்துள்ளது.
சிட்ட நூல் தேவை விநியோகத்தில் மாநிலம் உபரி நிலையி
லிருந்தாலும் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு தேவைப்
படும் 2-17 நெ. வகை நூல் போதுமானதாக இல்லை.
இருப்பினும், ஏப்ரல் 1988 முதல் அக்டோபர் 1988 வரை
கட்டுக்கு ரூ. 12 வீதம் சலுகை விலையில் மின்சாரத்திற்கு
நூல் என்ற திட்டத்தின் கீழ் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து
கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு வழங்கியது. நூற்பாலை
கள் 7 மில்லியன் யூனிட் அளவில் மின்சாரத்தை பெற்ற
காரணத்தால் ஆலைகள் தங்களின் பொறி விசை மூலம்
மின் விசையை உற்பத்தி செய்யாது. சேமித்து பலனை
நெசவாளர்கள் அடையச் செய்தது. தனிப்பட்ட கைத்தறி
சங்கங்கள் 8,925 பேல்களை எடுத்துள்ளது. கூட்டுறவு நெச
வாளர் சங்கத்தில் உபயோகம் 900 பேல்களாகும். இந்த
திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட சலுகை தொகை ரூ. 47.16
இலட்சங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும்

அக்டோபர் 1988 முதற் கொண்டு பஞ்சு இறக்குமதி திட்டம்
மூலம் நூல் பெறுவது அறிமுகப்படுத்தப்பட்டது.
நூற்பாலைகளுக்கு தமிழ்நாடு துணி நூல் கூட்டுறவு
பாகிஸ்தானிலிருந்து 20 நெ. பஞ்சு 10,600 கழக மூலமாக
சூடானிலிருந்து 40 நெ. பஞ்சு 16,970 பேல்களும் பேல்களும்
மதி செய்யப்பட்டன. இத் திட்டத்தின் கீழ் இறக்கு
அரசின் முடிவுப்படி நூல் விலை நிர்ணய குழு இந்திய
விலையில் இருந்து 5 விழுக்காடு சலுகை நிர்ணயிக்கும்
பட்டது. இறக்குமதி பஞ்சு திட்டத்தின் கீழ் 20 நெ. அளிக்கப்
நூல் நெசவாளர்களுக்கு முழுவதுமாக அளிக்கப்பட்டது. வகை
ஆனால், 40 நெ. வகை நூல் பேல்கள் முழுவதுமாக அளிக்கப்பட்டது.
வரை விநியோகிக்கப்படவில்லை. மேலும் முழுவதுமாக இது
பஞ்சு இறக்குமதி திட்டத்தின் கீழ் நெசவாளர் மாநில அரசு
சங்கங்களுக்கும் தேசிய கைத்தறி அபிவிருத்தி கூட்டுறவு
தனிப்பட்ட தறி முதலாளிகள் சங்கத்திற்கும் கழகம் மற்றும்
யில் 20 நெ. 26 நெ. 40 நெ. 2-17 நெ. 2-30 நெ. சலுகை விலை
வகைகளை வழங்கவேண்டும். இது வரை ரூ. 2-40 நெ.
இலட்சம் இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சிலிருந்து 65.84
செய்யப்பட்ட நூலுக்கு சலுகையாக அளிக்கப்பட்டது. உற்பத்தி
மார்ச்சு 1989 முடிவில் 6,706 பேல்களை கூட்டுறவு அளிக்கப்பட்டது.
களும் 4,740 பேல்களை தேசிய கைத்தறி சங்கங்
கழகமும் மற்றும் 2,947 பேல்களை தனிப்பட்ட அபிவிருத்தி
லாளிகள் சங்கங்களும் பெற்றுள்ளன. 18 தறி முத
390 ரிஸ் பிரேம்கள் வரி வடிவமைக்கப்பட்டு நூற்பாலைகளில்
வாளர்களுக்கு நூல் அளிக்கும் முறையில் கைத்தறி நெச
பட்டுள்ளது. இது போன்ற தனியார் சீரமைப்பு செய்யப்
முறைபடுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நெசவாளர் பிரிவிற்கும்,

## 10. தள்ளுபடி சிறந்த விற்பனை திட்டம் :

15. கடந்த 35 வருட காலமாக ஒப்பந்த
களுக்கு உட்பட்டு கைத்தறி துணியின் நிபந்தனை
விற்பனையில் பல்வேறு வகையில் மொத்த சில்லறை
மான்ய திட்டம் செயல்பட்டு வெவ்வேறு நிலையில் தள்ளுபடி
பின் கீழ் உள்ள கைத்தறி வந்தது. கூட்டுறவு அமைப்
உற்பத்தியாகும் பிரிவின் துணிகளை ஆலை பிரிவில்
வதற்காக துணிகளின் விற்பனையைவிட அதிகப்படு
மாநில அளவிற்கு ஆலைகளிலிருந்து பெறப்பட்ட தீர்வை தொகையை
படி மான்ய அளித்து கைத்தறி துணிகளை விற்க தள்ளு
பின்னரே திட்டத்தை மைய அரசு அறிமுகப்படுத்தியது.
மாநில அரசுக்கு இந்திய அரசின் தீர்வை தொகை ஒதுக்கீடு திட்டம்
அளிக்கும் ஒட்டு மொத்த மானியத் தொகையாக
மான்ய திட்டத்தின் மூலம் மாற்றப்பட்டபின் தள்ளுபடி
ஒதுக்கீடு திட்டத்தை தொடர்ந்து வரவு-செலவுத் திட்டத்தில்
செய்து திட்டமிட்டு செயல்படுத்தி வந்தது.



16. தள்ளுபடி மான்ய திட்டத்திற்கு பதிலாக "விற்பனை முன்னேற்ற உதவித் தொகை" என்ற திட்டத்தை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கும் வகையில் மைய அரசு 1—4—1989 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த உதவித் தொகை மைய அரசின் சில மாற்று திட்டங்களின் அடிப்படையில் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கப்படவுள்ளது.

17. ஆனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வருடத்தில் 60 நாட்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடி மான்யம் தொடர்ந்து வழங்கவேண்டுமென கோரி வருகிறது. தற்போது 30 நாட்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி தொகையை 60 நாட்களுக்கு வழங்கப்பட வேண்டுமென ஒவ்வொரு காலத்திலும் இந்த முக்கிய பிரச்சினையை மீண்டும் மீண்டும் அரசு வற்புறுத்தி வருகின்றது காலந்தோறும் தேங்குகின்ற கைத்தறி துணிகளை பார்க்கின்றபோது உடனடி தீர்வு தள்ளுபடி மான்யம் அளிப்பது தான். குறைந்த தள்ளுபடி காலத்தில் இந்த தேக்கத்தை தீர்க்க இயலாது. தள்ளுபடிக்கு எதிராக பல கருத்துக்கள் இருந்தாலும் தேங்கிய துணிகளை தீர்க்க மாற்று விதி கண்டுபிடிக்கும் வரை இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க இந்த தள்ளுபடி திட்டம் தொடர்ந்திருக்க அவசியமாகின்றது. 1970-ல் இந்த தள்ளுபடி திட்டம் 90 நாட்களுக்கு இருந்தது பின் 60 நாட்களாகி மீண்டும் 45 நாட்களாக குறைந்துள்ளது.

1986 ஆம் ஆண்டு முதல் இது மேலும் 30 நாட்களாக குறைக்கப்பட்டது. மாநில அரசு தள்ளுபடி காலத்தை அதிகரிக்க எண்ணியுள்ளதோடு மைய அரசிற்கும் விற்பனை முனனேற்ற உதவித் தொகையை எளிதாக வழங்க கோரியுள்ளது.

**தள்ளுபடி மான்ய தொகையை வழங்குதல்:**

18. 1988-89-ஆம் ஆண்டு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கோவாப்டெக்ஸ்க்கும் ரூ. 28.72 கோடி அளவில் தள்ளுபடி மான்ய தொகையை அரசு அளித்துள்ளது. இதில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கை ஆகஸ்டு 1987 வரையிலும் கோவாப்டெக்ஸ் கோரிக்கை மாநில அரசு பங்கு 30—9—1987 வரையிலும் மற்றும் மைய அரசின் பங்கு பொங்கல் 1987 வரையிலும் முழுவதுமாக அளிக்கப்பட்டுள்ளது.

19. பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் 1987-88, 1988-89 ஆண்டுகளுக்கான கோரிக்கையின் தொகை 31—3—1989-ல் ரூ. 2,635.34 லட்சம் என்ற அளவில் நிலுவையாக உள்ளது கோவாப்டெக்ஸ் பொறுத்த வரை ரூ. 903.32 இலட்சங்கள் நிலுவையாக உள்ளது.

[1989 ஏப்ரல் 24

20. இத்திட்டத்திற்கு 1989-1990 வரவு-செலவு திட்டத் தில் ரூ. 15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வரவு-செலவு திட்ட உரையில் 30—6—1989-க்குள் ரூ. 26.15 கோடித் தொகையை அளிப்ப தாக தெரிவித்துள்ளார்.

அரசு அளிக்க வேண்டிய தொகையில் ஒரு பகுதியாக ரூ. 3.75 கோடி (ரூ. 2.33 கோடி கோவாப்டெக்ஸ் மற்றும் ரூ. 1.42 கோடி பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம்) நிலுவையிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் கோவாப்டெக்ஸின் தள்ளுபடி மான்ய கோரிக்கை களுக்காக வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ரூ. 22.40 கோடி மூன்று தவணைகளில் அளிக்கப்பட உள்ளது இருப்பினும் நிலுவையிலுள்ள தள்ளுபடி மான்யக் கோரிக்கைகள் பின் வருமாறு :—

**பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் :**

| வருடம். | | தொகை. (ரூபாய் இலட்சத்தில). |
|---|---|---|
| (1) | | (2) |
| 1987—88 | .. | 969.15 |
| 1988—89 | .. | 1,524.19 |
| | மொத்தம் | 2,493.34 |

**கோவாப்டெக்ஸ் :**

| வருடம். | | | மாநில அரசு. | மைய அரசு. | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| (1) | | | (2) | (3) | (4) |
| 1986—87 | .. | .. | 3.58 | .. | 3.58 |
| 1987—88 | .. | .. | .. | 532.80 | 532.80 |
| 1988—89 | .. | .. | 66.97 | 66.97 | 133.94 |
| | | | 70.55 | 599.77 | 670.32 |

எனவே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கும். கோவாப்டெக்ஸிற்கும் மொத்த தொகையாக ரூ. 3163 66 இலட்சங்களை அரசு வழங்க வேண்டியுள்ளது. இந்த தொகையை பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கும், கோவாப்டெக்ஸுக்கும் விரைந்து வழங்குவது இந்த அரசின் நோக்கமாகும்.



1989 ஏப்ரல் 24]

**11. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு கைத்தறி சேலை வேஷ்டி இலவசமாக வழங்கும் திட்டம்.**

21. உணவு மற்றும் உடை ஆகிய இரண்டும் ஏழை மனித னுக்கு முக்கிய தேவையாகும். நாட்டில் முதல் முறையாக 1989-90 ஆம் ஆண்டு தமிழக அரசு 50 இலட்சம் ஏழைமக்க ளுக்கு ரூ. 27.20 கோடி அளவில் இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் இரண்டு குறிக்கோள்கள் பின்வருமாறு:

(அ) வறுமை கோட்டின் கீழ் வாழும் ஒரு கோடி மக்களுக்கு இலவசமாக துணிகள் வழங்குவது.

(ஆ) ஒரு லட்சம் ஏழை நெசவாளர் குடும்பங்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தல்.

ஒரு கைத்தறி சேலை மற்றும் ஒரு வேஷ்டியின் ஒரு மொத்த விலை முறையே ரூ. 50-ம் ரூ. 39.50-ம் ஆகும் இதில் மைய அரசு ஒரு சேலைக்கு ரூ. 17.50-ம் வேஷ்டிக்கு ரூ. 12.00-ம் மான்யமாக அளிப்பதால் ஒரு ஜோடியின் நிகர விலை ரூ. 60 ஆகும்.

இந்த திட்டம் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் செயல்படுத்தப்படும். கோஆப்டெக்ஸ் கைத்தறி சேலை மற்றும் வேட்டிகளை பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங் களிடமிருந்து பெற்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வழங்கும். மாவட்ட ஆட்சியர் பயனடைவோரை தேர்ந்தெடுத்து இந்த திட்டத்தின்படி சேலைகளையும் வேஷ்டிகளையும் வழங்குவார்.

**12. ஜனதா துணி :**

22. ஜனதா ரகத் துணிகளை தமிழ் நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலமும், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமும் நலிந்த பிரிவினருக்கு வழங்கும் பொறுப்பு கோ-ஆப்டெக்சிடம் அளிக்கப்பட்டுள்ளது.

சுமார் 500 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 35,000 கைத்தறிகள் மூலம் இந்த ரகங்களை உற்பத்தி செய்கின்றன. இதற்கு தேவையான நூல்களை எவ்வித கஷ்டமுமின்றி 18 கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கி வருகின்றன. 1988-89 ம் ஆண்டிற்கு 40 மில்லியன் சதுர மீட்டர் குறியிடு நிர்ணயிக்கப் பட்டது. 22 மில்லியன் சதுர மீட்டர் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. ஜனதா ரக துணிகளின் உற்பத்தியை செம்மைபடுத்துவது அரசின் குறிக்

கோளாக உள்ளது. ஆகவே வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் 50 இலட்சம் ஏழை மக்களின் குடும்பங்களுக்கு இலவசமாக துணிகளை வழங்கும் திட்டத்தின் மூலம் ஜனதா ரகத் துணிகளின் உற்பத்தி கணிசமாக உயரும்.

எனவே, 1989-90 ஆண்டிற்கு ஜனதா ரக துணிகளின் உற்பத்திக்கு 75 மில்லியன் சதுர மீட்டர் அளவில் கோ-ஆப்டெக்ஸ்க்கு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் ரூ. 19 கோடி மான்யமாக பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**13. கைத்தறி துணிகளின் ஏற்றுமதி :**

23. தமிழ்நாட்டில், கைத்தறி தொழிலில், ஏற்றுமதிக்கென வண்ணம் மாறும் துணிகள் (Bleeding Madras checks) குறிஞ்சிப்பாடி லுங்கிகள், ரியல் மெட்ராஸ் கைத்துண்டுகள், காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள், டெரி டவல் (Terry Towels) கரூர்-ஈரோடு படுக்கை விரிப்புகள் மற்றும் இல்ல அலங்கார துணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 516.21 கோடி மதிப்புள்ள, கைத்தறித் துணி ஏற்றுமதியில், தமிழ்நாடு மட்டும் ரூ. 80 கோடி மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி செய்துள்ளது. தற்போது ஏற்றுமதியாளர்கள், வெளிநாட்டு சந்தையில் பெரும் நெருக்கடி நிலையை சந்திக்கின்றார்கள். இப்போது, அமெரிக்காவில், இயந்திரத்தால் தைக்கப்படும் துணிகளுக்கு வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளது. இது, ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, மாண்புமிகு கைத்தறி அமைச்சர், மாண்புமிகு மத்திய துணிகள் அமைச்சர், அவர்களுக்கு தெரிவித்தார்.

பஞ்சு மற்றும் சிட்ட நூல் ஆகிய மூலப் பொருட்கள், ஏற்றுமதிக்குப் பதிலாக, மதிப்பு மிக்க ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்ய நம் அரசு முற்பட்டுள்ளது. இது அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டுவதோடு வேலை வாய்ப்பையும் பெருக்கும்.

அரசு, ஏற்றுமதியாளர்களுக்கு தேவையான உதவியை, பரிசு மற்றும் ஊக்குவிப்பு மூலம் அளிக்கும்.

**14. மாநில அளவு கைத்தறி ஆலோசனைக் குழு :**

24. மாநில அளவு கைத்தறி ஆலோசனைக் குழு அமைப்பதாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் வரவு-செலவுத்திட்ட உரையில் கூறியுள்ளார். இந்தக் குழு கைத்தறி தொழிலைக் காத்தும், ஊக்குவித்தும், அதனுடைய வளர்ச்சி, உற்பத்தி, கடன் ஒதுக்கீடு, வியாபார விஷயங்கள், கைத்தறி நெசவாளர்களுக்கான நலத் திட்டங்களை கவனிக்கும். இக்குழுவில், பட்டு, பஞ்சு மற்றும் செயற்கைப் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க தொழில் நாட்பாளர்கள், இடம் பெற்றிருப்பார்கள். மாண்புமிகு கைத்தறி அமைச்சரின் தலைமையில் ,ஏற்றுமதி மற்றும் அனுபவப்பட்ட கூட்டுறவுகள் அமைக்கப்படும்.



**15. நலத் திட்டங்கள் :**

**(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் காப்பீடு திட்டங்கள் :**

25. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் காப்பீடு திட்டம் எனும் திட்டம், கைத்தறி நெசவாளர்கள் நலனுக்கென, தமிழ்நாடு கூட்டுறவு எல்லைக்குள் இயங்குகிறது. இதுவரை 1,30,210 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தில் சேரும் நெசவாளர்கள், தன்னுடைய சம்பாத்தியத்தில் ரூபாய்க்கு ஆறு காசுகள் ; அரசு மூன்று காசுகள் என்ற விகிதத்தில் செலுத்த வேண்டும். பெருகும் இந்தத் தொகைக்கு, அரசு 7 சதவிகிதம் வட்டி ஆண்டுக்கு அளிக்கிறது. இவ்வட்டி நபர்களின் கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது. அவர்களின், வயதான காலத்தில் (55 வயது) வட்டி சேர்த்த மொத்தத் தொகை அளிக்கப்படுகிறது. நெசவாளர்கள் இறந்து விட்டால், இத்திட்டத்தின் கீழ் அவர் குறிப்பிட்ட நபருக்கு ரூ. 5,000 காப்பீட்டுத் தொகையாக, ஆயுள் காப்பீட்டு கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ், அவரின் சேமிப்புத் தொகைக்கு கூடுதலாக அளிக்கிறது. ஒரு நெசவாளர் 20 வயதில் சேர்ந்து, 55 வயதுவரை தடையில்லாமல் செலுத்தினால், ரூபாய் 30,000 வரை சேரும். 1988-89 ஆம் ஆண்டு ரூபாய் 174.28 லட்சம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு சந்தாவாகவும், 3 சதவிகிதம் அரசு பங்காகவும், 7 சதவிகிதம் வட்டியாகவும், செலவு செய்யப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டு 15,000 புதிய நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, மொத்த செலவாக ரூபாய் 215.02 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) மத்திய சிக்கனநிதி திட்டம் :**

26. 1985—86 முதல், மத்திய அரசு, '' மத்திய சிக்கன நிதி திட்டம் '' என்னும் ஒரு புதிய திட்டம் தொடங்கியுள்ளது. மத்திய சேமிப்பு திட்டம் போலவே மத்தியத் திட்டமும், மானியமாக ரூபாய்க்கு மூன்று காசுகள் என்ற விகிதத்தில், அதிகபட்ச தொகையாக ஆண்டுக்கு ஒரு நபருக்கு ரூ. 90 அளிக்கிறது. மத்திய உதவியாக, எல்லா நெசவாளருக்கும் சேமிப்பு மற்றும் காப்பீட்டு திட்டத்தில் அவர்அளித்த தொகைக்கு ஏற்றவாறு செலுத்துகிறது.

1988-89 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூபாய் 49.57 லட்சம் வழங்கியது. 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 66.10 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**16. கைத்தறி நெசவாளர்கள் வீடு மற்றும் தொழிற் கூடத் திட்டம்.**

27. 1962 வரை 2,683 வீடுகள், 35 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது. சீனர்களின் ஆக்கிரமிப்பின் போது, பணம் பற்றாக் குறைவானபோது இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டம், ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் போது புதுப்பிக்கப்பட்டது. 3,027 வீடுகள் 44 சங்கங்கள் மூலமாக, 1985-86 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்டது. இதுவரை 5,710 வீடுகள், 79 சங்கங்கள் மூலமாக கட்டப்பட்டுள்ளது.

1985-86 முதல், மாநிலத்தில் ''நகர வீடுகள் மற்றும் தொழிற்கூடம் கட்ட, புதிய துணி திட்டம்'', 1985-ன் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வீடு மற்றும் தொழிற்கூடம் கட்ட ரூபாய் 15,000 செலவாகும். இப்பணம் கீழ்க்கண்டவாறு கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1. HUDCO கடன் .. | .. | ரூ. 10,000 |
| 2. மாநில அரசு மானியம் | .. | ரூ. 2,500 |
| 3. மத்திய அரசு மானியம் | .. | ரூ. 2,500 |
| மொத்தம் | .. | ரூ. 15,000 |

1985-86 முதல் 2,337 வீடுகள் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1,535 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 802 வீடுகள் பல்வேறு நிலைகளில் உள்ளது.

1988-89 ஆம் ஆண்டில் 2,000 வீடுகள்,20 கூட்டுறவு சங்கங்க்கள் மூலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2,000 வீடுகளில் HUDCO ரூ. 208.96 இலட்சம் 1,890 வீடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசும்,மாநில அரசும் தலா ரூ. 47.25 இலட்சம் அளிக்கிறது. 1989-90 ஆம் ஆண்டில், அரசு எல்லா வீடுகளையும் கட்டிவிட்டு புதிதாக 2,500 வீடுகள் ரூ. 375 இலட்சம் செலவில் கட்டவுள்ளது. இதில் HUDCO கடனாக, ரூ. 250 இலட்சம் மற்றும் மானியமாக ரூ. 125 லட்சம் சமமாக மத்திய அரசும், மாநில அரசும் அளிக்கும். இதற்கு 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





**17. கைத்தறி நெசவாளர்கள் குழந்தைகள் மேற்படிப்பு உதவி :**

28. பிப்ரவரி 1986 ஆம் ஆண்டு, அரசு ஒரு நெசவாளர் நல அறக்கட்டளை ஆரம்பிக்க உத்தரவிட்டு இதில் மேற்படிப்பிற்கு உதவித் தொகை அளித்து வருகிறது. இவ்வறக்கட்டளை, புதிய வடிவமைப்பு அமைப்பதற்கு உள்ளூர் சந்தை மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பரிசு அளிக்கிறது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அவர்கள் கட்டிய பணம் பெறும் வட்டித் தொகை மூலமாகவும் பொது நல பணம் மூலமாகவும் இப்பரிசை அளிக்கிறது. நெசவாளர் சங்கங்கள் தங்களுடைய பொதுநல பணத்திலிருந்து ரூ.6.50 இலட்சம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் கட்டப்பட்டுள்ளது. இப்பணத்திற்கான வட்டி மேற்கூறியவைகளுக்காக பயன்படுத்தப் படுகிறது. 1988-89 ஆம் ஆண்டில் 12 மாணவர்களுக்கு மொத்தமாக ரூ.17,000 உதவி அளிக்கப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 24,500, 17 மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**18. சீருடை துணி வழங்கல் :**

29. முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தின் கீழ் வகுப்பு 1 முதல் 8 வரை பயனடையும் மாணவர்களுக்கு இலவச சீருடை கொடுக்கப்படுகிறது. இதனால் 33 இலட்சம் மாணவர்கள், 27 இலட்சம் மாணவியர்கள் பயன் பெறுகிறார்கள். ஆதி திராவிடர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு இச்சலுகை அளிக்கப்படுகிறது. இதற்கான துணி வகைகளான காக்கித் துணி, நீலத்துணி, சலவை செய்யப்பட்ட வெள்ளை சட்டைத் துணி, தாவணி, புடவைகள் ஆகியவற்றை சேகரிக்கும் பொறுப்பு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு துணிநூல் கழகம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு மற்றும் பின்னி நிறுவனம் இதற்கான துணிகளை வழங்குகிறார்கள். இத்துணிகள் முழுதும் கூட்டுறவு மற்றும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றவை அலல. தற்போது, அரசு, கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்களிலிருந்து இத்துணிகளை வாங்க உத்தேசித்துள்ளது. இதனால் 60 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

**19. தீவிர கைத்தறி அபிவிருத்தி/ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்கள் :**

30. கைத்தறி நெசவாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் அவர்களின் வறுமையைப் போக்கவும், காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நான்கு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்கள், மற்றும் கரூர் குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களும், கைத்தறி துணி உற்பத்தி செய்வதற்கு ஏற்ற எல்லா உற்பத்தி வசதிகளைக் கொண்டு, அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆறு திட்டங்களிலும், தறிகள் எண்ணிக்கை, திட்டச் செலவு, தற்போதைய மற்றும் உத்தேசிக்கப்பட்ட வருடாந்திர உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | தறிகளின் எண்ணிக்கை 31-3-1989 முடிய. | திட்டச் செலவு. | உற்பத்தி 1988-89. | விற்பனை 1988-89. | குறியீடு 1989-90: உற்பத்தி. | குறியீடு 1989-90: விற்பனை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | (இலட்சம் மீட்டரில்) | | | |
| 1. காஞ்சிபுரம் .. | 4,140 | 79.45 | 15.73 | 15.05 | 16.50 | 18.00 |
| 2. ஈரோடு .. | 986 | 105.80 | 15.88 | 14.20 | 18.00 | 20.00 |
| 3. சேலம் .. | 3,700 | 55.49 | 12.82 | 13.55 | 14.30 | 15.50 |
| 4. மதுரை .. | 3,613 | 61.85 | 17.23 | 17.80 | 32.20 | 34.00 |
| 5. கரூர் .. | 1,000 | 40.75 | 13.11 | 10.51 | 13.50 | 14.50 |
| 6. குறிஞ்சிப்பாடி .. | 1,529 | 32.12 | 5.40 | 8.07 | 5.50 | 6.00 |
| மொத்தம் .. | 14,968 | 375.46 | 80.17 | 79.18 | 100.00 | 108.00 |



31. தறிகளை நவீனப்படுத்துதல், நெசவாளர் உறுப்பினர்களுக்கு நவீன முறையில் உற்பத்தி செய்ய பயிற்சி அளித்தல் ஆகியவை இத்திட்டங்களின் அடிப்படை நோக்கங்கள் ஆகும். உற்பத்தித் திறனை பெருக்கியும், நவீன முறை உற்பத்தியைக் கடைப்பிடித்தும், தறியிடும்முன் பதனிட்டும், பதனிடுதல் மற்றும் நெசவுக்கு இடையேயான கால இடைவெளியைப் போக்குவதும், இத்திட்டத்தில் அடங்கும். உபயோகிப்பவர்களின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் உற்பத்தியில் ரக மாற்றத்தை புகுத்தியும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. நிரந்தர மார்க்கெட்டைப் பெறுவதற்காக, சரக்கிருப்புத் தேக்கம் கையிருப்பினைக் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, காஞ்சிபுரம் மற்றும் சேலம் திட்டங்கள் விலை போகாத லுங்கி— தறிகளிலிருந்து, விலைபோகும் காஞ்சி பருத்தி புடவைகளுக்கு மாற்றியுள்ளன. ஈரோடு திட்டம் சணல் கலந்த அலங்கார துணிகளை அறிமுகப்படுத்தியது. கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி திட்டங்கள் ஏற்றுமதிக்கான பட்டுத் துணியை உற்பத்தி செய்கிறது. மதுரை திட்டம், ஏற்றுமதிக்காக மிகப் பெரிய துண்டுகள் உற்பத்தி செய்கிறது. தற்போது, கரூர் திட்டம், தலையணை துணிகளை, பருத்தி மற்றும் செயற்கை இழை கொண்டு உற்பத்தி செய்கிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைப் போல் ஈரோடு திட்டம்— கோவை பருத்தி சேலைகள் உற்பத்தி செய்கின்றது. மேற்குறிப்பிட்ட முறையில், உற்பத்தியை அதிகரித்து வருடம் முழுவதும் தொடர்ந்தாற்போல் வேலையும், கூலி உயர்வும் கிடைக்க வழிவகை செய்துள்ளது.

20. கைத்தறி பதனிடுகல் :

32. கைத்தறி துணிகளை பதனிடுவது வாங்குபவர் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ப அமைந்துள்ளது. ஆனால், பதனிடுவதற்கு போதுமான வசதிகள் இல்லை. கைத்தறி தொழில், பதிவுபெற்ற நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவில் இல்லாத நிறுவனங்களிடம் கூட இந்த வசதி கிடையாது. அதனால் இவ்வசதிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள், வசதிகளைப் பெருக்குவதற்கு, போதுமான நிதியை அளித்துள்ளது. ஆனால், இத்தொழிற்சாலைகள் பெரும் நட்டத்திலும், எதிர்பார்த்த அளவுக்கும் இல்லை.

33. சாயம் போடுதல் மற்றும் பதனிடுதல் போன்ற வேலைகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் கைத்தறி ஆலைகள் உற்பத்தி செய்யும் துணிகளுக்கு அளிப்பதற்கு தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, 1973 ஆம் ஆண்டு தொடங்கியுள்ளது. இது கூட்டுறவு அமைப்பின் கீழ் இயங்கியது. இது 320 பேருக்கு வேலை வாய்ப்பளித்து, பல்வேறு பதனிடும் தொழிலான வெளிர்த்தல், சாயமிடுதல், அச்சு மற்றும் பருத்தி சாயமிடுதல் மற்றும் பாலியஸ்டர் துணி பதனிடுதல் தொழில்களை செய்கிறது. இவ்வாலை, அபிவிருத்தி மற்றும் நவீனப்படுத்துதல் ஆகிய எல்லா தொழில்களை முடித்துவிட்டது.

34. இதற்கு மேலும் நம் அரசு பவானிசாகரில் ஒரு பதனிடு சாலை ஒன்று ரூ. 403.65 இலட்சம் செலவில் கட்ட உத்தேசித்துள்ளது. இதற்கான நிதி உதவி, சிறப்பு மைய நிதியின் கீழ் வருகிறது. இந்த ஆலை ஆதி-திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நலத்துற்காக கட்டப்பட்டது. இவ்வாலை 300 பேருக்கு வேலை வாய்ப்பளித்து நன்மை அளிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் 1989—90ஆம் வருடம் இயங்கும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு பதனிடு ஆலை, ஈரோடு-இன் நிதி மற்றும் உற்பத்தி பணி, 1986—87, 1987—88, 1988—89 ஆகிய வருடத்திற்கான விவரம் :—

செயல்பாடு.
(இலட்சத்தில்)

| | 1986-87. | 1987-88. | 1988-89. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (கிலோ) | (கிலோ) | (கிலோ) |
| 1. வெளுப்பாக்குதல் .. | 17.43 | 20.57 | 14.31 |
| 2. சாயமிடுதல் .. | 11.43 | 12.08 | 10.26 |
| | (மீட்டர்) | (மீட்டர்) | (மீட்டர்) |
| 3. அச்சிடுதல் .. | 10.10 | 17.29 | 9.20 |
| | (கிலோ) | (கிலோ) | (கிலோ) |
| நூல் சாயமிடுதல் .. | 1.71 | 2.37 | 2.57 |

நிதி பற்றியது :

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| வியாபார வருமானம் .. | 265.00 | 269.13 | 270.04 |
| மொத்த லாபம் .. | 57.90 | 57.65 | 58.74 |
| நிகர லாபம் .. .. | 27.35 | 26.93 | 41.73 |



21. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்).

35. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், பிரபலமாக '' கோ-ஆப்டெக்ஸ் '' என்று அழைக்கப்படும் நிறுவனம், கைத்தறித் துணிகளை பல வருடமாக விற்பனை செய்கிறது. இந்நிறுவனம் 500 காட்சி அறைகள் கொண்டு 450வகை கைத்தறி ஆடைகள் விற்பனை செய்து, மிகப்பெரிய அளவில் ரூ. 100 கோடி ஈட்டியுள்ளது. எல்லா பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸுடன் சேர்க்கப்பட்டுள்ளது. எல்லா பொருள்களும் கைதேர்ந்த நெசவாளர்களால் தயாரிக்கப்படுகிறது. கோ-ஆப்டெக்ஸ், நெசவாளர்களுக்கு உதவி செய்து அதற்காக நிதி மற்றும் உற்பத்தி வசதிகளை செய்து, வாங்குபவர்களுக்கு சிறந்த கைத்தறித் துணிகளை நியாயவிலையில் பெற்றுத்தருகிறது. கோ-ஆப்டெக்ஸ் ஏழைகளுக்காக ஜனதா புடவைகள், நடுத்தர மற்றும் வேலைக்குப் போகும் பெண்களுக்காக நியாயவிலை பருத்திப்புடவைகள், செல்வந்தர்களுக்கு கனம் மற்றும் லேசான பட்டுப் புடவைகள் உற்பத்தி செய்கிறது. இது ரூ. 0.84 இலட்சம் மதிப்புள்ள துணிகளை 1988-ன் போது ஏற்றுமதி செய்தது.

36. கைத்தறி துறையில், பொருள் அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்பம் பெருக்க, கோ-ஆப்டெக்ஸ் 5 டிசைன் மற்றும் சேவை நிலையம் மதுரை, திருச்சி, சேலம், கோவை, கடையநல்லூர் ஆகிய இடங்களில் நெசவாளர்களின் வசதிக்காக தொடங்கியது. இந்நிலையங்கள் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு புதிய டிசைன்களை வரையும். கூட்டுறவு நிறுவனங்கள் இந்த டிசைன்களை உபயோகித்து உற்பத்தி செய்யும். கோ-ஆப்டெக்ஸ், தொழில் நுட்பம் மற்றும் அபிவிருத்தி நிலையம், அதனுடைய தலைமை செயலகத்தில் தொடங்கியுள்ளது. வாடிக்கையாளர்களை கவருவதற்காகவும், விற்பனையைப் பெருக்கவும், கோ-ஆப்டெக்ஸ் பெரிய அளவில் உத்தேசித்துள்ளது. நவீனப்படுத்துதல் மற்றும் காட்சி அறையைப்பெருக்க அது ஊக்குவித்தது.

**கோ-ஆப்டெக்ஸின் விற்பனை உள்ளமைப்பு :**

37. 1989-90ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் 6 கிடங்குகளை திருநெல்வேலி, மதுரை, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் ரூ. 241.24 இலட்சம் மொத்த செலவில் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழக நிதியுதவியுடன் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. இதைத்தவிர தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கமானது தனது 52 விற்பனைக் கூடங்களை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் நிதியுதவியுடன் ரூ. 92.97 இலட்சம் செலவில் நவீனப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் விருதாசலத்தில் ரூ. 7.50 இலட்சம் செலவில் விற்பனைக் கூடம்

அமைப்பதற்கு நிதியுதவி பெற்றுள்ளது. மேலும் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கமானது தேசிய கூட்டுறவு அபிவிருந்திக் கழகத்தின் நிதியுதவியுடன், ரூ. 38.50 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடம் ஒன்று கோவா வில் வைத்துள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கமானது ரூ. 200 இலட்சம் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் மூலம் பங்கு மூலதனம் பெற உத்தேசித்துள்ளது. பட்டுக்கென இரண்டு விற்பனைக் கூடங்கள் சென்னையிலும், பெங்களூரிலும் உள்ளன. இதன் முடிவுகளும் ஊக்குவிப்பதாக உள்ளது.

ஒரு விற்பனைக் கூடம் பிரத்யேகமாக உள்நாட்டு ரகங்களுக்கு சமீபத்தில் சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு கைத்தறி அபிவிருத்திக் கழகம் :

38. தமிழ்நாடு கைத்தறி அபிவிருத்திக் கழகம், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், சார்புத் தொழில் களுக்கும் தொடர்ந்து கடன் வசதி அளித்து வருகிறது. 1988—89-ல் கழகம் தனியார் துறையில் உள்ள 2,906 கைத்தறி நெசவா ளர்களுக்கு ரூ. 360.68 இலட்சம் வரை நடைமுறை மூலதனம் அளித்துள்ளது. (உற்பத்தி ரூ. 244.95 இலட்சம், விற்பனை 105 இலட்சம், மற்றும் இதர காரணங்களுக்கு ரூ. 10.73 இலட்சம்) நூல் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காலங்களில் கழகம் வெளிச் சந்தையில் நூல் வாங்கி தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் விநியோகிக்கிறது. 1988—89-ல் சுமார் 500 தனியார் பட்டு நெசவாளர்களுக்கு 2 மெட்ரிக் டன் ரூ. 14.50 இலட்சம் மதிப்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட கச்சா பட்டு விநியோகிக்க முடிந்தது. 1988—89-ல் கழகமானது தனது அங்கத்தினர்களிடமிருந்து தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கென சிறப்பு வடிவ காஞ்சி பருத்தி சேலை களும், உடுப்பு வகைகளும் பெறுவதற்கு தொடங்கியது. 1989 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதியில் ரூ. 7.78 இலட்சம் மதிப்புள்ள 29,500 மீட்டர் துணிகளை தமிழ்நாடு மாநில கைத்தறி நெச வாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விநியோகித்தது. இனிவரும் காலங்களிலும் சிறந்த முறையில் சாதனைகள் புரியும் என்ற கருத்து கழகத்திடம் உள்ளது.

1989—90ஆம் ஆண்டில் 3,000 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 400.00 இலட்சம் கடன் வசதி அளிக்கும். பருத்தி சிட்ட நூல் மற்றும் கச்சாப்பட்டு பெற்று விற்பனை செய்வதைத்தவிர சாயம் மற்றும் ரசாயன பொருள்களையும் இவ்வருடத்தில் இருந்து பெற்று விற்பனை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.



## 23. மூடப்பட்ட நூற்பாலைகளைத் திறத்தல் :

39. தமிழ் நாட்டில் 439 நெசவாலைகள் 71.49 இலட்சம் கதிர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இவற்றில் 24 நூற்பு மற்றும் நெசவு ஆலைகளும் அடங்கும். நெசவாலைத் தொழிலில் ஏறக்குறைய 2.2 இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். 1989ஆம் வருடம் ஜனவரி வரையில் 26 ஆலைகள் தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி, தவறான நிர்வாகம் இது போன்ற காரணங்களால் மூடப்பட்டு இருந்தன. மூடப்பட்ட நெசவாலை களில் சுமார் 10,691 தொழிலாளர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கும் புத்துயிர் அளிப்பதற் கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும் கண்டறிவதற்கும், தொழில் நுட்ப வல்லுநர், நிதியியல் வல்லுநர், தொழிலாளர் நலத் துறையின் பிரதிநிதிகள் மற்றும் தென்னிந்திய நெசவாலை ஆராய்ச்சிக் கழகம் (SITRA) இவர்களைக் கொண்ட ஒரு நிலைப்பு குழு அமைக்கப்பட்டது.

மூடப்பட்ட ஆலைகளின் உண்மை நிலை அறியவும் பரிகாரத் திற்குரிய சரியான ஆலோசனைகளை வழங்கவும் அரசு 'முத் தரப்புக் குழு' ஒன்றினை அமைத்தது. இக்குழுவில் தொழிலாளர் சார்பில் நான்கு பிரதிநிதிகளும், நிர்வாகம் மற்றும் அரசினை சார்ந்தவர்களும் அடங்குவர். நிலைப்புக் குழுவின் அறிக்கை மற்றும் முத்தரப்பு குழுவின் பரிந்துரையின் பேரில் நலி வுற்ற ஆலைகளுக்கு 3 வருடங்களுக்கு மின்வெட்டிலிருந்து விதி விலக்கு, விற்பனை வரி செலுத்துவதை 3 ஆண்டு களுக்கு தள்ளிப் போடுதல் ஆகிய சலுகைகளை அரசு வழங்கு கிறது. இச் சலுகைகளை பயன்படுத்தி 3 நெசவாலைகள், 1989 மார்ச் திங்களில் மீண்டும் திறக்கப்பட்டு, சுத்தம் செய்தல் போன்ற ஆயத்தப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

மற்றும் மூடப்பட்ட ஆலைகளை திறப்பதற்கும் புத்துயிர் அளிப்பதற்கும், பல கட்டங்களில் பேச்சு வார்த்தை நடை பெற்று வருகிறது. 16—2—1989 அன்று மாண்புமிகு கைத்தறி அமைச்சர், மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அரசு அதிகாரிகளுடன் ஆலைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடத்தினர். மீண்டும் 25—2—1989 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகளுடனும் மற்றும் தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகளுடனும் மூடப்பட்ட தொழிற்சாலைகளையும், நெசவாலைகளையும் திறப்பதற்கு பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் விளைவாக 13—3—1989 மற்றும் 14—3—1989 ஆகிய இரு தேதிகளில் மூடப்பட்ட நெச வாலைகளின் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடந்தது.

இதனையடுத்து 10—4—1989 அன்று மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட நெசவாலைகளின் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

1. ராம் டெக்ஸ்டைல்ஸ், கோவை.

2. அமராவதி டையிங், உடுமலைப்பேட்டை.

3. பவானி மில்ஸ், கோவை.

4. திருப்பூர் காட்டன் & ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்.

ராம் டெக்ஸ்டைல்ஸ், கோவை மற்றும் பவானி மில்ஸ் கோவை இவைகளின் நிர்வாகம் வெகு விரைவில் மூடிய ஆலைகளை திறக்க முன் வந்தனர்.

இதற்கிடையில் மூடப்பட்ட 17 ஆலைகளில் பாதிக்கப்பட்ட 10,336 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 250 வீதம் ரூ. 25,84,000 தொழிலாளர் நல நிதியிலிருந்து நிதி உதவி அரசு அளித்துள்ளது.

இப்பேச்சு வார்த்தைகளின் பயனாக வங்கிகள், மற்றும் தொழிலாளர்கள் தேவையான உதவிகளை அளிக்க முன் வந்துள்ளனர். இதன் விளைவாக சில ஆலைகள் விரைவில் திறக்கப் பட உள்ளன.

**24. கூட்டுறவு நூற்பாலைகள்.**

40. தமிழகத்தில் 1975ஆம் வருடம் (11—7—75)-ல் கைத்தறித் துறையில் சிட்ட நூல் விநியோகத்திற்கான நிலை அடிப்படை வசதி மற்றும் விலை நிர்ணயமும் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்டன. நூல் விலை நிர்ணய கமிட்டி நிறுவப் பட்டபோது இந்த முறை மிகுந்த பயன் உள்ளதாகவும், சிறந்ததாகவும் இருந்தது. கைத்தறித் துறையில், நியாயமான விலையில் நூல் விநியோகம் செய்ய வேண்டும் என்ற முக்கிய குறிக்கோளைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.59 இலட்சம் கதிர் திறன்களுடன் நிறுவப் பட்டன. இந்த கூட்டுறவு நூற்பாலைகள் மாதத்திற்கு 16,000 பேல் நூல்கள்(10 நெ. முதல் 100 நெ. முடிய) உற்பத்தி செய்கின்றன. இவை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பிலுள்ள பெரும்பாலான நெசவாளர்களின் தேவைகளை, நூல் விலை நிர்ணய கமிட்டி நிர்ணயம் செய்த நியாயமான விலையில் பூர்த்தி செய்கின்றன. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 13 கூட்டுறவு நூற்பாலைகள், மீசிரியோர் கூட்டுறவு நூற்பாலை உள்பட 1958 முதல் 1965 முடிய, நிறுவப்பட்டன. எஞ்சிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் 1984 ஆம் வருடத்தில் நிறுவப் பட்டன.





மத்திய அரசின், புதிய ஜவுளி கொள்கை (ஜூன் 1985-ல்) கூட்டுறவு அமைப்பில் புதிய கூட்டுறவு நூற்பாலைகளை, நிறுவ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்போதுள்ள கூட்டுறவு விற்பனைகளின் செயல் பாட்டினை வைத்து மேலும் புதிய கூட்டுறவு நூற்பாலைகளை திறப்பது குறித்து அரசு முடிவெடுக்கும்.

**நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மறுவாழ்வு.**

41. மாநிலத்திலுள்ள 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு தென் ஆற்காடு, திருவில்லிபுத்தூர், மதுரை, வட ஆற்காடு, தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரத்தில் 6 கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஜவுளித் துறையில் ஏற்பட்ட சரிவினாலும், உரிய காலத்தில் ஆலையின் எந்திரங்கள் நவீனபடுத்தப்படாமையினாலும் நலி வுற்றன. நலிவினின்று அவற்றினை மீட்பதற்கென அரசு, ஒரு மறுவாழ்வுக் குழுவினை அமைத்தது. இக்குழு அந்த ஆறு ஆலைகளை புத்துயிரூட்டவென சில பரிந்துரைகளைச் செய்தது. இக்குழுவின் பரிந்துரையின்படி, மின்வெட்டிலிருந்து மூன்று ஆண்டுகட்கு விலக்கு, விற்பனை வரி செலுத்துதலை மூன்று ஆண்டுகட்கு ஒத்தி வைத்தல், ஒவ்வொரு ஆலைக்கும் ரூ. 120 இலட்சத்தினின்று ரூ. 150 இலட்சம் வரை அரசு உத்தர வாதத்தை அதிகமாக்குதல் போன்ற சலுகைகளை அரசு இந்த நலிவுற்ற ஆலைகளுக்கு வழங்கியது. காசுக் கடன் வசதிக்காக ஆதாரக் குறைவினை ஈடுகட்டும் விதமாக அரசு ரூ. 900 இலட்சத்துக்கு உத்தரவாதம் வழங்கியது. நிதி உதவி அளித்த நிறுவனங்கள், கடன் திரும்பச் செலுத்தும் காலத்தை மாற்றி யமைத்தல், அபராத வட்டியை தள்ளுபடி செய்தல் போன்ற சலுகைகள் அளிக்க கோரப்பட்டன.

அரசு இந்த ஆலைகளின் நவீனப்படுத்துவதற்கான திட்டத் தினை இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் நிறை வேற்ற தீர்மானித்து வருகிறது.

42. முத்தானந்தலில் உள்ள 13,260 கதிர்களைக் கொண்ட சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலை 1978ஆம் வருடம் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு நடத்தி வரும் பழமையான ஆலை களில் ஒன்றாகும். இதனை கூட்டுறவு நூற்பு ஆலையாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இ. தொ. வ. வங்கியின் உதவியுடன் இந்த ஆலை விரைவில் நவீனப்படுத்தப் படும்.

**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் ( N.C.D.C.) மூலம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உதவி.**

43. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் ஆதார நிதி உதவித் திட்டத்தின் கீழ் 14 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ. 1,038.45 லட்சத்திற்கு கருத்துரு அனுப்பியுள்ளன. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் நிபந்தனையின்படி மாநில அரசு 100 சதவீதம் (50:50)ஆதாரநிதி கடனை பங்குத் தொகை யாகவோ அல்லது மானியமாகவோ அளித்து பின்னர் 50 சதவீத கடன் உதவியை தேசிய அபிவிருத்தி கழகம் மாநில அரசுக்கு ஈடு செய்யும். அரசு மூலம் அனுப்பப்பட்ட கருத்துருக்கள் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளன. 29—3—1989 அன்று தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகம் ஸ்ரீவில்லிபுத்தூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருச்சி ஆகிய நான்கு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ரூ. 155.21 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. தேசிய அபிவிருத்தி கழகம் தனது 50 சதவீதம் பங்குதொகை ரூ.77.60 இலட்சத்தினை 30-3-1989-ல் வழங்கியது.

44. தருமபுரி கூட்டுறவு நூற்பாலைக்கு தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழக உலக வங்கி கூட்டுறவு திட்டத்தின் கீழ் 2000 மெ. டன் கொள்ளளவு உள்ள கூடுதலான பருத்தி கிடங்கு ஒன்றை ரூ. 12.05 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. கிடங்கு

**25. விசைத் தறிகள்.**

45. மத்திய அரசு மாநில அரசுக்கென ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் வரை விசைத் தறிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகளின் எண்ணிக்கை, மத்திய அரசால் குறைந்த அளவு விசைத்தறிகள் ஒதுக்கீடு செய்வதன் காரணமாக, அதிகரித்துள்ளது. இந்த அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகள் 1986ஆம் ஆண்டின் துணி நூல் கட்டுப்பாட்டு ஆணையின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட விசைத்தறிகளைப் பதிவு செய்வதற்கான அதிகாரம் மாநில துணி நூல் அதிகாரி யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்). அதன்படி தமிழ்நாட்டில் உள்ள விசைத் தறி களுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் பதிவுச் சான் றிதழ் வழங்கி வருகின்றார். தனி நபர்கள் புதிய விசைத் தறிகளை நிறுவவும், அங்கீகரிக்கப்படாத விசைத் தறிகளை வைத்து கொண்டுள்ளவர்களும் சான்றிதழ்கள் பெற தறி களுக்கு பதிவு கட்டணம் ரூ. 250 செலுத்த வேண்டும். மத்திய அரசால் உரிமங்கள் வழங்கப்பட தற்போதுள்ள அங்கீகரிக்கப் பட்ட விசைத் தறிகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் இந்த உரிமங்கள் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டு அங்கீ கரிக்கப்பட்ட தறிகளுக்கான புதிய உரிமங்கள் பெறப்பட



வேண்டும் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் வழங்கப்பட்ட விசைத் தறி உரிமங்கள் 5 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் அதற்குபிறகு உரிமங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். தமிழக அரசு இதுவரை 1,73,040 விசைத் தறிகளை பதிவு செய்து சான்றிதழ் வழங்கியுள்ளது. அங்கீகரிக்கப் படாத விசைத் தறிகளின் எண்ணிக்கை ஒரளவுக்குக் குறைக்கப் பட்டுள்ளது. தமிழக அரசின் முக்கிய நோக்கமானது அங்கீ கரிக்கப்படாத விசைத் தறிகளை ஒழுங்குபடுத்துவதும், மேலும் விசைத் தறிகளைப் பதிவு செய்து மாநிலத்தில் சிறு தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதும் ஆகும். விசைத் தறியின் வளர்ச்சி எவ்விதத்திலும் கைத்தறி வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என்ற தனது நிலையை தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துகிறது. கைத்தறி ஒதுக்கீடு திட்டம் தீவிரமான முறையில் அமுல்படுத்தப்படும்.

**26. விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.**

46. மத்திய அரசு 5 விசைத் தறிகளுக்கு மிகாமல் விசைத் தறி உரிமங்களுடன் வைத்துள்ள உறுப்பினர்களை கொண்டு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஊக்குவிக்கின்றது. விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங் களுக்கு கடன் வசதி அளித்தல், விற்பனை பெருக்குதல், தொழில் நுட்பங்களை சிறந்த முறையில் செயல்படுத்துதல் இவையே மத்திய அரசின் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் உள்ள விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், மற்றும் சிறப்பு உள்ளடக்க திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி வசதி பெற்று ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 38 விசைத் தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் 3,167 விசைத் தறிகளுடன் 3,475 உறுப்பினர்களைத் கொண்டு கூட்டுறவு துறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் 14 விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றும் ரூ. 20 இலட்சம் மானியம் உள்ளடங்கிய ரூ. 27 இலட்சம் திட்ட மதிப்பில் 7 விசைத்தறி கூடங்கள் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் மூலம் முதலில் ஆரம்பிக்கப்பட்டு பிறகு விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமாக மாற்றப்பட்டு அதன் மூலம் ஆதி திராவிடர்கள் கணிசமான வருவாய் பெறுகின்றனர். தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தின் கீழ் இயங்கும் மீதமுள்ள மூன்று விசைத்தறி கூடங்களும் 1989-90-ல் கூட்டுறவு சங்கங் களாக மாற்றப்படும். ''நாபார்டு'' நிதியுதவி திட்டத்தின் கீழ் 16 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் ஆரம் பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர தமிழகத்தில் இயங்கும் விசை தறிகள் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு விசைத் தறி தொழில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. மேலும் 1989-90 ஆம் ஆண்டில் 25 விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்படுமென உத்தேசிக்கப்படுகிறது.

**27. கைத்தறி ரக ஒதுக்கீடு கொள்கை செயலாக்கப் பிரிவு நிறுவுதல்.**

47. கைத்தறிக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் மத்திய அரசு 1985ஆம் ஆண்டு கைத்தறி (ரக ஒதுக்கீடு) சட்டத்தின் கீழ் கைத்தறியில் மட்டும் உற்பத்தி செய்வதற்கென 22 ரகங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. விசைத் தறி பிரிவினைச் சேர்ந்த ப்ரதிநிதிகள் மற்றும் விசைத் தறி சங்கங்கள் கைத்தறி ரக ஒதுக்கீடு கட்டுப்பாட்டினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து நிறுத்த ஆணை பெற்றுள்ளது. இதே மாதிரி யான நிறுத்த ஆணைகள் இதர மாநிலங்களிலுள்ள நீதி மன்றங் களில் பெறப்பட்டுள்ளது. மத்திய அரசும் மாநில அரசும் இந்த நிறுத்த ஆணைகளை உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்வித்து அதற்கான தீர்வினை விரைவில் காண உள்ளன. உச்சநீதி மன்றம் மத்திய அரசின் மாற்ற மனுவினை ஏற்றுள்ளது. தமிழ்நாடு அரசைப் பொறுத்த மட்டில் இதுவரை ஏழு ரிட் மனுக்கள் உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில் மத்திய அரசு கைத்தறித் தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் கைத்தறி ரக ஒதுக்கீடு ஆணையை செயலாக்கும் செயலாக்கப் பிரிவினை புது டில்லியை தலைமையிடமாகக் கொண்டு, டில்லி, பூனா, கோயமுத்தூர் ஆகிய மூன்று இடங் களில் மண்டல அலுவலகங்கள் நிறுவியுள்ளது. இந்த வருடம் தமிழக அரசு விசைத் தறிகள் குவிந்துள்ள இடங்களைக் கிளை களாகக் கொண்டு விசைத் தறி செயலாக்கப் பிரிவு நிறுவி கைத்தறி ரக ஒதுக்கீடு திட்டத்தை செயல்படுத்த உத்தேசித் துள்ளது.

**28. விசைத் தறி கணக்கெடுப்பு.**

48. மத்திய அரசு மாநில அரசிற்கு விசைத் தறி கணக் கெடுப்பு நடத்துமாறு கோரியுள்ளது. கணக்கெடுப்பின் முக்கிய நோக்கம் விசைத் தறிகளின் எண்ணிக்கை, மாதிரி உற்பத்தி, தொழிலாளர்கள் நியமனம், விற்பனை முறை, நிதி வசதிகள், நெசவாளர்களின் வருவாய், உடைமை ஆகிய விவரங்களைச் சேகரிப்பதாகும். தமிழக அரசு தமிழ் நாட்டில் இக்கணக் கெடுப்பை கவனிப்பதற்கென பணியாளர்களை 1—4—1989 முதல் அனுமதித்துள்ளது.

**29. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்.**

49. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 1969 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் கம்பெனி சட்ட திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். இதில் ரூ. 154 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனமாகும். நலிந்த ஆலைகளை நிர்வகித்தல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு





வேண்டிய பஞ்சு மற்றும் இயந்திரங்களை வாங்குதல், விசைத்தறி கூடங்களை அமைத்து அவைகளை நடத்திச் செல்வது, விசைத் தறி கூட்டுறவு சங்கங்களுக்கு தொழில் நுட்ப உதவியும் பொரு ளாதார உதவியும் மற்றும் இவைகளால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை விற்பனை செய்தல் போன்ற சேவைகளை தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் செய்து வருகின்றது. சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை இக்கழகத்தால் நடத்தப் படுகிறது. இக்கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டு மொத்த நட்டமாகிய ரூ. 131.51 இலட்சத்தில் சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையின் நட்டமான ரூ.53.09 இலட்சமும் அடங்கும்.

**30. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் செயலாக்க முகவராகப் பணி யாற்றல்.**

50. 1989-90 ஆம் ஆண்டில் விசைத் தறியின் வளர்ச்சியினை ஒருங்கிணைந்து செயல்படுத்தும் செயலாக்க முகவராக பணி யாற்றும் பணி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் தனியார் பிரிவிலுள்ள விசைத் தறி தொழி லின் தேவைகளை இக்கழகம் கவனித்துக் கொள்ளும். தனிப் பட்ட சிறு விசைத் தறியாளர்களுக்கு தேவைப்பட்ட ஆதார மூலதனம், மற்றும் கடன் இவைகளை தறி ஒன்றுக்கு ரூ. 5,000 வீதம் வழங்கி பாவு, மற்றும் ஊடை நூல் இவைகளை கொள் முதல் செய்ய உதவி செய்யும். மேலும் இக்கழகம் பற்றாக்குறை நிதி, வியாபாரச் சந்தையில் மூலப்பொருள் மற்றும் உற்பத்தியில் ஏற்படும் விலை ஏற்றத் தாழ்வு ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து பிரச்சினைகளை தீர்க்கும். பெரிய விசைத் தறி முதலாளிகளிடமிருந்து சிறு விசைத் தறியாளர் கள் மீட்கப்படுவர். 1989-90-ல் விசைத் தறி பதிவு கட்டணத் தினால் வசூலாகும் நிதியினை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத் தினிடம் ஒப்படைத்து கூட்டுறவில் உள்ள விசைத்தறி சங்கங் களுக்கு தேவையான மூலப் பொருள், நடைமுறை மூலதனம், கடன் வசதி இவைகளை ஒருங்கிணைந்து வழங்க அரசு திட்ட மிட்டுள்ளது. பின்னர் இவ்வசதிகள் சிறு விசைத் தறியாளர் களுக்கும் வழங்கப்படும்.

**31. தமிழ்நாடு சரிகை ஆலை.**

51. தமிழ்நாடு சரிகை ஆலை 6-12-1971-ல் அரசு பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. 23-1-1974-லிருந்து உற்பத்தி செய்ய தொடங்கியது. ஆலையின் முக்கிய குறிக்கோள் தரமான சரிகையை உற்பத்தி செய்வதும், தமிழ்நாட்டில் செயல் பட்டு வரும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நியாய விலையில் அவற்றை விநியோகிப்பதும் ஆகும்.

ஆலையின் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 20.00 இலட்சமாகும். இது ரூ. 100 வீதம் 20,000 பங்குகளையுடையதாகும். அரசு இதுவரை செலுத்திய மூலதனம் ரூ. 13.20 இலட்சமாகும்.

அரசு 1988-89-க்கு 14,400 மார்க் சரிகை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. சரிகை தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருட்கள் வெள்ளி இழை, பட்டு நூல், தங்கம் ஆகிய மூன்றும் ஆகும். வெள்ளி இழை சூரத்திலிருந்து தருவிக்கப்படுகிறது. பட்டு நூல் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி துறையிலிருந்தும் கர்நாடக மாநிலத்திலிருந்தும் பெறப்படுகிறது. தங்கம் பம்பாயில் உள்ள தங்க கட்டுப்பாடு அலுவலரின் அனுமதி பெற்று கொள்முதல் செய்யப்பட வேண்டும். தங்கம் தாராளமாகக் கிடைக்க வாய்ப்பில்லை. தற்பொழுது தங்கக் கட்டுப்பாடு அலுவலரின் அனுமதியுடன் உற்பத்தியை பெருக்க 11 கிலோ 24 காரட், தங்கம் மாதா வைஷ்ணா தேவி கோவிலிலிருந்து ஜம்மு, காஷ்மீர் அரசு அனுமதியும் பெற்று அரசு நிதியுதவி மூலம் ரூ. 36 இலட்சம் வழிவகை முன்பணம் பெற்று கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. முக்கிய மூலப் பொருளான வெள்ளி இழையை காஞ்சியிலுள்ள சரிகை ஆலையிலேயே தயாரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான சரிகை உற்பத்தி செய்வதற்காக கும்பகோணம், ஆரணியில் சரிகை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் இது போன்று தனித் தனியாக சரிகை ஆலைகள் அமைப்பதைவிட காஞ்சியில் உள்ள சரிகை ஆலையையே விஸ்தரிப்பு செய்து சரிகை உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்ற கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

**சோதனைச் சாலை.**

பட்டு (மற்றும்) சரிகை சோதனை செய்ய ஒரு சோதனைச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், சூரத்திலிருந்து பெறப்பட்ட சரிகை இழைகளை சோதனை செய்யும்.

கடந்த 3 வருட உற்பத்தி (மற்றும்) விற்பனை:

| வருடம். | உற்பத்தி. (மார்க்) | விற்பனை | | நிகர லாபம்-நட்டம். |
|---|---|---|---|---|
| | | அளவு. (மார்க்குகளில்). | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்). | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1985-86 | 12,453 | 12,462 | 196.80 | +2.63 |
| 1986-87 | 11,775 | 14,417 | 168.34 | +1.80 |
| 1987-88 | 14,499 | 14,500 | 368.71 | +6.84 |



**32. முடிவுரை.**

52. இத்துறையின் 1984-85 முதல் 1988-89 வரையிலான வளர்ச்சியைக் காட்டும் அட்டவனை இணைக்கப்பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பு கைத்தறிகளுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் இருந்த சிறப்பினையும் மதிப்பையும் மீட்டுத் தருவதை முதன்மையாகக் கருதி கைத்தறிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை தடுத்தல், கைத்தறித் தொழிலின் விரைந்த வளர்ச்சிக்கு தேவையான அளவிற்கு மூலப் பொருள்களை அளித்தல், நிதி வசதி அளித்தல், அடிப்படையான வசதிகளை செய்து கொடுத்து விற்பனை வசதியை அதிகரித்தல் போன்றவற்றுடன் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கச் செய்து உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில் தறிகளை நவீனப்படுத்துதல் போன்றவற்றை இவ்வரசு செய்து வருகிறது. இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல் இந்த அரசின் நோக்கமாகும். அதே சமயம் ஜவுளித் தொழிலில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மூடப்பட்ட ஜவுளி ஆலைகளை திறத்தல், நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகட்கு மறுவாழ்வு அளித்து சீரமைத்தல் போன்றவற்றிற்குத் தேவையான நிதியுதவி, தொழில் நுட்ப உதவி அளிப்பதன் மூலம் அவற்றினை நன்முறையில் இயங்கச் செய்தலை முதன்மையாகக் கருதி இவ்வரசு முக்கியத்துவம் கொடுத்து செயல் படுத்தி வருகிறது. விசைத்தறி தொழிலும் ஒரு குறிப்பிடத் தக்க சிறு தொழிலாக வளர்ந்து தற்பொழுது துணி உற்பத்தியில் கைத்தறித் தொழிலுக்கும் ஆலைத் தொழிலுக்குமிடையே ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என்பதை இவ்வரசு கண்டறிந்துள்ளது. எனவே, கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காத வகையில் விசைத்தறி தொழிலின் மேம்பாட்டிற்கும் இவ்வரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கைத்தறித் தொழில், விசைத் தறி தொழில், ஆலைத் தொழில், மூன்றின் போட்டியைத் தவிர்த்து அவற்றுக்கு ஒருங்கிணைந்த வளர்ச்சியை அளிப்பதுடன் மக்களின் குறிப்பாக, மாநிலத்திலுள்ள ஏழை மக்களின் துணித் தேவையை பூர்த்தி செய்வதும், நாட்டின் துணி ஏற்றுமதியை முன்னேற்றுவித்தலும் இந்த அரசின் கொள்கையாகும்.

கைத்தறி மற்றும் துணி நூல் துறை— முன்னேற்றம் பற்றிய அறிக்கை.

| (1) | 1984-85. (2) | 1985-86. (3) | 1986-87. (4) | 1987-88. (5) | 1988-89. (6) |
|---|---|---|---|---|---|
| I. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்— | | | | | |
| (1) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 1,590 | 1,606 | 1,667 | 1,673 | 1,665 |
| (2) தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 3.75 | 3.82 | 3.92 | 3.97 | 2.58 |
| (3) உற்பத்தி (ரூபாய் கோடியில்)... | 157.36 | 162.47 | 174.31 | 193.24 | 203.68 |
| (4) விற்பனை (ரூபாய் கோடியில்)... | 155.29 | 182.43 | 169.94 | 209.15 | 216.00 |
| (5) நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 56.25 | 70.54 | 80.78 | 97.69 | 102.26 |
| II. கோ-ஆப்டெக்ஸ்— | | | | | |
| (1) கொள்முதல் (ரூபாய் கோடியில்) | 55.00 | 81.00 | 66.85 | 63.15 | 71.50 |
| (2) விற்பனை (ரூபாய் கோடியில்).. | 72.00 | 110.00 | 94.05 | 113.14 | 100.00 |
| (3) நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 70.00 | 70.00 | 75.00 | 75.00 | 78.50 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| III கூட்டுறவு நூற்பாலை— | | | | | |
| (1) கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) | 3.35 | 4.50 | 4.50 | 4.53 | 4.59 |
| (2) மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்.) | 3210.00 | 5215.00 | 5,215.00 | 5,215.00 | 5,215.00 |
| (3) உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்.) | 6,472.36 | 7,960.67 | 8,196.00 | 10,955.19 | 13,507.37 |
| (4) விற்பனை (ரூபாய் இலட்சத்தில்.) | 6,366.21 | 7,862.86 | 9,099.00 | 10,915.16 | 13,886.61 |
| (5) நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்.) .. | 1,389.00 | 1,048.00 | 2,157.00 | 2,285.00 | 2,285.00 |
| IV. தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலை, ஈரோடு.— | | | | | |
| (1) நூல் வெளுத்தலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்.) | 36.00 | 32.00 | 28.86 | 32.65 | 24.57 |

| (1) | 1984-85. (2) | 1985-86. (3) | 1986-87. (4) | 1987-88. (5) | 1988-89. (6) |
|---|---|---|---|---|---|
| V. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்— | | | | | |
| (1) கடன்களின் எண்ணிக்கை | 2,226 | 2,879 | 2,520 | 2,600 | 2,906 |
| (2) கடன் வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்.) | 287.75 | 441.17 | 371.20 | 400.63 | 360.68 |
| VI. தமிழ்நாடு சரிகை ஆலை காஞ்சிபுரம்— | | | | | |
| (1) சரிகை உற்பத்தி (மார்க்குகளில்). | 5,114.00 | 12,453.00 | 11,775.00 | 14,499.00 | 8,408 |
| (2) விற்பனை மதிப்பு (இலட்சத்தில்). | 68.21 | 196.80 | 168.34 | 368.71 | 170.04 |

குறியீடு 1989-90



## இணைப்பு II.

### மானியக் கோரிக்கை எண் 34

### நகர்ப்புற வளர்ச்சி.

### நகர்-ஊரமைப்பு இயக்கம்.

அடிப்படையாக இத்துறை நான்கு முக்கிய கடமைகளை நிறைவேற்றுகிறது.

1. நில உபயோக திட்டத்தைப் பொறுத்த அளவில் அரசின் முதன்மையான திட்டத் துறையாகச் செயல்படுதல் ;

2. மனைப் பிரிவு வரைபடங்கள், நகரத் திட்டங்களைத் தயாரிக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு அறிவுரை வழங்குதல்;

3. உள்ளாட்சிக் குழுமங்களின் திட்ட, கட்டிட விதிகளுக்கு மேல்முறையீட்டாளராகச் செயல்படுதல்; மற்றும்

4. புயல் பாதுகாப்பு, சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு ஆகிய வற்றிற்கும், பலவீனமான அல்லது தனித்தன்மை வாய்ந்த பகுதிகளுக்கும் திட்டமிடுதல்;

மாநில அளவில் எட்டு மண்டல அலுவலகங்களின் ஆதரவுடன் இத்துறையின் தலைமையகம் இயங்குகிறது. இணைப்பு 1-ல் மண்டல அலுவலகங்களின் தலைமையிடம் மற்றும் அதிகார எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், அமைப்புத் திட்டங்கள், விரிவு வளர்ச்சித் திட்டங்கள், போக்குவரத்துத் திட்டங்கள், புயல் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டங்கள், வான்வழி புகைப்படத் திட்டங்கள், நகர்புறத் தகவல் திட்டங்கள், நகர்ப்புற வரைபடங்கள் தயாரித்தல், மத்திய மாநில அரசுகளின் சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்குரிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களை அமுலாக்க உதவும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியினைப் பேணி செயல்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு, இத்துறையில் தனித் தனிப் பிரிவுகள் செயல்படுகின்றன.

### 1. துறையின் முக்கிய திட்டப் பணிகள்.

**நகர்ப்புறக் கொள்கை:**

நகர்ப் புறதமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களைத் தயாரிப்பதே இத்துறைக்கு முதன்மையான பணியாகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டோர் நகர்ப்

புறங்களில் வசிக்கின்றனர். நகர்ப்புற வளர்ச்சியில் தமிழகத்தை விட முன்னதாக உள்ள ஒரே மாநிலமான மராட்டியத்தைப் போலல்லாமல், 34 நகர் கூட்டுப் பகுதிகளையும் (Urban Agglomerations) 234 நகர்களையும் உள்ளடக்கிய 434 நகர மையங்களில் தமிழக நகர்புற மக்கள் தொகை பரவலாக உள்ளது. திட்டமிட்ட வளர்ச்சிக்குரிய முயற்சிகள், மாநில நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கின்றன. இதன்படி எல்லா குடியிருப்புகளிலிருந்தும் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்குள் நகரங்கள் அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயர்நிலை நகரங்கள் இருபத்தைந்து முதல் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்திருக்கும், மிகக் குறைந்த நகரப் பகுதிகளைக் கொண்ட வருவாய் வட்டங்களின், நகரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கேதுவாக ஐம்பது புதிய நகரங்களை வளர்ச்சியடையச் செய்வதும், இத்திட்டத்தில் அடங்கும். இவ்வாறு அமைக்கப்பட்ட பல்வேறு நிலையிலான நகரங்கள் பெரு மண்டல வளர்ச்சி முனைகளான சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகியவற்றைச் சார்ந்திருக்கும்.

**மண்டல அமைப்புத் திட்டங்கள்:**

1970-ம் ஆண்டுகளில் பல மண்டலத் திட்டங்கள் இத்துறையால் தயாரிக்கப்பட்டன. மாவட்டம் முழுமைக்கும் ஒரு கட்டமைப்புத் திட்டமாக செயல்படுத்துவதற்காக, தமிழகத்தி லுள்ள இருபது மாவட்டங்களுக்கும், 'மாவட்டத் தொலை நோக்குத் திட்டங்களை' தயாரிக்கும் பணியில் இத்துறை தற் போது ஈடுபட்டுள்ளது. இம்முயற்சி ஓராண்டிற்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதே சமயத்தில், அறுபது பெரிய நகரங்களுக்கு கட்டமைப்புத் திட்டங்கள் தயாரிக்கும் முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அமைப்புத் திட்டங்கள், இந்நகரங்களின் விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு பின்னணி யாக அமையும். இவை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புத் திட்டத்தின் மாதிரி அமையும்.

**முழுமைத் திட்டம்:**

தொழிற்புரட்சியின் போது தொழில் பகுதிகளின் பலமான தாக்குதலிலிருந்து, குடியிருப்புப் பகுதிகள் காக்கப்பட வேண்டி யிருந்ததால், பண்டைய நகரமைப்பு 'நில உபயோகத் திட்டம்' என்ற உருவாகவே இருந்தது. இதற்கேற்ப, தமிழகத்திலும், மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படியும், மக்கள் நல்வாழ்வு சட்டத்தின்படியும், முறையே, தொழிற்பகுதிகளும். குடி யிருப்புப் பகுதிகளும் அறிவிக்கப்பட்டன. இவ்வறிக்கைகளில் அடங்காத பகுதிகள் குடியிருப்பு அல்லாத மற்றும் தொழில்பகுதி அல்லாத பகுதிகளென அழைக்கப்பட்டன. குடியிருப்புப்





பகுதிகளில் தொழிற்சாலைகள் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், கெடுதலற்ற குடியிருப்பு பகுதிகளுக்கு சேவை புரியும் சிறு தொழில்கள், குடியிருப்பு அல்லாத, தொழிற்சாலை அல்லாத பகுதிகளில் அனுமதிக்கப்பட்டன. தொழிற்பகுதியாக அறிவிக்கப் பட்ட இடங்களில், தொழிற்சாலைகளை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம். விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாக, இக்கட்டுப்பாடுகளை மாற்றியமைக்கும் தேவை ஏற்பட்டதனால், நகரங்களுக்கு முழுமைத்திட்டங்கள் கீழ்க்காணும் விவரங்களுடன் தயாரிக்கப்பட வேண்டியுள்ளன :—

1. நில உபயோகக் கட்டுப்பாடு;
2. போக்குவரத்துத் திட்டம்;
3. அடிப்படை வசதிகள் ;
4. வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்; மற்றும்
5. கூடுதல் மக்கள் தொகையில் தேவைகளை நிறைவு செய்தல்.

நில உபயோகம் கீழ்க்கண்ட ஆறு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன :—

1. குடியிருப்புப் பகுதி ;
2. வணிகப் பகுதி ;
3. பொது உபயோகப் பகுதி ;
4. கல்விப் பகுதி ;
5. தொழிற் பகுதி மற்றும்
6. வேளாண்மைப் பகுதி.

இந்நில உபயோகக் கட்டுப்பாடுகள் அமைதியான குடியிருப்பு பகுதிகளை சுறுசுறுப்பான, மாசுப்படுத்தக் கூடிய தொழிற் பகுதிகளிலிருந்து பாதுகாக்கும் முக்கிய நோக்கமுடையது. எனினும் இந்த உபயோகக் கட்டுப்பாடுகள் மாற்றத்திற்குரியனவாக இருப்பதுடன், கீழ்வரிசை நடவடிக்கைகளை உயர்வரிசை நடவடிக்கைகளில் அனுமதிப்பதுடன் குடியிருப்புப் பகுதிகளில் உயர்வரிசை நடவடிக்கைகளை தடையும் செய்கிறது. மக்கள் தொகை கணிப்பு, வெவ்வேறு நில உபயோகங்களின் குறைந்த பட்சத்தேவை ஆகியவற்றின் அடிப்படையில், நில உபயோகங்கள் பிரித்தளிக்கப்படுகின்றன. செம்மையான நில உபயோகக்கட்டுப் பாட்டிற்காக, 'வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகள்' இயற்றப் பட்டுள்ளன.

முழுமைத் திட்டங்கள் தயாரிப்பதற்கும், புதிய நகர வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்கும், சென்னைப்பெருநகர் பகுதிக்கு வெளியே 111 நகரப் பகுதிகளையும், 9 புதிய நகரப் பகுதிகளையும் இத்துறை தெரிவு செய்துள்ளது.

**விரிவு வளர்ச்சித் திட்டங்கள்:**

முழுமைத் திட்டத்தில் அடுத்த கட்டமாக, வேகமான வளர்ச்சிக்கு மிகுந்த வாய்ப்புள்ள நகரங்களின்பகுதிகளுக்கு விரிவு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஏற்கெனவே 130 திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் 850 திட்டங்களுக்கு அறிவிக்கைகள் வழங்கப்பட்டு, திட்டம் தயாரிக்கும் பணி பல வேறு நிலைகளில் தொடர்கிறது. அடுத்த இரண்டாண்டுகளில் இத்திட்டங்கள் முடிக்கப்படுமென அரசு நம்புகிறது.

**திட்ட நிகழ்ச்சி நிரலும் அதன் வழிமுறைகளும்:**

மண்டல திட்டம், கட்டமைப்புத் திட்டம், திட்டம், விரிவு வளர்ச்சித் திட்டம், போன்ற பல்வேறு நிலை முழுமைத் யிலான திட்டங்கள், தமிழகத்தின், கிராம, நகர்ப்புற பகுதிகளில் அடிப்படையான நில உபயோகக் கட்டுப்பாட்டிற்கு வழி வகுக் கின்றது. முக்கிய சாலைகள், வீடுகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை, இந்த திட்டங்கள் முடக்குகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், இத்திட்டங்கள் அனைத்தும் முடிக்கப்பட்ட பின்னர் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மறுஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். இவ்வாறு திட்டங்கள், தயாரிக்கப்படும்போது, பலகட்டங்களில், உள்ளாட்சி மன்றங்களின் ஒப்புதலோடும், நிலச் சொந்தக்காரர்களின் ஆலோசனை பெற்றும், அரசிதழ்கள் மற்றும் நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிட்டும், திட்டம் தயாரிக்கப்பட்டது பற்றி அறிவிப்பு வெளியிடுவதற்காக அரசினரின் இசைவு பெற்ற பின் னர், பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சே பணைகள் வரவேற்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகின்றன.

திட்டத்தின் முதன்மைக் கருவியாக விளங்குவது உள்ளூர் திட்டக் குழுமங்களும், புதிய நகர வளர்ச்சிக் குழுமங்களுமாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினைத் தவிர 107 நகரக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும் பான்மையான குழுமங்களின் எல்லை, உள்ளாட்சி மன்றங்களின், நகரப் பஞ்சாயத்துக்களின் எல்லையுடன் முடிவடைகின்றன. ஆனால் மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற 15 உள்ளூர் திட்டக் குழுமங்கள், ஒன்றிற்கு மேற்பட்ட உள்ளாட்சி மன்றங் களை உள்ளடக்கிய கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களாகும். பல நகராட்சிப் பகுதிகளையும், பேரூராட்சிப் பகுதிகளையும், ஊராட்சிப் பகுதிகளையும் இவை உள்ளடக்கியிருக்கும். உள்ளூர் திட்டக் குழுமங்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளை யும், வழிகாட்டி முறைகளையும் இத்துறை அளித்து வருகிறது.





மிகவும் வேகயான நகர வளர்ச்சியினைக் கொண்டுள்ள பகுதி களுக்கு, சிறப்பு அதிகாரங்களைக் கொண்ட, புதிய நகர வளர்ச் சிக் குழுமங்கள் அமைக்கப்படுகின்றன. உள்ளூர் திட்டக் குழு மங்கள் போல் அல்லாமல் புதிய நகர வளர்ச்சிக் குழுமங்கள், தீவிர வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதுடன் நிதி ஆதாரங் களையும் திரட்டலாம். தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புதிய நகர வளர்ச்சிக் குழுமங்கள், ஒரு புறம் மிகவும் வேகமான தொழில் வளர்ச்சியைக் கொண்ட ஓசூர் நகரத்தையும், மறு புறம் வரலாற்று முக்கியத்துவமும், கலாச்சார பெருமையும் வாய்ந்த, முன்யோசனையற்ற சுயநலத்திற்காக வணிகப் பயனாக எளிதில் மாற்றுதற்குரிய மாமல்லபுரத்தை மறுபக்கம் உள்ளடக்கியதாகும். இக்குழுமங்கள், புதிய நகர வளர்ச்சித் திட்டங்களை தயாரித்து அவற்றை அமுலாக்குகின்றன.

120 நகரப் பகுதிகள் உள்ளூர் திட்டப் பகுதிகளென அறிவிக் கப்பட்டு. அவற்றுள் 107 பகுதிகளுக்கு உள்ளூர் திட்டக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முழுமைத்திட்டங்கள் தயாரிக் கப்பட்டதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்கான அரசினரின் இசைவு 93 உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 19 முழுமைத் திட்டங்களுக்கு அரசினரால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

1989—90 ஆம் ஆண்டில், இசைவளிக்கப்பட்ட 74 முழுமைத் திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்கவும், தற்போது தயாரிக் கப்பட்டுவரும் 27 முழுமைத் திட்டங்களுக்கும், இசைவளிக்கவும் அரசு உத்தேசித்துள்ளது.

முழுமைத் திட்டங்களை மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கவும், அமுலாக்கவும், தேவைப்படும் ஆரம்பச் செலவினை ஈடுகட்ட உள்ளூர் திட்டக் குழுமங் களுக்கு நிதி உதவி அளிக்கவும் அரசு உத்தேசித்துதுள்ளது. இந்நோக்கிற்காக 1989—90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யில் ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கட்டிட வரன்முறை:**

காற்றோட்டம், வெளிச்சம், நல்ல சுற்றுப்புறச்சூழல், தனித்தன்மை ஆகியவற்றினை கட்டிடத்தின் உரிமையாளருக்கு அளிப்பதற்காக கட்டிட விதிகள் இயற்றப்பட்டன. மாறுபட்ட பகுதிகளின் வளர்ச்சிக்கேற்ப இக்கட்டிட வரன்முறைகள் பின்வருமாறு வேறுபடும்:—

1. ஏற்கெனவே அடர்த்தியான வளர்ச்சி பெற்ற பகுதி கட்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்படி இயற்டப்பட்ட நகராட்சிகளின் கட்டிட விதிகள் அமுலாக்கப் படுகின்றன. மனையின் குறைந்தபட்ச பரப்பினையும், அகலத்

தையும், வசிக்கத்தக்க அறைகளின் காற்றோட்டத்திற்கு தேவை யான திறவிடத்தையும், சாலை அகலத்தின் விகிதாச்சாரத்திற் கேற்ப கட்டிட உயரத்தையும், இவ்விதிகள் குறிப்பிடுகின்றன

2. மனைப் பிரிவு நிபந்தனைகளின் மூலமாகவோ அல்லது விரிவு வளர்ச்சித் திட்ட விதிகளின் மூலமாகவோ, புதிதாக வளர்ச்சி பெற்று வரும் பகுதிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. கட்டிடத்தைச் சுற்றி விடப்பட வேண்டிய முன் திறவிடம், பக்கத் திறவிடம், பின்திறவிடம் ஆகியவற்றை வரையறுப்ப துடன், அதிகமான அடர்த்தியையும் இவ்விதிகள் தடைசெய் கின்றன. போக்குவரத்து காரணமாக ஏற்படும் தூசுகள், ஒலி ஆகியவற்றிலிருந்து கட்டிடத்தை பாதுகாப்பதுடன், எதிர் கால விரிவாக்கத்திற்குத் தேவையான ஒதுக்கீடாகவும் பயன்படுத்துவதை முன்பக்கத் திறவிடம் விடப்படுவதன் நோக்கமாகும் வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்தினை ஏற்படுத்துவதுடன் குடியிருப்போரின் தனித்தன்மையையும் இரகசியத்தையும் பேணவும், பக்கத் திறவிடம் உதவுகிறது.

கிணறு, கழிவிடம், வாகன நிறுத்துமிடம் ஆகியவை அமைக்க பின்பக்கத் திறவிடம் பயன்படுவதுடன் வீட்டுதோட் டத்திற்கு செல்லவும் உதவும். மேற் சொன்ன விதிகளுக்கு முரணாக அமையும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்க உள்ளாட்சி மன்றம் மறுக்கின்றது. உரிமம் மறுக்கப்பட்ட உரிமையாளர், நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு மேல்முறையிடலாம். இயக்கு நரின் ஆணையும் ஆதரவாக இல்லையெனில் மனுதாரர் அரசுக்கும் மேல்முறையிடலாம்.

மக்கள் தொகைப் பெருக்கம், அதன் விளைவாக இட நெருக்கடி ஆகியவற்றினை காரணமாக, கோவை, திருச்சி, சேலம், மதுரை, ஆகிய பெரு நகர்களில் பல வீடு கட்டிடங் களும், பல மாடிக் கட்டிடங்களும் கட்டப்படுகின்றன. இத்த கைய வளர்ச்சியின் தீய விளைவுகளாவன :—

1. திட்டத்தில் அமைக்கப்பட்டதைவிட அதிக மக்கள் தொகை அடர்த்தி

2. அடிப்படை வசதிகள் பற்றாக்குறை ;

3. அந்தரங்கத்திற்கு இடையூறு மற்றும் கடினத்தன்மை;

4. வடிகால் வசதி குறைவின் காரணமான சுகாதார சீர்கேடுகள் :

5. தீ விபத்துக்கள் :

6. வாகன நிறுத்துமிடங்களின் பிரச்சினை.



குறிப்பிட்ட அளவிலான நிலப் பகுதியே உள்ளதாலும், நெருக்கமற்ற, அடர்த்தியற்ற வளர்ச்சிகள் பிரச்சினைகளை தீர்க்காதென்பதாலும், இத்தகைய விளைவுகள் விரிவடையத் தான் செய்யும், எனவே இத்தகைய வளர்ச்சியினை வரன் முறைப்படுத்துவதற்காக பொதுக் கட்டிட பல மாடிக் கட்டிட விதிகள் இயற்றப்பட்டுள்ளன. மனையின் குறைந்தபட்ச அளவு, அனுமதிக்கக் கூடிய மொத்த தளப்பரப்பு, கட்டிடத் தைச் சுற்றி விடப்பட வேண்டிய வெற்றிடம், ஒதுக்கப்பட வேண்டிய வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை இவ்விதிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. முறையான வளர்ச்சியைக்கருதி பல குடியிருப்புக் கட்டிடங்களுக்கும், இதையொத்த விதிகள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

**II. துறையின் ஏனைய செயல் திட்டங்கள்:**

**இயற்கைக் கேட்டிற்கெதிராகத் திட்டமிடுதல்:**

இயற்கைச் சீற்றத்தின் விளைவாக ஏற்படும் பிரச்சினைகளி லிருந்து பாதுகாக்க, 1970 ஆம் ஆண்டுகளிலேயே இத்துறை கற்பனைத் திறன்மிக்க ஒரு திட்டத்தை உருவாக்கியது. இம் மாநிலத்தில் வங்கக் கடலிலிருந்து உருவாகும் புயல்களே பெரும் இயற்கைத் துன்பங்களுக்கு ஆதாரமாக இருந்து வந்துள்ளன. கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலான இப்பொருள் பற்றிய புள்ளி விவரங்களை ஆய்ந்து, எளிதில் புயலின் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, இத்துறையால் வடி வமைக்கப்பட்டவாறு பெரும் எண்ணிக்கையிலான சிறப்பு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. வட்ட வடிவில் அமைந்த இக்கட்டிடங்கள் சாதாரண நாட்களில் சமுதாய நல மையங்களாகவும், அவசரக் காலங்களில் போதுமான புகல் இடங்களாகவும் திகழ்கின்றன. அண்ணா பல்கலைக் கழகத்துடன் கலந்தறிந்து இத்துறையால் உருவாக்கப்பட்ட புயல் முன் எச்சரிக்கைச் சின்னம், புயலினால் எளிதில் பாதிக்கப் படக்கூடிய அனைத்து கிராமங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. காற்றின் வேகம் ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்தால் இந்த எச்சரிக்கைக் கருவிகள் ஒலி எழுப்புகின்றன. இதனால், முன்னெச்சரிக்கையாக மக்கள் புகலிடங்களுக்கு செல்ல ஏதுவாகும். கடற்கரையோரக் கிராமங்களில் எளிதில் புயலினால் பாதிக்கப்படும் மீனவர்களின் உடமையைப் பாது காக்க ஒரு புதுமையான அணுகுமுறை கையாளப்படுகிறது. இதற்கென வடிவமைக்கப்பட்ட, இரும்பு கலந்த கலவையிலான பாதுகாப்பு கிடங்கு அவர்களது குடிசைக்குள் வைக்கப்பட்டு, விலை உயர்ந்த நைலான் வலைகள் மற்றுமுள்ள உடமைகளை பத்திரப்படுத்தலாம். இப்பாதுகாப்பான கிடங்குகள் அதிக அள வில் இதுபோன்ற கிராமங்களில் அளிக்கப்படுவதால் கோரக் காற்றில் குடிசையே பறந்தாலும் விலை உயர்ந்த பொருள் களின் நிலை அழிவதில்லை.

இது போன்ற ஆபத்துக் காலங்களை உறுதியுடன் சந்திக்க மாவட்ட அலுவலர்களுக்கு கணிப் பொறி (Computer) மூலமாக ஒத்திகைப் பயிற்சிகளை உயர் நவீன முறையில் உருவாக்கியுள்ளது. 'சிம்க்ளோன்' எனப்படும் இத்துறை பயிற்சி, ஆபத்துக் காலங்களில் மாவட்ட இப்புதுமைப் செயல் திறனை செம்மையாக்க, கால முறைப்படி அலுவலர்களின் பட்டு வருகிறது. நடத்தப்

நகர வான் வழிப் படங்கள்:

வான்வழி நிழற்படங்களை நகரமைப்புப் பயன்படுத்துவதில், இந்தியாவில் மட்டுமல்லாது, பணிகளுக்கு நிறுவனங்கள் அனைத்திலுமே இத்துறை முதலிடம் வகிக்கிறது. நகரமைப்பு இதற்கென இத்துறையில் ஒரு தனிப் பிரிவு செயல்படுகிறது. தேசிய தொலை உணர்வு மைய முகமையின் (N.S.A.R.) சிறப்பு வானூர்தி ஓட்டத்தின் மூலம் பெறப்படும் நிழற்படங்கள், துணைக் கோள்களிலிருந்து வான்வழி பெறப்படும் பிரதி பிம்பங்கள் (Imageries) (Satellite) உதவியுடன் இத்துறையின் உறுதுணையுடன் ஆகியவற்றின் அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள தொலை ஆரம்பிக்கப்பட்ட தில் உள்ள நவீன கருவிகளைப் பயன்படுத்தி உணர்வு மையத் உள்ள 32 பெரு நகர்களுக்கு வரைபடம் தமிழகத்தில் திட்டத்தை இத்துறை துவக்கி உள்ளது. தயாரிக்கும் மையத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, தொலை உணர்வு அனைத்து மாவட்டங்களுக்கும் நில உபயோக தமிழகத்திலுள்ள தயாரிப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் வரைப்படம் இதற்கென 1989—90 ஆம் ஆண்டு நிதிநிலை உள்ளது. ரூ. 12.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அறிக்கையில்

தொழிற் பகுதிகள்:

நகர்புறங்களில் மட்டுமல்லாது கிராமப்புறங்களிலும், தொழிற்சாலைகள் அமைப்பதற்கென தனியிடம் வரையறுக்கப் பட்டுள்ளன. இதனால் திட்டத் தொடர்பான இசைவுக்குக் காத்திராது, தொழிற்சாலைகளுக்கு விரைந்து ஒப்புதல் வழங்க ஏதுவாகும். இது பற்றிய பட்டியல்கள், கணிப்பொறி மூலம் அட்டவணைப் படுத்தப்பட்டு அனைத்து மாவட்ட தொழில் மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

சிறப்புத் திட்டங்கள்:

தமிழக கடலோரப் பகுதி பற்றிய நிகழ்நிலை அறிக்கை யைத் தயாரிக்கவும், அவற்றின் தன்மை கெடாது தடுக்க தக்க நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கவும், வகுக்கவும், நடுமுகமையாக இத்துறை கடமையாற்றுகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மீன்வளத் துறை, வனத்துறை





ஆகியோரின் கூட்டு முயற்சியான இப்பணி சீராக்க முடியாத அளவுக்கு தீங்கு விளையுமுன், தமிழக கடலோர நில உபயோ கத்தினைக் கட்டுப்படுத்த முயலுகிறது. இதனையொத்த இன்னொரு ஆய்வு திருச்சி பெருநகரின் வளர்ச்சியால் பாதிக்கப் படும். திருவரங்கத்தின் சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கவும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகர்ப்புற தகவல் மையம்:

இத்துறையின் தலைமை அலுவலகத்திலும், மண்டல அலுவலகங்களிலும் கணிப்பொறிகள் நிறுவப்பட்டு பெரிய தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் முடிவு எடுகத் தேவைப்படும் நகர்ப்புற புள்ளிவிவரங்கள் அரசின் எல்லாத் துறைகளுக்கும் எளிதில் கிடைக்கும்.

போக்குவரத்துப் பிரிவு:

பெருநகர்களில் போக்குவரத்துப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து செயல்திட்டங்களையும் இத் துறையின் போக்கு வரத்துப் பிரிவு வகுத்துள்ளது. இத்தகு செயல்திட்டங்கள் கோவை, மதுரைக்கு முன்னரே முடிக்கப்பட்டுள்ளது. தற் போது திருச்சிக்குத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப் பணி அடுத்த சில மாதங்களில் முடிவுபெற்று இக் குழு இப் பணிக் காக சேலம் செல்ல உள்ளது.

தொழில் நுட்ப ஆதரவு:

தொழில் மனைகள், தொழிற்சாலை வரைபடங்கள் உள் ளிட்ட மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் உள்ளாட்சி மன்றங்களுக்கு இத் துறை தொழில்நுட்ப அறிவுரை வழங்கு கிறது. இப் பணி, விரைவாக அறிவுரை வழங்குவதற்கு ஏதுவாக, முறைப்படுத்தப்பட்டுள்ளது.

## III. வளர்ச்சியை ஊக்குவிக்கும் பணிகள்.

சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள்:

மத்திய அரசினரின் உதவியுடன் செயல்பட்டு வரும் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தினை, நிறைவேற்றும் நடுமுகமையாக இத் துறை இருந்து வருகிறது. ஆறாவது திட்டத்தில் எடுத்துக் கொள் ளப்பட்ட 28 நகரங்களுடன், ஏழாவது திட்டத்தில், நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டம் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சிக்குப் பெருமளவில் பய

னளிப்பதாக உள்ளது. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய்க்கு மிக முக்கியமாக வகைசெய்யும் பேருந்து நிலையங்கள், கடைகள், விடுதிகள், அங்காடிகள் குறைந்த செலவில் சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஆறாவது திட்ட காலத்தில் ரூ. 1,800 இலட்சமும், ஏழாவது திட்டத்தில் இதுவரை ரூ. 1,050 இலட்சமும் இத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாவது திட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட 183 திட்டங்களில் 169 திட்டங்கள் முடிக்கப்பட்டு, பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ஏழாவது திட்ட காலத்தில், 43 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு முடிக்கப்பட்டுவிட்டன; மற்ற திட்டங்கள் வெவ்வேறு நிலையிலுள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1989-90-ல் ரூ. 400 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த நகர்ப் புற வளர்ச்சித் திட்டங்கள் :**

சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திற்கு இணையான இத்திட்டம் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகருக்கும் இருபத்தைந்து இலட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தில் நிதி உதவி பெறாத நகர்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டத்தில் 108 நகரங்கள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளில் 172 திட்டங்களுக்கு ரூ. 750 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. ஏழாவநு திட்டத்தில் 120 நகராட்சி மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இதுவரை ரூ. 837.00 இலட்சம் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. 1989-90-ல் இத்திட்டங்களுக்காக, ரூ. 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் :**

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 22-ன் கீழ் சென்னை பெருநகர் வளர்க்ச்சிக் குழுமம் உருவாக்கப்பட்டது. இக் குழுமம் முதன்முதலில் 1972-ஆம் ஆண்டில் தனிக் குழுவாக அமைக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டில் சட்டப்படி தகுதிநிலைப் பெற்றது. 1,174 சதுர கி.மீ. பரப்பளவுள்ள சென்னைப் பெருநகர் எல்லையில் அடங்கிய சென்னை நகர். அதைச் சுற்றியுள்ள 5 நகராட்சிகள், 5 நகரியங்கள், 19 பேரூராட்சிகள் மற்றும் 225 கிராமங்கள் ஆகிய அனைத்தின் மேம்பாட்டையும், நீண்டகாலத் திட்டத்தையும் உருவாக்குவது இக்குழுமத்தின் பொறுப்பாகும். இவ்வெல்லையில் உள்ள உத்தேச ஜனத்தொகை 60 இலட்சமாகும்.



சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கிய குறிக்கோள்களாவன :—

1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியின் அடிப்படை வசதி, திட்ட அமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கு திட்டமிடல்.

2. சென்னை பெருநகர் பகுதிக்கான முதன்மைத் திட்டத்தையும் மற்றும் முதன்மை திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளையும் செயல்படுத்தல்.

3. பெருநகர் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பல்வகை திட்டங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நேரிடையாகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

**மறைமலை நகர்—துணை நகர் :**

3,300 ஏக்கர் நிலப் பரப்பில் 20 ஆண்டுகளில் 1 இலட்ச மக்கட் தொகைக்கான அபிவிருத்தி திட்டங்கள் உருவாக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1974-ல் தொடங்கிய இத் திட்டம் 1991 ஆம் ஆண்டு முடிவுபெறும். நில ஆர்ஜிதம், மேம்பாடு, பாலார் குடிநீர் விநியோகம் ஆகிய திட்டங்களுக்காக சுமார் ரூ.3,100 இலட்சங்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இதுவரையில் குடியிருப்பு மற்றும் தொழில் விருத்திக்கென 818 ஏக்கர் நிலப் பரப்பை மேம்படுத்தியிருக்கிறது. மேலும் ''ஹட்கோ'' உதவியுடன் 1992-ல் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதைத் தவிர, கூடலூர், காட்டாங்குளத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 132 ஏக்கர் பரப்பளவை ரூ. 110 இலட்சம் செலவில் குடியிருப்பு வசதிக்காக மேம்படுத்தியுள்ளது. ஏழாவது திட்டத்தில் ரூ. 725 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989-90ஆம் ஆண்டுகளுக்கு அரசு கடன் உதவியாக ரூ. 50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மணலி நகர் பகுதி :**

1,430 ஏக்கர் நிலப் பரப்பளவில் இருபது ஆண்டுகளில் 75,000 மக்கட் தொகைக்காக, மேம்படுத்தும் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டத்திற்காக நில ஆர்ஜித மேம்பாட்டுக்காக ரூ. 3,236.55 இலட்சங்கள்

மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு மம் இதுவரை 489 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து அதில் 169 ஏக்கரை ஏற்கெனவே குடியிருப்பு வசதிக்காக அபிவிருத்தி செய்து ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் '' ஹடகோ '' உதவியுடன் 1,760 கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன ஏழாவது திட்டத்தின் ஒதுக்கீடு ரூ. 750 இலட்சங் களாகும். 1989-90ஆம் ஆண்டிற்கு அரசின் கடனுதவி ரூ. 50 இலட்சங்களாகும்.

கும்மிடிப்பூண்டி மற்றும் திருவள்ளூர் புதுநகர் மேம்பாட்டு திட்டங்களுக்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி :**

நெரிசலைக் குறைக்கும் பொருட்டு ஜார்ஜ் டவுனிலிருந்து துணி, உணவு தானியம் மற்றும் அழுகும் பொருட்களின் மொத்த வியாபாரத்தை கோயம்பேட்டிற்கு மாற்றி அமைப்பதே இத் திட்டமாகும். இதற்கென 4,000 கடைகள் அமைக்கப்படவுள் ளன. இத் திட்டத்தின் 296 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் 200 ஏக்கர் இதுவரை கையகப்படுத்தப்பட்டுள்ளது. அழுகும் பொருட்களின் மொத்த வியாபாரத்திற்கு கட்டப்படும் கடை களுடன் சேர்த்து இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 40 கோடியாகும். இது ஒரு தன்நிதி திட்டமாகும். அபிவிருத்தி திட்டங்களான புற நகர் சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், மழைநீர் வடிகால்கள், நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றல் முதலியன முடி வடையும் தருவாயில் உள்ளன. இவ்வங்காடி 1990ஆம் ஆண் டுக்குள் செயலாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏழா வது திட்டத்தில் ரூ. 1,700 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தின்கீழ் ரூ. 100 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புறநகர் பேருந்து மற்றும் சுமைவண்டிகள் நிலையங்கள் :**

சென்னை நகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், திட்டமிட்டபடி ஊர்திகள் நகரத்தி லிருந்து செல்லவும் நகரத்திற்குள் வரவும் முறையே ஆலந்தூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய மூன்று இடங்களில் சுமை வண்டி நிலையங்கள் சுமார் ரூ. 750 இலட்சங்கள் செல வில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. 80 ஏக்கர் நிலப்பரப் பில் இம்மூன்று நிலையங்களும் உருவாக்கப்பட்டும். மாதவரம் பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங்களுக்குத் தேவை யான நிலம் கையகப்படுத்தப்பட்டு வளர்ச்சிப் பணிகள் ஆரம்ப மாகி விட்டது. இவை நன்நிதி திட்டங்களாகும். ஏழவாது திட்டத்தில் ரூ. 300 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**எஃகு மற்றும் இரும்பு மொத்த அங்காடி—சாத்தங்காடு :**

ஜார்ஜ் டவுன் பகுதியில் இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபாரத்தினால் விளையும் நெரிசலைப் போக்குவதற்காக சாத்தங்காட்டில் நவீன அங்காடி அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கென கையகப்படுத்தப்பட்ட 206 ஏக்கர் நிலத்தில், அபிவிருத்தி பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இது ஒரு தனநிதி திட்டமாகும். இத் திட்டத்தின் மதிப்பீடு ஏறக் குறைய ரூ. 17 கோடியாகும். ஏழாவது திட்டத்தில் ரூ. 300 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் முடியும் தறு வாயில் உள்ளது.

கோயம்பேடு, சாத்தங்காடு மற்றும் மாதவரம் போன்ற இடங் களில் நிறுவப்படும் புதிய மொத்த விற்பனை அங்காடிகளுக்கு வணிகம் மாற்றப்பட்ட பிறகு, சென்னை நகரில் இத் தகைய மொத்த விற்பனை நீடிப்பதைத் தடுக்கும் பொருட்டு தமிழ்நாடு குறிப்பிட்ட பண்டங்கள் அங்காடி (ஒழுங்குமுறைப் படுத்தல் அமைவிடம்) சட்டம், 1988 என்ற வரைவுச் சட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது.

**அலுவலக கட்டிடப் பிரிவு :**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தன் அலுவலகத் திற்காகவும் மற்றும் சில அலுவலகங்களுக்காகவும் ஒரு பல மாடிக் கட்டிடம் எழும்பூர் இரயில் நிலையத்திற்கருகே, காந்தி இர்வின் சாலையில் கட்டியுள்ளது. இத் திட்டச் செலவு ரூ. 15.50 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அரசு இதுவரையில் ரூ. 4.70 கோடி கடன் உதவியாக இத்திட்டத்திற்கு கொடுத்துள் ளது. இக் கட்டிடம் மிக விரைவில் குடிபுக தயாராகிவிடும்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும கண்காணிப்பில் உலக வங்கி உதவியுடன் செயலாற்றப்படும் திட்டங்கள் :**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், உலக வங்கி உதவியுடன் முகவர்களின் மூலம் சென்னைப் பெருநகர் பகுதியில் செயலாற்றப்படும் திட்டங்களை செயல்படுத்தல், கண்காணித் தல் மற்றும் மதிப்பீடு செய்தல் முதலிய பொறுப்பினை ஏற்றிருக்கும் நிறுவனமாகும்.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :**

முந்தைய இரண்டு திட்டங்களின் நல் முடிவுகளை முன்னிட்டு தமிழகத்தின் 10 பெரு நகரங்கள் பயனடைய செப்டம்பர் 1988-ல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பெருநகர் பகுதிக்கான திட்டப் பணிகளைச் செயல்படுத்த பொறுப்பேற்கும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பீடு இரூ. 632.6 கோடி. இதில் சென்னை நகர திட்டங்களுக்கு ரூ. 399.98 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பில் வரும் திட்ட உறுப்புகள் கீழ்க்கண்டவைகளாகும்.—

| உறுப்பு. (1) | மதிப்பீடு. (2) | செயல் அளவு. (3) | நிறைவேற்றும் முகமைகள். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1 தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் .. | 138.48 | 35,000 மனைகள் 90 சதவீதம் குறைந்த வருவாய் பிரிவினருக்கும் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கும். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். |
| 2 நகர்ப்புற வளர்ச்சி வழிகாட்டி திட்டம் | 13.50 | 7,000 மனைகள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 3 குடிசைப் பகுதி மேம்பாடு .. | 28.78 | 45,000 குடும்பங்கள் அடங்கிய குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பட்டா வழங்குதல். | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம். |
| 4 பேருந்து மற்றும் போக்குவரத்து மேலாண்மை .. | 45.30 | வட்டச்சாலை, பாலங்கள் போக்குவரத்து அபிவிருத்தி. | நெடுஞ்சாலை, ஊரகப் பணித்துறை. |
| 5 பல்லவன் போக்குவரத்துக் கழகம் .. | 58.60 | 1,000 பேருந்துகள், பணிமனைகள், நிலைய வசதிகள். | பல்லவன் போக்குவரத்துக் கழகம். |
| 6 நகராட்சி, நகர்ப்புற வளர்ச்சி நிதி .. | 115.12 | நகராட்சி திட்டத்தின்கீழ் தங்குமிடம், சாலைகள், குடிநீர் வழங்கல், துப்புரவு நகராட்சி மற்றும் குடிசைப்பணிகள் மற்றும் வருவாய் விளைத் திட்டங்கள். | உரிய நகராட்சிகளும், உள்ளாட்சித் துறைகளும். |
| மொத்தம் .. | 399.98 | | |



1989 ஏப்ரல் 24]

### நகர அபிவிருத்தி வழிகாட்டி திட்டம் (உலக வங்கி உதவியுடன்)

இத்திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தனி நில உரிமையாளர்கள்/அபிவிருத்தியாளர்களும் உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் கூட்டு முயற்சித் திட்டமாகும். சுமார் 10,000 மனைகள் உருவாக்கும் இத்திட்டத்தில் 7,000 மனைகள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்காக ஒதுக்கப்படும். 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக வழங்கப்படும்.

### தொழில் நுட்ப உதவி (உலக வங்கி உதவியுடன்) :

இத்திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கல்வி ஆலோசனை, கல்வித் தளவாடங்கள் பயிற்சி அளிக்க உதவுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 150 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

### நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் :

நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் 48-வது பிரிவின்படி சென்னைப் பெருநகர் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் மூலமாக வளர்ச்சிப் பணிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இது 1975 ஆம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெறப்பட்ட முதன்மைத் திட்டத்தில் வகுக்கப்பட்ட நிலம் மற்றும் உபயோக பாகுபாட்டிற்கொப்ப அமைந்துள்ளது. குழும செய்கைகளைத் துரிதப்படுத்த கீழ்க்காணும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்புக் கட்டிடப் பிரிவு மற்றும் துரித வழிப் பிரிவுகளில் நேரிடையாக, திட்ட அனுமதி படிவங்கள் பெறப்பட்டு பத்து வேலை நாட்களுக்குள் பரிசிலனை செய்து ஒப்புதல் அளிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை மற்றும் அறிவுரை மையங்கள் நிறுவப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான மேம்பாடு கட்டுப்பாடு விதிகள், நில உபயோக பாகுபாடு மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்தான தகவல்கள், அறிவுரை வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேம்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு நிறைவேற்று மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட இரண்டு வரைவு சட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது:—

1. தமிழ்நாடு அடுக்குமாடி கட்டிட உரிமை (கட்டுமான அபிவிருத்தி, விற்பனை, மேலாண்மை, உரிமை ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்) மாற்றுச் சட்டம்.

2. தமிழ்நாடு தனி அறைகள் உரிமைச் சட்டம்.

**துரித இரயில் போக்குவரத்து திட்டம் :**

துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நகரில் தற்பொழுது உள்ள போக்குவரத்து சாதனங்களுக்கு இணையான பெருமை வாய்ந்த முக்கியமானதொரு திட்டமாகும். அண்ணா சாலையிலிருந்து லஸ் வரை சாலைகளில் உள்ள மிகுந்த நெரிசல்களைத் தணிக்க வகை செய்யும்.

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரையில் துரித இரயில் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன் மொத்த நீளம் 8.45 கிலோமீட்டர். இதில் 2.9 கி.மீ. கடற்கரையிலிருந்து அரசு பொது மருத்துவமனை/பூங்கா இரயில் நிலையம் வரை தரை மட்டத்திலும் அதனையடுத்து 5.55 கிலோ மீட்டர் தூரம் அரசு பொது மருத்துவ மனையிலிருந்து லஸ் வரையில் உயர் மட்டத்திலும் அமையும். தடங்கலற்ற போக்குவரத்துக்காக இருவழி அமைப்புடன் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இத்திட்டம் மத்திய திட்டக் குழுவினால் ஒப்புதல் செய்யப்பட்டு இரயில் வாரியம் 1983-86 ஆம் ஆண்டில் ரூ. 53.46 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி இத்திட்டம் 1990-ல் முடிவடைய வேண்டும். மத்திய அரசு இதுவரை இத்திட்டத்திற்கு குறைந்த அளவு அதாவது ரூ. 32.89 கோடிகள்தான் ஒதுக்கியுள்ளது.

இத்திட்டம் குறித்த காலத்திற்குள் முடிவடைய வேண்டுமென்று இவ்வரசு ஆர்வமாக உள்ளது. இவ்வரசு இரயில்வேக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலங்களை ரயில்வேக்கு இனாமாக கொடுத்துள்ளது. இருப்பினும், இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதி போதுமானதாக இல்லை. இத்திட்டத்திற்கு அதிக நிதி கோருவது குறித்து மத்திய அரசை அணுகியுள்ளது.

144364



## இணைப்பு III

**மண்டல அலுவலகங்கள் அவற்றின் அதிகார எல்லைகள்.**

| மண்டல அலுவலகத்தின் பெயர், தலைமையிடம். (1) | அதிகார எல்லை. (2) |
|---|---|
| 1. செங்கல்பட்டு தென்னாற்காடு மண்டலம் செங்கற்பட்டு. | 1. செங்கல்பட்டு மாவட்டம்.<br>2. தென்னாற்காடு மாவட்டம். |
| 2. வடஆற்காடு தர்மபுரி மண்டலம், வேலூர். | 1. வடஆற்காடு மாவட்டம்<br>2. தர்மபுரி மாவட்டம். |
| 3. சேலம்-பெரியார் மண்டலம் சேலம். | 1. சேலம் மாவட்டம்.<br>2. பெரியார் மாவட்டம். |
| 4. கோயம்புத்தூர்-நீலகிரி .. மண்டலம், கோயம்புத்தூர் | 1. கோயம்புத்தூர் மாவட்டம்.<br>2. நீலகிரி மாவட்டம். |
| 5. திருச்சி-தஞ்சாவூர் மண்டலம், திருச்சி. | 1. திருச்சி மாவட்டம்<br>2. தஞ்சை மாவட்டம். |
| 6. புதுக்கோட்டை-இராமநாதபுரம் மண்டலம், சிவகங்கை. | 1. புதுக்கோட்டை மாவட்டம்.<br>2. இராமநாதபுரம் மாவட்டம்.<br>3. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம். |
| 7. மதுரை மண்டலம், மதுரை | 1. மதுரை மாவட்டம்<br>2. அண்ணா மாவட்டம்.<br>3. காமராஜர் மாவட்டம். |
| 8. திருநெல்வேலி -கன்யாகுமரி மண்டலம், திருநெல்வேலி | 1. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.<br>2. கன்யாகுமரி மாவட்டம்.<br>3. வ.உ. சிதம்பரனார் மாவட்டம். |

D
V211,31'N89
N89.12.2